

ஸ்ரீ வேணுகோபாலன்

மனதை உருக்கும் விதத்தில் ஏராளமான சிறுகதைகளும், நாவல்களும், வரலாற்றுப் புதினங்களும் எழுதி வரும் ஸ்ரீ வேணு கோபாலன் (புஷ்பா தங்கதுரை) நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து எழுதி வருகிறார்.


இவருடைய பல கதைகள் இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது நாடகமான "அமைச்சர் மதுரகவி"யைப் புகழ்பெற்ற டி.கே.எஸ். சகோதரர்கள் நடித்திருக்கிறார்கள்.

இவரது "ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது" "நந்தா என் நிலா" "வீனா மீனா ரீனா" (அந்த ஜூன் 16) ஆகிய நாவல்கள் திரைப்படங்களாக வந்துள்ளன. இவரது பல தொடர்கள் டி.வி. தடங்களில் வந்துள்ளன.

லக்ஷ்மிஸ்ரீ பதிப்பகம்,
848,91- வது தெரு,
13 - வது செக்டார்,
கே.கே.நகர்,
சென்னை - 600 078.
Phone : 4839543
E-mali : spushpa@vsnl.com

திருவரங்கன் உலா

பாகம் - 3



ஸ்ரீ வேணுகோபாலன்

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	திருவரங்கன் உலா 3-வது பாகம்
ஆசிரியர்	:	ஸ்ரீவேணுகோபாலன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	வரலாற்றுப் புதினம்
பதிப்பு ஆண்டு	:	முதற் பதிப்பு - டிசம்பர் 2001
உரிமை	:	ஆசிரியருக்கு
தாளின் தன்மை	:	11.6 கி.கி.
நூலின் அளவு	:	கிரௌன் சைஸ் (12 ½ x 18 ½ செ.மீ.)
அச்சு எழுத்து அளவு	:	10 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	314 பக்கங்கள்
நூலின் விலை	:	[redacted]
அச்சிட்டோர்	:	கே [redacted] பேகேஜிங் இன்டஸ்டிரீஸ் சென்னை - 14. போன் : 8269578

இதோ புதுப் பதிப்பகம்!

வணக்கம்.
லக்ஷ்மிஸ்ரீ பதிப்பகத்தை
மீண்டும் துவங்குகிறேன்.
இதன் முதல் வெளியீடாக
"திருவரங்கன் உலா" மூன்றாவது பாகம்
திருத்திய முதல் பதிப்பாக வருகிறது.
உங்களது ஆதரவை என்றும் விரும்பும்,

ஸ்ரீவேணுகோபாலன்.

லக்ஷ்மிஸ்ரீ பதிப்பகம்,
848, 91-வது தெரு.
13-வது செக்டார்,
கே.கே. நகர்,
சென்னை 600 078.
Phone : 4839543
E-mail: spushpa@vsnl.com

எனது உரை

எழிலுடைய அம்மனைமீர்!
என் அரங்கத்து இன் அமுதர்,
குழலழகர்; வாயழகர்;
கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழகர்,
எம்மானார், என்னுடைய
கழல் வளையைத் தாமும்
கழல்வளையே ஆக்கினரே!

ஆண்டாளின் பக்திப் பரவசமான பாடலை மனத்துள் நினைத்து, அரங்கனது திவ்ய வடிவழகில் முழுதுமாய் லயித்து, இந்த மூன்றாம் தொடரை எழுதத் தொடங்குகிறேன்.

"திருவரங்கன் உலா"வில் கடைசிப் பகுதியில், அரங்கரை மேல்கோட்டை* என்னும் திரு நாராயணபுரத்தில் தங்க வைத்து விட்டு விடை பெற்றிருந்தேன்.

இப்போது அங்கிருந்து அவரைப் புறப்படச் செய்து மேலும் 'உலா' வில் அழைத்துச் செல்கிறேன்.

தலைப்பு என்னுடையது அல்ல

'திருவரங்கன் உலா' வரிசையில் தற்போது வரும் மூன்றாம் பாகமும், நான்காம் பாகமும் "மதுரா விஜயம்" என்னும் தலைப்பில் முன்னர் வெளிவந்தன.

அந்தத் தலைப்பை இங்கே உபதலைப்பாகக் கொடுத்திறேன்.

* மேல்கோட்டை- தற்போதைய மைசூர் அருகில் உள்ள ஊர்

"மதுரா விஜயம்" என்ற இந்த உபதலைப்புக்கு ஒரு காரணம் உண்டு.

எனக்கு முன், அறுநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கங்காதேவி என்ற அரசி கொடுத்த தலைப்பு இது.

ஆச்சரியம்! இந்த மூன்றாம் பாகம், நான்காம் பாகங்களில் வரும் கதையை அரசி கங்கா தேவியே எழுதி விட்டாள்.

அறுநூறு ஆண்டுகளுக்கு முன் இந்தக் கதை நிகழ்ந்த காலத்திலேயே அவள் வாழ்ந்திருந்தாள்.

அது மட்டுமல்ல! கதையில் ஒரு பாத்திரமாக முக்கிய பங்கும் பெற்றிருக்கிறாள்.

கதையின் நிகழ்ச்சிகளை நேரிலேயே கண்டிருக்கிறாள்.

எனவே எனக்கு முன்பே அவள் இந்த மூன்று, நான்காம் பாகங்களின் கருவை எழுதிவிட்டாள்.

அவள் எழுதின கருவைத்தான் நான் விஸ்தரித்து எழுதுகிறேன்.

ஆனால் கங்காதேவி கதைப் பொருளை ஒரு சிறிய காவியமாக பாடிவிட்டாள்.

அந்த வடமொழிக் காவியத்திற்கு "மதுரா விஜயம்" மதுரையின் வெற்றி என்று பெயர் வைத்தாள்.

அவளின் நினைவாக, அவள் மீது பக்தி நிறைந்த நன்றியாக அவள் தலைப்பையே எனது 'உலா'வில் உபதலைப்பாக ஏற்றுக் கொள்ளும் பேறு பெற்றிருக்கிறேன்.

கங்கா தேவி யார்?

கங்காதேவி ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்தவள். குமார கம்பணன் என்ற அரசரின் பட்டத்து ராணியாக விளங்கியவள். விஜயநகர சாம்ராஜ்யம் தோற்றுவித்த ஹரிஹரர், புக்கர் என்ற சகோதரர்களில் புக்கரின் மகன் கம்பணன்.

கம்பணன் செய்த அரிய செயல்களையும், போர்களையும்தான் ஒரு சிறு காவியத்தில் உருவாக்கி விட்டாள் கங்காதேவி.

அப்படி அவள் செய்தது அந்நாளில் பெரும்பான்மைக் கவிஞர்களும், அறிஞர்களும் செய்யாத ஒரு தனித் தன்மையான செயல்!

இதற்காக நாம் கங்கா தேவிக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம். அவள் எழுதிய நூலால் அந்நாளையச் செய்திகளில் பல நமக்குத் தெரிய வந்துள்ளன.

வரலாற்றுக்கு அவை பேருதவி செய்து உள்ளன. இந்தக் கதைக்கு அவை பெரிதும் பயன்பட்டுள்ளன.

தென் இந்தியச் சரித்திரத்துக்குப் பயன்பட்ட பழைய கால நூல்களில் முதன்மையான நூல் என்று சரித்திர ஆசிரியர்கள் கங்காதேவியின் 'மதுரா விஜய'த்தைக் கூறுகிறார்கள்.

கங்கா தேவியின் புலமை

கங்காதேவி மிகவும் புலமை மிகுந்த கவி.

வடமொழியில் தேர்ச்சி பெற்றவள். காளிதாசன், பட்டபாணர், பாரவி, ஆசாரிய தண்டி, பவபூதி ஆகிய வடமொழி மகாகவிகளின் நூல்களை ரசனையோடு படித்தவள்.

தனது புலமையின் காரணத்தால் அழகாகவும், ரசத்தோடும் கவிதை எழுதும் திறன் பெற்றவள்.

"மதுரா விஜயம்" என்று அவள் எழுதிய இந்நூலுக்கு 'வீரகம்பராய சரிதம்' என்ற மற்றொரு பெயரும் உண்டு.*

பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்தக் கதை நிகழ்ந்த காலத்திலேயே வாழ்ந்து கதைச் சம்பவங்களை நேரிலேயே காணும் வாய்ப்புப் பெற்று,

அதை ஒரு நூலாகவும் வடித்துக் கொடுத்த கங்காதேவிக்கு என் பக்தி மிகுந்த வணக்கங்களைத் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது வரும் இந்தப் பதிப்பு ஒரு சீர்திருத்தியப் பதிப்பு.

விடப்பட்ட பல செய்திகளும், விஷயங்களும் நிறையச் சேர்க்கப்பட்டு உள்ளன.

ரசிகர்கள் பெரிதும் வரவேற்பார்கள்.

ஸ்ரீவேணுகோபாலன்

---

* இந்த அரிய நூல் கரையான் அரித்த ஏடுகளில் ஒன்றாக 'மதுரா விஜயம்' திருவனந்தபுரத்தில் 1916-ல் கண்டுபிடிக்கப்பட்டது. கிரந்த லிபியில் இருந்த இந்த நூல் பின்னர் பிரசுரிக்கப்பட்டது.

திரு. கோபுலு அவர்கள்

"திருவரங்கன் உலா" ஒரு தொடராக வெளிவந்த போது அதற்கு அழகும் ஜீவனும் ததும்ப ஓவியங்கள் வரைந்து கொடுத்தவர் கலைமாமணி கோபுலு அவர்கள்.

உண்மையில் அவரது ஓவியங்களால் என் முதல் சரித்திரக் கதைக்கு ஒரு மதிப்பும் மவுசும் ஏற்பட்டன.

ஓவியம் மட்டுமல்ல! கதை எழுதும் போது எனக்கு அவர் அவ்வப்போது சரித்திர நுணுக்கங்களையும் கூறி விளக்கி வருவார்.

எல்லோரும் போற்றும் இந்த மேதை எனது நூலுக்கு கலை அழகு நிறைந்த வர்ண மயமான முகப்பு ஓவியத்தை வரைந்து கொடுத்திருப்பதும் என் பாக்கியமே!

--- ஸ்ரீவேணுகோபாலன்.

1

கல்யாணாய ஸதாம் பூயாத் தேவோ தந்தாவலான:

சரணாகத ஸங்கல்ப கல்பனாகல்ப பாதப

தன்மதீயமிதம் காவ்யம் விபூதா: ச்ரோதுமர்ஹத

"மதுரா விஜயம்" நாம சரிதம் சம்பபூபதே:

சரணாகதி அடைந்தவர்களின் விருப்பங்களைக் கற்பக விருட்சம் போல் நிறைவேற்றித் தரும் யானைமுகக் கடவுள் நன்மைகள் செய்வாராக!

நான் எழுதிய காவியமான 'மதுரா விஜயம்' என்ற இந்த கம்பண அரசரின் சரிதத்தை அறிஞர்கள் கேட்பார்களாக!

(கங்கா தேவியின் மதுரா விஜயத்தில் 1, 25-வது பாடல்கள்)

பூந்தூறல் விழுந்து பூமியை எங்கும் குளிர்வித்துக் கொண்டிருந்த ஐப்பசி மாதத்து நன்னாள். (கி.பி.1360)

இளங்காலையில் கொங்கு நாட்டைச் சேர்ந்த சத்திய மங்கலம் என்னும் ஊரில் கையில் பயண மூட்டையுடன் ஒரு இளைஞன் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அவனை அனுப்புவதில் கடமை வாய்ந்த உணர்ச்சியுடன் ஒரு ஐம்பத்தாறு வயதுப் பெண்மணி ஈடுபட்டிருந்தாள்.

செழிப்பான கேசமும், சந்தனம் போன்ற நிறமும் கொண்டிருந்த அந்தப் பெண்மணி

பார்ப்பதற்கு நாற்பது பிராயத்தவள் போலத் தென்பட்டாள்.

அவளது நடையையும், மேனி இயக்கங்களையும், கண்களின் அசைவுகளையும் பார்த்தவுடனேயே இவள் லளிதமான கலை எதையோ பயின்றவள் என்று தோன்றி விடும்.

கையில் பளபளக்கும் வெள்ளி ரட்சையுடன் வந்த அவள், "வல்லபா! இப்படி வா!" என்று அன்போடு அழைத்தாள். பத்தொன்பது வயதுள்ள அந்த இளைஞனான ராஜவல்லபனும் துள்ளி அவள் பக்கத்தில் வந்து நின்றான்.

அவ்வளவில் அவனை ஆரத் தழுவி உச்சி முகர்ந்து, கண்ணீர் ஆறாய்ப் பெருக்கிய அந்தப் பெண்மணி, "வல்லபா, ராஜவல்லபா!" என்று பலவாறாய் அரற்றி அவன் புஜத்தில் அந்த வெள்ளி ரட்சையைக் கட்டி விட்டாள். பின்னர் விடை கொள்ளும் நேரம் வந்ததால், தனது ஆற்றாமையைச் சிறிதே ஆற்றிக் கொண்டு, "வல்லபா! என் ஆசைகளை நிறைவேற்றுவாயா?" என்று ஆதங்கத்துடன் அந்தப் பெண்மணி நயந்து கேட்டாள்.

"நிச்சயம் நிறைவேற்றுவேனம்மா!" என்று கூறிய அந்த இளைஞன் புன்னகை சிந்தி அவளைப் பார்த்து முறுவலித்தான்.

அந்த முறுவலின் பிரதிபலிப்பில் தனது இறந்து போன கணவன் குலசேகரனின் சாயல் கண்டு குதூகலித்த வாசந்திகா என்னும் பெயருடைய அப்பெண்மணி அவனுக்குத் திருஷ்டி கழித்து, அவனது முன்னுச்சி மயிர்களை விலக்கி, சிந்தூரக் குங்குமம் இட்டு விட்டாள்.

பிறகு அவன் இரு கைகளையும் இறுகப் பற்றிக் கொண்டு, விழிகளில் அருவி சோர,

"வல்லபா! நான் சொல்வதைக் கவனமாகக் கேள்! உன் தந்தையின் கனவை நிறைவேற்றுவதற்காகவே நீ பிறந்தாய்! அந்த ஒரு காரியத்திற்காகவேதான் அவர் மரணம் அடையும் தறுவாயிலும் என்னை மணந்து கொண்டார். உன் தந்தையை நான் முதன் முதல் என்று பார்த்தேனோ அன்றிலிருந்து அவர் கனவுதான் என் கனவும்! எங்கள் ஏகோபித்தக் கனவுதான் உன்னால் நிறைவேற்றப்பட வேண்டும். அதில் நான் உன்னைத் தான் நம்பியிருக்கிறேன். இதற்காக இப்போது உன்னிடம் ஒரு சத்தியம் கேட்கப் போகிறேன்!" என்று கூறினாள்.

"சொல்லம்மா! எது வேண்டுமானாலும் செய்து தருகிறேன்!" என்றான் அவன் தழதழப்புடன்.

"வல்லபா! ஒரு மகனிடம் ஒரு தாய் கேட்கக் கூடாத சத்தியந்தான் இது. உன் தந்தை வாழ்ந்த உயர்ந்த லட்சியத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் இதை உன்னிடம் கேட்கிறேன்!" என்றாள் வாசந்திகா.

"தயங்காமல் கேளுங்களம்மா!" என்றான் மீண்டும் வல்லபன்.

"வல்லபா! கேள், இன்று உன்னை நாட்டுக்குள் அனுப்புகிறேன். என்னென்ன நீ செய்ய வேண்டும் என்பதெல்லாம் விவரம் சொல்லி அனுப்புகிறேன். அதில் உனக்கு எத்தனையோ சங்கடங்கள் வரலாம். சோதனைகள் வரலாம்! ஒரு சத்தியம் கொடு எனக்கு. நானும் உன் தந்தையும் சேர்ந்து கண்ட கனவு நிறைவேறும்வரை நீ திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று உறுதிமொழி கொடு. அதைப் போன்ற ஆசாபாசங்களுக்கே இடம் கொடுக்க மாட்டேன் என்று உறுதிமொழி கொடு!" என்று கூறினாள்.

ராஜ வல்லபன் நிமிர்ந்து பார்த்தான்.

அவன் கண்களில் வீரமும் பெருமிதமும் விம்மி ஓடின. "அம்மா! இவ்வளவுதானா கேட்டீர்கள்? இதையா நான் உங்களுக்குச் செய்யாமல் இருப்பேன்? இதோ உறுதிமொழி கொடுக்கின்றேன். உங்கள் கனவு நிறை வேறும் வரை நான் திருமணமே செய்துக் கொள்ள மாட்டேன்!" என்று கம்பீரமாகக் கூறினான்.

பிறகு தார்ப்பாய்ச்சிய உத்தரியம் தரையில் புரளக் கீழே விழுந்து தாளும் தடக்கையுமாகத் தாயாரை நமஸ்கரித்தான்.

வாசந்திகாவின் கண்களில் நீர் புலபுலவென்று பொழிந்தது. அவன் தோளைச் செல்லமாகத் தட்டி, "நீ என் மகன், என் அன்பான மகன்!" என்று பெருமிதத் தோடு கூறி, "வெற்றி பெறுவாய்! அரங்கன் உனக்கு எல்லா அருளும் புரிவார்!" என்று வாழ்த்தினாள் அவள்.

அங்கு நடப்பதை எல்லாம் வாயிலில் நின்றிருந்த மற்றொரு இளைஞன் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பதினெட்டுப் பிராயம் இருக்கும். கையில் தாழங்குடையும், தோளில் பயண மூட்டையுமாக இருந்தான். முகம் சதா முறுவலித்த-வாறு இருந்தது.

"காலதத்தா! இரண்டு பேரும் சாவதானமாய் செல்ல வேண்டும். நல்லபடியாய்த் திரும்பி வர வேண்டும்!" என்று அந்த இளைஞனை நோக்கி வாசந்திகா கூறினாள்.

"நல்லதம்மா!" என்று கூறி அதே முறுவலுடன் இருந்தான் காலதத்தன்.

பின்னர் இளைஞர்கள் இருவரும் சகுனங்களையும் நன் நிமித்தங்களையும் பார்த்துப் புறப்பட்டார்கள்.

வாயில் தூணின் மீது சாய்ந்து கொண்டு அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த வாசந்திகா கற்சிலையாகச் சமைந்து விட்டாள்.

இளைஞர்கள் உற்சாகம் பொங்க நடந்து ஊரைக் கடந்தார்கள். கோவில் விமானத்தைக் கடைசியாகத் தூரத்திலிருந்தவாறே தரிசித்துவிட்டு, கடம்ப மரங்கள் செழித்து அடர்ந்திருந்த பாட்டையில், அதிகுதூகலத் துடனே நடந்து சென்றார்கள்.

கிழக்கே உள்ள நாடுகளுக்குச் செல்லும் ராஜ பாட்டை அது. அந்தப் பாட்டையில் அதிக ஜன நடமாட்டமோ, வாகன நடமாட்டமோ அப்போது இல்லை.

அதைக் கண்டு, "ஆச்சரியம்! இந்தச் சாலை எப்போதும் ஜே ஜே என்று இருக்குமே! யாத்திரிகர் களும், பிரயாணிகளும் போய் வந்த வண்ணமாய் இருப்பார்களே! இப்போது எல்லாருக்கும் பயம் வந்துவிட்டது. அதிக நடமாட்டமே இல்லை பார்!" என்று கூறினான் காலதத்தன்.

அவன் சொன்னதில் தவறில்லை. சாலையில் எப்போதாவது ஆட்கள் தென்பட்டார்களே ஒழிக, நெடுந் தூரத்திற்கு நெடுந்தூரம் சாலை வெறிச்சென்று கிடந்தது.

இரு இளைஞர்களும், களைப்புச் சிறிதும் அடையாமல் உல்லாசமாகப் பேசிக் கொண்டு ஐந்து நாழிகை தூரம் நடந்து சென்றார்கள்.

பிறகு அவர்கள் ஒரு ஓடை அருகே தாகவிடாய் தீர்த்த பிறகு வல்லபன் தனது நண்பனை நோக்கி, "காலதத்தா! ஒரு விஷயம் கேள். 'ஊரைவிட்டு ஒரு காத தூரம் போன பிறகு நான் கொடுக்கும் இந்த ஓலைச்சுருளைப் பார்!' என்று என் தாயார்

பணித்திருந்தார்கள். இப்போது ஒரு காதத்திற்குமேல் வந்து விட்டோம்; அது என்ன என்று பார்க்கலாம்!" என்று கூறினான்.

உடன் சுருக்குப் பையை அவிழ்த்து அதிலிருந்து அந்த மஞ்சள் தடவிய ஓலையை வெளியே எடுத்துப் படித்தான்.

"மங்களம் உண்டாகட்டும்! வல்லபனுக்குத் தாயார் ஆசீர்வதித்துச் சொல்லுவது" என்று தொடக்கத்தில் எழுதியிருந்தது. அதன் கீழே,

"மொழியில் பிறழாதே, - வழியில் பிறழாதே,
விழியில் பிறழாதே."

என்று கண்டிருந்தது.

அதைப் படித்து விட்டு ராஜவல்லபன் மெதுவாகச் சிரிக்க, காலதத்தன் அந்த ஓலை நறுக்கைக் கையில் வாங்கிக் கொண்டு பார்த்தான்.

பிறகு வல்லபனை நோக்கி, "வல்லபா! இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது. உன் தாயார் அறிவில் சிறந்தவர். இந்த நறுக்கை எழுதினால், அதில் ஆழப் பொதிந்த கருத்துரை ஏதோ நிச்சயமாக இருக்கும். அது உன் வருங்காலத்துக்கு அனுகூலமாக இருக்கும். ஆகவே உன் தாயாரின் இந்த உபதேசத்தை நீ கவனத்துடன் போற்ற வேண்டும்!" என்று கூறினான்.

வல்லபனும், "நல்லது காலதத்தா! நான் அவசியம் அவர் சொற்படி எல்லாம் நடப்பேன். ஆனால் என் தாயார் என்னை இன்னும் ஒரு சிறுவன் என்று நினைத்து மிகுந்த பாதுகாப்பாக இருக்கிறார். நீ மட்டும் எனக்குத் துணை கிடைக்கவில்லை என்றால் என்னை அனுப்பி இருக்க மாட்டார்!" என்று கூறினான்.

இரண்டாம் நாள் மாலையில் வெகு வேகமாகப் பல நாழிகைகள் நடந்த பிறகு காலதத்தனுக்குச் சற்றே காலில் நோவு எடுக்கவே அவன் ராஜவல்லபனை அழைத்து,

"அப்பா, ராஜவல்லபா! சற்று இளைப்பாறி செல்வோமே!" என்ன, வல்லபனும் அதற்கு இசைந்து நின்று விட்டான்.

பிறகு இருவரும் சாலையோரம் உள்ள தரையில் அமர்ந்து, மூட்டைகளைக் கீழே இறக்கி, ஒரு துணிப் பொதியை அவிழ்த்து, அதனுள் நறு நெய்யும் வெல்லப்பாகும் மணத்துக் கொண்டிருந்த சத்துமாவை எடுத்து உண்ண ஆரம்பித்தார்கள்!

"இரவு எங்கே தங்குவோம்?" என்று அப்போது கேட்டான் ராஜவல்லபன்.

"இன்னும் அரை காத தூரத்தில் ஓடுமானூர் என்னும் ஊர் இருக்கிறது. அங்கே ஒரு சத்திரம் இருக்கிறது!" என்று கூறினான் காலதத்தன்.

"உனக்கு இந்த இடங்கள் எல்லாம் எப்படி இவ்வளவு நன்றாக நினைவிருக்கிறதே?" என்று கேட்டான் வல்லபன்.

"என் தந்தையோடு எத்தனையோ முறை பிரயாணம் செய்திருக்கிறேன். காஞ்சிக்கும், திருப்பதிக்கும் பத்து முறைகளாவது போய் இருப்பேன்!" என்றான் காலதத்தன்.

அப்போது வீசிய திடீர்க் காற்று தாழங்குடையை வாரிவிடவே,

அதுவும் அத்திரிப் பாய்ச்சலில் குட்டிக்கரணம் இட்டுச் சாலையில் ஓடவே, அவனும் விருட்டென்று

எழுந்து அதன் பின்னாலேயே ஓடி, 'ஏலேய்! சத்திரபதி* ராஜாதிராஜன் இங்கிருக்க என்னை விட்டு ஓடவா பார்க்கிறாய்?' என்று கேட்டுக் கொண்டு அதை ஒரே தாவலில் போய் பிடித்து வலைக்காரன் வாத்தைத் தூக்குவது போல் தூக்கியெடுத்தான்.

அந்தக் கணத்திலே அவன் பார்வை சாலையின் தூரத்தில் விழ, சிறிதே கலவரமும் அடைந்தவனாய், "வல்லபா! சேவகர்கள் வருகிறார்கள்" என்று கூறிச் சாலையை விட்டு அகன்று உடனே ஓரம் ஓடினான்.

அவன் காட்டும் திசையை வல்லபனும் பார்த்து விட்டு "யாருடைய சேவகர்கள்?" என்று கேட்டான்.

"யாருடைய சேவகர்கள் என்று எங்கே சொல்ல முடிகிறது? நாட்டில்தான் நிலையான ராஜாக்கள் இல்லையே? இவர்கள் நம் நண்பர்களா, எதிரிகளா என்று சொல்ல முடியாது. சீக்கிரம் ஒளிந்து கொள்ளலாம்!" என்று பரபரத்தான் காலதத்தன்.

மூட்டைகளை அவசரமாக எடுத்த வல்லபன் கணநேரம் சாலையை உறுத்து நோக்கினான்.

பிறகு தன் பரபரப்பைக் குறைத்துக் கொண்டு, "காலதத்தா, சேவகர்களும் வருகிறார்கள். பின்னால் கூண்டு வண்டியும் வருகிறது!" என்று கூறினான்.

"அப்படியா?" என்றான் காலதத்தன். அவன் பரபரப்பும் அந்த நேரத்தில் குறைந்து விட்டது.

"யாராவது பிரபுவாக இருப்பார். சேவகர்கள் அவரது காவலர்களாக இருக்க வேண்டும்!" என்று கூறினான்.

இருவரும் அங்கேயே நின்று விட்டார்கள்.

* சத்ரம் (வடமொழி) - குடை

வண்டி அவர்களை நோக்கி வர வர, அதன் 'டிணிங் டிணிங்' என்ற மணி மயமான நன் நாதம் கிண்ணார மாய்க் கேட்டு வந்தது.

அந்த அந்தி நேர நிசப்தத்தை அது உளி கொண்டு பொளிப்பது போல் பொழிந்து கொண்டிருந்தது.

கம்பீரமான இரு ஒட்டன் காளைகள் பூண் போட்ட நீண்ட கொம்புகளுடன் பரு நடையில் நடந்து வந்தன. அவற்றின் நெற்றியில் ஒரு சிறிய வெண்சங்கு மேலும் கீழும் ஆடிக் கொண்டிருந்தது. கழுத்தில் கண்ணைப் பறிக்கும் பட்டு நூல் மாலை ஒன்று சுற்றப்பட்டிருந்தது.

வண்டிக் கூட்டின் மேலே பெரிய தாமரைப் பூ போட்ட சீலைத் துணி மூடியிருந்தது. வண்டியில் பித்தளைக் கைப்பிடிகள் தங்கம் போல் பளபளத்துக் கொண்டிருந்தன.

இவ்வளவு அலங்காரமாய் வந்த வண்டியின் முன்னும் பின்னும் திரைச்சீலை போட்டுச் சிக்கென அடைக்கப்பட்டிருந்தது. அந்த வண்டியின் இரு புறங்களிலும் இரு சேவகர்கள் குதிரை மேல் ஆரோகணித்துக் கையில் வேல்களுடன் வந்து கொண்டிருந்தார்கள்.

இளைஞர்களின் பக்கம் வண்டி வந்ததும் சொல்லி வைத்தாற்போல் அது நின்று விட்டது. மாடுகள் இரண்டும் வெகுதூரக் களைப்பால் மூக்கில் நுரை தப்ப, நீளமாகச் சிறுநீரைக் கழித்து விட்டன.

வந்த சேவகர்களில் ஒருவன் வல்லபனின் பக்கலில் வந்து, "தம்பீ! பொழுது சாயுமுன் தங்குவதற்கு வசதியாய் அருகில் ஏதும் ஊர் உண்டோ?" என்று கேட்டான்.

"அரைக் காத தூரத்தில் ஓடுமானூர் இருக்கிறது. அங்கே ஒரு சத்திரம் உண்டு!" என்றான் காலதத்தன்.

"அரைக் காதமா?" என்று சேவகத் தலைவன் புருவத்தை மேலே உயர்த்தினான்.

"சரி, புறப்படுவோமா?" என்று வண்டிக்காரன் கேட்க மற்ற மூன்று சேவகர்களும் தலையை அசைத்தார்கள். வண்டி புறப்பட்டது. அதன் உருளைகள் இரண்டும் உருண்டு மேலே செல்ல, மகிழம்பூவின் வாசனை கொல்லென்று அங்கே அடித்தது.

அதே தருணத்தில் திடீரென்று ஒரு பெருங்காற்று அசுர வேகமாய்ப் புறப்பட்டு அந்தச் சாலையையும் அதன் மரங்களையும் மோதிக் கொண்டு ஓட, சேவகர்கள் நான்கு பேர்களது தலைப்பாகையும் காற்றில் பிரிந்து பறந்தோடியது. குதிரையை விட்டுக் குதித்த அவர்கள் அவற்றின் பின்னே ஓட, அந்தக் களேபரத்தின் மத்தியில் மற்றொரு சம்பவமும் நடந்து விட்டது.

சிக்கென அடைத்திருந்த வண்டியின் திரைச் சீலைகள் பொத்துக் கொண்டு திறந்து கொள்ளவே, அந்தக் கணத்தில் ராஜவல்லபனின் பார்வை கூண்டு வண்டிக்குள் ஓடியது. அங்கே, மின்னல் இறைத்தாற் போல் ஒரு இளம் பெண் அமர்ந்து அவனை நோக்கியிருந்தாள்.

அவளது கண்களும் அபரிமிதமான சோகம் வழிந்து கொண்டிருந்தது. அரைக்கண நேரமே அவளைப் பார்த்திருப்பான்.

அடுத்த நொடியில் சேவகத் தலைவன் பரபரத்து, "மூடு மூடு" என்று இரைந்து கொண்டே ஓடி வந்து பின்புறத் திரைச்சீலையை இழுத்து மூடத் தலைப்பட்டான்.

அதே கணத்தில் வல்லபனின் பார்வையில் அந்தப் பெண் தன் முகத்தை இரு கைகளாலும் துடைக்கப் போவது தெரிந்தது.

அதைப் பார்த்தபோது அவனுக்கு ஒரு அதிர்ச்சியே ஏற்பட்டது. ஏனெனில் அவளது கைகளில் விலங்கு பூட்டப்பட்டு இருந்தது.

2

அந்த ராஜ பாட்டையில் அந்த அந்தி நேரக் காட்சிகள் விரைவாக நடந்தன.

கூச்சலிட்டுக் கொண்டு ஓடி வந்த சேவகத் தலைவன் சரேலென்று பாய்ந்து பின்பக்கத் திரைச் சீலையை அள்ளிப் பிடித்து, அவசர அவசரமாக அதன் காதுகளை இழுத்துக் கட்டத் தொடங்க, காற்றின் வசப்பட்ட சீலையும் மூலைக்கு மூலை பிய்த்துக் கொண்டு படபடக்க,

உள்ளிருந்த மின்னலின் உருவம் இடைக்கொரு முறை இடைவழியே பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.

அதே நேரத்தில் 'வண்டிக்குள்ளிருந்த நாற்பது வயது மதிக்கத்தக்க மற்றொரு பெண்மணி ஒரு புறமாக ஒருக்களித்து அவசரம் காட்டி அந்தச் சீலையை இழுத்துக் கட்டுவதற்கு உதவி புரிந்தாள்.

காற்று விடாமல் சீழ்க்கையாய் சப்திக்க, கடம்பம் வாகை, மருது, மஞ்சள்நாறி, கோங்கு ஆகிய மரங்கள் எல்லாம் உச்சியில் சலசலத்துப் பெரிய சதங்கை ஒலிபோல் ஓசையை எழுப்பி விட்டன. ஒருவாறு சீலையைக் கட்டி முடித்து, அப்பாடா! என்ற உணர்ச்சியில் கனைத்துக் கொண்டு, அந்தச் சேவகத்

தலைவன் தன் அங்கி நுனிகளைச் சுருக்கிட்டவாறு அந்த இளைஞர்களைச் சூக்குமாக ஒரு முறை பார்த்தான்.

பின்னர் வண்டிக்காரனைப் பார்த்து, "போ!" என்று சமிஞ்ஞை செய்தான்.

வண்டி புறப்பட்டது.

இடது பக்க நொடியில் அதன் உருளை இறங்கி ஏற வண்டி ஒரு பல்லக்குக் குலுங்குவதுபோல் ஆடிக் கொண்டு சென்றது.

டிண் டிணிங் என்ற அதன் நாதம் ஒரு இன்னிசை போல் எண் திசையிலும் தவழ்ந்து சென்றது.

இளைஞர்கள் இருவரும் போகும் வண்டி மீது இட்ட பார்வை இட்டபடியாகவே இருந்தது.

பிறகு "ஹூம்" என்று பெருமூச்சு விட்ட வல்லபன் கீழே கிடந்த பொதியை எடுத்துத் தோளில் சாய்த்துக் கொள்ள காலதத்தனும் அவ்வாறே செய்தான்.

இருவரும் மௌனமாகப் புறப்பட்டார்கள்.

காற்று அலை போல் மோதியதால் காலதத்தனின் தாழங்குடை மட்டும் அடிக்கடி முறைத்து பலவிதமாய் ஜாலம் செய்தது. அவனும் அதைச் சமாதானப்படுத்தி அவ்வப்போது வெவ்வேறு விதமாகத் தாலாட்டிக் கொண்டிருந்தான்.

இருவர் மனங்களும் கனக்க சிறிது தூரம் பேச்சில்லாமல் நடந்து போனார்கள்.

சாலையில் ஒரு மேடு ஏறியது. சடக்கென்று காலதத்தன் நின்று விட்டான். உடன் நண்பனை நோக்கி, "வல்லபா! அந்தப் பாறை மேலே ஏறு; அவசரம்!" என்று கூவி விட்டு அவனே முன்னதாக அங்கே விரைந்தான்.

வல்லபனும் விரைந்து ஒரு மருத மரத்தின் அடியில் யானை உயரத்தில் இருந்த கரிய பாறையின் மீது தட்டுத் தடுமாறி ஏறினான்.

ஈரப்பாசி சிறிச் சிறிதே வழுக்கிவிட ஒருவாறு மேலே ஏறி, சில சதுர அடிகளே உள்ள உச்சியில் இருவரும் நெருங்கி அமர்ந்து கொள்ள, வல்லபனும் நண்பனைப் பார்த்து, "தத்தா! இதெல்லாம் என்ன?" என்று கேட்டான்.

"அதோ பார்!" என்றான் தத்தன்.

தூரத்தில் காற்று எழுப்பிய தூசுப் படலத்தின் நடுவில் அந்தச் சேவகத் தலைவன் திரும்பி வருவதை வல்லபன் பார்க்க நேர்ந்தது.

"வல்லபா! வாளும் கத்தியும் கைவசத்தில் இருக்கட்டும்!" என்றான் காலதத்தன்.

பொதிக்குள் இருவரும் தங்கள் தங்கள் கொடுவாட்களை மறைத்து வைத்திருந்தார்கள். இருவரும் அவற்றின் கைப்பிடிகளில் கை வைத்து ஒரு ஆயத்த நிலையில் இருந்து கொண்டார்கள்.

சேவகத் தலைவன் அந்த எல்லைக்குள் வந்ததும், தனது வேகத்தைக் குறைத்துக் கொண்டு பொய்க்கால் குதிரை வருவது போல மந்தமான நடையில் வரத் தொடங்கினான்.

வருகிற போது சுற்றுப்புறத்தை மிக உன்னிப்புடன் கவனித்தவாறு வந்தான்.

அவர்கள் இருக்கும் பாறைப் பக்கலில் வந்ததும் அங்கேயும் நின்று சுற்றிவரப் பார்த்தான்.

அவனை அந்த நிலையில் சில நொடிகள் வேடிக்கை பார்த்துவிட்டு, பின்னர் காலதத்தன் அவனை நோக்கிக் கைகளைக் கொட்டினான்.

திடுக்கிட்ட சேவகன் மேலே பார்த்து, கீழே பார்த்து ஆகாசத்தைப் பார்த்து, கடைசியில் பாறை மீது பார்வையைச் செலுத்தியதும் அங்கே அண்டரண்டப் பறவைகள் போல் இணையாக அமர்ந்திருந்த இளைஞர் களைக் கண்டு, முதலில் கடுகடுப்பும் பிறகு அதை மறைத்து மந்தகாசமும் கொள்ள,

"தம்பிகாள், இதென்ன? கிட்கிந்தையில் இருப்பதாக அல்லவா தோன்றுகிறது?" என்று கூறிக் கடகட என்று ஒரு சிரிப்பை வரவழைத்தான்.

அவனை உன்னிப்போடு கவனித்த காலதத்தன், "ஐயா! தெற்கேதானே இலங்கை இருக்கிறது. கிட்கிந்தையும் இங்கே தானே இருக்க வேண்டும்!" என்று மிக நகுதலாகக் கூறினான்.

சேவகத் தலைவன் அதற்கு பகபகவென்று ஒரு பகட்டாகச் சிரித்து, குதிரைப் பிடரியைத் தட்டிக் கொடுக்கும் பாவனையில் அவசரமாக ஒரு யோசனை பண்ணி மீண்டும் அந்தக் குறும்புக்கார இளைஞர்களை நோக்கி,

"தம்பிகாள்! அங்கே ஏறி அமர்ந்திருக்கிறீர்களே, ஓடுமானூர் வரவில்லையோ?" என்று வினவினான்.

அதற்குக் காலதத்தன், "பொழுது இன்னும் சாயவில்லையே. சாய்ந்தால் அவசியம் வருவோம். எங்களுக்கு இந்த ஈரக் காற்றும், பூந்தூறலும் நன்றாகப் பிடித்திருக்கின்றன!" என்று கூறினான்.

உடன் சேவகத் தலைவன் மீளவும் யோசித்து, "நல்லது தம்பிகாள்! எனக்கு ஒரு காரியம் உண்டு.

எம்மைச் சேர்ந்த படையாட்கள் இவ்வழியே வருவார்கள். அவர்களை ஓடுமானூர் சத்திரத்திற்கு அனுப்பி வைப்பீர்களா?" என்று கேட்டான்.

"ஆகட்டும்!" என்றான் காலதத்தன்.

அவ்வளவில் அந்தச் சேவகன் குதிரையை வளைத்துத் திருப்பி அந்த எதிர்க் காற்றில் நீச்சலிட்டுக் கொண்டு அடிக்கடி திரும்பியவாறே கடந்து போனான்.

அவன் போனவுடனே, வல்லபன் தன் கையைத் தளர்த்தி, காலதத்தனை நோக்கி, "தத்தா! இதெல்லாம் என்ன? மூடு மந்திரமாக இருக்கிறதே!" என்று கேட்டான்.

தத்தனும் உடன் சாவகாசமாய்ச் சம்மணம் இட்டுக் கொண்டு, "வல்லபா! ஒரு ஆபத்திலிருந்து தப்பினோம்!" என்று கூறினான்.

"என்ன ஆபத்து?" என்றான் வல்லபன்.

"இரண்டாம் முறையாக இந்தத் தலைவன் திரும்பி வந்தானே! காரணம் என்ன என்று நினைக்கிறாய்?"

"தெரியவில்லையே?"

"நம்மை பார்க்க வந்திருக்கிறான்!"

"எப்படி ஊகிக்கிறாய்?"

"கூண்டு வண்டி புறப்பட்டதும், அவன் நம்மைப் பார்த்த பார்வையில் ஊகித்துவிட்டேன். அடுத்த ஓடை அருகே அவன் நமக்காகக் காத்திருப்பான். நாம் வாராதது கண்டு அவனே திரும்ப வந்து விடுவான் என்று நினைத்தேன். நினைத்தபடியே வந்து விட்டான்!"

Released by Maran's Dog. Toronto, Canada

Released by Maran's Dog. Toronto, Canada

"அதற்காக ஏன் பாறை மீது ஏறச் சொன்னாய்?"

"வருகிறவன் சினேகிதனாக வருகிறானா, எதிரியாக வருகிறானா என்பது எப்படித் தெரியும்? சினேகிதம் பேச வந்துவிட்டு, திடீரென்று வாளை உருவி ஒரே வீச்சில் இருவரையுமே யமன் உலகத்துக்கு அனுப்பி விட்டால் என் செய்வது? இதுபற்றியே முன் எச்சரிக்கை யாகப் பாறை மேலே ஏறி அமரத் துணிந்தேன். இங்கே இந்தப் பாறை மீது ஒருவர் அமரலாம், இருவர் ஒடுங்கலாம், மூவர் நிற்கலாம். இந்த இடத்திற்கு ஏறி வந்து நம்மை அவன் கொல்வது முடியாத காரியம். அதற்குள் நாம் எச்சரிக்கையாகி விடுவோம்!" என்றான் காலதத்தன்.

"சரி தத்தா! அவன் நம்மைக் கொல்ல வந்திருப்பான் என்று சொன்னாய். அதற்குக் காரணம் என்ன?"

"வழியில் அந்தக் கூண்டு வண்டியைப் பார்க்க வில்லையா?"

"பார்த்தேன்!"

Released by Maran's Dog. Toronto, Canada

"அந்த இளம் பெண்ணைப் பார்க்கவில்லையா?"

"பார்த்தேன்!"

"அவள் தான் காரணம்!"

"எப்படியோ?"

"அவள் ஒரு அரச குலப் பெண்!"

"உனக்கு எப்படித் தெரியும்?"

"சொல்கிறேன் கேள்! அவள் முகம் வட்டச் சந்திரன் போல் இருந்தது. செவ்வரி படர்ந்திருந்தது. அம்பு போல் அவை நீண்டிருந்தன. அன்றியும், அவைகளைப் பார்ப்பதற்கு மாவடு போல் தோற்றம்

Released by Maran's Dog. Toronto, Canada

தந்தது. புருவங்கள் கரி கீறினால் போல் இருந்தன. ஒன்றுக்கொன்று கூடவில்லை. கீழ் உதடுகள் பவழத் துண்டுகள் போல் இருந்தன. நெற்றி மூன்று விரல் அளவில் இருந்தது. கூந்தல் கரிய மையாய்த் தெரிந்தது. புஜங்கள் இரண்டும் பருத்திருந்தன. கொங்கைகள் அடி பருத்திருந்தன. சிறுத்திருந்த வயிற்றில் மூன்று மடிப்புகள் இருந்தன. இப்படிப்பட்டவள் அரச குலப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும்!"

"ஓகோ! அனுமானமோ?"

"இல்லை. அதுதான் அரச குல இலட்சணம். இந்தப் பெண்ணைப் பிடித்துப் போவதை நாம் பார்த்து விட்டோம். இதனால் அவர்களுக்கு விபரீதம் நேரலாம் என்று நினைத்து விட்டார்கள். நம்மைக் கொன்று விடுவதுதான் அதற்குப் பரிகாரமாய்த் தோன்றி இருக்கும்!"

வல்லபன் யோசனையில் ஆழ்ந்தான்.

பிறகு நிதானமாக தத்தன் பக்கலில் திரும்பி,

"தத்தா! அந்தப் பெண் எந்த ராஜ்யத்தைச் சேர்ந்தவள்? அந்தச் சேவகர்கள் யார்?" என்று கேட்டான். Released by Maran's Dog. Toronto, Canada

"யார் கண்டார்கள்? தென்னாடு முழுவதும் ஒரு நாயகன் இல்லாமல் கொந்தளித்துக் கொண்டு இருக்கிறதே! ஒரு வருடமா, இரண்டு வருடங்களா? நாற்பது வருடங்களாக இப்படி ஒரு அவல நிலை. இதில் யார் எந்தப் பெண்ணை, எந்த ஊருக்குக் கடத்திக் கொண்டு போகிறார்கள் என்று எப்படிக் கண்டோம்? வா! நம் வழியைப் பார்த்துக் கொண்டு போகலாம்!" என்று கூறி, பாறையிலிருந்து இறங்கத் தொடங்கினான். Released by Maran's Dog. Toronto, Canada

வல்லபனும் அவனைத் தொடர்ந்து இறங்க, பிறகு இருவரும் கீழே சாலையோரம் நின்றார்கள். அப்போதும் காற்றின் விசை குறையாமல் சீராக வீசிக் கொண்டு இருந்தது. வானம் முழுவதும் மேகக் கூட்டங்கள் பெரும் பெரும் குன்றுகள் போல் ஒரே திசை நோக்கி விரைந்து கொண்டிருந்தன.

அவை விரித்த நிழலில் பூமியில் ஏற்கெனவே இருள் இறங்க ஆரம்பித்துவிட்டது.

"வல்லபா, புறப்படு!"

வல்லபன் இட்ட அடி அப்படியே சிக்கென்று பிடித்துக் கொண்டிருந்தது.

"ம்! புறப்படு!"

வல்லபன் தத்தனை விழித்துப் பார்த்தான்.

"தத்தா! நீ சொன்ன வார்த்தை என் மனத்தில் தைத்து விட்டது!" என்றான்.

"என்ன வார்த்தை?"

"நாற்பது வருடங்களாக ஒரு நாயகன் இந்த தென்னாடுகளில் இல்லை என்றாய்!"

"ஆமாம்"

"நாற்பது வருடங்கள் என்றால் எவ்வளவு நீண்ட நெடுங்காலம் என்று பார்த்தாயா?"

"ஏன் பாராமல்! இந்த நாற்பது வருடங்களில் ஒரு பரம்பரை ஒழிந்து மற்றொரு பரம்பரை தோன்றி விட்டதே!"

"ஆமாம்! அந்தப் புதிதான பரம்பரையிலே வந்து நாம் தோன்றியிருக்கிறோம். நம் காலத்தில் குழப்பம், சண்டை, சச்சரவு, கலகம் எல்லாம் பார்க்கிறோமே

ஒழிய நீதி, நேர்மை, அமைதி எதையும் காண்பதில்லை. அந்த நாளில் பாண்டியர்கள், சோழர்கள், பல்லவர்கள் நமது பூமியை ஆண்டு வந்தார்களாம். அவர்கள் சமயங் களையும் வளர்த்துப் பேணி, மக்களை நல்வழியில் உய்ப்பித்தார்களாம். இவைகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோமே தவிர, நேரில் காணும் பேறு கிடைக்க வில்லை. நமது பாட்டனார்கள் சொல்லியதைத் தான் நம்புகிறோம். அந்நாளில் கோவில்களில் ஆறு கால பூஜையும், தின உற்சவங்கள், மாத உற்சவங்கள், வருட உற்சவங்கள் எல்லாம் நடக்குமாம். ஒரு உற்சவத்தையும் நாம் கண்டதில்லை.

"உற்சவங்களில் சுவாமி எழுந்தருள, முன்னால் எப்பெருமானடியார்கள் சதிர் ஆட, வேத பாராயணக் கோஷ்டிகள் வேதங்களைச் சந்தத்தோடு ஓத, திராவிட வேதமாகிய திவ்யப் பிரபந்தங்களை ராகத்தோடு பெரியவர்கள் பாடி வர, அதி கோலாகலமாகவே சுவாமி பவனி வருவாராம். அதையும் பார்த்ததில்லை. பண்டிகை நாள் என்று வீடுகளிலும், வீதிகளிலும் விழாக்கள் கொண்டாடுவார்களாம். ஜனங்கள் ஆனந்தமாகக் கூடி பரவசமாகப் பொழுதைக் கழிப்பார்களாம். அதையும் நாம் பார்த்ததில்லை.

"கார்த்திகை என்றால் தெரியவில்லை. நவராத்திரி யின் பெயரைக் கேட்டிருக்கிறோம். கொண்டாடிய தில்லை. எவ்வளவு அதிருஷ்ட ஈனர்கள் நாம்? கோவில்களைப் பார்! எல்லாம் அழுது வழிகின்றன. பூஜைகள் நடப்பதில்லை. கதவுகள் பூட்டப்பட்டே கிடக்கின்றன. நிறையக் கோவில்கள் பாழடைந்து விட்டன. கோபுரத்திலும், விமானத்திலும் ஆலஞ் செடிகள் முளைத்து விட்டன. மதில்கள் உடைந்து திருக்குளங்கள் தூர்ந்து போய்விட்டன. கோவில் விக்கிரகங்களை நம் முன்னோர்கள் பூமியில் புதைத்து

விட்டார்கள். நம்மில் நிறையப் பேர் கோவில் மூலவர்களையோ விக்கிரகங்களையோ கண்டதில்லை. இப்படிப் பண்டிகைகளும், விழாக்களும் இல்லாத ஒரு நாட்டில் நாம் மாட்டிக் கொண்டிருக்கிறோம். மதுரையில் நடக்கும் ஆட்சிக்குப் பயந்து வீட்டுக்குள் ஒடுங்கியிருக்கிறோம். நான்கு பேர் சேர்வதில்லை. கல்வி பயில்வதில்லை. வேதம் ஓதுவதில்லை. நுண்ணிய பல கலைகளைக் கற்பதில்லை. இப்படி நாடே ஒரு துருப்பிடித்த நிலையில் இருக்கிறது நன்றாகத்தானே நீ சொன்னாய். நாற்பது வருடங்களாக நமக்குத் தலைவன் இல்லை என்று! அதை நினைத்தால் மனம் பதைக்கிறது!"

படபடவென்று மொழிந்த வல்லபன் நெஞ்சத்தில் கையை வைத்துக் கொண்டு உள்ளே ஒரு துக்கத்தை அனுபவித்தவாறு நின்றான்.

"இவை எல்லாம் தெரிந்த விஷயமாயிற்றே. நீ ஏன் படபடக்கிறாய்?" என்றான் தத்தன்.

"நம்மிடையே ஒரு நாயகன் தோன்றவில்லை. அது நம்மை எவ்வளவு கேவலமாகக் காட்டுகிறது!" என்று மீண்டும் துயரம் பொங்கக் கூறினான் வல்லபன்.

"இல்லை என்று ஏன் சொல்கிறாய்; எத்தனையோ பேர்கள் தோன்றினார்கள். தோன்றப் போகிறார்கள். நாம் பிறக்கும் முன் தானே ஒய்சள அரசர் வல்லாள தேவர் தோன்றினார். துரதிஷ்டவசமாகப் போரில் மடிந்து விட்டார்!" என்றான் காலதத்தன்.

வல்லபன் இன்னும் நிலைத்த பார்வையுடனே இருந்தான். "இதற்கெல்லாம் ஒரு விடிவு காலம் வர வேண்டுமே? எனக்கு நெஞ்சு அடங்குவதில்லை. நாமே ஏதாவது செய்து தான் ஆக வேண்டும்!" என்றான் வல்லபன்.

"நாமா?" என்று சொல்லி அவனை ஏறிட்டுப் பார்த்தான் தத்தன். "நாம் என்ன செய்ய முடியும்?"

"தீமையைக் கண்டால் அதை அந்த இடத்திலேயே எதிர்க்க வேண்டும்."

"அப்படியா?"

"ஆமாம். இப்போது ஒரு பெண்ணைப் பலர் கடத்திக் கொண்டு போகிறார்கள். அதை நாம் தடுக்க வேண்டும்!"

"வல்லபா!" என்று சொல்லி அவனை ஆழ்ந்து பார்த்தான் தத்தன். "உனக்கு பைத்தியமா என்ன?"

"ஏன்?"

"நாம் வந்த காரியம் என்ன? அதை விட்டு. . . . "

"நாம் அரங்கனைத் தேடிச் செல்கிறோம். அவர் எங்கிருக்கிறார் என்பதைக் கண்டறியச் செல்கிறோம்."

"அதுவேதான் நமது குறி. அதை நினைவில் வைத்துக் கொள். வழியில் பிறழாதே!"

"பிறழவில்லை. அரங்கனைக் கண்டுபிடித்தால் மட்டும் என் பெற்றோர் கனவு நிறைவேறி விடப் போகிறதா? அவரை மீண்டும் திருவரங்கத்தில் சேர்த்தால்தானே என் தந்தையின் ஆசை நிறைவேறும்?"

"ஆமாம்."

"அதற்கு நாட்டில் நல்ல மனது உடையவர்கள் எல்லோரும் ஒரு சேரத் திரண்டு ஒரு பெரும் பலத்தையே உண்டு பண்ண வேண்டும்!"

"உண்மை!"

"அதற்கு அனுசரணையாக நாம் இப்போதே தீமைகளைக் களைய ஆரம்பிக்க வேண்டும். தீமைகள் அழிக்கப்படுகிறது என்று தெரிந்தால்தான் நல்லவர்கள் ஒன்றுகூட ஆரம்பிப்பார்கள்."

"அதாவது அந்தப் பெண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்கிறாய்!"

"ஆமாம்!"

"விழியில் பிறழாதே!"

வெறுப்புடன் வல்லபன் திரும்பினான். "பிறழவில்லை. அவளோ, அவள் அழகோ என்னை ஒன்றும் செய்யவில்லை!" என்றான் படபடப்புடன்.

"இதில் ஆபத்து உண்டு!"

"அது ஒரு பொருட்டல்ல!"

"வலுவில் சென்று ஆபத்தை வரவழைத்துக் கொள்கிறோம்!"

"தீமையைக் களைய வேண்டுமானால் ஆபத்தை வரவழைக்க வேண்டியதுதான்!"

3

இருவரும் இதுபற்றி சிறிது நேரம் வாக்குவாதம் நடத்திக் கொண்டிருக்க, எங்கும் கண கண என்று இருட்டிக் கொண்டிருந்தது. அப்போது குதிரைகள் வரும் சத்தங்கள் மேற்கில் இருந்து கேட்டன.

"வல்லபா! சேவகத் தலைவன் சொன்னானே. அவனது படையாட்கள் பின்னால் வருகிறார்கள்

என்று. இப்போது அவர்கள்தான் வருகிறார்கள் போலும்!" என்றான்.

இருவரும் பாகை தரித்து யாத்திரிகர்கள் போல் வழியோரமாக நின்றார்கள்.

சிறிது நேரத்தில் இருபது பேரடங்கிய குதிரை வீரர் கூட்டம் அங்கே வந்தது.

அந்த இரு யாத்ரிகர்களைப் பார்த்ததும் கூட்டம் சடக்கென்று நின்றது.

கூட்டத் தலைவன் அவர்களை நோக்கி, "யாத்ரிகர்களே! இந்தப் பாட்டை வழியாக ஒரு கூண்டு வண்டியும் நான்கு வீரர்களும் போவதைக் கண்டீர்களா?" என்று கேட்டான்.

உடனே தத்தன், "கண்டோம். அவர்கள் வடகிழக்கே ஒரு காத தூரத்தில் இருக்கும் அம்பலப்புரம் என்ற ஊரில் உள்ள சத்திரத்தில் இன்றிரவு தங்குகிறார்கள். உங்களைப் பார்த்தால் அங்கே வரச் சொன்னார்கள். நீங்கள் கிழக்கே போன பிறகு வடக்கே திரும்ப வேண்டும். கிளை வழி இருக்கிறது!" என்று கூறினான்.

"நல்லது!" என்று கூறிய தலைவன் புறப்படக் கூட்டமும் அவன் பின்னே புறப்பட்டது.

அவர்கள் போன பிறகு தத்தன், வல்லபனை நோக்கி, "வல்லபா! முதலில் தீமைக்கு ஒரு தடங்கல் போட்டு விட்டோம். படையாட்களைத் தவறான வழியில் திருப்பி விட்டோம்!" என்று கூறினான்.

இரவு ஆகி 'கருகரு' என்ற முதல் யாமத்து முடிவில் ஓடுமானூர் சத்திரத்தை வல்லபனும் தத்தனும் அணுகினார்கள்.

ஊரின் தெரு நிசப்தமாய் இருந்தது. விளக்குகளே இல்லை.

தூரத்து மூலையில் கோவில் இடிபாடுகளோடு வெறும் கூடாகக் காட்சி அளித்தது. வீதியில் எந்தவிதச் சத்தமோ அரவமோ சந்தடியோ இல்லை.

சத்திரத்தை அடைந்த போது மௌனத்தில் மூழ்கி இருந்தது. அதைக் கண்ட தத்தனுக்கு மனத்தில் பல சந்தேகங்கள் ஏற்பட்டன.

சத்திரத்தின் முன் கதவைக் கவனமாகத் திறந்த போது நடுக்கூடத்தில் ஒரு குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. சுற்றி வரப் பொன்னிறமாய் வெளிச்சம் விழுந்து கொண்டிருந்தது.

இருவரும் வெகு எச்சரிக்கையுடன் உள்ளே போனார்கள். சத்திரம் பெரிய சமுத்திரம் ஆதலால் பெரிய கூடமாயிருந்தது. அதன் நடுவில் நின்று. "ஐயா!" என்று விளித்துக் கொண்டு இருவரும் சுற்றி வரப் பார்த்தார்கள்.

வல்லபனின் கண்கள் சுழன்று வந்த போது ஒரு சாளரத்தில் வந்ததும் நின்றுவிட்டன. அங்கே கூண்டு வண்டியில் பார்த்த அந்த இளம் பெண் அவனைத் தன் கரிய விழிகளால் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வல்லபன் ஒரு கணம் திடுக்கிட்ட போது. சாளரத் துணிகளை மற்றொரு பெண்ணின் கை விருட்டென்று இழுத்து மூடுவது தெரிந்தது.

அடுத்த கணத்தில் அந்த உள் அறைக்குள் இருந்து ஒரு பாடல் கேட்டது. அந்தப் பாடலை அந்தப் பெண் தான் பாடிக் கொண்டிருந்தாள்.

ஓடுமானூர் சத்திரத்தின் விசாலமான கூடத்தில் இரவின் முன் யாம வேளையில் அந்தப் பெண்ணின் பாடல் தீங்கனியாய் எழத் தொடங்கியது.

நட்டராகப் பண்ணில் எழுந்த பாடல் நம்மாழ்வாரின் பாடல் தான்.

தூதுரைத்தல் செப்புமின்கள்
தூமொழிவாய் வண்டினங்காள்!
போது இரைத்து மது நுகரும்
பொழின் மூழிக் களத்துறையும்
மாதரைத் தம் மார்பகத்தே
வைத்தார்க்கு என் வாய்மாற்றம்*
தூதுரைத்தல் செப்புதிரேல்
சுடர்வளையும் கலையுமே!

ஒரு பாடல் முடிந்து அதன் ரீங்காரம் அந்தச் சத்திரத்து நிசப்தத்தில் அமிழ்ந்திடுமுன் அந்தப் பெண் மற்றொரு பாடலைத் துவக்கினாள்.

*எல்லியும் நன்பகலும் இருந்தே
ஏசிலும் ஏசுக ஏந்திழையார் !
நல்லரவர் அவர் திறம் நாமறியோம்.
நாண்மடம் அச்சம் நமக்கு இங்கு இல்லை.
*வல்லன சொல்லி மகிழ்வரேனும்
மாமணி வண்ணரை நாம் மறவோம்!
கொல்லை வளர் இளமுல்லை புல்கு
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின்!

கடைசி அடிகளைப் பலமுறை பாடி முடித்தாள் அவள்.

ராஜவல்லபன் அந்தப் பாடல்களைக் கேட்டு மற்றதை எல்லாம் இனிதே மறந்து விட்டான்.

அவன் தோள் மீது கையை வைத்தான் காலதத்தன்.

---

* வாய் மாற்றம் - வாய்ச் சொல்
* எல்லி - இரவு
* வல்லன சொல்லி - வாய்க்கு வந்தபடி சொல்லி

அப்போதும் வல்லபன் பரவசத்தில் திளைத்தவன் ஆகி, "தத்தா! கேட்டாயோ பாடலை! அமுதுபோல் இனிக்கிறதே!" என்று கூற,

தத்தனும் அவனை ஒரு விழி விழித்துப் பேச்சை அடக்கிக் காதோடு காதாக, "வல்லபா! பாடலின் பண்ணை ரசிப்பதைவிடப் பொருளை உணர்ந்து கொள்!" என்று கூறினான்.

அப்போதும் வல்லபன் புரியாமல் நிற்க,

"தூதுரைத்தல் செப்புமின்கள்!" என்று ஒரே அடியைப் பலமுறை பாடினாள் கேட்டாயா?" என்றான் காலதத்தன்.

"கேட்டேன் அழகாயிருக்கிறதே!"

"அழகாயில்லை; அழுகையாயிருக்கிறது!"

"அழுகையா?"

"ஆமாம். அந்தப் பெண் சூசகமாக நமக்கு வேண்டுகோள் விடுக்கிறாள்."

"என்ன வேண்டுகோள்?"

"தூதுரைத்தல் செப்புமின்!"

"அப்படி என்றால்?"

"எனக்காகத் தூது செல்லுங்கள்!"

"எங்கே?"

"அதுதான் மர்மமாய் இருக்கிறது. இரண்டாவது பாடலில் வேறு ஏதோ சொல்கிறாள். அதைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்போது அதற்கெல்லாம் அவகாசமில்லை. நாம் உடனே இதைவிட்டு அகல வேண்டும். இங்கே எல்லாம் மர்மமாக இருக்கிறது. ம், சீக்கிரம் புறப்படு!"

மேற்பேச்சுக்கு இடம் கொடுக்காமல் வல்லபனின் கையைப் பிடித்துக் கொண்டு காலதத்தன் விரைவாக இழுக்க, இருவரும் வாயில் நிலையை நோக்கி நடந்தார்கள்.

அப்போது, "தம்பிகாள்" என்று குரல் திடீரென்று கேட்க இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

சத்திரத்தின் குச்சில் கதவை ஓசையுடன் திறந்து கொண்டு மந்தகாசத்துடன் சேவகத் தலைவன் அங்கு நின்றான்.

இளைஞர்கள் திகைப்பில் மூழ்கினார்கள்.

"உணவு அருந்த வேண்டாமோ? களைப்பார வேண்டாமோ அதற்குள் சத்திரத்தைவிட்டு வெளியேறு கிறீர்களே?" என்று தலைவன் கூற,

அதே நேரத்தில் சத்திரத்தின் வாயிற்புறக் கதவையும் ஒரு சேவகன் இரு கைகளால் தள்ளிச் சிக்கென மூடிவிட்டான்.

நொடி மாத்திரத்தில் காலதத்தன், முகத்தில் பெரிய சிரிப்பை உண்டு பண்ணி, தலைவனை நோக்கி, "தலைவரே! நீங்கள் இங்கே இருந்தது நல்லதாய்ப் போயிற்று. இது பேய் வீடோ என்று பயந்து விட்டோம். சத்திரத்து மடைப்பள்ளிக்காரர் இருக்கிறாரா? எங்களுக்கு ஒரே பசியாய் இருக்கிறதே, இங்கே கட்டளை போஜனம் கிடைக்குமா? கிரயத்துக்குக் கிடைக்குமா தெரியவில்லையே?" என்று கூறினான்.

பிறகு ராஜவல்லபனைப் பார்த்து, "ஏன் அப்படித் திகைத்துப் போய் நிற்கிறாய். இரவில் உணவு கிடைக்கும் அழாதே!" என்று கூறி அவனைக் கீழே தரையின் மீது இருத்தினான்.

பிறகு தானும் அமர்ந்து, தன் பாத விரல்களை வல்லபனின் பாதத்தைத் தொடும்படி வைத்துக் கொண்டு, அவனை எச்சரிக்கையாக இருக்குமாறு காலில் நிமிண்டிக் காட்டி,

அதே நேரத்தில் வேகமாகத் தனது பொதியில் கைவிட்டு, ஏட்டுக் கட்டு ஒன்றைக் கையில் எடுத்து, விளக்கின் அருகில் வைத்துக் கொண்டு ராகம் போட்டுப் படிக்க ஆரம்பித்தான்.

தலைவன் நமட்டலாய்ச் சிரித்துக் கொண்டு, "என்ன தம்பி மந்திரம் படிக்கிறாயா?" என்று கேட்டவாறு அவனை நோக்கி வந்தான்.

"ஆமாம். நாங்கள் ஜோசியர்கள். ஆரூடம் பார்த்துப் பிழைப்பை நடத்துபவர்கள். இன்று இரவு நாங்கள் உண்ண வேண்டியது பலகாரமா, பழமா, சோறா என்று சாத்திரம் பார்க்கிறேன்!" என்று கூறினான்.

இதற்குள் தலைவன் அவனுக்கு மிக அருகே வரவே சமயம் பார்த்திருந்த காலதத்தன் ஒரே பாய்ச்சலில் அந்தக் குத்து விளக்கைக் கீழே தள்ளி அணைத்து விட்டான். சத்திரத்தின் ஒரே விளக்கு அணைந்ததும் எங்கும் இருள் பற்றிக் கொண்டது. தூணோ, ஆளோ எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை. உடன் எழுந்த காலதத்தன் தலைவனை ஒரே தள்ளலில் கீழே தள்ளி வல்லபனை இழுத்துக் கொண்டு தடதடவென்று வாயிலை நோக்கி ஓடினான்.

கீழே விழுந்த தலைவன் ஆத்திரமான குரலில், "விடாதீர்கள், பிடியுங்கள். கணபதி கதவைத் திறக்க விடாதே!" என்று கத்தினான்.

வாயிற் கதவருகில் நின்ற கணபதி என்ற அந்த

வீரனும் இருட்டில் ஏதும் தெரியாமல் தன் வாளை உருவி அங்கும் இங்குமாகச் சுழற்றி விட்டான்.

தலைவன் இதற்குள் எழுந்து, "ஏய் பயல்களா?" என்று இடிபோல் கர்ஜித்து,

கையில் வாளை எடுத்து இங்கும் அங்கும் சுழற்றி, கூடத்தில் இஷ்டப்பட்ட திசைகளை நோக்கி ஓடினான்.

அப்படியே வெளியே இருக்கும் சேவகன் பெயரைச் சொல்லி, "நெருப்பு கொண்டு வா சீக்கிரம் பந்தம் ஏற்று!" என்று கட்டளைகளையும் உதிர்த்துக் கொண்டே ஓடினான்.

வெளியில் இருந்தவனும் அவசர அவசரமாக வன்னிக்கட்டையை எடுத்து நடுக்கோலால் கடைய ஆரம்பித்தான்.

மழைநாள் ஆனதால் கட்டை ஈரம் பாய்ந்து கிடக்கவே, நெருப்புப் பொறி அதிலிருந்து தெறிக்கவே இல்லை.

ஊரிலே யார் வீட்டிலாவது நெருப்பு வைத்து இருப்பார்கள் என்று நினைத்து கிராமத்துத் தெருவுக்குள் அவன் விரைவாக ஓடினான்.

இதற்குள் தலைவன் வாயில் நிலைப்பக்கம் நின்று போய் கொண்டு,

"இங்கே வாங்களடா, பலி போடுகிறேன்!" என்று கர்ஜித்தான்.

வல்லபனும் தத்தனும் இருட்டில் துழாவி மெள்ள நடந்தார்கள். வாயில் நிலையில் இருவர் நிற்பதால் அந்தப் பக்கம் போவது சரியல்ல என்று நினைத்தார்கள்.

புழக்கடைப்பக்கம் ஏதாவது வழி இருக்கும் என்று நினைத்து பின்புறம் செல்லும் வழியைத் தடவியவாறு தேடினார்கள். எங்கே திரும்பினாலும் இருட்டுதான் முகத்தில் அடித்தது. திசையே தெரியவில்லை. சீக்கிரம் ஏதாவது செய்தாக வேண்டும் என்று நினைவு ஓடியது.

சுவரைத் துழாவிக் கொண்டு செல்லுங்கால், ஒரு இடைவெளி கண்டு அதனுள் நுழைந்தார்கள். அது அவர்களை நீள இழுத்துக் கொண்டு சென்றது. நீளத் தாழ்வாரமா? நீள நடையா? ஒன்றுமே புரியவில்லை.

ஒரு இடத்தில் அந்த நீளச் சுவர் இரண்டாகப் பிரிவதைப் பார்த்து, இருவரும் சிறிது தயங்கி நின்றார்கள்.

அவசரமாக யோசித்து, ஒவ்வொருவரும் நூறு எண்ணும் வரை ஒவ்வொரு திசையிலும் போய் விட்டு, மறு நூறு எண்ணும் போது திருப்பி வர வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள்.

இருவரும் தத்தம் திசை நோக்கிச் சென்றார்கள்.

ராஜவல்லபன் தடவித் தடுமாறிச் செல்லத் தொண்ணூற்று எட்டு என்று எண்ணும் அளவில் திடீரென்று நாசியில் மகிழம்பூ வாசனை வீசி மணந்தது.

அந்தக் கணத்தில் மனம் சிலிர்த்துப் பரவசமடைந்தது. கூண்டு வண்டியில் இந்த நெடி அடித்ததே என்று நினைக்கும் போது மேலே எண்ணுவது மறந்துவிட்டது.

சுவரின் கீழே ஓரமாய்த் தடவிய போது ஒரு இரும்புச் சங்கிலி அவன் கையில் நெருடவே சங்கிலியின் கண்ணிகளைத் தடவிக் கொண்டு கீழே தரை வழியாய் அவன் ஊர்ந்து போனான்.

முடிவில் அவன் கைகளில் மிருதுவான தாமரை போன்ற எதுவோ தென்பட,

"யாரது?" என்று ஒரு பெண்ணின் மெதுவாக இரைச்சல் உடன் அங்கே கேட்டது.

வல்லபன் மறுமொழி கூற வாயெடுக்குமுன், கூடத்தில் திடீரென்று அரவங்கள், கதவு திறக்கும் சத்தங்கள், காலடி ஓசைகள் யாவும் ஒருங்கே கேட்டன.

மறுகணம் சத்திரத்தின் கூடம் பிரகாசமாகி, அதன் அறைகள் எல்லாவற்றிலும் வெளிச்சத்தின் படிவங்கள் ஓடிப் பாய்ந்து நிரம்பிவிட்டன.

இரண்டு தீவர்த்திகளைத் தூக்கிக் கொண்டு ஒரு சேவகன் உள்ளே நுழைந்து விட்டான்.

"அப்படிக் கொண்டா, அந்தப் பதர்களைப் பிடிப்போம்! நீ அப்படிப் போ, நான் இப்படிப் போகிறேன்!" என்று தலைவன் இரைந்து கூவினான்.

அதே நேரத்தில் அந்தத் தீவர்த்திகளின் வெளிச்சம் சாளரம் வழியாக அந்த அறைக்குள் பாய்ந்தது. அதன் துணையில், தரையில் மண்டியிருந்த வல்லபன், தன் முன்னால் கட்டிலில் அபலையாக அமர்ந்திருக்கும் அந்த இளம் பெண்ணை நிமிர்ந்து பார்த்தான். அவளது பாதம் ஒன்றைப் பிணைத்துக் கொண்டு இருக்கும் இரும்புச் சங்கிலி மீது, அவனது இரு கைகளும் தொட்டுக் கொண்டு ஸ்தம்பித்து நின்றன.

அவன் பார்வை அந்தப் பெண்ணின் மீது விழுந்து நிலைகுலைந்து நின்றது. அவளது நீண்ட கரிய விழிகளில் ஒரு கடலே கொந்தளித்துக் கொண்டிருந்தது. அந்தக் கடலில் திகைப்பு, பிரமிப்பு, இரக்கம் ஆகிய அலைகள் எல்லாம் புரண்டு

கொண்டிருந்தன. வல்லபன் அதே நிலையில் மெய் மறந்திருக்கும் வேளையில் அந்தப் பெண்ணின் முகம் மேலும் மேலும் பிரகாசமாகிக் கொண்டே வந்தது.

முடிவில் அவன் திடுக்கிடும்போது, அந்த அறைக்குள் ஒரு சேவகன் தீவர்த்தியைக் கொண்டு வந்திருப்பதையும், சேவகத் தலைவன் உருவிய வாளுடன் அருகில் நிற்பதையும் அறிந்து கொண்டான்.

"எழுந்திருடா பதரே!" என்று இவனை உலுக்கி எழுப்பினான் தலைவன்.

4

தீ ஜுவாலை வெளிச்சத்தில் அந்த அறை முழுவதும் வெண்ணிறமாய்த் தகதகக்க, சீராக நிமிர்ந்த அந்தப் பெண்ணின் வதனம் பாலாறாக வழிந்து ஓடியது.

மருட்சி விழுந்த இரு கண்களிலும் இருளின் திரட்சி கூடி இருந்தது. குறுகுறுத்த புருவமும், அதன் அடியில் மீன் வடிவில் இருந்த இரு கருணைகளுமே அவனை ஆழ்ந்து பார்த்தன.

வல்லபனின் மனத்தில் ஒரு குயில் வந்து கூவியது.

இன்னது செய்வோம் என்று அவன் யோசிக்கும் முன்பே, சேவகத் தலைவன் அவனைக் குலுக்கித் தூக்கினான்.

"தப்பி விடவா பார்த்தாய்?" என்று கூறி நெட்டித் தள்ளி அவனைக் கூடத்திற்குக் கொண்டு போனான்.

அருகே ஒரு தூணில் அவனைப் பிணைத்துக் கட்டினான்.

"இன்னொருத்தன் எங்கே? அவனையும் பிடியுங்கள்!" என்று சொன்ன பிறகு, இரு சேவகர்கள் தத்தனைத் தேடிப் போனார்கள்.

சத்திரம் முழுமையும் தேடினார்கள். குச்சில், மச்சில், பாவுள், கூடம், உக்கிரான அறை, சமையல் அறை, பரண், குதிர்கள் எல்லாம் தேடினார்கள். பிறகு சத்திரத்திற்கு அப்பாலும் தேடினார்கள். கடைசியில் அவனைக் காணாமல் வெறும் கையாய்த் திரும்பி வந்தார்கள்.

தலைவனுக்குக் கோபம் அதிகரித்தது.

"எங்கே அவன், அந்தக் கோமாளி?" என்று வல்லபனைப் பார்த்து அதட்டிக் கேட்டான்.

"தெரியாது!"

"ஏன் தெரியாது? நீங்கள் இருவரும் என்ன தைரியத்துடன் இங்கே வந்தீர்கள்? எங்களை யார் என்று நினைத்து விட்டீர்கள்?" என்று பலவாறாக ஏசி, உடனே "ஏய் கணபதி!" என்று சேவகனைக் கூப்பிட்டான்.

கணபதி தழைந்து நின்றான்.

"இவனைச் சிரச்சேதம் செய்!"

வல்லபன் பொறி கலங்கி நின்றான்.

ஊதலான காற்று சத்திரத்துள் அப்போது வீசி அடித்தது. அறைக்குள் பிணைப்புச் சங்கிலி நகர்ந்து கொள்ளும் ஓசை கேட்டது.

"ம்! சீக்கிரம்!" என்றான் தலைவன்.

கணபதி வாளை உருவினான்.

அவன் நாலடி வைத்து முன் வருவதற்குள் தலைவன், "இரு! ஒரே நொடியில் இவனைக் கொல்ல வேண்டாம். இவனைத் தூக்கில் தொங்க விட்டு ஊசலாட விடுவதுதான் நல்லது. அப்போதுதான் இவனுடைய அருமைச் சினேகிதன் அதைப் பார்த்துப் புத்தி அடைவான்!" என்று கூறி, "உத்திரத்தில் ஒரு கயிற்றைக் கட்டு!" என்று கட்டளையிட்டான்.

கயிற்றைக் கட்டும் வேளையில் வல்லபனின் எண்ணங்கள் படபடத்து ஓடின. "தத்தா, என் அருமை நண்பா! நீ எங்கே போனாய்? உன்னைக் காணாமலே போய் விடுவேனோ?" என்று மனத்துள் புலம்பினான்.

தாயார் வாசந்திகாவின் சோகமான முகம் நினைவிலே வந்தது. அந்தக் கணமே கண்கள் கலங்கிவிட்டன.

"அம்மா! எந்தன் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்தீர்கள்! ஆசை வைத்தீர்கள்! உங்கள் கனவுகளை நிறைவேற்றாமல் போகிறேன். அம்மா! உங்கள் மொழி கேட்காது இப்படி வழியில் பிறழி விட்டேனே!" என்று மனத்துள் நைந்து கொண்டான்.

அப்பால் சேவகன் ஏணி கொண்டு வந்து உத்தரத்தில் ஒரு கயிற்றைக் கட்டி அதில் ஒரு சுருக்குப் போட்டு வைத்துக் கீழே இறங்கினான்.

பிறகு வல்லபன் அருகே வந்து, அவனைப் பிணைத்திருந்த கயிற்றை அவிழ்த்து, "ம்! முன்னே போ!" என்று கட்டளையிட்டான்.

அவ்வளவில் வல்லபனின் கண்களில் நீர் பாய்ந்து வந்தது.

அவன் நிமிர்ந்து பார்க்கையில், சத்திரத்து

அறைச் சாளரத்தில் அந்தப் பெண்ணின் முகம் வைகறை நேரத்துச் சந்திரன் போல் வெளிறியவாறு விகசித்தது.

"ஒரு பெண்ணின் முன்னால் இப்படி வீரமில்லாத, கீர்த்தியில்லாத மரணத்தை அடைகிறோமே!" என்று மனத்துள் வெதும்பினான்.

மறுநொடியில் ஒருவாறு ஊக்கம் அடைந்தவனாய் அந்தச் சேவகத் தலைவனை நோக்கி, "ஐயா, தலைவரே! எனக்கு இவ்வளவு பெரும் தண்டனை விதிக்கிறீர்களே? இது முறையா? நான் என்ன குற்றம் செய்தேன்?" என்று கேட்டான்.

"ஒரு குற்றமா செய்தாய்?" என்று ஆரம்பித்தான் தலைவன். "இந்தச் சத்திரத்துள் வந்தது ஒரு குற்றம். விளக்கை அணைத்தது ஒரு குற்றம். எங்களுடன் சண்டையிடப் பார்த்தது மூன்றாவது குற்றம்!" என்று கூறினான்.

உடனே வல்லபன், "தலைவரே! அதற்கு இவ்வளவு பெரிய தண்டனை தரலாமோ?" என்று கேட்க,

அவனை வெறுப்புடன் பார்த்த தலைவன், "நீதி, நியாயம், பேசுவதற்கு இது சமயமல்ல, இடமும் அல்ல!" என்று கூறி, சேவகனுக்கு ஜாடை காட்டினான்.

உடன் வல்லபன் பரபரத்து, "ஐயா, எனக்குப் பிரார்த்தனை செய்யவாவது அவகாசம் கொடுங்கள்!" என்று கூறி, தலைவனது மறுமொழியைக் கூட எதிர்பாராமல்,

கீழே மண்டியிட்டு, கூரத்தாழ்வார் அருளிய வடமொழி சுலோகம் ஒன்றை ராகம் போட்டுப் பாட ஆரம்பித்தான்.

சேவகத் தலைவனும் மிக ஆத்திரமாக, "ஏய்! மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே இருக்கிறாயே, எழுந்திரு!" என்று கூறி அவனது முடியை பிடித்து உலுக்கி எழுப்பினான்.

அதே நேரத்தில் வாயிற்புரத்திற்குச் சற்றுத் தொலைவிலிருந்து 'கூவேகூ' என்று ஒரு அமானுஷ்ய மான குரல் வெளிப்பட்டு, அந்தப் பிரதேசத்தை எல்லாம் அதிர வைத்தது. 'இதென்ன?' என்று திடுக்கிட்ட தலைவனும் சேவகர்களும் நிலைவாயில் வழியே வெளிப்புறத்தை நோக்கினார்கள்.

தூரத்தில் மை பூசிய இருட்டுக்குள் ஐந்தாறு தீவர்த்திகள், கரும்பட்டுத் துணியில் தைத்த வைடூரியங்கள் போல் ஜொலித்துக் கொண்டிருக்க,

"ஐயா நமது படையாட்கள்தான் வருகிறார்கள்!" என்று கூறினான் ஒரு சேவகன்.

"வரட்டும்! அவர்களும் வந்து இந்தப் பையலின் கடைசி நேரத்தை நேரில் பார்க்கட்டுமே!" என்று தலைவன் கூறினான்.

தீவர்த்திகள் நெருங்கி வர வர, குதிரைகளின் களைப்பான குளம்பு ஓசைகள், தாளம் இல்லாமல், சோர்ந்து போய்த் தொய்யலாகக் கேட்கத் தொடங்கின.

யாவரும் வருபவர்களை ஆவலோடு பார்த்து இருந்தார்கள்.

வல்லபனின் நெஞ்சம் படபடத்துக் கொண்டிருந்தது.

அந்தக் காட்சியை மிக உன்னிப்புடன் கவனித்து வந்த தலைவன், திடீரென்று முகத்தில் கலவரம் காட்டி, "ஏய், இவர்கள் நம் ஆட்கள் இல்லை!" என்று கூறினான்.

மற்றவர்களும் சந்தேகப்பட்டுப் பார்த்தார்கள்.

அவர்களது ஆச்சரியம் மாறுமுன்பே, எட்டு ஆட்கள் பரிவாரமாய் வந்த அந்தக் கூட்டம் சத்திரத்து வாசலில் கம்பீரமாக வந்து நின்றது.

குதிரைகள் சோர்வுடனே நிற்க, அவற்றில் இருந்து மனிதர்கள் தொப்தொப்பென்று கீழே குதித்து, பெரிய பெரிய பொதிகளையும் அவற்றின் முதுகிலிருந்து கீழே இறக்கினார்கள்.

தலையில் வரிந்து கட்டிய பாகையும் நீளமாகத் தரித்த பட்டு அங்கியும், வளைந்த பாதக் குறடுகளும் தரித்த ஒரு ஆஜானுபாகுவான மனிதன், கையில் ஒரு பட்டுப் பையை இடுக்கிக் கொண்டு, "ஹேய், ஹேய்! இதுதானே சத்திரம்! சத்திரம் இதுதானே!" என்று கனபாடிகள் "கனம்" பாடுவது போல் மாறி மாறி கேட்டுக் கொண்டு, அர்த்தமில்லாமல் வெறிச் சிரிப்பும் சிரித்துக் கொண்டு, வெகு சுவாதீனமாக அந்தச் சத்திரத்து வாயிலுக்குள் நுழைந்தான்.

கூடத்தில் வந்ததும், அங்கே நடந்து கொண்டு இருக்கும் காட்சியைப் பார்த்து, "அடடா! இப்படி ஒரு காரியம் இங்கு நடக்கலாமா? சிறுபிள்ளையைத் தூக்கில் இடுகிறீர்களே?" என்று சேவகத் தலைவனை மிக உரிமையோடு பார்த்துக் கேட்டான்.

முதலில் முகத்தைச் சுளித்த தலைவன், பிறகு வறட்சியாக ஒரு சிரிப்பை வரவழைத்து, "ஐயா இவனும் மற்றொருவனுமாகச் சேர்ந்து எங்கள் பொருள்களைத் திருடினார்கள்!" என்று கண்களை உருட்டிக் கொண்டே கூறினான்.

"அப்படியா? அப்படியானால் தூக்கில் இட வேண்டியதுதான்! சரியான தண்டனை!" என்று அந்த ஆஜானுபாகு 'கனம்' பாடினான்.

உடனே வல்லபனும் ஆர்த்து எழுந்து, "பொய், ஐயா, பொய்! நாங்கள் திருடவே இல்லை. இவர் பொய் சொல்கிறார். இந்தச் சத்திரத்தில் தங்க வந்தோம். அநியாயமாய் எங்கள் மீது பழி சாட்டுகிறார்" என்று ஆவேசமாகக் கூறினான்.

உடன் ஆஜானுபாகுவும், "அநியாயம்! அநியாயம்! இவன் திருடவில்லை. இவன் மீது அநியாயமாய்க் குற்றம் சொல்கிறீர்கள்!" என்று கூறினான்.

அவனை ஆத்திரத்துடன் பார்த்த தலைவன், "ஐயா, யாத்திரிகரே, சிறு பையன் சொல்வதைக் கேட்டதும் உடனே அவன் பக்கம் சாய்கிறீரே. அவன் சொல்வது நிஜமானால் அவன் ஏன் விளக்கை அணைத்தான் என்று கேளுங்கள்!" என்று கேட்டான்.

உடன் அந்த யாத்திரிகன், பையன் பக்கம் திரும்பி, "விளக்கை அணைத்தாயா? அது தப்பிதம், தப்பிதம். தூக்கில் தொங்க வேண்டியது தான்!" என்று கூறினான். எந்தவிதப் பச்சாதாபமும் இல்லாமல் வெகு சாதாரணமாக அந்த யாத்திரிகன் அப்படிக் கூறுவதைப் பார்த்து மேலும் கொதித்து எழுந்த வல்லபன்,

"ஐயா! ஒரு உண்மையைச் சொல்லவா?" என்று வினவினான்.

"சொல்லு, சொல்லு, சொல்லு!" என்று அடுக்கினான் யாத்திரிகன்.

"இந்தக் கூட்டத்தார் ஒரு பெண்ணைச் சங்கிலி போட்டுப் பிணைத்து எங்கேயோ கடத்திப் போகிறார்கள். அவர்கள் கடத்துவதை நானும் என் நண்பனும் பார்த்து விட்டோம். அதற்காக என்னை இவர் கொல்ல நினைக்கிறார்!" என்று சொன்னான்.

"அப்படியா? அப்படியா?" என்று அசமஞ்சம் போல் கேட்டுவிட்டு, தலைவனைப் பார்த்து முகம் எல்லாம் மகிழ்ச்சி பொங்க, "பெண்ணைக் கடத்தினீர்களா? யாருடைய பெண்? உங்கள் சொந்தத்திற்கா? வேறு ஆட்களுக்கா?" என்று கேட்டான்.

அந்தத் தலைவன் அவனை முகத்தைச் சுளித்துக் கொண்டே சிறிது பார்த்தான். அப்போது அந்த யாத்திரிகனின் இதர ஏழு ஆட்கள் பொதிகளுடன் உள்ளே வர, அவர்கள் களைத்து இருந்தாலும் தேகக் கட்டுடன் இருப்பதைத் தலைவன் கவனித்துக் கொண்டான்.

முகத்தில் உடனே ஒரு நகைப்பை வரவழைத்து, "நன்றாகச் சொன்னானப்பா பையன்" என்று கிளு கிளு என்று வயிறு மடியச் சிரித்து, வல்லபனைப் பார்த்து, "தம்பி கேள்! எங்கள் பிரபு காளிங்கமர்த்தனன் இருக்கிறாரே, அவரது பெண் தான் அந்தப் பெண்மணி! அவளுக்கு ஒரு வருடமாகச் சித்தப்பிரமை! கொங்கு நாட்டிலே ஒரு சாமியாரிடம் அந்தப் பெண்ணைக் காண்பித்து விட்டுத் திருப்பி அழைத்துப் போகிறோம். அவளது கால் கைகளைச் சங்கிலியால் பிணைத்து இருப்பதை நீ பார்க்கவில்லையோ?" என்று கேட்டான்.

ராஜவல்லபன் விலவிலத்து நிற்க, "ஹூம்! நீ பார்க்க வில்லையா?" என்று அதேக் கேள்வியை அசட்டுத் தனமாகக் கேட்டான் அந்த யாத்திரிகன்.

வல்லபன் கண்ணை மூடியப்படி ஒரு கணம் தடுமாறிவிட்டான்.

பிறகு யோசனை பண்ணிப் பளிச்சென்று திரும்பி, "ஐயா! அவர் சொல்வதெல்லாம் பொய்! அந்தப் பெண்ணுக்குச் சித்தப்பிரமை இருக்க

முடியாது. அவள் ராஜகுலமாக இருக்க வேண்டும். அவளிடமே நீங்கள் நேரில் கேளுங்கள்!" என்று சொன்னான்.

உடனே யாத்திரிகனும், "அவளிடமே நேரில் கேளுங்கள். அவள் யார்? எந்த ஊர்ப் பெண்? அவளே மறுமொழி சொல்லட்டுமே!" என்று தலைவனைப் பார்த்துக் கூறினான்.

தலைவனின் முகம் கறுத்தது. "நல்லது" என்றான் அவன்.

பிறகு, "ஐயா யாத்திரிகரே! உம்மைப் பெரிய மனிதர் என்று நினைக்கிறேன். நல்லவேளையாக இங்கே வந்தீர். நான் கூறுவது உண்மையா என்று பார்க்க விரும்புகிறீர். அந்தப் பெண்மணியிடமே அதைப் பற்றிக் கேட் போமா?" என்று கேட்டான்.

தலைவன் உடனே சேவகனுக்குக் கண்காட்ட அவன் தீவர்த்தியைத் தூக்கிக் கொண்டு முன்னே அறையை நோக்கிப் போனான்.

அறையுள் நுழைந்ததும், எல்லோரும் நின்றார்கள். அங்குள்ள கட்டிலில் அந்தப் பெண் சோர்ந்து படுத்திருந்தாள். அவள் கையிலும் காலிலுமாகப் பிணைத்திருந்த சங்கிலி அவள் மீது தாறுமாறாகக் கிடந்தது.

5

சத்திரத்தின் கட்டிலைச் சூழ்ந்து கொண்டு எல்லோருமாய் நிற்க, சேவகத் தலைவன் பையப் பையக் கட்டிலின் அருகில் சென்று, "அம்மணி!" என்று குரல் கொடுத்தான்.

அது அவள் செவியில் ஏறாதது போல் தோன்றவே, மேலும் குரலைத் தூக்கி, "அம்மணி" என்று அழைத்தான்.

பலமுறை அழைத்த பிறகு, அவள் தன் கண்களை உலர்த்தி மெதுவாகப் பார்த்தாள்.

"தாங்கள் யார் என்று இவர்கள் எல்லோரும் கேட்க வந்திருக்கிறார்கள். அதைத் தயை செய்து கூறுங்கள், அம்மா!" என்றான் சேவகத் தலைவன்.

எல்லோரும் ஆவலோடு அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதைக் கேட்டிருந்தார்கள்.

அப்போது அந்த இளம் பெண்ணானவள் எதுவும் பேச விருப்பம் இல்லாதவள் போல் முகத்தை வலித்து கண்களைச் *செம்பளித்து, "நா. . . ஹாக்கு. . . தேமு. . ." என்று விவரமில்லாமல் வாய்க்கு வந்தபடி ஏதோ சொன்னாள்.

உடன் சேவகத் தலைவனும், "அம்மணி! நீங்கள் பேசுவது எங்களுக்குப் புரியவில்லையே, தெளிந்து பேச வேணும்" என்று விண்ணப்பிக்க,

அந்த இளம் பெண்ணும் முன்னைப் போலவே "நா. . . நா. . . நா. . ." என்றே ஏதும் புரியாதது போலச் சொல்வாள் ஆயினள்.

அப்பால் அனைவரையும் அழைத்துக் கொண்டு கூடத்திற்கு வந்த சேவகத் தலைவன்,

"கேட்டீரா, யாத்திரிகரே! பெண்ணுக்கு உன்மத்தம் பிடித்திருக்கிறது என்றேனே, நான் சொன்னது சரியாகப் போய்விட்டதா?" என்று கேட்டான்.

---

* செம்பளித்து - கூசியவாறு மூடி

"ஆமாம். உன்மத்தம்! உன்மத்தம்! உன்மத்தம்!" என்று மூன்று முறை அடுக்கிவிட்டு, பாகை தரித்த அந்த யாத்திரிகனும், வியப்பில் இருக்கும் ராஜவல்லபனை நோக்கி,

"தம்பீ! இப்படித் தப்பிதமாகக் கணக்குப் போட்டு விட்டாயே! இவர்கள் ஒரு பயித்தியமான பெண்ணை அல்லவா விலங்கு பூட்டி அழைத்துச் செல்கிறார்கள். அப்படியிருக்க அநாவசியமாய்ச் சந்தேகப்பட்டு விட்டாயே?" என்று கூறினான்.

பின்னர் அவன் அந்தத் தலைவனை நோக்கி,

"உமது காரியத்தைப் பற்றி இந்தப் பிள்ளை சந்தேகம் கொண்டு விட்டான். அதனால் நேர்ந்த விபரீதங்கள்தான் இவை. ஆகவே, அவனை சுமிருதி நியாயப்படி தண்டிக்கலாகாது!" என்று கூறினான்.

அதை அந்தச் சேவகத் தலைவன் மறுத்துப் பேச யாத்திரிகனுக்கும், அவனுக்கும் ஒரு நீண்ட வாக்கு வாதம் எழுந்தது.

முடிவில் அந்த யாத்திரிகன்,

"நீர் எந்த நாட்டுக்காரர் ஐயா?" என்று தலைவனை நோக்கிக் கேட்க,

"ஏன்? தொண்டை மண்டலந்தான்!" என்று இறுமாப்புடனே மறுமொழி கூறினான்.

"ஓகோ சம்புவராயர் ஆளும் பூமியா? அதுதான் அப்படிப் பேசுகிறீர் இருக்கட்டும். நாம் இப்போது இருப்பது எந்த நாடு தெரியுமா?"

"கொங்கு நாடு!"

"இந்த நாட்டை ஆள்வது யார்?"

"மதுரையில் அரசு பண்ணும் *சுரத்தான்!"

"அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் வேற்று நாட்டவர். நீங்கள் நிற்கும் இடமும் வேற்று நாடு. இங்கே நீங்களாக நியாயம் பண்ணி சிட்சை பண்ணினால் அது தப்பு தப்பு தப்பு" என்று கண்டிப்பாகக் கூறினான்.

உடனே யாத்திரிகளுடன் வந்தவர்களும், "அது தப்பு தப்பு தப்பு" என்று கோஷ்டியாக ஒத்துப் பாடினார்கள்.

அது கேட்டத் தலைவனும் அவ்வளவு பேர் சொல்வதைப் பார்த்து அயர்ந்து போய், மவுனமாகச் சிறிது நேரம் நின்று விட்டுப் பிறகு, "நல்லது நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன்!" என்று கூறிச் சுருக்குக் கயிற்றை ஒரே வாள் வீச்சால் வெட்டிக் கீழே சாய்த்துவிட்டு, விறுவிறுப்பாய் எட்டத்தில் போய் நின்றுவிட்டான்.

அப்போது வாயிலில் யாரோ கையைக் கொட்டிக் கொண்டு வரும் சப்தம் கேட்கவே, எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள்.

வந்தவன் காலதத்தன்.

அவனைப் பார்த்ததும் வல்லபன் துள்ளி எழுந்து ஓடிப் போய் அவனைச் சேர்த்து அணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் உகுக்க, அநேக யுகங்களுக்குப் பிறகு சந்தித்தவர்கள் போல் இருவரும் அளவளாவினார்கள்.

அப்போது தத்தன், "ஆகா எதை விட்டாலும் என் குடையை விடுவேனா?" என்று கூறி, கூடத்து ஓரத்திலே ஒதுங்கிக் கிடந்த தாழங் குடையைப்

* சுரத்தான் - சுல்தான்

பாய்ந்து சென்று எடுத்துக் கொண்டு, சேவகத் தலைவனைச் சிரித்தவாறே பார்த்துவிட்டுத் திரும்பினான்.

பின்னர், எல்லோரும் அமைதியைக் கடைப்பிடிப் பவர்களாய், தனித்தனிக் கூட்டங்களாய் அமர்ந்து பேசிவிட்டுப் படுக்கப் போனார்கள்.

வல்லபனும் தத்தனும் தனியாக அமர்ந்து கொள்ள, தத்தன் அவன் காதோடு காதாக, குளியல் அறையின் புகைப் போக்கியில் ஏறித் தப்பி ஓடியதையும், தூரத்திலே போய் அங்கே வழி தெரியாது திணறிக் கொண்டிருந்த யாத்திரிகனுக்கு வழி கூறியதையும், அவனிடம் சத்திரத்தில் நடந்த விஷயங்களை எல்லாம் கூறி உதவி கேட்டதையும் ஆதியோடு அந்தமாக எடுத்துக் கூறினான்.

"அப்பா, வல்லபா! இனி முன் பின் யோசியாமல் இது போன்ற இக்கட்டுக்குள் அகப்படலாகாது. தவிர, நான் சொல்வதையெல்லாம் நீ ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும். நூறு எண்ணுவதற்குள் திரும்பி வந்துவிடு என்றால் இப்படி என்னைத் தவிக்க வைத்துவிட்டு வராமலே இருந்து விட்டாயே!" என்று கூறினான்.

பொழுது புலரும்போது இருவரும் முன்னதாக எழுந்து அருகிலுள்ள வாவியில் குளித்து விட்டுச் சுத்தமாய் உடை தரித்து நிற்க, சத்திர வாயிலிலே கூண்டு வண்டி மாடுகள் பூட்டிச் சித்தமாக இருப்பதையும், அதைச் சுற்றியும் வீரர்கள் கூடி நிற்பதையும் சத்திரத்துள்ளிருந்து அந்த இளம் பெண்ணும், அவளது துணைப் பெண் பிள்ளையும் வண்டியில் ஏறுவதற்காக நடந்து வருவதையும் கண்டார்கள்.

வெள்ளிச் சந்திரிகை உருகிய போல் இளம் பெண்ணின் வதனம் சோபை இட, அவளது குவளைக் கண்கள் இரண்டும் இரு கனவுகளாய்க் கரிந்து எழில் வழிய, இரு மார்பகங்களும் நெருக்கமாய் இரு பந்துகள் போல் தழைத்து வர,

சிற்றிடையும், நடையும், நல் உடையும் ஏதோ தாளக் கட்டுக்குள் அமிழ்ந்து பரத நிருத்தியமிட்டது போல் நடந்து வந்தாள் அவள்.

அந்த அதி சௌந்தர்யமான காட்சியில் கண்ணும் மனமும், கருத்தும் பறிபோய் ஆவியெல்லாம் நைந்து நிற்க, 'இந்தப் பெண் என்னை ஒரு முறை பார்க்க மாட்டாளா?' என்று அந்தரங்கத்தில் ஒரு சிறிதான வல்லப உருவம் மண்டியிட்டு யாசிக்க,

ராஜவல்லபன் அதையெல்லாம் பொருட்படுத் தாதவன் போல் மிகக் கடுமையாகத்தானே முகத்தை வைத்துக் கொண்டு எதற்கும் இசையாதவன் போல் நின்று விட்டான்.

அந்தப் பெண் அப்போது திடீரென்று திரும்பிப் பார்த்து அவனைக் கண்டு திடுக்கிட்டு ஒரு கணம் பிரமித்துப் போய் நின்றாள்.

அவளது ஸ்தம்பித்த விழிகளில் ஒரு கடல் அப்படியே சித்திரமாகி நின்றுவிட்டது.

அந்தப் பார்வையின் காந்தியில் ஈடுபட்டு வல்லபன் மெய்மறந்து நின்றான்.

மறுகணத்திலே அவள் தன் முகத்தைத் திருப்பி, வண்டியிலே போய் ஏறிக் கொண்டாள்.

வண்டிக்குள் அமர்ந்ததும் தன் பார்வையைத் தாழ்த்தியவாறு இருந்தாள்.

பிறகு இடது கை இரு விரல்களால் அபிநயமாகத் தன் ஒரு கண்ணைச் சுற்றி இருகோடுகளால் நீவி விட்டாள். பிறகு ஐவிரல்களாலும் கழுத்தைச் சுற்றியும்

தடவி விட்டாள். பிறகு கையை மடித்து நெற்றியிலே அழுத்தி முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள்.

அப்போது சேவகர்களில் ஒருவன் திரைச் சீலையை எடுத்துக் கட்ட வரவே, திரும்பி மீண்டும் ஒருமுறை வல்லபனைப் பார்த்தாள்.

பிறகு அந்த அழகியின் வதனம் சந்திர கிரகணத்தில் மறைந்தாற் போல் மறைந்துவிட்டது.

சேவகத் தலைவன் அலட்சியமாக அந்த இளைஞர்கள் இருவர்களையும் பார்த்துக் கொண்டு, குதிரையை ஓட்டிச் செல்ல வண்டி புறப்பட்டது.

சத்திரத்துத் திண்ணை ஓரத்தில் நின்ற வல்லபன் அப்படியே நிற்க, "என்னப்பா?" என்று சொல்லி காலதத்தன் அவன் கையைப் பிடித்தான்.

"ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை!" என்று கண்களைக் கொட்டிக் கொண்டு வல்லபன் பிறழ்ந்தான்.

"பிறழ்கிறாயா?" என்று கேட்டான் தத்தன்.

"இல்லை, . . . அந்தப் பெண்ணின் கதியை நினைத்தேன். . . . அவ்வளவுதான்!" என்றான்.

அவனை அழைத்துக் கொண்டு திண்ணை மீது ஏறினான் தத்தன். "வல்லபா, உனக்குத் தெரியுமா? இளம் பெண்களின் தளிர்க்கரம் பட்டால் பிரியங்குக் கொடி பூத்துவிடும். மெல்லிய பாதங்களால் உதைத்தால் அசோக மரம் பூத்துவிடும். பவழ வாயில் மதுவை ஊற்றி, அடிமரத்தில் கொப்பளித்தால் பகுல மரம் புஷ்பித்துவிடும். சிருங்காரக் காதல் மொழி பேசினால் மந்தாரம் மலர்ந்துவிடும். சிரித்தால் சம்பகம் மலர்ந்துவிடும். சுவாசித்தால் பழ மரங்கள் மலர்ந்து விடும். பாடினால் சுரபுன்னாகம் பூத்துவிடும்."

தத்தன் கூறுவதை எல்லாம் வல்லபன் மெய்மறந்து கேட்டான்.

கடைசியில், "இதை எல்லாம் ஏன் கூறுகிறாய்?" என்று கேட்டான்.

தத்தனும், "வல்லபா! இளம் அழகிகளின் நடை உடை பாவனைகளுக்கெல்லாம் இவ்வளவு மகிமை இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் வண்டியில் போகும் இந்தப் பெண்ணுக்கு அவர்கள் எல்லாரையும் விட மகிமை இருக்கிறது. இவள் பார்வை பட்ட மாத்திரத்திலேயே பட்டுப் போனதும் தளிர்த்துவிடும். துஞ்சியதும் பிஞ்சு விடும்; அவ்வளவு காந்தமான உயிர் ததும்பச் செய்யும் பார்வை!" என்றான்.

தத்தனின் அந்த விளக்கம் கேட்ட போது வல்லபனின் மனத்தில் ஆயிரம் பொழில்கள் கிண்கிணி வாய் திறந்து நீர்களைச் சுரந்துவிட்டன.

அடுத்த நாழிகையில் வெய்யில் சிறிது சிறிதாக ஏறிக் கொண்டிருந்த போது, கிழக்கு நோக்கிச் செல்லும் ராஜபாட்டையில் அந்த இளைஞர்கள் இருவரும் மௌனமாகச் சென்று கொண்டிருந்தார்கள். காலையில் உணவு அருந்தாததால் ஒருவாறு ஊக்கமில்லாமல் நடையிட்டு அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.

வல்லபனின் மனம் மட்டும் கனத்துக் கொண்டு இருந்தது. அவன் கண்களில் அடிக்கடி அந்தக் கூண்டு வண்டியும் அதில் செல்கிற அந்த இளம் பெண்ணும் வந்து கொண்டிருந்தார்கள். "இந்தப் பாட்டையில்தானே அவள் சென்றிருப்பாள். இதே மரங்களையும் கொடிகளையும் தானே அவள் பார்த்திருப்பாள். இதே பட்சி ஜாலங்களின் இசைகளைத் தானே அவள் கேட்டிருப்பாள். இந்தப்

பாட்டையில் எவ்வளவு தூரம் போயிருப்பாளோ? இப்போது எங்கே இருப்பாளோ?"

வல்லபன் மௌனமாகவே வருவதை அறிந்து கொண்டு தத்தன். ஒரு காத தூரம் போன பின், "வல்லபா! உன் மனத்திலே ஒரு கிலேசம் இருக்கிறதே!" என்று கூறினான்.

திடுக்கிட்ட வல்லபன், "இல்லையே!" என்று கூற,

"இல்லை. நீ உண்மையைச் சொல்லவில்லை. மனத்தில் ஏதோ இருப்பதால்தான் இவ்வளவு தூரம் பேசாமல் வருகிறாய்!" என்றான்.

"இல்லை. எதுவும் இல்லை. என் மனசில் ஒரு துக்கம் இருக்கிறது அவ்வளவுதான்!"

"என்ன துக்கமோ?"

"ஒரு ஜீவனை அதன் விருப்பத்திற்கு மாறாக இப்படிக் கடத்திப் போகிறார்களே!" என்றான் வல்லபன்.

தத்தன் அவனைப் பார்த்துச் சிரித்தான்.

"இது போன்று நாடெங்கிலும் கடத்திப் போகிறார்களே! இது நமக்கு அதிசயமில்லையே. ஒரு ஜீவனுக்காக ஏன் இப்படி நிலை குலைய வேண்டும்?"

"இப்போதுதான் அந்தக் கொடுமையை நேரிலே பார்க்கிறேன்!" என்று கூறினான் வல்லபன்.

பகலெல்லாம் பல காத தூரங்கள் நடந்து இரவு வந்ததும் ஒரு காட்டாற்று அருகிலே தனியாக இருந்த மண்டபம் ஒன்றில் தங்கினார்கள்.

இரவு நிச்சந்தையாக நித்திரை போய்விட்டு காலையில் எழுந்து சலசலக்கும் காட்டாற்றில் குளித்து விட்டுக் கரையேறி ஆடைகளைப் புனையும்போது,

"வல்லபா! அதோ!" என்று கலவரத்துடன் கூறினான் காலதத்தன்.

குதிரையில் உருவிய வாளுடன் தலைதெறிக்கும் வேகத்தில் வந்து கொண்டிருக்கும் அந்த ஆளைக் கண்டு திடுக்கிட்டான் வல்லபன்.

"ஆகா, மோசம் போனோமே!" என்றான் காலதத்தன்.

6

வாளை உருவிக் கொண்டு குதிரையில் வேகமாக வந்தவன் சத்திரத்தில் சந்தித்த அந்த யாத்திரிகன்!

அவனைக் கண்டதும் இளைஞர்கள் இருவரும் ஆச்சரியப்பட்டார்கள். பிறகு, 'என்ன நடக்குமோ?' என்று சிந்தனை பண்ணித் தங்கள் பொதிகளிலிருந்து வாள்களை உறுவிக் கொண்டார்கள்.

யாத்திரிகன் சகட்டுமேனியில் குதிரையை ஓட்டி வந்தான். அருகில் நெருங்கி வரும் போது, இளைஞர்கள் இருவரும் சடக்கென இடைவிட்டு விலகி நின்றார்கள். அந்த இடை வழியில் யாத்திரிகன் அப்படியே புகுந்து ஓடினான்.

ஆனால் ஓடும்போது ஒரு காரியம் செய்தான். வாளை ஒரு மின்னல் சொடுக்கில் அப்படியும் இப்படியும் சக்கர வாளமாக வீசிவிட்டு ஓடிப் போனான். ஆச்சரியம்! இளைஞர்களின் இரு வாள்களும் அவர்கள் கைகளிலிருந்து விடுபட்டு அப்பால் போய் டொனிங் என்று விழுந்துவிட்டன.

பரக்கப் பரக்க அவர்கள் இருவரும் ஓடிப் போய் வாள்களை எடுத்துக் கொண்டார்கள்.

இதற்குள் யாத்திரிகன் குதிரையை மீண்டும் திருப்பிக் கொண்டு வந்துவிட்டான்.

இளைஞர்கள் அருகில் வந்ததும், தொப்பென்று குதித்து, அவர்களை நோக்கிப் பாயவே, மூவருக்கும் அங்கே வாட் போர் தொடங்கிவிட்டது.

தத்தனுக்கும் வல்லபனுக்கும் கோபம் மூண்டதால், தங்கள் சினத்தின் தீ வாளில் பறக்க, பல வியூகங்களில் வாளை வளைத்து அங்கும் இங்குமாக சுழற்றிப் போரிட்டார்கள். சிறிது நேரம் வரை அங்கே வெறும் 'டிண்டிணார்களே' சத்தங்கள்.

முடிவில் யாத்திரிகன் 'ஹும்' என்று ஊங்காரமிட்டு, வாளைத் தென்னிவிட, தத்தனின் வாள் மீண்டும் கையிலிருந்து சுழன்று போய்த் தூரே விழுந்தது.

பிறகு அவன் வல்லபனுடன் பம்பரம் போல் சுழன்று போரிட்டான். வல்லபன் ஜ்வாலையைப் போல வீசி அடித்துக் கொண்டு வாளை எண்ணற்ற விதங்களில் வளைத்து வீசினான். முடிவில் யாத்திரிகனுக்கும் வீம்பு அதிகமாகி விடவே அங்கு இங்கு என்று துள்ளி வல்லபனுக்கு இடம் கொடுக்காமல் சண்டையிட்டான்.

தடால் என்று ஒரு சத்தம். இமைக்கும் நேரத்தில் வல்லபன் கீழே விழுந்து விடவே,

அவன் மார்பின் மீது ஒரு காலை வைத்து, வாளை ஓங்கி உயரே தூக்கினான் யாத்திரிகன்.

தூரத்தில் தத்தன் நெஞ்சு பதறி நிற்க, வல்லபன் தன் மேல் விழவிருக்கும் வாளை உற்று நோக்க,

அதே நிலையில் சிறிது நேரம் நின்றிருந்த யாத்திரிகன் சடக்கென தன் வாளைத் தூர எறிந்துவிட்டுப் பகபகவெனச் சிரித்தான்.

முறுக்கு ஏறியிருந்த அந்தச் சூழ்நிலை திடீரென்று இறுக்கம் விடுபட்டுத் தளர்ந்தது. தத்தன் புரியாமல் நடந்து வர, வல்லபன் மெதுவாக எழுந்து நின்று மண்ணை உதறினான்.

"தம்பிங்களா?, இவ்வளவு திறமையை வைத்துக் கொண்டு சத்திரத்தில் ஏதும் செய்யாமல் இருந்தீர்களே" என்று சொல்லி வல்லபனின் தோளை தட்டி, "தம்பி நன்றாகச் சண்டை போட்டாயே! இந்தத் திறமையை நீங்கள் காண்பிக்க வேண்டிய இடத்தில் காண்பிக்க வேண்டிய நேரத்தில் காட்டினால் அன்றோ சுத்தவீரர்கள் ஆவீர்கள். சத்திரத்தில் காண்பிக்காமல் சோர்ந்து விட்டாயே. இனி அப்படிச் செய்யாதே. ஒரு உறுமல் உறுமினால் வாளை உருவு. ஒரு அதட்டல் அதட்டினால் ரத்தத்தைப் பறக்க அடி" என்று சொல்லி, மீண்டும் பழையபடியே 'ஹேஹே' என்று சிரித்தான்.

இளைஞர்கள் இருவருக்கும் அவனைப் பார்ப்பதற்கே வெறுப்பாக இருந்தது. தங்கள் இருவரையும் இவ்வளவு சாதாரணமாகவும், சீக்கிரமாகவும் அம்மானை ஆடி விட்டானே. அவ்வளவுக்கு இடம் கொடுத்து விட்டோமே. சண்டை முறையில் பல நுணுக்கங்களைக் கற்கவில்லையே! என்று நினைத்தார்கள்.

தத்தன் முதுகிலே யாத்திரிகன் தட்டப் போக, அவன் அலட்சியத்துடனும் வெறுப்புடனும் தள்ளிப் போனான்.

சிரித்துக் கொண்டே யாத்திரிகன், "தம்பி! உனக்கு ஏன் இவ்வளவு கோபம்? உங்களைச் சோதிக்க அல்லவா வந்தேன்!" என்றான்.

"அதற்கு இதுதான் வழியா? *குப்பாயம் எல்லாம் கிழிந்து விட்டது. உத்தரியம் அழுக்காகி விட்டது. நாங்கள் இரண்டாம் முறை அல்லவா குளிக்க வேண்டும்!" என்றான் கோபமாக!

"வழிநடை என்று புறப்பட்டு விட்டால் இதை எல்லாம் பொருட்படுத்தக் கூடாது தம்பீ!"

தத்தன் போய் தாழங்குடையை எடுத்துக் கொண்டு திரும்பினான். பிறகு ஆத்திரமாக, "சோதனை என்று சொன்னீரே எங்களை நீர் சோதனை செய்யவேண்டிய அவசியம் என்ன?" என்று கேட்டான்.

உடன் வல்லபனும் தொடர்ந்து,

"ஆமாம், நீங்கள் யார் எங்களைச் சோதனை செய்ய?" என்று கேட்டான்.

"அப்படியா கேட்கிறீர்கள்? உங்கள் இருவருக்கும் அந்தப் பெண்ணுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பது போல் எனக்குத் தோன்றியது. ஆதலால் நீங்கள் யார் என்று சோதிக்க வந்தேன்!" என்றான்.

"எங்களுக்கும் அந்தப் பெண்ணுக்குமா? உங்கள் அதியூக மதிநுட்ப மூளையிலே அப்படி ஒரு அபார எண்ணம் தோன்றியதே, அதை மெச்சிக் கொள்ளத்தான் வேண்டும்" என்றான் வல்லபன்.

"என் மூளையிலே நுட்பமான எதுவும் தோன்றாது. ஏனெனில் நான் அதிகமாக யோசிப்பதே இல்லை. உங்களுக்கு அந்தப் பெண் ஒரு முறி எழுதியிருந்தாள். அதைப் பார்த்துத்தான்....." என்று இழுத்தான்.

* குப்பாயம் - சட்டை

"முறியா?"

"ஆமாம்."

"அந்தப் பெண்ணா எழுதியிருக்கிறாள்?"

"ஆமாம்!"

வல்லபன், அந்தக் கணத்திலே பரபரக்க,

"வல்லபா! அவர் சொல்வதை நம்பாதே! அந்தச் சேவகத் தலைவனைவிட இவர் ஒரு பெரிய பசப்புக்காரர்!" என்றான் தத்தன்.

'ஹேஹ்ஹே' என்று சிரித்த யாத்திரிகன், "தம்பி! இன்னும் உன் கோபம் அடங்கவில்லையோ? உனக்குச் சந்தேகம் இருந்தால் நீயே இதைப் படித்துப் பார்த்துக் கொள்!" என்று இடுப்புக் கச்சத்தை எடுத்து, அதிலிருந்து ஒரு நறுக்கை எடுத்து அவன் முன் போட்டான்.

நறுக்கு முறையான ஓலை நறுக்காக இல்லை. ஏதோ சாதாரண ஓலைப் பெட்டியின் மெருகேற்றாத ஓலையைப் போல் கச்சித உருவம் இல்லாமல் இருந்தது. அது கீழே உருண்டு போய் நின்று காலைத் தென்றலிலே உயிருள்ளது போல் சிலுசிலுப்புக் காட்டியது.

வல்லபனுக்கு அதை ஓடிச் சென்று எடுக்க எண்ணம். ஆனால் தத்தனின் அனுமதி அதற்கு வேண்டும் போல் தோன்றியது.

தத்தன் இடத்தை விட்டு நகரவில்லை. பேசவும் இல்லை. தாழங்குடையைச் சக்கரம் போல் வெறுமனே சுழற்றிக் கொண்டிருந்தான்.

"ஓகோ! நீங்கள் பெரும் பழுவர்கள்போல் இருக்கிறதே! நான் சொல்வதை நம்பமாட்டீர்கள்

போலத் தோன்றுகிறதே. இந்தா மற்றுமொரு அடையாளம்!" என்று சொல்லி மீண்டும் கச்சையின் மற்றொரு பகுதியை எடுத்து அதிலிருந்து மிகக் கவனமாக எதையோ வெளியில் எடுத்தான்.

உயரே அவன் அதைத் தூக்கிக் காட்டிய போது ஒரு மகர கண்டிகை இளம் காலை ஒளியில் மினுமினுத்தது.

இருவரும் அதை அதிசயத்தோடும் சந்தேகத் தோடும் பார்த்தார்கள்.

"தம்பிகளா? கேளுங்கள் கதையை! நீங்கள் இருவரும் சொல்லாமல் புரியாமல் சத்திரத்தை விட்டுப் போய்விட்டீர்கள். நானோ நன்றாக விடிந்து ஒரு ஜாமத்திற்குப் பிறகு தான் புறப்பட்டேன். புறப்படு வதற்கு முன்னாலே சத்திரத்தை எல்லாம் பார்வை பண்ணினேன். முக்கியமாய் அந்தப் பெண் இருந்த அறையிலே போய்ப் பார்த்தேன். அங்கே கட்டில் கால் பக்கத்தில் ஏதோ மின்னியது. போய்ப் பார்த்தால் இந்த மகர கண்டிகை! அதனுடன் நூலில் சுற்றி ஓலை போல் ஏதோ கிடந்தது. பார்த்தால் இந்த நறுக்கு முறி! அதைப் பிரித்துப் படித்த போது அது உங்களுக்கு என்று தெரிந்தது. ஆகா! இந்த இளைஞர்களுக்கு இந்தப் பெண் தெரிந்தவள் போல் இருக்கிறதே! நறுக்கையும், கண்டிகையையும் உங்களிடம் கொடுக்க வேண்டுமே என்று நினைத்து உங்களைத் தேடி இங்கே வந்தேன். நம்பினால் நம்புங்கள். நம்பாவிட்டால் போங்கள். . . . சரி! நீங்கள் நிற்கும் நிலையைப் பார்த்தால் என்னிடம் சரியாகப் பேச மாட்டீர்கள் போல இருக்கிறது. நான் உத்தரவு பெற்றுக் கொள்கிறேன்!" என்று கை கூப்பினான்.

வல்லபனின் பார்வை அந்த நறுக்கு மேலே கிடந்தது. அதன் மீதுள்ள மந்தமான ஒளி கூட ஏதோ தகதகக்கும் ஒளிபோல் அவனுக்குத் தோன்றியது.

மெதுவாக எழுந்தான் அவன். நறுக்கின் அருகில் போய் அதை எடுத்தான். அது ஒரு எழுத்து ஓலையே அல்ல. சாதாரண கூடை முடையும் ஓலை. அதைப் பிரித்துப் பார்த்தான். முதலில் ஒன்றுமே தெரியவில்லை. எழுத்துக்களே இல்லை. பிறகு கூர்ந்து கவனித்ததில் எழுத்துக்கள் தெளிவில்லாமல் இருப்பது தெரிந்தது.

அதை எழுத்தாணி கொண்டும் எழுதவில்லை. வேறு அதிகக் கூர்மை இல்லாத எதையோ கொண்டு முறையாக எழுத முயன்றிருந்தார்கள். சிரமப்பட்டு வல்லபன் அந்த நறுக்கை வாசித்தான். அவசரத்தில் அலங்கோலமாக எழுதப்பட்டிருந்தது.

"சத்திரத்திலே தாமசம் செய்த இளைஞர்களுக்கு கண்டிகையை அடையாளம் வைத்து நான் எழுதுவது நான் தெற்கே. . . ."

என்ற இடத்தில் சடக்கென நின்றுவிட்டது.

வல்லபன் முன்னும் பின்னும் திரும்பிப் பார்த்தான். அதற்கு மேல் எதுவும் இல்லை.

அதை எடுத்துப் போய் தத்தனிடம் கொடுத்தான். தத்தனும் படித்துவிட்டு மேலும் கீழும் புரட்டினான்.

பிறகு மெல்லிய குரலிலே, "இவன் பசப்புக்காரன் இவனை நம்பக்கூடாது" என்றான்.

"நறுக்கையும் கண்டிகையையும் பார்த்தால் பொய் என்று தோன்றவில்லையே. கண்டிகை பலநூறு கழஞ்சுகள் பெறும்!" என்றான் வல்லபன்.

பிறகு அவன் யாத்திரிகனை நோக்கி, "ஐயா நீர் சொல்வது, செய்வது எல்லாமே எங்களுக்குச் சந்தேகத்தைக் கொடுக்கின்றன. முதலில் சொல்லுங்கள். நீங்கள் யார்?" என்று கேட்டான்.

'ஹேஹே ஹேஹே' என்று சிரித்த யாத்திரிகன், 'நான் யார்? நான் யார்?' என்று கனம் பாடிவிட்டு, "தம்பி! அந்தத் தம்பியிடம் நான் தான் ஏற்கெனவே சொல்லி விட்டேனே! உனக்கும் சொல்கிறேன். நான் ஒரு கற்பூர வியாபாரி!" என்றான் அழுத்தமாக.

"வியாபாரியா?"

"ஆமாம். வியாபாரிதான். என் ஆட்களுடன் நான் வியாபார யாத்திரையிலே போகிறேன். கற்பூரம் மட்டும் நான் வியாபாரம் செய்யவில்லை. கிராம்பூ, இலவங்கப் பட்டை, சீனப்பட்டு, சாதிப்பத்திரி, வாசனா திரவியம் எல்லாம் வியாபாரம் செய்கிறேன். ஊரில் உள்ள தனவந்தர்கள், நாயகர்கள், குறுநிலக்காரர்கள், சிற்றரசர் கள் ஆகிய பெரும் தனவான்களிடையே விற்றுக் கொண்டு போகிறேன். இதுதான் என்னைப் பற்றிய உண்மை. என் மீது எந்தச் சந்தேகமும் படாதீர்கள். முந்தா நாள் உன் உயிரைக் காப்பாற்றியவன் நான். தம்பி மறந்துவிடாதே!" என்றான்.

"மறுக்கவில்லை வணிகரே! அதற்காக நான் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த நறுக்கையும், கண்டிகையையும் பார்த்தால். . . ." என்று இழுத்தான்.

"ஓகோ! அவைகளைக் கூட நீங்கள் நம்ப வில்லையோ? நான் ஏதோ உங்களைச் சூழ்ச்சியில் ஆழ்த்துகிறேன் என்று பார்க்கிறீர்களா? ஹேஹே! தம்பீ! கண்டிகையைப் பார்! பசும்பொன்! உயர்ந்தபொன்! இதை நான் அவ்வளவு சுலபமாக உங்களிடம் கொடுத்து விட்டுப் போவேனா? எனக்கு என்ன பயித்தயமா என்ன? கண்டெடுத்தேன். உரிய இடத்தில் கொடுத்துப் போகிறேன். நம்பினால் நம்புங்கள். நம்பாவிடில் போங்கள். நான் வருகிறேன்!"

என்று கூறி, குதிரை மீது சிறிது சிரமத்தோடு ஏறி அமர்ந்து கொண்டு அதைச் செலுத்தத் தொடங்கினான்.

தத்தனும் வல்லபனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். நடப்பதெல்லாம் என்னவென்றே அவர்களுக்குப் பிடிபடவில்லை. புறப்படும்போது நல்ல சகுனம் பார்த்துத்தானே புறப்பட்டோம் என்று நினைத்தார்கள்.

யாத்திரிகன் அனாயாசமாய்க் கீழே போட்டுச் சென்றிருந்த கண்டிகை கீழே பளபளத்தது.

வல்லபன் ஏதோ நினைத்து, திடீரென்று அந்தக் கண்டிகையைப் போய் எடுத்தான். நல்ல கனமான கண்டிகை! நுணுக்கமான பொன் வேலைப்பாடுகள். கொடிகளும் மலர்களும் மீன்களும் பின்னியிருந்தன. தெய்வங்களின் உருவங்களும் காணப்பட்டன.

'இது அவளுடைய கண்டிகையா? இல்லையா? எல்லாம் ஏமாற்றா? எதுவும் புரியவில்லையே!' என்று நினைத்து யோசனை பளிச்சிட்டவனாய் முகர்ந்து பார்த்தான்.

அவன் கண்கள் மலர்ந்து விட்டன. அதே இனிய மகிழம்பூ வாசனை!

"தத்தா! இதை நுகர்ந்து பார்!" என்றான். அவனும் நுகர்ந்து பார்த்தான்.

"மகிழம்பூ வாசனை!"

"ஆமாம். கண்டிகையைத்தான் செய்யலாமே ஒழிய அதில் மகிழம்பூ வாசனை ஏற்ற முடியாது. இது அந்தப் பெண் நெடுநாள் அணிந்திருந்ததால் ஏற்படகூடிய வாசனை இது. அவள் உடம்பின் வாசனைதான்!" என்றான் வல்லபன்.

உடனே அவன் திரும்பி, "ஐயா வணிகரே!" என்று கூவி அழைத்தான்.

அதற்குள் வணிகன் குதிரை மீது சிறிது தூரம் போயிருந்தான்.

"ஐயா வணிகரே!"

மீண்டும் கூவி அழைத்தான். வணிகன் குதிரையை இழுத்துப் பிடித்தான். திரும்பிப் பார்த்தான்.

"தம்பீ! கிழக்குத் திசை நோக்கித்தான் நான் வியாபார யாத்திரையில் போய்க் கொண்டிருக்கிறேன். உங்களுக்குச் சற்று முன்னால் போய்க் கொண்டு இருப்பேன். விருப்பம் இருந்தால் என் கோஷ்டியில் வந்து கலந்து கொள்!" என்று சொல்லிக் குதிரையைத் தளர்த்திவிட்டான். அது மேலே செல்ல ஆரம்பித்தது.

சிறிது நேரத்தில் கரடுகளைத் தாண்டிச் சமவெளியிலே வந்ததும் அந்தக் குதிரை பறக்க ஆரம்பித்தது.

அதில் 'லொங் லொங்' என்று குலுங்கிக் கொண்டே போனான் அந்தக் கற்பூர வணிகன்.

தத்தனும் வல்லபனும் பேச்சில்லாமல் அப்படியே நின்றார்கள். தத்தனின் தாழங்குடை மட்டும் சுழன்று கொண்டே இருந்தது.

வல்லபனின் கையில் நறுக்கும், கண்டிகையும் அப்படியே கனத்துக் கிடந்தன.

சிறிது நேரம் அவரவர் சிந்தனைகளில் இருந்த பிறகு, "வா மேலெல்லாம் ஒரே வியர்வை. குளித்து விடலாம்!" என்றான் தத்தன்.

இருவரும் சிற்றாறு பக்கம் மீண்டும் போனார்கள்.

வல்லபனின் மனம் அதற்குள் கனத்து விட்டது.

கண்டிகையின் நீள மகர வடிவத்திலே அந்த இளம் பெண்ணின் நீண்ட நெடுங்கண் அவன் முன்னால் தெரிந்தது.

ஓலையின் வரியில்லாத எழுத்துக்களிலே அவளது இதயமே எழுதப்பட்டது போலிருந்தது.

'இளைஞர்களுக்கு என்று போட்டிருக்கிறாளே அது எனக்குத்தானே எனக்குத்தானே' என்று நினைத்தான் அவன்.

7

இரு இளைஞர்களும் பிறகு நீரில் இறங்கி மீண்டும் குளித்தார்கள். கரை ஏறியதும் தத்தன் அந்த மகர கண்டிகையைக் கையில் எடுத்துப் பார்த்தான்.

"வல்லபா! இது நம் வசம் இருக்கட்டும். ஆனால் இதற்காக நாம் நம் வழியை விட்டுப் பிறழ வேண்டாம்!" என்று கூறினான்.

வல்லபன் மறுமொழி கூறவில்லை. அவன் ஏதோ யோசனையில் இருப்பது தெரிந்தது.

"நமக்கு இரு நாட்களில் நேர்ந்த அனுபவங்கள் யாவற்றையும் கெட்ட கனவு போல் மறந்து விடுவோம்!" என்றான் தத்தன்.

வல்லபன் அதற்கும் மறுமொழி கூறவில்லை. "அப்படியா சொல்கிறாய்?" என்பது போல் ஒரு பார்வை பார்த்தான்.

"ஆமாம்! நமது லட்சியம் வேறானது. அதற்கு இடையே வந்த இந்தச் சம்பவங்களை மறந்து விடுவோம். நாட்டில் யார் யாருக்கோ எவ்வளவோ துன்பங்கள், துயரங்கள் ஏற்படுகின்றன. அவைகள் எல்லாவற்றையும் துடைக்க முற்படுவது என்பது நம்மால் இயலாத காரியம். கேள் வல்லபா! உன் தாயார் உன்னை இவ்வளவு தைரியமாக வெளியே அனுப்பியிருக்கிறார் என்றால் அதன் காரணம் என்ன?" என்று கேட்டான்.

"அவருக்கு அவரது கனவு பலிக்க வேண்டும்!" என்றான் வல்லபன்.

"ஆமாம்! அவர்கள் வாழ்க்கையிலே ஒரு குறிக்கோள் வைத்துக் கொண்டார்கள். அதற்காக அவர்கள் உன்னை அரும்பாடுபட்டு வளர்த்தார்கள். உனக்குக் கல்வி பயில்வித்ததும் அன்றி கொங்கு தேச வீரர்களிடம் அனுப்பி மல், வில் இரண்டிலுமே உன்னைப் பழக்கினார்கள். இவ்வளவையெல்லாம் ஒரு அபலை போன்ற உன் தாயார் செய்து இருக்கிறார்கள் என்றால் அதன் காரணம் என்ன?

"அந்த ஆறாத அழியாத கனவு. அரங்கனை எப்படியும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். வாழ்நாளுக்குள்ளேயே அவரை அரங்கத்தில் மீண்டும் எழுந்தருள வைத்துக் கண்ணாறக் காணவேண்டும். இதுதான் அவரது அழியாத வாஞ்சை. இதற்காகத்தானே நம்மை இந்த இளம் வயதில் வெளி உலகிற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். கேள் வல்லபா! இப்போது நாடு சீர்குலைந்திருக்கும் நிலையிலும் உன் தாயார் உன்னை தைரியமோடு புற உலகில் அனுப்பி வைக்கிறார் என்றால் அவரது லட்சியம் எப்படிப்பட்ட லட்சியமாக இருக்க வேண்டும்! அதைக் கவனித்துக் கொள்!" என்றான்.

வல்லபன் மறுமொழி கூறவில்லை. தத்தன் கூறுவது எல்லாமே அவனுக்குச் சரியாகப்பட்டது. ஒரு கனத்தில் அவன் மனத்தில் ஒரு உத்வேகம் கொழித்தது. தத்தன் கூறியதைப் போல் இடையில் நடந்ததையெல்லாம் மறந்து விட வேண்டுமென்று எண்ணினான்.

இருவரும் மௌனமாக நடக்கத் தொடங்கினார்கள். "இனி நமக்கு அரங்கனைப் பற்றிய விசாரணை தான் ஒரே விசாரணை!" என்று இருவரும் கூறிக் கொண்டார்கள்.

"சுவாமி, முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன் நடந்த சமாசாரம் அது. ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்க க்ஷேத்திரத்தை டில்லி சுல்தானியர் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் ஆக்கிரமிப்புக்குப் பயந்து நம் அரங்கனின் உற்சவ மூர்த்தியை எடுத்துக் கொண்டு ஒரு கோஷ்டியார் தென்திசை நோக்கிப் பயணம் செய்தார்கள். அவர்கள் கேரள தேசம் வழியாகப் பயணம் செய்து கன்னட தேசத்திலுள்ள மேல் கோட்டையைப் போய் அடைந்தார்கள். அதன் பிறகு அவர்கள் எங்கு சென்றார்கள் என்பது தெரியவில்லை. அது பற்றியே தங்களை விசாரித்து விட்டுப் போக வந்தோம்!" என்று வல்லபன் தனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் ஒரு பெரியவரைப் பார்த்து மிக வினயத்துடன் கேட்டான்.

பெரியவருக்கு எழுபது வயது இருக்கும். தலை தும்பட்டையாய் நரைத்திருந்தது. நாசியிலும், செவியிலும் உரோமங்கள் பீறிட்டுக் கொண்டிருந்தன. கண்கள் இடுங்கி நுங்கு போல் மங்கலாகத் தெரிந்தன. பிரம்ம முடிச்சைத் தொட்டுக் கொண்டு அவர் ஏதோ ஜபித்துக் கொண்டிருந்தார். புற உலகை விட அக உலகில் அவர் அதிகம் சஞ்சரிப்பார் போல் தோன்றியது.

வல்லபன் சொல்வதை அவர் மீண்டும் ஒரு முறை கேட்டுக் காதில் வாங்கிக் கொண்டார்.

அப்போது அவர் கண்களில் நீர் கசிந்துவிட்டது.

"அப்பா பிள்ளாய்! அந்தத் துர்ப்பாக்கிய சம்பவங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். ஸ்ரீரங்கம் முற்றுகை ஆவதற்கு முன் ஊரை விட்டு அப்பால் போன' குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்று. காவிரி ஓரமாக மேல்திசையாகப் பிரயாணம் செய்து ஒரு வாரத்தில் நாங்கள் சத்தியமங்கலத்தை அடைந்து விட்டோம். வழியில் நான் என் தாயாரை இழந்து விட்டேன். அதெல்லாம் பழைய கதை. பிறகு ஜீவனத்திற்காகக் கன்னட தேசம் எல்லாம் சுற்றிக் கடைசியில் மேல் கோட்டையில் தங்கி வெகுகாலம் நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தோம்.

"அப்போது அரங்க விக்கிரகத்தை ஒரு கோஷ்டியார் மேல் கோட்டைக்குக் கொணர்ந்ததும் தெரியும். என் தந்தையார் அரங்கனைக் கண்டு அப்படியே மூர்ச்சித்து விழுந்து கிடந்ததும் தெரியும். 'தொல் கானகத்துள் இராமன் சுற்றிய கதி உமக்கும் நேர்ந்ததே' என்று அரங்கனைப் பார்த்துப் பலவாறாகப் புலம்பிக் கேட்டதும் எனக்குத் தெரியும். அதற்குப் பிறகு கண்ணனூரில் நடந்த போரில் என் தந்தையார் நம் பக்கம் ஜெயிக்கும் என்று நம்பிக்கை வைத்ததும் தெரியும். அந்தப் போர் எப்போது நடந்தது அப்பா?" என்றார் பெரியவர் ஈனமான குரலில்.

"அது நிகழ்ந்து கிட்டத்தட்டப் பத்தொன்பது ஆண்டுகள் ஆகிவிட்டனவே!" என்றான் வல்லபன்.

"ஆமாம், ஆமாம்" என்று இடுங்கிய கண்களில் சிறிதளவு தாபம் கொந்தளிக்கப் பேசினார் அவர்.

"எனக்கு அதுவும் ஞாபகம் இருக்கிறது. ஏனென்றால் என் தந்தையார் அந்தப் போரின் முடிவைப் பற்றிக் கேட்ட பிறகுதான் இறந்தார். ஒய்சள ராஜா வீர வல்லாளருக்கும் சுல்தானியருக்கும் நடந்த போர் அது. வெற்றி வல்லாளருக்கே என்று இருந்த தருவாயில் துரதிருஷ்டவசமாக வல்லாளர் சூழ்ச்சியில் கொல்லப் பட்டு விட்டார். நம் பக்கம் சைனியம் எல்லாம் சின்னா பின்னம் அடைந்துவிட்டது. அந்தப் போரின் முடிவு தெரிந்ததுதான் தாமதம், என் தந்தையாரால் உயிர் தரிக்க முடியவில்லை. 'இன்னும் உம்மால் உமது ஊருக்குப் போய்ச் சேர முடியவில்லையே, அரங்கநாதரே உமக்கே இப்படி ஒரு கதியோ' என்று சொல்லி அரங்கன் விக்கிரகம் முன்னால் விழுந்தவர்தான். பிறகு அவர் எழுந்திருக்கவேயில்லை. பரமபதம் அடைந்து விட்டார்!" என்றார் பெரியவர்.

"கேட்பதற்குக் கஷ்டமாயிருக்கிறது, பெரியவரே!" என்றான் வல்லபன்.

"ஆமாம். என் தந்தையாருக்குப் பெரிய அதிர்ச்சி அது. போரில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். இனி அரங்கரைத் திருவரங்கத்திற்கு அழைத்துப் போக வேண்டியதுதான் என்று எல்லோரும் நினைத்தார்கள். இதற்காக அரங்கனை மேல் கோட்டையிலிருந்து சத்திய மங்கலம் வரை கூட அழைத்து வந்து விட்டார்கள். ஆனால் தோல்வியைப் பற்றிக் கேள்விப் பட்டதுமே அரங்கனை மீண்டும் பரிவாரத்தார் மேல்கோட்டைக்குத் திரும்ப அழைத்துப் போய் விட்டார்கள். அந்தத் துர்க்கதியைப் பார்க்க ஒண்ணாது என் தந்தையார் இறந்துவிட்டார்!" என்றார் பெரியவர் நாத்தழுதழுக்க.

"சுவாமி! தாங்கள் யாவற்றையும் நன்றாக நினைவு வைத்துக் கூறிவிட்டீர்கள். எங்களுக்கு

இப்போது வேண்டுவது என்னவென்றால் மேல்கோட்டைக்குப் போன பிறகு அரங்கருக்கு என்ன நடந்தது என்பதுதான்" என்று கேட்டான் தத்தன்.

"அது தெரியாதா, உனக்கு? கண்ணனூர்ப் போரில் வெற்றி பெற்ற பின் மதுரை சுல்தானியர் எங்கும் புகுந்து நமது வழிபாட்டுத் தலங்களை எல்லாம் சூறையாட ஆரம்பித்தார்களே! மேல்கோட்டைக்கும் அவர்கள் வந்து விடுவார்கள் என்று ஒரு பயம் இருந்தது. எனவே ஊர்வலத்தில் பலர் அரங்கனைத் திருப்பதி மலைக்குக் கொண்டு போக எண்ணினார்கள். அங்கே கொண்டு போனார்களோ, வேறு என்ன செய்தார்களோ அது நடந்து பத்தொன்பது வருடங்களுக்கு மேல் ஆகி விட்டதே அப்பா! இப்போ அந்த அரங்கனையா தேடி வந்திருக்கிறீர்கள்?" என்றார் பெரியவர்.

"ஆமாம் சுவாமி! அவரைத் தேடித்தான் வந்து இருக்கிறோம். மேல் கோட்டையிலிருந்து திருப்பதி மலைக்கு அவர் புறப்பட்டது தெரியும். அப்பால் எங்கே போனார் என்று இதுவரை தெரியவில்லை. திருப்பதி மலைக்குப் போய்ச் சேர்ந்ததாகத் தெரியவில்லை. ஆகவே இடையில் அவருக்கு என்ன நேர்ந்திருக்கும். அவரை எங்கே கண்டுபிடிக்கலாம் என்ற உத்வேகத்துடன்தான் நாங்கள் புறப்பட்டு இருக்கிறோம்!" என்றான் ராஜவல்லபன்.

"அப்பா, பிள்ளைகாள்! உங்கள் உத்தேசம் நல்ல உத்தேசமாயிருக்கிறது. உங்களுக்கு என் ஆசீர்வாதம். என் உடம்பு அசக்தியாய்ப் போய் விட்டமையால், நான் அந்த நாளில் என் மாமனார் ஊரான இந்தச் சிற்றூருக்கு வந்துவிட்டேன். என் உடம்பு மட்டும் சரியாக இருந்தி ருந்தால் நான் அரங்கரை விட்டிருக்க மாட்டேன்!" என்றார் அந்தப் பெரியவர்.

அவரிடம் விடை பெற்றுக் கொண்டு அந்த குக்கிராமத்திலிருந்து புறப்பட்டார்கள் அந்த இரு இளைஞர்களும்.

நான்கு நாட்களாக வெவ்வேறு சிற்றூர்களுக்குச் சென்று அரங்கனைப் பற்றி விசாரித்துக் கொண்டே போயிருந்தார்கள் அவர்கள்.

எங்கும் அரங்கனைப் பற்றி எவ்விதச் செய்தியும் கிடைக்காது இருந்த நேரத்தில், இந்த ஊரிலே ஒரு பெரியவர் இவ்வளவு விஷயத்தைத் தெரிந்து வைத்திருப்பது அவர்களுக்கு மன ஆறுதலாக இருந்தது.

இரவு அவர்கள் அந்தக் குக்கிராமத்தில் தங்கிவிட நினைத்தார்கள். அந்த நாளில் எங்கும் சத்திரங்கள் அபரிமிதமாக இருந்தன.

சத்திரம் வைப்பது, அந்த நாட்களில் தலையாய தர்மமாகக் கருதப்பட்டது. ஆகவே யாத்திரிகர்கள் நிச்சிந்தையாக அநேக இடங்களுக்குப் போய்வர முடிந்தது.

இரவில் சத்திரத்துப் பரிசாரகர் கொடுத்த உணவை அருந்திவிட்டு இருவரும் படுத்தார்கள். வல்லபனுக்குக் கண் துயிலவில்லை. மனம் பலவிதங்களில் போராடியது.

அடிக்கடி அவன் முன்னால் ஒரு மீன் நீந்திச் சென்றது. அந்த மீன் சிறிது நேரத்தில் ஒரு மகர கண்டிகையாக மாறி பிறகு அது அந்த இளம் பெண்ணாக மாறிவிட்டது. 'சத்திரத்தில் பார்த்த இளைஞரே' என்று அவள் அவனை அழைப்பது போலிருந்தது. அவளுக்குத்தான் என்ன இனிமையான குரல்! கன்னலும் தேனும் கலந்தாற்போல் வாயெல்லாம், மனமெல்லாம், நினைத்த நினைவெல்லாம் இனித்தது.

திருவரங்கன் உலா இரண்டாம் பாகத்தில் கடைசி அத்தியாயத்தை எழுதி முடிக்கும் போது கி.பி.1342-ல் ஒய்சள வல்லாளரின் படைகள் கண்ணனூரில் நடந்த போரில் சின்னாபின்னம் அடைந்ததையும் அந்த அரசர் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதையும் எழுதி இருந்தேன்.

அரங்கன் பரிவாரத்தாருக்கு அதனால் பெரிய ஏமாற்றம் ஏற்பட்டதையும் அவர்கள் பழையபடி சத்தியமங்கலத்திலிருந்து மேல் கோட்டைக்குத் திரும்பியதையும் கூறியிருந்தேன்.

1342-ல் கண்ணனூரில் நடந்த அந்தப் போர்தான் தமிழ் பேசும் நாடுகளின் கடைசி நம்பிக்கையாக இருந்தது. அந்த நம்பிக்கை சிதைந்து விழுந்ததும் எங்கும் ஒரு பரிதவிப்பான சூழ்நிலையே ஏற்பட்டது என்றும் எழுதியிருந்தேன்.

ஆனால் அப்படி ஒரு அவநம்பிக்கை சூழ்வதற்கு முன்னேயே மற்றொரு இடத்தில் தமிழ் பேசும் நாடுகளுக்கு வெகு தூரத்திற்கு அப்பால் துங்கபத்திரா என்னும் புனித நதிக்கரையில் புதிய நம்பிக்கை உதயம் ஒன்று கி.பி. 1336-ஆம் ஆண்டிலேயே துவங்கிவிட்டது.

அதாவது கண்ணனூர்ப் போர் நிகழ்வதற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்னமேயே மற்றோர் இடத்தில் ஒரு புதிய உதயம் ஏற்பட்டுவிட்டது.

அந்த உதயம் தான் பின்னர் விஜயநகர சாம்ராஜ்யம் என்னும் பெயருடன் சரித்திரத்தில் பிரசித்திப் பெறப் போகிற மாபெரும் எழுச்சி!

இந்த சாம்ராஜ்யத்தின் ஆரம்ப காலத்தில்தான் இப்போது நம் கதை.

நம் கதை ஆரம்பிக்கும் போது ஹரிஹரமும், புக்கரும் தோற்றுவித்த அந்தத் துங்கபத்திரை நதிக்கரை ராஜ்யத்தில் புக்கராயர் என்பவர் தான் அரசராக இருந்து வருகிறார்.

இந்த ராஜ்யத்தின் தெற்கே *முள்வாய்ப் பட்டணம் என்னும் மண்டலத்தில் உள்ள ராஜபிரதானியின் அந்தப்புரத்திற்குள் நாம் இப்போது நுழைகிறோம். அதன் சித்திர விசித்திர உப்பரிகைகளுக்கு அப்பால் பச்சைப் பசேல் என்று விரிந்திருக்கும் பூங்காவனத்தினுள் ஒரு ஓரத்தில் சலசல என்று நீரோடைகள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

ஒரு புறத்தில் மயில்கள் நீண்ட தோகைகளுடன் ஒய்யாரமாக நடை பயிலுகின்றன.

இந்த உய்யாவனத்தின் ஒரு பகுதியில் ஒரு அசோக மரத்தின் கீழே ஒரு சித்திரக் கல்லின் மீது அமர்ந்து கொண்டு ஒரு முப்பது வயது மதிக்கத்தக்க அரச குலப் பெண்மணி கையில் எழுதுகோலும், ஏடும் கொண்டு எதையோ யோசித்துக் கொண்டிருக்கிறாள்.

அவளது சந்திரப்பிரபை போன்ற முக மண்டலத்தில் அவ்வப்போது சிந்தனைகளுக்கு இடையே பளிச்சென்று மின்னல்கள் போல் சில கற்பனைகள் உதயமாகின்றன. அந்தப் பெண்மணி உடனே அதை ஏடுகளில் எழுதத் தொடங்கி விடுகிறாள். இவ்வாறு வெகு நேரம் அவள் யோசிப்பதும் எழுதுவதுமாக இருக்கிறாள்.

இந்தத் தெய்வ சோபையுள்ள பெண்மணியின் பெயர் கங்கா தேவியாகும். அதி தீவிரமாகச் சிந்தித்து வடமொழியில் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறாள் அவள்.

---

* முள்வாய்ப்பட்டணம் - இப்போதைய முள்பாகல்

வெகு நேரம் அவள் இவ்விதம் செய்து கொண்டு இருக்கும் போது.

அவள் அருகில் மற்றொரு அரச குலப் பெண் புன்முறுவலுடன் வந்து நிற்கிறாள்.

மெல்லிய அவளது அசைவுகளைக் கண்டதும் நிமிர்ந்து பார்க்கிறாள் கங்காதேவி.

"உங்கள் கற்பனை சக்தியைக் கலைத்து விட்டேனோ கங்கா?" என்று சொல்லிக் கொண்டே அவள் அருகில் மெல்ல அமர்ந்தாள் அந்த ராஜகுலப் பெண்.

"இல்லை, குந்தளா! ஒரு அருமையான கற்பனைக் காட்சியை எழுதிக் கொண்டிருக்கிறேன். இதைப் பார்க்கிறீர்களா?" என்றாள் கங்காதேவி!

8

குளிர்ந்த *மை தடவிய நீள ஓலையிலே, நளினமான காந்தள் விரல்களால் கங்காதேவி எழுதிக் கொண்டிருக்க அவள் அருகில் குந்தளா தேவி மெள்ள வந்து அமர்ந்து கொண்டாள்.

"சொல்லு கங்கா என்ன எழுதியிருக்கிறாய்?" என்று கேட்டாள் குந்தளா.

"சொல்கிறேன்!" என்று சொல்லி கங்கா தனது எழுதுகோலைத் தரை மீது வைத்து, பிரமை ததும்பும் விழிகளோடு பார்த்தாள்.

* மை - வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச்சாறு, மாவிலைக் கரி, தர்ப்பைக் கரி இவைகளைக் கூட்டிச் செய்த மை அது! பார்ப்பதற்கு குளுமை தரும்.

"குந்தளா! அரண்ய வழியிலே அசோக மரத்து மேலே பல குயில்கள் பஞ்சம ராகத்தில் மிக இனிமையாய்க் கூவுகின்றன. அரண்யத்தில் இனிமை நிறைகிறது. அப்போது அந்த வழியில் தனியாய்ச் செல்லும் பிரயாணிகளை அந்தக் கூவல்கள் துளைக்கின்றன" என்று கூறிய கங்கா, உடன் தன் வடமொழிக் கவிதையை இனிமையான இராகத்திலே மெள்ளப் பாடத் தொடங்கினாள்.

பதிக ஸார்த பராக்ரமனோத்ஸுக

ப்ரஸவகார்முக காஹல நிஸ்வந:

மதுர பஞ்சமராக ரஸாஞ்சிதோ,

ஜகதரஞ்ஜயதன்ய ப்ருதத்வினி:

மெள்ள முத்து ஒளிர்ந்தால் போல் முறுவல் சிந்திய குந்தளா, "ஓகோ, கங்கா அரசர் இப்போது தனியாக இருப்பார். அவர் இருக்கும் இடத்திலே குயில்கள் பஞ்சமத்தில் இசைபாடும். அந்தப் பாடலைக் கேட்டால், அரசரின் மனத்தில் மாரன் கணைகள் பாய, உன்னை அங்கே நினைத்துக் கொள்வார் என்று தானே நினைக்கிறாய்?" என்று கேட்டாள்.

கங்காவின் வதனத்தில் குங்குமம் சிந்தியது. முறுவலிக்கும் கண்களுடன் குந்தளாவைப் பார்த்த அவள் ஏட்டின் பட்டுக் கயிற்றில் தொங்கிக் கொண்டிருக்கும் *கிளி மூக்கை இழுத்து, ஏட்டைச் செவ்வையாகக் கட்டி விட்டு,

"குந்தள அக்கா! மன்னர் திருநாராயண புரத்திற்குப் போனதிலிருந்து நம்முடைய

* கிளி மூக்கு - ஏட்டின் கயிற்று நுனியில் முடிச்சுக்குப் பதிலாகக் கட்டப்படும் அழகுச் சின்னம் இது.

விளையாட்டும் வேடிக்கையும் ஆர்ப்பரிப்பும் ஆரவாரமும் எல்லாம் போய்விட்டனவே. இனி அவர் எப்போது திரும்பி வந்து அவை எப்போது துவங்கப் போகின்றனவோ?" என்று கூறினாள்.

"ஏன் கங்கா? அரசர்தான் எங்கே போனாலும் சீக்கிரமே வந்து விடுவாரே. அரசர் தமது இளவயதிலே சிருங்காரங்களை அனுபவிக்க வேண்டும் என்பதற்கு அல்லவா நமது புக்கராயர் அவரை முள்வாய் ராஜ்யத்தை ஆளும்படி இங்கே அனுப்பியிருக்கிறார்? இது உனக்குத் தெரியாதா?" என்று கூறினாள் குந்தளா.

"தெரியும் அக்கா. ஆனால் நம் அரசர் உள்ளத்தைப் பற்றி நமக்குத் தெரியாதா? சிருங்காரம் எவ்வளவு அவர் மனத்தில் இருக்கிறதோ, அவ்வளவுக்கும் ரௌத்திரமும் இருக்கிறது. நமது சிறிய ராஜ்யம் ஒரு மகாசாம்ராஜ்யமாக மாற வேண்டும் என்று எவ்வளவு துடித்துக் கொண்டிருக்கிறார் அவர். அவரது மன திடத்திற்கும், பலத்திற்கும் ஏற்றதொரு சந்தர்ப்பம் இன்னும் வரவில்லையே என்று வாடிக் கொண்டிருக்கிறார்" என்றாள் கங்காதேவி.

இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டு பொழுதைப் போக்கிக் கொண்டிருக்க,

அரண்மனைச் சேடி ஒருத்தி அங்கே வந்து வணங்கி,

"கிரியாசக்தி பண்டிதர் அரண்மனைக்கு வந்திருக்கிறார்" என்று தெரிவித்தாள். உடனே இருவரும் அவசரமாக எழுந்து புறப்பட்டார்கள். அவர்கள் அவசரத்தைக் கண்டு வழியில் உள்ள மயில்கள் பல விருட்டென்று பாதையை விட்டு விலகி அவர்களை ஆவலோடு திரும்பிப் பார்த்தன.

எழுந்து சென்ற அந்த ராணிகள் இருவரும் யார் இன்னார் என்று விளக்குவதற்கு முன், சிறிது சரித்திரத்திற்குள் நுழைகிறேன்.

தொன்று தொட்டு பரத நாட்டின் தென்பகுதி நாடுகளில் வெளியார் தொந்திரவுகள் அதிகம் இல்லாமல் அவை தம் வழியே சென்று கொண்டிருந்தன.

இந்தத் தென் பகுதி மன்னர்களின் இடையே பூசல்கள் நடந்தாலும் அவை மக்களின் வாழ்க்கை முறையையோ தொழில்களையோ, நடைமுறைப் பழக்கங்களையோ அதிகம் பாதிக்கவே இல்லை.

ஆனால், பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தத் தென்பகுதி நாடுகள் மீது முதன் முதலாக நிகழ்ந்த டில்லி சுல்தானியர்களின் படை எடுப்புகள் முற்றிலும் மாறுபட்டவையாய் இருந்தன. அவை தென்னக மக்களுக்கு முதன் முதலாகப் பேரதிர்ச்சியைக் கொடுத்தன. ஏனெனில் இந்தப் படை எடுப்புகள் மற்ற படையெடுப்புகளைப் போல் சாதாரணமாக அமைய வில்லை. அவை மக்களின் வாழ்க்கை முறையையும், பழக்க வழக்கங்களையும் வெகுவாகப் பாதிக்கத் தலைப்பட்டன.

அது மட்டுமல்ல! அவர்கள் தொன்று தொட்டுப் பேணி வந்த சமய நெறிகளையும் வழிபாட்டு முறைகளையுமே அவை பாதிக்கத் தொடங்கிவிட்டன.

இதனால் மக்கள் முதன் முறையாக அல்லோலப் பட்டார்கள். பரிதவித்தார்கள். பீதி அடைந்து பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினார்கள்.

குறிப்பாகத் தமிழ் பேசும் நாடுகளின் தவிப்பு மிகவும் மோசமாக இருந்தது. இந்தப் படை எடுப்புகள் நடந்த போது தமிழ் நாடுகளில் பாண்டிய அரசு ஒன்று

தான் நிலையாக நின்று கொண்டிருந்தது. ஏனைய சோழ, பல்லவ அரசுகள் யாவும் மறைந்து போய் விட்ட நிலை அது.

சீராக நின்ற பாண்டிய அரசிலும் சகோதரப் பூசல்களால் வேற்றுமையே நிறைந்திருந்தது. இதனால் சுல்தானியரின் படை வடக்கே திருவொற்றியூர் அருகில் வரும் போதே, தெற்கே மதுரையை விட்டுத் தென்காசிப் பகுதிகளுக்கு ஓடும் அவல நிலையில் இருந்தது பாண்டியர் படை.

இப்படி நிராதரவாக விடப்பட்ட தமிழ் நாடுகளை சுல்தானியர், ஜயித்து, கி.பி.1323-ல் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஒரு சுல்தானிய ஆட்சியை நிறுவிவிட்டார்கள். இந்தப் புது ஆட்சிக்குத் தமிழ்நாடுகளின் பெரும் பகுதி பணிந்து போக வேண்டியதாயிற்று.

இதனால் தென்னகம் முழுவதிலும் மக்களின் வாழ்க்கை முறையிலேயே பெரிய கொந்தளிப்பு எழுந்துவிட்டது.

இதனைக் கண்டு முதலில் மனம் புழுங்கியவர்கள் ஓய்சளர்கள். கன்னட நாட்டை ஆண்டு வந்த அவர்களது ஆதிக்கம் தெற்கே திருவண்ணாமலை வரை வீசியிருந்தது.

இந்த ஓய்சள வமிசத்தின் கடைசி அரசர் வீர வல்லாளர், மதுரை சுல்தானியரை எதிர்த்துப் போர் நடத்தி கண்ணனூரில் தோல்வியுற்று உயிர் துறந்தார்.

அவர் மரணத்தினால் தமிழ்ப் பிரதேசத்தில் நிகழ்ந்த கடைசி ஆண்மைப் போரும் அழிந்து விட்டது.

இந்த ஒரு சோதனையான நிலையிலே தென்னகச் சரித்திரத்தில் இருவர் தோன்றினார்கள்.

வாரங்கல்லைத் தலைநகராகக் கொண்டு அரசு செய்த பிரதாப ருத்திரர் என்ற அரசரிடம் பொக்கிஷ அதிகாரிகளாக வேலை பார்த்தவர்கள் இவர்கள். சகோதரர்களான இவர்களது பெயர் ஹரிஹரன், புக்கன் என்பது ஆகும்.

டில்லி சுல்தானியர்கள் பல முறை வாரங்கல்லைத் தாக்கி, கடைசியில் பிரதாப ருத்திரரைச் சிறை பிடித்து டில்லிக்கு இழுத்துச் சென்றார்கள்.

வாரங்கல் நாடு சுல்தானியர் வசம் ஆன பின், அதை விட்டு ஓடிய பொக்கிஷ அதிகாரிகளான ஹரிஹரரும் புக்கரும் துங்க பத்திரை நதிக் கரையை அடைந்தார்கள்.

அவர்கள் மனம் மிக ஆத்திரம் அடைந்திருந்தது. போகும் வழியெல்லாம் அழிவுகளையும் நாசங்களையுமே அவர்கள் பார்த்தார்கள். ஒன்றும் அறியாப் பாமர மக்கள் கூட அநாவசியமாய்க் கொலை செய்யப்பட்டு இருந்தார்கள். வேற்று சமயத்தினர் என்பதற்காக நிறையப் பேர் கொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

இவைகளையெல்லாம் பார்த்து வெதும்பிய ஹரிஹரரும் புக்கரும் மனம் உடைந்து போய், உள்ளத்தில் துயரம் பெருகி ஓட துங்க பத்திரையின் நதிக்கரைக்கு வந்தார்கள். தென்னக மக்களை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்று இருவரும் உறுதி பூண்டார்கள். இதே எண்ணங் கொண்ட எல்லாரையும் சேர்த்துக் கொண்டு ஒரு புதிய ராஜ்யம் ஸ்தாபிக்க வேண்டும் என்று சிந்தனை பண்ணினார்கள்.

இதன் பயனாய்த் துங்கபத்திரை நதிக் கரையில் ஒரு நகரத்தை நிர்மாணித்து அதை அடிப்படையாகக் கொண்டு ஒரு ராஜ்யத்தையும் ஸ்தாபிக்க நினைத்தார்கள்.

இவ்விதமாக கி.பி. 1336-ல் எழுந்ததுதான் விஜயநகர பட்டணமும் அதைச் சுற்றியுள்ள ராஜ்யமும் ஆகும்.

இந்த ராஜ்யம் ஆரம்பித்து நடப்பதற்குத் தொடக்க காலங்களில் பெரிதும் உதவியவர்கள் வித்தியாரண்யர் என்பவரும் கிரியாசக்தி பண்டிதர் என்பவரும் ஆகும். இந்த இருவரும் துறவிகள்!

இந்த ராஜ்யம் கடந்த 24- வருடங்களாகப் பல்கிப் படர்ந்து நமது கதை நிகழும் காலத்தில் (கி.பி.1360) வடக்கே துங்கபத்திரை கரையிலிருந்து தெற்கே தமிழ்நாடுகளின் எல்லை வரை பரவிவிட்டது.

இந்தப் பெரிய நாட்டை நிர்வகிப்பதற்காக அது பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

இந்த ராஜ்யங்கள் எல்லாம் அரச குமாரர்கள், அல்லது அரச பரம்பரையினர் கையில் நிர்வாகத் திற்காகக் கொடுக்கப்பட்டன. இந்த ராஜ்யங்களை அரசு செய்யும் இந்தப் பிரதிநிதிகளையும் அரசர் என்றே அழைத்தார்கள்.

இப்படிப் பிரிக்கப்பட்ட ராஜ்யங்களில் முக்கிய மானது தான் முள்வாய் ராஜ்யம். இந்த ராஜ்யம் விஜயநகர அரசகுமாரர் ஒருவர் வசம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. அவர் பெயர் கம்பணன் ஆகும்.

அவர் விஜயநகர அரசரான புக்கராயரின் மகன்களில் ஒருவராகும். (நம் கதை நிகழும் காலத்தில் ஹரிஹரர் இறந்து விட்டார். அவரது சகோதரர் புக்கராயர்தான் நாட்டை ஆண்டு வந்தார்).

இந்த அரச குமாரரான கம்பணனின் இரு மனைவிமார்கள்தான் நாம் சற்று முன் சந்தித்த கங்காதேவியும், குந்தளாதேவியும் ஆவார்கள்.

கங்காவும் குந்தளாவும் அந்தப்புரத்தில் நுழைந்து பிறகு அவசர அவசரமாக அரண்மனைக்குள் நுழைந்தார்கள்.

அங்கே அரசப் பெண்மணியருக்கு என்று பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த சபைக்குச் சென்ற போது, அங்கே ஒரு தங்க ஆதனத்தில் கிரியாசக்தி பண்டிதர் புன்முறுவலுடன் அமர்ந்து இருப்பதைக் கண்டார்கள்.

உடனே ராணிகள் இருவரும் அவர் கால்களில் விழுந்து வணங்கி, "தன்யோஸ்மி, *தன்யோஸ்மி" என்று பலமுறை கூறினார்கள்.

அவர்களை ஆசிர்வதித்து விட்டு, "எழுந்திருங்கள், குழந்தைகளே!" என்று கூறினார் பண்டிதர்.

அவருக்கு எழுபது வயதிருக்கும். முகத்திலே அறிவின் கதிர் வீசியது. கண்களில் ஞானத்தழல் விகசித்துக் கொண்டிருந்தது. நீளக் குப்பாயமும் தலையில் வெண்ணிறப் பாகையும் அணிந்திருந்தார். நெற்றியில் திருநீறு பளபளப்பாய்க் கனிந்தது.

வடமொழியில் அவர் மிகவும் புலமை பெற்றவர். வேத சாஸ்திர ஞானங்கள் எல்லாம் பூரணமாகப் பெற்றவர். புக்கராயர் குடும்பத்திற்கு அவர் குலகுருவாக விளங்கி வந்தார். அவரைக் குருவாகக் கொண்டு வடமொழி கற்றுப் புலமை அடைந்தவள்தான் கங்காதேவி.

எழுந்து நின்று கங்காதேவி, புளகிதம் அடைந்த வளாய், தனது குருவை மிகவும் விநயத்தோடு பார்த்து,

* தன்யோஸ்மி - தன்யள் ஆனேன்

"சுவாமி! வருவதை முன்கூட்டிச் சொல்லாமல் இருந்து விட்டீர்களே. தங்களை இந்த முள்வாய் நகரத்தில் மேளதாள வாத்திய விருந்தங்களுடன் தக்க முறையில் உபசரித்திருப்போமே!" என்று கூறினாள்.

"இல்லை கங்கா! நான் அவசரமாக வர வேண்டி வந்தது. வந்துவிட்டேன்!" என்றார் கிரியா சக்தி பண்டிதர்.

இதற்குள் ஒரு பொன் வட்டிலில் தீர்த்தமும், பெரிய தாம்பாளமும் சேடி ஒருத்தி கொண்டு வரவே, ராணிகள் இருவரும் தங்கள் குலகுருவின் பாதங்களைப் புனித நீராட்டி, தங்கள் தலைகளில் அந்த நீரைப் புரோட்சணம் செய்து கொண்டார்கள்.

ராணிமார்களின் க்ஷேமலாபங்களைப் பற்றி விசாரித்த பண்டிதர் பின்னர் கங்காவை நோக்கி, "குழந்தாய்! சமீபத்திலே ஏதாவது படித்தாயா? ஏதாவது கவனம் செய்தாயா? ஏதாவது எழுதினாயா?" என்று கேட்டார்.

"சுவாமி! காளிதாசரின் ரகுவம்சத்தை நான் கவனம் செய்தேன். அவரது கவிதைகள் என்னைப் பெரிதும் ஈர்க்கின்றன. பவபூதியின் உத்தர ராம சரிதத்தை மீண்டும் மீண்டும் வாய் திறந்து படித்தேன். செவிகளில் அதன் ஓசையே என்ன அமிர்தமாய் விழுகின்றது!" என்றாள்.

"இப்போது கவிதை என்ன எழுதியிருக்கிறாய்?" என்றார் பண்டிதர்.

தலையைக் குனிந்த கங்காதேவி, "ஏதோ கொஞ்சம். குரு பார்க்கிற அளவுக்கு அப்படி விசேஷமாய் ஏதும் எழுதவில்லை. தவிர, எழுதினால் காளிதாசர் போல் உவமையுடன் எழுத வேண்டும். பட்டபாணரைப் போல் சொற்பிரயோகத்துடன் எழுத

வேண்டும். பாரவியைப் போல் ஆழமான கருத்துக்களை உபயோகிக்க வேண்டும். ஆசாரிய தண்டி போல் இலக்கிய நளினங்களை அள்ளி வீச வேண்டும். இவைகளில் ஏதேனும் ஒன்று கூட என்னிடம் இல்லாத போது நான் எழுதுவது எப்படிச் சிறந்ததாக இருக்கும்?" என்று கூறினான்.

பண்டிதர் அவளது அடக்கத்தை அறிந்து மகிழ்ச்சியுடன் முறுவலிட்டார்.

இருவரும் இலக்கிய விஷயமாய்ச் சிறிது பேசிய பின்னர் "மன்னர் எங்கே? அவரை நான் பார்க்க வேண்டும்!" என்று கூறினார் பண்டிதர்.

"அவரா? திருநாராயணபுரம் போயிருக்கிறார்!" என்றாள் குந்தளா தேவி.

"பிரார்த்தனையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் பண்டிதர்.

"ஆமாம் சுவாமி!"

"அப்படியா? மகாராஜா அவரை உடனே புறப்பட்டு வரும்படிப் பணித்திருக்கிறார். அவசரம் என்று கூறினார்" என்றார் பண்டிதர்.

"அப்படியா?" என்று அதிசயத்தோடு கேட்டனர் தேவிகள்.

"ஆமாம். நான் தெற்கே யாத்திரை போகிறேன் என்று சொன்னேன். அவர் என்னிடம் இந்தச் செய்தியைச் சொல்லி உடனே அவரை விஜயநகருக்கு அனுப்பும்படி மாமன்னர் கூறினார்!" என்றார்.

தேவிகள் இருவரும் வாயடைத்து நின்றார்கள்.

"சரி, மன்னர் எப்போதுதான் திரும்பி வருவார்?" என்று கேட்டார் பண்டிதர்.

"அவர் *சீக்கிரமே* வந்து விடுவார்!" என்று கூறினாள் குந்தளா.

எல்லாரும் யோசனையில் ஆழ்ந்தார்கள்.

9

முள்வாய் ராஜ்யத்தின் அதிபதியான கம்பணன் தலைநகரில் அப்போது இல்லை. திருநாராயண புரத்திற்குப் போயிருக்கிறார் என்று தெரிந்ததும் கிரியாசக்தி பண்டிதர் யோசனையில் ஆழ்ந்தார்.

அவர் அப்படி ஆழ்ந்திருப்பதைப் பார்த்ததும் அரசியர் இருவரும் வியாகூலப்பட்டு, "சுவாமி விஷயம் மிகவும் முக்கியமோ? நாராயணபுரத்திற்கு நாங்கள் ஆட்கள் அனுப்பவோ?" என்று கேட்டார்கள்.

"வேண்டாம் வேண்டாம்" என்று சொன்ன பண்டிதர்,

"சோமப்பர் ஊரில் இருக்கிறாரோ?" என்று கேட்டார்.

சோமப்பர் என்பவர் கம்பணனின் மகாப்பிரதானி (மந்திரி). கல்வி கேள்விகளில் சிறந்தவர். வடமொழியில் சிறந்த புலமை பெற்றவர்.

"அவர் தமது கிராமத்திற்குப் போயிருக்கிறார்!" என்றாள் குந்தளாதேவி.

"சாளுவ மங்கு?"

"அவர் மன்னரோடு போயிருக்கிறார்"

"மாராய நாயகர்?"

"அவர் தமது மகனுக்குப் பெண் கேட்க வெளியூர்க்குப் போயிருக்கிறார்!"

"ராமய்யா?"

"அவர் குதிரை வாங்கப் போயிருக்கிறார்!"

"என்ன இது? யாருமே நகரத்தில் இல்லையா? ராஜ்யத்தை உங்களிடம் ஒப்படைத்துவிட்டு எல்லோரும் அவரவர் போக்கில் போய்விட்டார்கள் போல் இருக்கிறதே!" என்றார் கிரியா சக்தி பண்டிதர்.

சாளுவ மங்குவும், மாராய நாயகரும் அந்த ராஜ்யத்தின் *தண்ட நாயகர்கள். ராமய்யா என்பவர் அரண்மனை நிர்வாகஸ்தர்.

"இல்லை சுவாமி! கோபணா நகரத்தில்தான் இருக்கிறார். ஆனால் அவருக்கு என்னவோ சரியில்லை என்று நினைக்கிறோம். அவர் இங்கே வரவில்லை. அது எங்களுக்குக் கவலையை அளிக்கிறது."

கோபணா என்பவர் ராஜ்யத்தில் *சர்வ சைனியாதிபதி.

"அப்படியா? அவரை நானே போய்ப் பார்க் கிறேனே" என்றார் கிரியா சக்தி பண்டிதர்.

அடுத்த அரை நாழிகையில் சர்வ சைனியாதிபதி கோபணாவின் மாளிகைக்குள் கிரியா சக்தி பண்டிதர் நுழைந்து கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்த கோபணா, "வர வேண்டும், வர வேண்டும்!" என்று கூறி நெடுஞ்சாண் கிடையாக

* தண்ட நாயகர் - படைத்தளபதி
* சர்வ சைனியாதிபதி - படைத் தளபதிகளுக்கு மேலானவர்

விழுந்து வணங்கி, பண்டிதருக்கு ஆதனம் சமர்ப்பித்தார்.

"என்ன கோபணா? உடல் நலம் சரியில்லையா?" என்று சொல்லிவிட்டு அமர்ந்தார் பண்டிதர்.

"உடல்நிலை என்று சொல்வதற்கு இல்லை, மனம் தான் சரியில்லை!" என்றார் கோபணா.

"ஏன், என்ன விஷயம்?" என்றார் பண்டிதர்.

"நான் இந்த ராஜரீக வாழ்க்கையைத் துறந்து விடலாம் என்று பார்க்கிறேன்!" என்றார் கோபணா.

பண்டிதர் திடுக்கிட்டு அவரைப் பார்த்தார். அப்போது தான் கோபணாவின் மாறுதல்களை அவரால் கவனிக்க முடிந்தது. ஒரு சர்வ சைனியாபதிக்கு உண்டான அணிகளை அவர் உடம்பில் அணியவில்லை. தூய வஸ்திரங்களை மட்டும் தரித்துக் கொண்டு வேறு எந்த ஆடம்பரமும் இல்லாமல் இருந்தார். அவர் முகத்திலேயே ஒரு அதிசயமாக அடக்கம் தெரிந்தது.

"கோபணா, இது என்ன? உம்மிடம் ஏன் இந்தத் திடீர் மாறுதல்?" என்றார் பண்டிதர்.

கோபணா சிறிது நேரம் தயங்கினார். பிறகு பேச ஆரம்பித்தார்.

"சுவாமி! நமது ராஜ்யத்தின் தெற்கு ஓரமாக *கொள்ளைக்களம் அருகாமையிலே நான் பயணங்கள் செய்ய நேர்ந்தது. அங்கே அநேகக் கிராமங்களைப் பார்த்தேன். அவைகள் எல்லாம் *அஞ்சினான் புகலிடங்களாக இருக்கின்றன. அங்கு வாழும் மக்களைப் பார்த்தேன். அவர்கள் எல்லோரும் தமிழ் பேசும் நாடுகளிலிருந்து ஓடி வந்தவர்கள். இங்கே புகலிடமாக வந்திருக்கிறார்கள். வந்தவர்களில் சமீப காலத்தில் வந்திருப்பவர்களையும் பார்த்தேன். பல ஆண்டுகளுக்கு முன் வந்து தங்கிவிட்டவர் களையும் பார்த்தேன். இருபது வருடங்களாக இந்த மக்கள் புகலிடம் தேடி வந்து கொண்டே இருக்கிறார்கள். நிறையப் பேர் மலையாள தேசத்திற்குப் போய்விட்டார்களாம். இது அநியாயமாய் இருக்கிறது சுவாமி. இந்த ஜனங்கள் என்னைப் பார்த்ததும் கண்ணீர் வடித்தார்கள். 'எங்கள் மாடு, மனை, நிலம், நீச்சு எல்லாம் விட்டு வந்து இங்கே பொருள் இல்லாமல் பரிதவிக்கிறோம். நீங்கள் தமிழ் ராஜ்யங்களை எப்போது ஜெயித்து எங்களை அங்கே போக வழி செய்யப் போகிறீர்கள்?' என்கிறார்கள்" என்று முடித்தார் சைனியாதிபதி கோபணா.

பண்டிதர் முகத்தில் வருத்தம் தோன்றியது.

"நீங்கள் சொல்வது சரிதான் கோபணா. எனக்குத் தெரிந்தவரை உருத்ரோத்காரி வருஷத்தில் தான் மதுரையில் சுல்தானியர்கள் ராஜ்யம் பண்ண ஆரம்பித்தார்கள். இன்றைக்கு வரை முப்பத்தேழு ஆண்டுகள் ஆகிவிட்டன. ராஜ்யம் நெக்கு விடவேயில்லை. பழைய சோழ ராஜா, பாண்டிய ராஜா யாருமே சுல்தானியரை விரட்ட முடியவில்லை. பழைய பராக்கிரமசாலிகள் எல்லோரும் மறைந்து விட்டார்கள். தவிர, நம் ராஜாக்களிடையே ஒற்றுமை வேறு இல்லையே. என்ன செய்ய இதற்காக நீங்கள் நொந்து போவதில் பயன் என்ன? ராஜரீக வாழ்க்கையைத் துறந்து விடுவதில் லாபம் என்ன?" என்று கேட்டார் அவர்.

"இல்லை சுவாமி, எனக்கு வாழ்க்கை மீதே

---

* கொள்ளைக்களம் – தற்காலத்திய கொள்ளேகாளம்

* அஞ்சினான் புகலிடம் – அகதிகள் முகாமிற்கு அந்நாளையப் பெயர்.

சஞ்சலம் தோன்றிவிட்டது. நிலையான ஒன்றைப் பிடிப்பதை விட்டு நிலையில்லாதவற்றைத் தேடிப் போகிறேனோ என்று நினைக்கிறேன். எனக்கு இப்போது சமய வாழ்க்கைதான் சரியான வழியாகத் தோன்றுகிறது. மற்ற யாவற்றையும் துறக்க விரும்புகிறேன்!" என்றார் கோபணா.

பண்டிதர் அவரை ஆழ்ந்து பார்த்தார்.

"கோபணா நீங்கள் இப்படிச் சொல்வதற்குக் காரணம் ஏதோ ஒன்று உங்கள் வாழ்க்கையில் நடந்திருக்க வேண்டுமே அது என்ன? அதைச் சொல்லுங்கள்!" என்றார் பண்டிதர்.

"சுவாமி!" என்றார் கோபணா. "அஞ்சினான் புகலிடங்களில் புதிதாய் வந்துள்ள ஜனங்களுக்கு மான்யங்கள் வழங்கிவிட்டுத் திருநாராயணபுரம் போனேன். அந்த ஊருக்கு நான் போய்ப் பல வருடங்கள் ஆகிவிட்டன. அந்த ஊரின் ரம்யமான சூழ்நிலை எனக்கு எப்போதுமே பிடிக்கும். கோவிலில் தரிசனம் செய்தேன். அங்குள்ள வைணவர்கள் பலரும் தமிழ்நாடுகளில் இருந்து ஓடி வந்தவர்கள். அவர்கள் ஒன்று கூடி என்னிடம் முறையீடுகள் செய்தார்கள். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டேன்.

"அவர்கள் எல்லோரும் போன பின் ஒரு வயோதிகர் என்னைப் பார்க்க வந்தார். எண்பது வயது இருக்கும். அவர் என்னிடம் ஒரு செய்தி சொன்னார். சுல்தானியர் தாக்கிய போது திருவரங்கத்திலிருந்து புறப்பட்ட அரங்கரின் விக்கிரகத்துடன் அவரும் கோஷ்டியாகப் பிரயாணம் செய்தவராம். பாண்டியம், கேரளம் எல்லாம் சுற்றி கன்னட தேசத்திற்கு வந்தாராம். நாராயணபுரத்திலேயே தங்கிவிட்டாராம். அவர் சொன்ன இன்னொரு விஷயம் உண்டு. நாராயணபுரத்திலிருந்து அரங்க விக்கிரகத்தை

எடுத்துக் கொண்டு ஐந்து பேர் திருப்பதியை நோக்கிப் புறப்பட்டார்களாம். அவர்கள் போய்ப் பதினெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டனவாம். ஆனால் அரங்கன் திருப்பதியைப் போய்ச் சேர்ந்ததாக இதுவரை தெரியவில்லையாம். அரங்கனுக்கு என்ன நேர்ந்தது என்பதைப் பற்றி அவருக்குக் கவலையாக இருக்கிறதாம். 'நீங்கள் ராஜ காரியக்காரர் ஆயிற்றே. அரங்கனைத் தேடிக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யக் கூடாதோ? அவரைக் கண்டுபிடித்து அவருக்குப் பூஜைகள் நடக்க ஏற்பாடு செய்தால் நாட்டில் சுபீட்சம் பெருகும். பிற்காலத்திலே தமிழ் பூமியில் நல்ல காலம் பிறந்து நம்மவர்கள் ராஜாவாக வந்தால் அரங்கனைப் பழையபடி திருவரங்கத்தில் சேர்த்து விடலாமே இதனால் உங்களுக்கெல்லாம் புண்ணியம் பெருகுமே!' என்று கூறினார். எனக்கு அவர் நம்பிக்கையைப் பார்த்தால் சிரிப்புத்தான் வந்தது!" என்றார் கோபணா.

"சிரிப்பு வரக்கூடிய சந்தர்ப்பம் இல்லையே, அந்தச் சிரிப்பு வரக்கூடாதே!" என்றார் பண்டிதர்.

"வரக்கூடாதது தான் சுவாமி! ஆனால் வந்தது. அதற்குக் காரணம் இருந்தது. அரங்கன் திருவரங்கத்தை விட்டுப் புறப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன. கிட்டதட்ட நாற்பதாண்டுகள் ஓடியிருக்குமே! அவரை இப்போது எங்கே போய்த் தேடுவது? ஒரு உலோக விக்கிரகத்துக்காக யாராவது நாடெல்லாம் போய்த் தேடுவார்களோ? அது நடக்கக்கூடிய காரியமா? அதுவும் என்னிடம் வந்து முறையிடுகிறாரே. எனக்கு இருக்கும் ராஜரீக வேலையிலே விக்கிரகத்தைத் தேடி அலைய முடியுமா? அல்லது சேவகர்களைத்தான் அனுப்ப முடியுமா? இதையெல்லாம் நினைத்துத்தான் அந்தப் பெரியவரைப் பார்த்து உள்ளூரச் சிரித்தேன். அதன் பயனை அன்று இரவே அனுபவித்தேன்!" என்றார் கோபணா.

"ஏன்? என்ன நடந்தது?"

"இரவில் பின்ஜாம வேளையில் ஒரு விஷ ஜந்து என்னை தீண்டிவிட்டது. பெரிய ராஜதேள்!"

"அடடா! வலி கொடுமையாக இருக்குமே?"

"ஆமாம். துடித்துப் போனேன். வலிதாங்காமல் உடம்பு ஆடியது. அந்த ஜாமத்திலும் என் ஆட்களை எழுப்பினேன். அவர்கள் வைத்தியரைத் தேடி ஓடினார்கள்.

"அக்கம் பக்கத்தில் விசாரித்து வைத்தியரைக் கண்டுபிடிப்பதற்குள் என்பாடு உன்பாடு ஆகிவிட்டது. வைத்தியர் வந்தார். சூரணத்தைக் குழைத்துப் போட்டார். கேட்கவில்லை. பச்சிலை பறித்துச் சாறு பிழிய வேண்டுமென்றார். பச்சிலையைத் தேடிப் போனார்கள். அந்த இலை அபூர்வ இலையாம். கையில் தீவர்த்தி எரிய, பக்கத்து மலைச்சாரலில் அந்த இரவு வேளை யிலே தேடிப் போனார்கள். இலேசில் கிடைத்தால்தானே! புதரையும் பதுக்கலையும் ஊடுருவித் தேடி, இரவிலேயே அதைக் கண்டுபிடித்தார்கள். சாறு பிழிந்து கையில் பரப்பினார்கள். ஒரு நாழிகையில் வலி பட்டென்று விட்டு விட்டது!" என்றார் கோபணா.

"இந்தக் கதையை ஏன் சொல்கிறீர்கள்?" என்றார் பண்டிதர்.

"சொல்கிறேன் சுவாமி. மறுநாள் காலை, புறப்படும் நேரம். ஆயத்தப்படும்போது அந்த வயோதிக வைணவர் மீண்டும் வந்தார். 'போன நாள் ராத்திரியிலே தேவரீரை ஏதோ தீண்டிவிட்டது என்று கேள்விப்பட்டேன். ரொம்ப வருத்தம்' என்றார். 'ஆமாம் சுவாமி, ஒரே வலி!' என்றேன். உடனே அவர், 'சேனாதிபதி அவர்களே! தேவரீரைத் தீண்டியது போல் நாட்டையே ஏதோ தீண்டிவிட்டது என்று நினையுங்கள். மூலிகையைத் தேடி அலைந்ததுபோல் அரங்கனைத் தேடிக் கண்டுபிடியுங்கள்' என்று கூறி அதிகம் நிற்காமலே விடைப்பெற்றுப் போய்விட்டார். அவர் போனதும் பித்துப் பிடித்தது போல் இருந்தேன். ஏனெனில் அவர் வார்த்தையே என்னைக் கொட்டிவிட்டது போல் தோன்றியது. ஆமாம். தமிழ் பேசும் நாட்டை விஷ ஜந்து தீண்டிவிட்டது. அஞ்சினான் புகலிடத்தில் கண்ணீர் பெருக நின்ற மக்களின் துயரந்தான் அந்தக் கொட்டலினால் ஏற்பட்ட வலி. என்பதை உருவகத்துடன் கூறி விட்டார் அவர்!" என்றார் கோபணா.

பண்டிதருக்கு அவர் சொல்வது அதிசயம் தருவது போலிருந்தது.

"உருவகம் சொன்னது மட்டுமல்ல, பரிகாரமும் கூறிவிட்டார். பரிகாரம் அந்த அரங்கன் விக்கிரகந்தான். அந்த விக்கிரகம் ஒரு தெய்வ மூலிகை. அதைத் தேடிக் கொணர்ந்தால் ஜனங்களின் துயரத்தைத் துடைத்து எடுக்கலாம். அவர்களது கஷ்டங்களைப் போக்கி விடலாம். ஒரு சேனாதிபதியின் வலியைப் போக்குவதற்காக இரவில் தீவர்த்தியோடு காடுகளில் மூலிகையைத் தேடும் போது, ஒரு நாட்டின் வலியைப் போக்குவதற்கு, அதன் நம்பிக்கையின் சின்னமான அரங்க விக்கிரகத்தைத் தேடுவது சாலப் பொருத்தமாகும் என்று நினைத்தேன். அவரவர் மனங்களில் புகுந்து பார்த்தால்தான் அவரவர் ஆசை சரியானது என்று புலனாகும். அந்த வயோதிகரின் அவாவை மதியாமல் மன்றத்தில் சிரித்து விட்டேனே என்று வருத்தப்பட்டேன். மனத்தில் அதை நினைத்து வெகுவாக வருத்தப்பட்டேன்!"

"சரி. இந்தச் சம்பவம்தான் உங்களை மாற்றி விட்டதா?" என்று கேட்டார் பண்டிதர்.

"இது ஒரு தொடக்கம் சுவாமி! மேலே இன்னும் செய்தி இருக்கிறது. அந்த வயோதிகர் போன பிறகு நான் சிந்தித்து அமர்ந்துவிட்டேன். என் பிரயாணத்தை நிறுத்தினேன். அன்று முழுவதும் அங்கேயே தங்கு வதாக உத்தேசித்தேன். அது நல்லதாகப் போயிற்று. அன்று மாலையில் அருகில் மலை மேலே தவ நிலையிலே இருந்த வைணவ ஆசிரியரான வேதாந்த தேசிகர் ஊருக்கு வருவதாகக் கேள்விப்பட்டேன். தேசிகரைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டு இருக்கிறேன். அவர் ஒரு கல்விக் கடல். தர்க்கத்தில் சிம்மம். கவி எழுதுவதில் பேராற்றல்காரர். எல்லாவற்றையும் விட அவர் ஒரு மாபெரும் பக்தர்!"

"வித்தியாரண்யர் அவரைப் பற்றி என்னிடம் நிறையக் கூறியிருக்கிறார்" என்றார் பண்டிதர்.

"அந்த மகானைப் போய்ப் பார்க்க விரும்பினேன். போனேன். சிறு குடிலில் இருந்தார். வயது தொண்ணூறு இருக்கும். மெலிந்த திருமேனி. திருக்கண்களில் பக்திப் பிரகாசம். தெய்வம் போல் எனக்குத் தோன்றினார். அவர் பாதங்களில் விழுந்து விட்டேன். கண்களில் நீர் ஆறாக ஓடியது. இதுவரை எனக்கு அத்தகைய உணர்ச்சி ஏற்பட்டதில்லை. உடம்பு நடுங்க, உள்ளம் ஆர்ப்பரிக்கக் கை கட்டி வாய் பொத்தி நின்றேன். அவர் என்னைச் சில நேரம் குளிரப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு குனிந்து கொண்டு, 'உனக்குக் கனிந்து விட்டது' என்று கூறினார். நான் ஏதும் தெரியாமல் விழித்தேன். 'நான் சொல்வதைச் சொல்' என்று கூறி அஷ்டாட்சர மந்திரத்தை எனக்கு உபதேசித்தார். அதைச் சொல்லி முடித்ததும் உணர்ச்சிப் பெருக்கால் விழுந்து

விட்டேன். அவர் தமது திருக்கையால் என்னை முடி பிடித்து எழுப்பினார். 'பிள்ளாய்! எல்லாம் சரியாகும்' என்றார். நான் பக்தியோடு அவரை வணங்கிவிட்டு வெளியே வந்தேன். அப்போதே என் மனதில் பெரிய மாறுதல் விழுந்துவிட்டது. அதன் தொடர்ந்த வளர்ச்சிதான் இப்போது என்னை இந்த மனப்பான்மைக்கு ஆளாக்கி விட்டிருக்கிறது சுவாமி! எனக்கு பதவி வேண்டாம், அதிகாரம் வேண்டாம். நான் ஒரு தூய வைணவன் ஆகப் போகிறேன்!" என்று ஆவேசத்துடன் கூறினார் கோபணா.

10

விஜயநகர நாட்டின் ஒரு அங்கமான முள்வாய் ராஜ்யத்திலே சர்வ சைனியாதிபதியாக விளங்கியவர் கோபணா. ஆற்றலும் மதி நுட்பமும் மிகுந்தவர். கல்வி கேள்விகளில் சிறந்தவர். வடமொழியை நன்கு கற்றுத் தேறியவர். அவர் அந்தண குலத்தைச் சேர்ந்தவர். தத்துவம், வேதாந்தம், தர்க்கம், மீமாம்சம், புராணம் யாவும் கற்றறிந்தவர். இப்படிப்பட்டவர் போர் முறைகளைக் கற்று, சைனியாதிபதி ஆக வேண்டுமானால் அந்த நாட்களில் தோன்றியிருந்த சூழ்நிலைகள்தான் காரணம்.

வடக்கிலிருந்து துருக்கியர்களின் படைகள் அடுக்கடுக்காக வந்து ஒரு சமுதாயத்தின் சமய நம்பிக்கைக்கும் நெறிகளுக்குமே அபாயம் விளைவிக்க முனைந்தபோது, சமூகத்திலுள்ள எல்லா வகுப்பினருமே சேர்ந்து ஒரு பலம் பொருந்திய பொதுவான எதிரியை எதிர்க்க நேர்ந்தது. இதில் அந்நாளில் எல்லோருமே சமய வேறுபாடின்றி கலந்து கொள்ள அவசியம் ஏற்பட்டது.

இது காரணம் பற்றியே அந்தணர் பலரும் தம் தத்துவ வேதாந்தங்களை எல்லாம் கட்டி வைத்துவிட்டுப் போர்த் தொழிலைக் கற்பதற்கு முனைந்தார்கள்.

இப்படி முனைந்தவர்களில் பலர் போர்முனைகளில் பெரும் வெற்றிகளைப் பெற்றுப் படை அதிபதிகளாகவும் சர்வசைனியாதிபதிகளாகவும் மாறினார்கள்.

அவ்வாறு ஆனவர்களில் ஒருவர்தான் கோபணா.

விஜயநகர அரசர் புக்கராயருக்காகப் பல போர்கள் செய்து வெற்றி மாலை சூடியவர். இப்போது தெற்கே கம்பணனுக்கு (புக்கரின் மகன்) உதவியாக வந்து அவருடைய சேனைகளுக்கு அதிபதியாக இருந்து வந்தார்.

இத்தகைய ஆற்றலும், வலிமையும் மிக்க கோபணா இன்று, "ராஜரீக வாழ்க்கையைத் துறந்துவிட விரும்புகிறேன்!" என்று சொன்ன போது கிரியாசக்தி பண்டிதர் திடுக்கிட்டார்.

ஒரு அதிர்ச்சி தரும் செய்தியை அவர் கோபணாவிடமிருந்து எதிர்பார்க்கவில்லை.

"கோபணா!" என்றார் பண்டிதர் மெதுவாக. அவர் குரல் தழதழத்திருந்தது. "நீங்கள் சொல்வது எனக்கு அதிர்ச்சியை தருகிறது. தங்களைப் போன்றவர்களின் பேராற்றலால்தான் இன்று இந்த விஜயநகர நாடு சிறிது சிறிதாக வளர்ந்து வந்திருக்கிறது. இந்த வளர்ச்சியால் தான் ஜனங்கள் தங்கள் சமய நெறிகளைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்திருக்கிறது. தங்கள் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் காப்பாற்றிக் கொள்ள முடிந்திருக்கிறது. இந்த நாட்டை ஒரு பெரிய சாம்ராஜ்யமாக மாற்றி டில்லி அரசுக்கு நிகரான ஒரு ஆட்சியைத் தென்னாடுகள் முழுவதிலும் ஏற்படுத்த லட்சியம் கொண்டுள்ளார் நம் மன்னர்.* இந்த நிலையில் பாருங்கள், நமது ஆபத்துகள் இன்னும் பூரணமாகத் தீர்ந்தபாடில்லை. வடக்கே டில்லி சுல்தானியர்களின் பலம் குறைந்துவிட்டது என்று நினைக்கும்போது நம் நாட்டிற்கு அடுத்தாற்போல் வடபகுதியில் உள்ள குல்பர்க்காவில் பாமினி வமிசத்தினரான துருக்கியர்கள் ஒரு புதிய ராஜ்யத்தைத் தோற்றுவித்து உள்ளார்கள். அவர்களால் நமக்கு எந்தக் கணமும் ஆபத்து என்று தாங்கள் உணர்ந்ததில்லையா?" என்று நிறுத்தினார் பண்டிதர்.

"அதை நான் உணர்ந்திருக்கிறேன், சுவாமி!" என்றார் கோபணா.

"தெற்கே பாருங்கள், மதுரையில் ஒரு சுல்தானிய அரசு அப்படியே நீடித்து வருகிறது. அதை நாம் இன்னும் ஜயிக்க முடியவில்லை. அந்த நாட்டின் மீது படையெடுக்கக் கூடப் பயப்படுகின்றோம். ஏனெனில், அப்படிச் செய்தால் அந்த சுல்தானியரும், பாமினிக் காரர்களும் தங்கள் சமய இணக்கத்தால் ஒன்று சேர்ந்து இடை நாடாகிய நம் நாட்டை நசுக்கி விடுவார்களோ என்று பயப்படுகிறோம்."

"இந்தப் பயம் பல வருடங்களாக நம்மிடையே இருந்து வருகிறது, சுவாமி!" என்றார் கோபணா.

"ஆமாம், இந்த இரு துருக்கிய ராஜ்யங்களுக்கும் இடையே ஒருத்தர் மீது ஒருத்தர்க்கு உள்ள பொறாமை

* இந்தக் கதை நடக்கும் போது விஜயநகர மன்னர்கள் தங்களை மன்னர்கள் என்று அழைத்துக் கொள்வதில்லை. மண்டலேசுவரர்கள் என்றே அழைத்துக் கொண்டனர். தங்கள் ராஜ்யம் பெரிதாக இல்லை என்பதனால் ஏற்பட்ட அடக்கமே இதற்குக் காரணம்.

உணர்ச்சியை அப்படியே நீடிக்கச் செய்வதன் மூலம் தான் நாம் நம் நாட்டை நிலையாகக் காப்பாற்றிக் கொள்ள முடியும். இதை விட்டு ஏதாவது செய்யப் போய், இந்த இரு துருக்கிய அரசுகளும் ஒன்று சேர்ந்து விட்டால் நம்மால் எதிர்க்க முடியாது. அழிந்து போவோம்!" என்றார் பண்டிதர்.

"ஆமாம், சுவாமி அப்படி ஒரு இக்கட்டான நிலையில் நாம் இருப்பதையும் நான் உணர்கிறேன்!" என்றார் கோபணா.

"இதனால்தான் சொல்கிறேன். தமிழ் பேசும் நாடுகள் கஷ்டப்படுகின்றன என்ற காரணத்திற்காக நாம் உடனே ஏதும் செய்துவிட முடியாது. தருணம் பார்த்துக் காரியங்களைச் சாதிக்க வேண்டும். அந்தத் தருணம் வரும் வரை நீங்களும் பொறுக்க வேண்டியதுதான். உங்கள் அரங்கநாதரும் பொறுக்க வேண்டியதுதான்!" என்றார் பண்டிதர்.

பிறகு அவர் நாட்டு நடப்புகளை மேலும் விவரமாக எடுத்துரைத்தார். கோபணா தம் கடமையிலிருந்து வழுவிச் செல்லக் கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

அவர் கூறுவதை எல்லாம் கேட்ட கோபணா தீவிரமான யோசனையில் ஆழ்ந்தார். வெகுநேரம் பேசவேவில்லை. அவர் அப்படி யோசிப்பதுதான் நல்லது என்று நினைத்த பண்டிதர் "நல்லது! நாளை உங்களை மீண்டும் சந்திக்க வருகிறேன். நீங்கள் யோசியுங்கள்!" என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

விடாத மழைக்கும் தூறல்களுக்கும் இடையே அந்த இளைஞர்கள் இருவரும் கிழக்குமுகமாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள்.

சாலைகள் யாவும் சகதிப்பாங்காக இருந்தன. பார்க்கும் பிரதேசம் எல்லாம் நீர் நிறைந்து ஒரே தண்ணீர் தளங்களாகக் காட்சி அளித்தன.

அவ்வப்போது சிறு குடிசையில் ஒதுங்கியும், பாழடைந்த மண்டபங்களில் படுத்துக் கொண்டும் அந்த இரு இளைஞர்களும் பிரயாணம் செய்து கொண்டு இருந்தார்கள்.

போகும் வழியில் எந்த ஊர் தென்பட்டாலும் அங்கு நுழைந்து வயோதிகர் யாராவது தென்பட்டால் அவரிடம் சென்று அரங்கனைப் பற்றி வினவினார்கள்.

அநேகமாக எல்லா இடங்களிலும் அவர்களுக்கு, "எனக்குத் தெரியாது" என்ற மறுமொழியே கிடைத்தது. தெரிந்ததாகச் சொன்ன ஓரிருவர் ஹேஷ்யமாக ஏதோ கூறினார்களே தவிர, உபயோகமானதாய் ஏதும் சொல்லவில்லை.

அரங்கனைப் பற்றியும், பொதுவான இதர விஷயங் களைப் பற்றியும் இரு இளைஞர்களும் வழி நடையில் பேசிக் கொண்டே போனாலும், இடையிடையே அவர்கள் மீது மௌனம் வீழ்ந்து கொண்டிருந்தது. குறிப்பாக ராஜவல்லபன் மீது!

வன, வனாந்திரங்களை எல்லாம் கடந்து அது எங்கேயோ ஒரு பாட்டையிலே சலங் சலங் என்று குலுங்கிச் சென்று கொண்டிருக்கும் ஒரு கூண்டு வண்டியைக் கற்பனை செய்து கொண்டிருந்தது.

அந்த வண்டியின் பின் முகப்பில் இருக்கும் அந்த இளம்பெண்ணின் சிருங்காரமிகு புன்னகை மெள்ள மெள்ளப் பிரயாணம் செய்து, வெகு தூரத்திற்கு அப்பால் இருக்கும் அவனை வந்து மிருதுவாய் அணைந்து கொண்டது. அவனது அந்த அழகான கற்பனையில் அவனை அப்படியே குளிர நீராட்டி விட்டுச் சென்றது.

அவளை நினைக்கும் போதெல்லாம் அவனது கை அவனை அறியாமல் பைக்குள் கிடக்கும் அந்த மகர கண்டிகையை நெருடிக் கொண்டிருந்தது. மகரவிழியாள் என்று அவன் மானசீகமாக அவளுக்குப் பெயர் கொடுத்திருந்தான்.

'மகர விழியாளே, நீ எங்கே எவ்வளவு கஷ்டப்படுகிறாயோ? அந்தக் கிராதகர்கள் உன்னை எவ்வளவு வாட்டுகிறார்களோ?' என்று பொறுமலாக அடிக்கடி கூறிக் கொண்டான்.

எங்கேயாவது தூறலுக்கு ஒதுங்கும் போது, "மகரவிழியாய்! உன் மீது இந்த பூந்தூறல் விழுகிறதோ? உன் தளிர் மேனி அதனால் துவள்கிறதோ, நைகிறதோ வாடுகிறதோ? உன்னை அவர்கள் பத்திரமாகக் காப்பாற்றுகிறார்களோ?" என்று கூறிக் கொண்டான்.

சமயங்களில் அவள் கஷ்டப்படுவது போல் கற்பனை பண்ணிக் கொண்டு, அதையே மனத்துள்ளே நினைத்து உருகி உணர்ச்சிப் பெருக்கால் இரகசியமாகக் கண்ணீர் விட்டான்.

அவனுக்கு அவளை ஒரு ராஜகுமாரியாக கற்பனை செய்வதிலேயே மனம் சென்றது. அவ்வளவு ரூபலாவண்யமுள்ளவள் சாதாரணப் பெண்ணாக இருக்க மாட்டாள். காலதத்தனும் அவளிடம் ராஜவமிசத்திற்குரிய லட்சணங்கள் எல்லாம் அமைந்து உள்ளன என்று கூறி உள்ளான். எனவே அவனது மனம் அந்தப் பெண்ணை மாட மாளிகையின் சித்திர கூடத்திலே வைத்துத் தாதியர்கள் ஆலவட்டம் வீச தோழியர் யாழ்களை வாசிக்க, ஆடலழகிகள் வரிசையாய் நின்று ஆட, அந்த போகமான அலங்காரச் சூழ்நிலையிலே தான் அந்த இளம் பெண் வசித்துக் கொண்டு இன்பம் துய்ப்பதாகக் கற்பனை செய்து கொண்டான்.

"அப்படிப்பட்ட நீயா இப்போது துன்பப்படுகிறாய்?" என்று அவனே அவளுக்கு அனுதாபப் பட்டுக் கொண்டான். உணர்ச்சி மிகுதியினால் கண்ணீர் உகுத்தான்.

இது போன்ற பிரமைகள் ராஜவல்லபனிடம் அதிகமாகிக் கொண்டு வர, நண்பனுக்குத் தெரியாமல் ஒரு நேரத்தில் சிரிக்கவும் ஒரு நேரத்தில் கண்ணீர் சிந்துவதுமாக இருந்தான்.

"கடவுளே! எந்தவிதத்திலாவது, எப்படியாவது நாங்கள் அவள் இருக்குமிடத்தை அடைந்து விடும்படி அருள் செய்வாயா?" என்று கெஞ்சி பிரார்த்தித்துக் கொண்டும் இருந்தான்.

ஒரு நாள் பகலிலே நல்ல மழை பெய்ய இளைஞர்கள் இருவரும் பூங்குளத்துநல்லூர் என்னும் ஒரு பேரூரை அடைந்தார்கள்.

அங்கே ஒரு சத்திரத்தைக் கண்டுபிடித்து, ஈரம் களைந்து சிரமப் பரிகாரம் செய்து கொண்டு, மழை அடங்கும் வேளையிலே சத்திர மணியக்காரரைக் கண்டு,

"ஐயா! இந்த ஊரிலே ஏதாவது விசேஷம் உண்டோ?" என்று கேட்டார்கள்.

அதற்கு மணியக்காரர், "இந்த ஊரில் எந்த விசேஷமும் நடப்பதில்லை. எல்லாம் மறைந்து போய் இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன!" என்று கூறினார்.

உடனே தத்தன், "சமீபத்திலே இந்த ஊருக்கு யாரேனும் வந்தார்களோ?" என்று கேட்டான்.

மணியக்காரனும் கொட்டாவி விட்டு ஒரு கையால் முகவாயை மழுப்பிவிட்டு, "ஆட்கள் வருவதே குறைந்துவிட்டதே! இந்தச் சத்திரம்

நித்தினவல்லி என்பவனின் உபயம். தினம் ராத்திரியும் பகலும் இருபது பேருக்கு உணவு போட வேண்டும் என்று மான்யம். சோறு வடிக்கிறோமே ஒழிய, யாத்திரிகர்களைக் காணவில்லை. கடைசியாய் ஒரு வீரர் படை வந்து போயிற்று. ஏழெட்டு பேர் வந்து உணவு அருந்தினார்கள். சமீபத்திலே நிறைய பேர் உணவு அருந்தியது அதுதான்!" என்றார்.

"யார் அந்த வீரர்கள்?" என்றான் வல்லபன் துள்ளிக் கொண்டு.

"சம்புவராயர் ஆட்களாக இருக்கலாம். இரண்டு பெண்களோடு வந்தார்கள்!" என்றார் மணியக்காரர்.

"அப்படியா? இங்கே அவர்கள் தங்கியபோது ஏதாவது நடந்ததா? நீங்கள் அவர்களிடம் ஏதாவது பேசினீர்களா?" என்று கேட்டான் வல்லபன்.

"அதிகம் பேசவில்லை. அவர்களும் பேச்சுக் கொடுக்கவில்லை. ஒரு பெண்ணுக்கு உடம்பு சரியில்லாமல் இருந்தது. வைத்தியம் செய்ய வேண்டும் என்றார்கள். எங்கே போனார்களோ, என்ன செய்தார்களோ? சத்திரத்தை விட்டு ஒரு நாள் காலையில் போய்விட்டார்கள்!" என்றார் மணியக்காரர்.

வல்லபன் மனம் அந்தச் சேதி கேட்டு வெகுவாகப் பொங்கிப் பின்னர் அமிழ்ந்தது.

"மகரவிழியாய்! உனக்கு உடல்நிலை சரியில்லையா? உனக்கு ஜுரம் வந்ததோ? கொடியநோய் வந்ததோ? நீ அதில் துவண்டு போயிருப்பாயே. இப்போது நீ எப்படி இருக்கிறாய்? எனக்கு எதுவும் ஓடவில்லையே!" என்று அவன் மனம் பலவிதமாய்ப் புலம்பியது.

பிறகு அவர்கள் ஊரில் வயோதிக வைணவர்கள் யாராவது இருக்கிறார்களோ என்று விசாரித்து ஒரே ஒருத்தர் இருக்கிறார் என்று தெரிந்து அவரது இருப்பிடத்தைத் தேடிக் கொண்டு புறப்பட்டார்கள்.

வீதியிலே சகதிகளைத் தாண்டித் தாண்டிச் சென்று வைணவரின் கிருகத்தைப் போய் அடைய, வாசலில் குட்டையாக நீர் தேங்கி இருக்கவே, இருவரும் அதில் மெதுவாகக் கால் வைத்து நடந்து சென்றார்கள்.

வல்லபன் அதிலாகவமாய் முன்னே சென்று வீட்டின் முகப்பிலே ஏற, பின்னே வந்த தத்தன் எங்கேயோ இசைவுப் பிசகாய்க் கால் வைத்துத் திடீரென்று கீழே வழுக்கி விழ, தடால் என்று எங்கும் கலங்கிய நீர் தெறித்து விட்டது.

அப்போது அங்கே 'கிளுக்'கென்று ஒரு மதுரமான குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தால் வைணவர் வீட்டு முகப்பில் ஒரு இளமையான பெண் முல்லைச்சரம் போல் பற்களைக் காட்டிச் சிரித்து விட்டு, மறுகணமே அது தவறுபோல் உணர்ந்து சிரிப்பை அடக்கி, விரால்போல் துள்ளி அந்த நீரில் கால் வைத்து, கீழே எழ முயற்சி செய்து கொண்டிருந்த காலதத்தனுக்குத் தன் தளிரான கையை நீட்டிக் கொடுத்தாள்.

11

பதினாறு பிராயமுள்ள அந்த இளம் பெண் விரால் போல் தன் கணுக்கால்களைத் துள்ள விட்டு, தண்ணீரில் வட்ட வடிவமான தாமரை அலைகளை எழுப்பியவாறு கணநேரத்திலே காலதத்தன் அருகில்

போய் அவனைக் கைதூக்கி விடுவதைப் பார்த்ததும் ராஜவல்லபன் திகைத்து நின்றான்.

தானே அப்படிச் செய்ய முற்படுமுன் அவள் முந்திவிட்டாளே என்று தோன்றியது.

அந்தப் பெண்ணோ, "பாழாய்ப் போன மழை ஒரு வாரமாய்ப் பெய்கிறதே! கீழே ஒரே வழுக்கல்! பார்த்து வர வேண்டாமா?" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டே கூற,

தத்தன் சொட்டச் சொட்ட எழுந்து குப்பாயம் எல்லாம் சேறு வழிய முகத்தில் அசடு வழியப் பல கணங்கள் திகைத்து நின்ற பிறகு, வயோதிகரின் வீட்டை நோக்கி மெள்ள நடந்தான்.

"பார்த்து! பார்த்து!" என்று அந்தப் பெண் எச்சரிக்கவே, ஒரு கணம் தத்தன் வெறுப்போடு திரும்பி அவளைப் பார்த்தான்.

"ஹூம்! ரோஷம் வேணாம்! வழுக்கல் யாருடையது ரோஷத்தையும் பொருட்படுத்தாது. . . . பார்த்து! பார்த்து!" என்று கூறியவள், உடனே பரபரத்து, "படியிலே வழுக்கல்!" என்று இரைந்து கூவினாள்.

அதே நேரத்தில் படியிலே காலை வைத்திட்ட தத்தனும் வழுக்கிக் கொண்டு தொபுகடீரென்று தண்ணீரில் சம்மணமாக விழுந்தான்.

அந்தப் பெண் தன்னை மீறி வரும் சிரிப்பைத் தனது இளம் சிறு விரல்களால் பொத்த முயன்றாள். நல்லவேளையாக, மீண்டும் அந்தப் பெண் வருமுன் வல்லபனே தத்தனைத் தூக்கிவிட்டான். தாழ்வாரத்தில் ஏறிய தத்தனும் அந்தப் பெண்ணை வெறுப்போடு பார்த்தான். அவளோ முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.

தத்தன் ஈரத்தைக் களைந்து, பிழிந்து உடுத்தி முகத்தையும் உடம்பையும் சீர் செய்து கொண்டான்.

பிறகு இருவரும், "ஐயா ஐயா" என்று அழைத்தவாறு அந்த மாளிகையின் நடைக்குள்ளே நுழைந்தார்கள்.

அந்த நேரத்தில் ஒரு பெரியவர் மழமழப்பான தடியை ஊன்றிக் கொண்டு அவர்கள் முன்னே வந்து, "நீங்கள் யார்? என்ன வேண்டும்?" என்று விசாரித்தார்.

அவர் கேள்வியிலேயே பொறுமை இல்லை. இருப்பினும் வல்லபனும் தத்தனும் தங்களைப் பற்றி கூறிவிட்டு, முடிவாக அரங்கனைப் பற்றி விசாரிக்கப் போக, வந்ததே கோபம் அந்த வயோதிகருக்கு.

"அரங்கனா? அவரைப் பற்றி நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்? அரங்கனைப் பற்றி நினைக்க வேண்டியவர்களே நினைக்கவில்லை. நீங்கள் சிறுவர்கள். நினைக்க வந்து விட்டீர்களே! உங்களுக்கு ஏன் அவ்வளவு அக்கறை?" என்று சினத்துடன் கேட்டார்.

அப்போது உள்ளே இருந்து சின்னதாக ஒரு கிளுக்கென்ற சிரிப்புக் கேட்டது.

இரு இளைஞர்களும் அசந்து விட்டார்கள்.

உடனே வல்லபன் தன்னிடம் ஒரு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு,

"ஐயா! அரங்கனைப் பற்றி யார் நினைக்கிறார் களோ இல்லையோ, நாங்கள் நினைக்கிறோம். எங்களைச் சேர்ந்த பலரும் நினைக்கிறார்கள். எங்களைப் போன்ற இளையவர்களை எங்கள் குடும்பத்தார் சத்தியமங்கலத்திலிருந்து இவ்வளவு

தூரம் அனுப்பி இருக்கிறார்கள் என்றால் அவர்களது அரங்க பக்தி எவ்வளவு இருக்க வேண்டும் என்று பாருங்கள். ஆகவே, ஐயாவே, தங்களால் முடிந்தால், தங்களுக்கு ஏதாவது தெரிந்தால் சொல்லுங்கள்; இல்லாவிட்டால் வருகிறோம்!" என்று கூறினான்.

பெரியவர் தமது நரைத்த புருவத்தைச் சுருக்கியவாறு அவர்களைப் பார்த்தபடி, "எனக்கு ஒன்றும் தெரியாது. நானும் திருவரங்கத்தைச் சேர்ந்தவன்தான். ஒரு வைத்தியன். ஊரைப் பகைவர்கள் தாக்கும்போது நான் குடும்பத்தோடு புறப்பட்டு விட்டேன். புறப்படும் வேளையில் ஒரு நாழிகை தாமதம் ஏற்பட்டுவிட்டது. இல்லாவிட்டால் அதிக நஷ்டம் இல்லாமல் வந்திருப்பேன்" என்றார் தடுமாற்றமான குரலில்.

"ஏன் அப்படித் தாமதம் ஏற்பட்டது?" என்றான் வல்லபன்.

"அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய்? ஊரிலே பீதி ஏற்பட்டு விட்டது. அவரவர் தங்கள்-தங்கள் குடும்பத்தோடு ஓடுவதில் தான் அக்கறையாக இருந்தார் கள். நான் புறப்படும் வேளையில் ஒரு இளைஞன் எங்கள் வீட்டுக்குள் வந்தான். கையில் கத்தியைக் காட்டி மிரட்டி, "என் தாயார் நோயில் பிரக்ஞை இழந்து இருக்கிறாள். நீங்கள் வந்தால்தான் ஆயிற்று!" என்று மிரட்டினான். போக வேண்டிய நிர்ப்பந்தம், போனேன். வைத்தியம் பார்த்துவிட்டுத் திரும்பினேன். அந்த நேரத்தில் எங்களுக்குத் துணை வருவதாக இருந்த குடும்பங்கள் எல்லாம் எங்களை விட்டு விட்டுப் போய்விட்டன. அதனால் நேர்ந்த கதிதான் இந்தக் கதி. வழியிலே தனியாகப் போன எங்கள் குடும்பத்தைக் கள்வர்கள் மடக்கினார்கள். எல்லாவற்றையும் இழந்தோம்." என்று கூறியவர், திடீரென்று எதையோ நினைத்து விட்டது போல

அவசரப்பட்டு, "அதெல்லாம் பழைய கதை மறந்து விட்டேன். எனக்கு அரங்கனைப் பற்றி எதுவும் தெரியாது. நீங்கள் போகலாம்!" என்று சட்டென்று முடித்துவிட்டார்.

அவர் அவ்வளவு அவசரமாகக் கூறுவதற்கு ஏதோ காரணம் இருக்கிறது என்று தத்தன் நினைத்தான். இருந்தும் விடாமல், "ஐயா!" என்று ஆரம்பிக்கவே,

அந்தப் பெரியவர் அதே அவசரத்துடன், "எனக்கு அரங்கனைப் பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னேன் அல்லவா! சொன்னது சொன்னதுதான். நீங்கள் போகலாம்!" என்று படபடப்புடன் கூறினார்.

இளைஞர்கள் இருவரும் எழுந்து ஒருவரை ஒருவர் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு, ஒரு சேரப் புறப்பட, மீண்டும் உள்ளுக்குள்ளிருந்து 'கிளுக்' என்ற சிரிப்பின் சப்தம் உருண்டு வந்தது.

சத்திரத்திற்குத் திரும்பியதும் வல்லபனின் கண் களில் நீர் தளும்பி வந்தது. தத்தன், "என்ன வல்லபா?" என்று ஆதரத்துடன் கேட்டான்.

சிறிது விசித்த வல்லபன், "தத்தா! அந்த வயோதிகர் தம்மை யாரோ ஒரு இளைஞர் கத்தி எடுத்து மிரட்டியதாகக் கூறினாரே, அந்த இளைஞர் என் தந்தை குலசேகரர்தான்! இது பற்றி எனது தாயார் பலமுறை கூறியிருக்கிறார். வயோதிகர் சொன்னதுமே என் தந்தையின் நினைவு எனக்கு வந்துவிட்டது. நான் பிறப்பதற்கு முன்பே என் தந்தை இறந்துவிட்டார். அவர் எப்படி இருப்பார் என்று அந்த வயோதிகரிடம் இருந்து கேட்க விரும்பினேன். அதற்கு இடம் கொடுக்காமல் அவர் நம்மை விரட்டி விட்டாரே!" என்று தாபத்தோடு கூறினான்.

மறுநாள் காலையில் எழுந்த போது, தத்தனுக்கு ஜுரம் கண்டிருந்தது. சத்திரத்தில் கஷாயம் வைத்துக் கொடுத்து, அன்றைய தினம் முழுதும் பட்டினி கிடக்கச் சொன்னார்கள்.

இரவு வரும் வேளையில், தத்தனுக்கு ஜன்னி பிறந்து அவன் பிதற்றத் தொடங்கினான். வல்லபன் திகைத்துப் போய் சத்திரத்தில் உள்ளோரை உதவிக்கு அழைத்தான்.

அவர்களும் • ஒன்று கூடி, "இவனை ஆதுர சாலைக்கு அனுப்புவதுதான் ஒரே வழி!" என்று தீர்மானித்தார்கள்.

ஒரு ஒற்றைக்காளை வண்டியை அமர்த்தி அதில் தத்தனையும் வல்லபனையும் அனுப்பினார்கள்.

ஆதுர சாலை முன் வண்டி நின்றதும் அதிலிருந்து இறங்கிய வல்லபன், அந்த வயோதிக வைத்தியரின் மாளிகைக்கு அடுத்தாற் போலவே அந்த ஆதுரசாலை இருப்பதைப் புரிந்து கொண்டான்.

உள்ளே இருந்த வைத்தியரும் அதே வயோதிக வைத்தியர்தான்.

நோயாளியையும், வல்லபனையும் அவர் மாறி மாறிப் பார்த்து, இனம் கண்டு கொண்ட அந்த வைத்தியர் கனைத்துக் கொண்டே, "வயசுக் கோளாறு. உடம்பைப் பார்க்காமல் மழையிலே நனையலாமா?" என்று முனகிக் கொண்டே தத்தனின் கையிலே பட்டுத் துணியைப் போர்த்தி நாடி பார்த்துச் சிகிச்சையைத் தொடங்கினார்.

அந்த ஆதுர சாலையில் மொத்தம் முப்பது பேர் படுத்திருப்பதையும், எங்கும் மருந்தின் நெடி கமழ்வதை யும் பார்த்த வல்லபன், வைத்தியர் போனபின் தத்தனது உடலை நன்றாகப் போர்த்தி

விட்டு, அவனது கை, கால் உடம்புகளைச் சிறிது நேரம் பிடித்துவிட்டு,

பிறகு உறவினர்க்கு என்று ஏற்படுத்தப்பட்ட தனிக்கூடத்திற்குச் சென்று அங்கே போய் இளைப்பாற அமர்ந்து கொண்டான்.

அந்த வேளையிலே, இருள் கவிந்ததால் ஆதுர சாலையின் மாடங்களில் உள்ள விளக்குகளை ஏற்றி வைப்பதற்கு இரு பெண்கள் வந்தார்கள்.

அவர்களில் ஒருத்தியைப் பார்த்ததும் வல்லபன் சிறிது திகைத்து நின்றான்.

தத்தன் தண்ணீரில் விழுந்த போது, அவனுக்கு உதவப் போன பெண்தான் அவள். களை தோய்ந்த முகத்துடன் கண்களில் புறுபுறுவென்று ஒரு சுறுசுறுப்புப் பொங்க, ஒவ்வொரு மாடமாகச் சென்று, ஒவ்வொன்றிலும் ஒரு தங்கத் துண்டு ஒன்றை விட்டுச் செல்வதுபோல் பொன் மயமான விளக்கை ஏற்றியவாறு சென்றாள்.

ஆதுரசாலையின் கடைசி ஓரத்தில் அவள் விளக்கைப் பொருத்தும்போது, அங்கே கட்டிலில் ஒரு காட்சி! வல்லபனைத் திடுக்கிட வைத்தது.

காலில் கட்டுகளுடன் அங்கே படுத்திருந்தது யார்? அவனது கால்மாட்டில் முதுகுப்புறம் காட்டிக் கொண்டு நிற்பது யார்?

எங்கேயோ பார்த்திருக்கிறோமே.

நினைவுகளைக் கிளர்த்துப் பார்த்தபோது, சுரீர் என்று ஒரு அதிர்ச்சி அவனைத் தாக்கியது.

"இவர்கள் அந்த மகர விழியாளுடன் சென்ற சேவகர்கள் அன்றோ? எப்படி இங்கே வந்தார்கள்?" என்று யோசித்தான்.

உடம்பெல்லாம் பரபரத்தது. இரத்தம் சிவ்வென்று கொதித்துக் கொண்டு ஓடியது.

இவர்கள் தன்னைப் பார்த்திருப்பார்களோ?

பார்த்தால் ஆபத்தாயிற்றே!

இவர்கள் மட்டும் இங்கே இருக்கிறார்களா? இவர்களது கூட்டாளிகளும் இங்கே தங்கி இருக்கிறார்களா? அப்படியானால் அந்த ராஜகுமாரி?

"மகரவிழியாளே! உன்னை மீண்டும் இங்கே சந்திப்பேனா?"

இவ்வாறு நினைத்த வல்லபன், நொடியில் எழுந்து ஏதோ யோசனை பண்ணி, தாழ்வாரம் ஓரமாகச் செல்லும் அந்தக் குறும்புக்காரப் பெண்ணைப் பின்பற்றி ஓடினான்.

இரண்டு எட்டிலே அவளை அடைந்து, அவள் முன்னே சென்று குறுக்கே நின்று நிறுத்தவே, அவள் தன் சிறிய மீன் விழிகளை விரித்துப் பார்த்து, உதட்டில் குறும்பாகப் புன்னகை செய்தாள்.

அவளது பெயர் தெரியாமல் திகைத்துக் கொண்டு, "ஒரு உதவி வேண்டும், அவசரம்" என்று அவன் பரபரத்துக் கூறினான்.

"ஓ!" என்று சொன்ன அவள், "என்ன உதவி? உங்கள் நண்பர் மீண்டும் வழுக்கி விழுந்தாரா?" என்று கேட்டுச் சிரித்தாள்.

"இல்லை. ஜுரத்துடன் அவன் அங்கே படுத்து இருக்கிறான்" என்றான் அவன்.

"அப்படியா?" என்று திடுக்கிட்டுக் கூறிய அவள், [illegible] உணர்ச்சியைக் குறுக்கிக் கொண்டு, "எங்கே [illegible]றார்?" என்று கேட்டாள்.

தூரத்திலிருந்து கட்டிலைக் காட்டிய அவன், அதைத் தொடர்ந்து அந்தச் சேவகனின் கட்டிலையும் காட்டி, அந்தச் சேவகன் தத்தனைப் பார்த்தால் அவனால் தத்தனுக்கு ஆபத்து வரும் என்று விளக்கமாக எடுத்துரைத்தான்.

"அதனால்தான் உங்களிடம் வேண்டிக் கொள்கிறேன். அவனுக்கு எந்த ஆபத்தும் இல்லாமல் காப்பது உங்கள் பொறுப்பு. எங்களுக்காக இதைச் செய்யுங்கள். நான் இங்கே இருந்தாலும் ஆபத்து. அதோ பக்கத்தில் இருப்பவன் திரும்பிப் பார்க்கிறான். நான் போய் வருகிறேன் கவனிப்பீர்களா?" என்று கேட்டுக் கொண்டே வாயிலை நோக்கி ஓடினான்.

அவள் பிடிகொடுத்து மறுமொழி கூறாமல் இருப்பதைப் பார்த்த வல்லபன், வாயிலில் நின்றவாறே மீண்டும், "கவனிப்பீர்களா? கவனிப்பீர்களா?" என்று கெஞ்சி கேட்க,

அவள் எதுவும் சொல்லாமல் அவன் செய்கையைப் பார்த்துக் 'குபீர்' என்று குலுங்கிச் சிரித்தாள்.

அதற்குள் மற்றவன் நகர்வதைக் கண்ணுற்ற வல்லபன் விருட்டென்று இருட்டுக்குள்ளே மறைந்து வெளியே ஓடினான்.

வாயிலில் உள்ள நீர்த் தேக்கத்தில் 'சலப் சலப்' என்று அவன் காலடி வைத்துக் கொண்டே போகும் ஓசை உள்ளே கேட்டது.

அவன் போனபின் அந்தப் பெண் சிறிது நேரம் முறுவலோடு யோசனை செய்வாள் ஆயினள்.

அடுத்த கணம் அவள் கைவிளக்கை அங்கே ஒரு பரையில் வைத்துவிட்டு மெள்ள அடி எடுத்து வைத்து அந்த ஆதுர சாலைக்குள் நுழைந்தாள்.

அங்கே தத்தனது கட்டிற்புறமாகச் சென்று அங்குமிங்கும் ஒரு பார்வை பார்த்தாள்.

சேவகன் அருகில் இருந்த மற்றவன் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

அதைக் கவனித்ததும் அவள் ஏதோ இயல்பாகவே போவது போல் கட்டிலை மேலும் நெருங்கிக் கனிவும், இரக்கமும் பொங்கக் கீழே தரை மீது மண்டியிட்டு அமர்ந்து கொண்டாள்.

"ஐயா! ஐயா!" என்று மெதுவாக அழைத்தாள்.

தத்தனின் முகத்திலிருந்து ஜ்வர ஜ்வாலை வீசியது.

அவன் ஏதும் பேசவில்லை. கண்கள் மூடியே இருந்தன.

மிரண்டு போன அந்தப் பெண் தன் அழகிய கையை அவன் நெற்றியில் வைத்தாள்.

உடன், 'உஷ்' என்று உதறி எடுத்துக் கொண்டாள். அவன் உடம்பு அவ்வளவு சுட்டது.

அவளுக்கு ஏனோ ஒரு கலவரம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

அங்கும் இங்குமாகத் தன் பார்வையைத் திரும்பினாள் அவள். அவள் செய்வதைத் தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்தான் மற்றவன்.

பிறகு அவன் அங்கிருந்து புறப்பட்டு அவள் இருக்கும் இடத்தையே குறியாக வைத்துக் கொண்டு வந்தான்.

சில நொடிகள் வரை அவள் அவனைக் கவனிக்கவில்லை. பிறகு திடீரென்று அவனைப்

பார்த்து விட்ட அவள், தன் பரபரப்பைச் சிறிதும் காட்டாமல் யோசனை செய்து கொண்டு அதே நேரத்தில் வருகிற ஆளின் பக்கம் திரும்பித் தனது இயல்பான குறும்புப் பார்வையுடன் சிரித்தாள்.

12

கட்டிலை நோக்கி சேவகன் வந்த போது, அந்த இளம் பெண் அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டிருந்தாள்.

"மஞ்சரி! உன் தாத்தா தான் நோயாளி என்று நினைத்தேன். இது யார் புது நோயாளி?" என்று கேட்டான் அவன்.

"இவரா?" என்று சொல்லி எழுந்தாள் மஞ்சரி. "வைத்தியரின் உறவுக்காரர். ஜன்னி கண்டிருக்கிறது. இவரைக் கவனிக்கும்படி வைத்தியர் கட்டளை இட்டு இருந்தார். பார்த்துக் கொண்டிருந்தேன். நினைவு போய் விட்டது. இன்றைக்கு ராத்திரிக்குமேல். . . " என்று கூறியவள் சேவகனது ஊகத்திற்கு அதை விட்டு விட்டவள் போல் நிறுத்தினாள்.

மேலும் அவள் அவனை நோக்கி முன்னால் நடந்து கொண்டே போனாள். முன்னேறாமல் தடுத்து அவனைத் திரும்பும்படிச் செய்து கொண்டு, "அப்புறம் உங்கள் நண்பரின் கால் எப்படி இருக்கிறது?......" என்று கேட்ட வாறே கூடத்திற்குள் அவனை அழைத்துப் போனாள்.

ஆனால் கூடத்திற்குப் போன சேவகன் அதற்கு மேல் அவளுடன் போக விருப்பப்படாமல் அங்கேயே நின்று விட்டான். அது அவளுக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது.

மேலும் அவனது சந்தேகத்தை அதிகமாக்கி விடாமல் "நான் வருகிறேன்! . . ." என்று கூறிய மஞ்சரி அங்கிருந்து வைத்தியர் வீட்டுக்குப் போய்விட்டாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு இரு வேலைக்காரப் பெண்மணிகள் தத்தன் கட்டில் அருகில் வந்து அவனைத் தூக்கிக் கொண்டு போனார்கள்.

திடுக்கிட்ட சேவகன் விசாரித்த போது நோயாளி இறந்து விட்டான் என்று தெரிய வந்தது.

அன்று இரவு சத்திரத்திற்கு வந்த ராஜவல்லப னுக்குத் தூக்கம் வரவில்லை. நடந்தவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்தான். ஊரிலிருந்து புறப்பட்டதிலிருந்து அடுக்கடுக்காக ஏதோ நேர்ந்து கொண்டே இருந்தன.

முதலில் அந்தக் கூண்டு வண்டியைப் பார்த்தது. அதில் அந்தப் பெண்ணைப் பார்த்தது. சேவகத் தலைவனிடம் அகப்பட்டது. அவனிடம் வாக்குவாதம் பண்ணியது. தூக்குக் கயிற்றிலிருந்து தப்பியது எல்லாமே வரிசையாய் நினைவில் வந்தன.

"அரங்கனைத் தேடிக் கொண்டு புறப்பட்டோம். அதற்கு எத்தனை இடையூறுகள்?" என்று நினைத்தான் அவன்.

ஆதுர சாலையில் அந்தச் சேவகன் அவனைக் கவனித்திருப்பானா? கவனித்தால் என்ன? ஓடுமானூரில் இருந்த போது எல்லோரும் சமாதானமாகப் போயாகி விட்டதே. இனிமேல் அவர்களுக்கு அவன் மீது பகை இருக்க முடியாதே? அப்படியிருக்கும்போது என்ன பயம்?

அப்படியும் சொல்ல முடியாது. ஏனெனில் அந்தச் சமாதானத்தை உண்டு பண்ணியது கற்பூர

வியாபாரிதான். அதை அந்தச் சேவகத் தலைவன் பூரணமாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவன் முகமே அதை எடுத்துக் காட்டியது. தவிரவும் 'அந்தப் பெண்ணிடம் நேரில் கேட்கலாம். அவளைக் காட்டுங்கள்' என்று வல்லபன் சொன்ன போது, தலைவன் கண்களில் எவ்வளவு குரோதம் எழுந்தது. ஏதோ வேண்டாததைச் செய்ய வற்புறுத்தப்பட்டது போல் தோன்றினானே. தான் இரகசியமாகத் திரையிட்டு அழைத்துக் கொண்டு போகிற ஒரு பெண்ணை இப்படிப் பலர் முன்னால் காண்பிக்க வைத்து விட்டானே என்ற கோபம் அவன் மனசிலே நிச்சயமாக இருக்கும். சந்தர்ப்பம் கிடைத்தால் அந்த வஞ்சகத்தைத் தீர்த்துக் கொள்ளப் பார்ப்பான், விட மாட்டான்.

நினைவுகள் குழப்பிக் கொண்டிருந்தன. வல்லபனுக்கு உறக்கம் வரவில்லை. இரவில் ஏதாவது நடக்குமோ என்று ஒரு கலக்கம் தோன்றியது. பலவிதமாய் யோசனை பண்ணியவன், விருட்டென்று எழுந்து, சுமைகளை எடுத்துக் கொண்டான். சத்திரத்து அதிகாரியிடம் விடைபெற்று வெளியே இருட்டுள் இறங்கினான்.

அந்தப் பேரூரில் நான்கு பெரிய வீதிகளும் இரண்டு சிறிய விதிகளும் இருந்தன. எங்கேயாவது யாருடைய வீட்டிலாவது இடம் பிடிக்க வேண்டும் என்று நினைத்தான்.

அந்த வீதி திரும்பு முன்னால் திடீரென்று குரல்கள் கேட்டு, ஓரத்தில் ஒதுங்கி ஒரு திண்ணையில் ஏறிக் கொண்டான்.

"சத்திரத்தில் தான் இருப்பான்" என்றது ஒரு குரல்.

"நீ பார்த்தது அதே பையன்தான் என்று என்ன நிச்சயம்?" என்றது வேறொரு குரல்.

"அவனைப் போலத்தான் இருந்தான்"

"உனக்குப் பார்வை பற்றாது"

"நீ தான் குருடன்"

இதை அடுத்து ஒரு சர்ச்சை தொடரவே, அந்த நான்கு பேர் குழு அங்கேயே நின்றது. பிறகு ஒருத்தருக்கு ஒருத்தர் ஒருவாறு சமாதானம் ஆகி மேலே நகர்ந்தார்கள்.

அவர்கள் போன பிறகு வல்லபன் மெள்ளத் திண்ணையை விட்டு எழுந்தான். நல்ல வேளை, தப்பித்தோம் என்று நினைத்தான். வெளியே இறங்கி விடுவிடு என்று நடந்தான். ஊரின் சிறிய வீதி ஒன்றை அடைந்து அதன் வீடுகளில் ஒன்றின் திண்ணையைத் தேர்ந்தெடுத்தான். அதில் ஏறியதும் தன் மீதே அவனுக்குப் பரிதாபம் ஏற்பட்டது. தனது கற்பனையில் அந்தப் பெண்ணை நினைத்தான். "மகரவிழியாளே! எனக்கு சோதனைக்கு மேல் சோதனைகளாய் வருகின்றன. நீ அறிந்து கொள்கிறாயா?" என்று கேட்டான். பிறகு பலவித கனவுகளுக்கு இடையே உறங்க ஆரம்பித்தான்.

இரவு போலவும் இருந்தது. பகல் போலவும் இருந்தது. சத்தங்கள் கேட்பது போலவும் இருந்தன. கேட்காதது போலவும் இருந்தன.

கேட்ட சத்தங்கள் விசித்திரமாகத் தோன்றின.

கண்களை விழித்துப் பார்த்தால் எல்லாம் விசித்திரமாகத் தோன்றின. எங்கே இருக்கிறோம்?

ஒருவேளை இறந்து விட்டோமோ?

தன் நினைவுகளை தத்தன் அழுத்தமாக இழுத்துப் பார்த்தான்.

நினைவுகள் கூட அவனுக்குப் பஞ்சு பறப்பது போல் தெரிந்தன.

இழுக்க இழுக்கப் பிடிபடாமல் கலைந்து போயின.

ஒரு வேளை எல்லாமே கனவில் நடக்கின்றனவோ?

ஒரு குரல் மட்டும் பழகிய குரல் போல் கேட்டது. அது யாருடைய குரல்? அந்தப் பெண் தான்! ஆமாம். அவளே தான்! வைத்தியர் வீட்டுக்கு முன்னால் தண்ணீரில் விழுந்த போது அவனைப் பிடித்து எடுத்த பெண்ணின் குரல்.

கண்ணைத் திறந்து பார்த்தால் அவளது உருவம் கூடத் தெரிகிறது. அவள்தானா? அவள் எங்கே வந்து சேர்ந்தாள்?

நினைவுக்கும், கனவுக்கும் இடையே இவ்விதம் இரண்டு நாட்கள் போராடினான் தத்தன்.

மூன்றாம் நாள் காலையில் கண்களை விழித்த போது உலகம் அதன் எல்லா இயல்புகளோடு புதிதாய் ஜனித்திருந்தது.

கட்டிலிலிருந்து திரும்பிப் பார்த்தான்.

எட்டத்தில் அந்தப் பெண் ஒரு கலுவத்தில் எதையோ குழைத்துக் கொண்டிருந்தாள்.

"இந்தா!" என்று கூப்பிட்டான் அவன்.

அவள் ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தாள். அவள் முகம் பிரகாசம் ஆகியது.

சிரித்துக் கொண்டே அவனை நோக்கி வந்தாள்.

"ஓ! உங்களுக்கு நினைவு திரும்பிடுத்தா!" என்று கேட்டாள்.

புருவத்தின் எடுப்பும், கண்களில் மிளிர்ந்த ஆர்வமும் அவனைக் கவர்ந்து இழுத்தன. பருவமான பெண்ணை முதன் முதலாக அவ்வளவு நெருக்கத்தில் பார்க்கிறான். அவளது ஈர உதடுகளும், அவள் உடலின் சுகந்தமும் அவனைத் திணற வைத்தன.

இருந்தாலும் பழைய மிடுக்கு அவனிடம் வந்துவிட்டது.

"யார் நீ?" என்றான் தைரியமாக.

அவளுக்கும் ரோஷம் வந்து விட்டது.

"ஆமாம்! தெரியாதாக்கும்! நேரிலே என்னைக் கண்ணாலே பார்த்தவர்தானே! அதுக்கு மேலே தெரியாதது போலக் கேள்வி என்ன? யார் நீ? யார் நீ?" என்று அந்த 'யார் நீ?'யை அவனைப் போல் தொனித்துக் காட்டினாள்.

உடனே தத்தன், "இது எந்த இடம்? என்னை ஏன் இங்கே வைத்திருக்கிறாய்? என் நண்பன் எங்கே?" என்று சரமாரியாகக் கேட்டான். அவனிடம் அந்த மிடுக்கு இன்னும் குறையவில்லை.

அதற்கு அவளும், "இது பூலோகம்! வைகுண்டத்துக்குப் போகாமல் உங்களை இங்கே இழுத்து வைத்திருக்கிறோம். கேட்கிற கேள்விக்கும் குறைவில்லை. தோரணைக்கும் குறைவில்லை. என்னடா இது? ஜுரத்திலே கிடந்தோம் யாரோ காப்பாற்றினாங்களே! யாரோ குணப்படுத்தினாங்களே! அவங்களுக்கு நம்முடைய சந்தோஷத்தைச் சொல்வோம் என்கிற தில்லை. எழுந்தவுடனே தோரணைதான்!" என்று பொல பொலவென்று பொழிந்தாள்.

தத்தன் திகைப்பில் மூழ்கி விட்டான்.

"இதுக்குத்தான் தாத்தா அடிக்கடி சொல்வார். 'மஞ்சரி! எல்லோரிடமும் வெகுளியாகப் பேசாதே. அவசியம் இல்லாமல் உதவி செய்யாதே. உனக்குத்தான் அது நஷ்டமாக முடியும்' என்று எச்சரிப்பார். நான் கேட்டுக்கிறதில்லை. அப்புறம் இப்படி அவஸ்தைப் படுகிறேன்" என்று எட்டத்தில் போய்க் கொண்டே கூறினாள்.

பிறகு இருமுறை திரும்பி ஓரக்கண்ணால் பார்த்தாள்.

கலுவத்தை மீண்டும் எடுத்துக் குழைக்கத் தொடங்கினாள். மருந்தில் தேன் குழையும் நெடி அந்த அறையிலே எழுந்தது.

தத்தன் யோசனையிலேயே ஆழ்ந்தான். உடம்பு பலவீனமாகியிருப்பது தெரிந்தது. பல நாட்கள் நினைவில்லாமல் இருந்தோமோ?

கையும் காலும் ஈர்க்குச்சியாகிக் கிடக்கின்றனவே! எழுந்திருப்பதற்குக் கூடத் திறன் இல்லையே.

"இம்! இதைக் குடியுங்கள்!" என்றாள் அந்தப் பெண்.

அவள் முகத்தில் இப்போது விரக்தி ஓடியிருந்தது. அவனிடமிருந்து எந்தவித இதமான மொழியையும் கேட்க விரும்பாதவள் போல நின்றாள். அவளுக்குத் தோன்றிய கோபமே அழகாயிருந்தது. சின்ன வயதுக் கேற்ற சின்னக் கோபம்.

பாத்திரத்தை தத்தன் கையில் வாங்கிக் கொண்டான்.

அவள் அவனைப் பார்த்தாள். அப்பா! அந்தப் பார்வைக்குள் நெடுந்தூரக் கடலின் ஆழமும் குளுமையும் எவ்வளவு எழுச்சியாகத் தெரிகின்றன!

அப்போது 'மஞ்சரி' என்று ஒரு குரல் கேட்கவே, "இதோ வருகிறேன்" என்று சொல்லி ஓடினாள் அவள்.

புக்கராயரின் குலத்திற்குக் குருவாக இருந்த அந்த கிரியா சக்தி பண்டிதர் மேலும் சில தினங்கள் முள்வாய் நகரத்தில் தங்கிவிட்டார்.

தெற்கு அண்டை நாட்டிலுள்ள க்ஷேத்திரங்களைத் தரிசித்து வருவதற்காக விஜயநகரத்தில் இருந்து புறப்பட்டவர் அவர்.

முள்வாய் நகரத்தில் கம்பணர் இல்லாதது கண்டு அவர் சில தினங்களில் வரக்கூடும் என்று நினைத்து அங்கே தங்கிவிட்டார்.

ஐப்பசி மாலை நாள்! எங்கும் மழை மேகங்கள் திரண்டிருந்த சமயம். பண்டிதர் தங்கியிருந்த மாளிகைக் குள்ளே கம்பணரின் மனைவியான கங்காதேவி நுழைந்தாள். கையில் பட்டுத்துணி போர்த்திய ஏடுகள் பற்பல வைத்திருந்தாள்.

மாலை வழிப்பாட்டை முடித்து விட்டு, நிச்சிந்தையாக இருந்த பண்டிதர் அவளை முறையாக வரவேற்றார்.

ஆதனத்தில் அமர்ந்து கொண்ட கங்காதேவி தான் கொண்டு வந்திருந்த ஏட்டை அவிழ்த்தாள். வடமொழிப் புலவரான பாணரின் காதம்பரியைத்தான் அவள் கொண்டு வந்திருந்தாள்.

பாணரின் திறனைப் பற்றி கங்காதேவி புகழ்ந்து பேசிவிட்டு, மருத்துவம், பூமி சாத்திரம், வான சாத்திரம், புராணம், ராஜாங்கசாத்திரம், மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் எல்லாவற்றிலும் பாணருக்கு இருந்த ஆழ்ந்த அறிவை உயர்வாகப் பேசினாள்.

"சுவாமி அறுநூறு ஆண்டுக்கு முன் ஜனங்கள் எப்படி வாழ்ந்தார்கள், என்னென்ன செய்தார்கள், என்னென்ன நம்பிக்கைகள் கொண்டிருந்தார்கள் என்பதை அவரது காதம்பரி நூலிலிருந்தே கண்டுபிடித்து விட முடிகிறது. ஹர்ஷ மகாராஜா வாழ்ந்த காலத்தை என்ன அழகாகக் கூர்ந்து கவனித்து எழுதியிருக்கிறார். அதைப் படிக்கும்போது அக்காலத்தில் வாழ்ந்த ஜனங்களிடையே நானும் வாழ்வது போல் ஒரு பிரமை ஏற்பட்டு விடுகிறது. பாணர் என்னைப் பெரிதும் கவர்ந்த புலவர்" என்று பரவசம் பொங்கக் கூறினாள் கங்கா.

மெள்ளச் சிரித்த பண்டிதர், "குழந்தாய்! உன் வயதுக்கும், அறிவுக்கும், காதம்பரி, உனக்குப் பிடித்து இருப்பதில் ஆச்சரியமில்லை. அது ஒரு சிங்காரம் நிறைந்த காதல் காவியம். உடலுக்குப் போதை தருவது சாதாரண மது. ஆனால் காதம்பரி நமது அறிவுக்குப் போதை தரும் உன்னதமான மது!" என்று கூறினார்.

"ஆனால், சுவாமி! அவர் வாக்கியங்கள் பல இடங்களில் நீளமாக ஓடுகின்றன. அவரது கூட்டு வார்த்தைகளும் சங்கிலித் தொடர் போல் நீண்டு போகின்றன!" என்று கூறினாள் கங்கா.

அதற்குப் புன்னகை புரிந்தபடி பண்டிதர், "நீளமான வாக்கியங்களுக்கு இடையே, சிறுசிறு வாக்கியங்களை என்ன லளிதமாக எழுதியிருக்கிறார் பார். இதனாலேயே அவரது நடையில் நமக்கு ஒரு மயக்கமே ஏற்படுகிறது" என்று கூறினார்.

"அது உண்மை சுவாமி. அந்த மயக்கந்தான் பலமுறை காதம்பரியைப் படிக்க வைக்கிறது. இதுவரை இருபதுமுறை படித்திருக்கிறேன்" என்றாள் கங்கா.

"ஓகோ! அப்படியா? இதனால் வடமொழி

வார்த்தைகளில் உனக்குள்ள வளம் அதிகமாகப் பெருகும்!" என்றார் பண்டிதர்.

"முடிந்தால்" என்று இழுத்தாள் கங்கா.

"என்ன?" என்று ஆவலுடன் கேட்டார் பண்டிதர்.

"முடிந்தால் அவரைப் போல் ஒரு சரிதம் கூட எழுதலாம் என்று"

பண்டிதர் உடன் அவளைக் கூர்ந்து பார்த்தார்.

"சரிதமா?"

"ஆமாம்!"

"குழந்தாய் பாணர் சரிதம் எழுதினார் என்றால் அவருக்கு அனுபவம் நிறைய இருந்தது!"

"என்ன அனுபவம்?"

"பாணர் சிறுவராய் இருக்கும்போதே அவரது தாய் இறந்துவிட்டாள்."

"ஆமாம் அது தெரியும்!"

"அவரது பதினான்காவது வயதில் தந்தையும் இறந்துவிட்டார். இருவரும் போனதும் இவர் தனது குடும்பத்தை விட்டு வெளியேறினார். கெட்ட சகவாசங்களில் ஈடுபட்டார். ஊரெல்லாம் அலைந்தார். நாட்டியக்காரிகள், தாதிகள், அந்தப்புரப் பெண்கள், பிட்சுணிகள், பாம்பாட்டிகள், மல்யுத்தக்காரர்கள், செப்பிடு வித்தைக்காரர்கள் இன்னும் எத்தனை எத்தனையோ பேர் அவருக்குச் சிநேகம். இது அவருக்கு விஸ்தாரமான ஒரு அறிவைக் கொடுத்தது.

"பல வருடங்கள் இப்படி அலைந்த பின்னால் திருந்தி, தனது பந்துக்களை அடைந்தார். ஹர்ஷரின் சரிதத்தை எழுதிய போதும் சரி, காதம்பரி என்ற

காவியத்தை எழுதிய போதும் சரி, இந்த அவரது பரந்த அனுபவங்கள்தான் அவருக்குத் துணை செய்தன. அவரைப் போன்ற அனுபவம் உனக்கு ஏற்படவேண்டாமா கங்கா?" என்று கேட்டார் பண்டிதர்.

"சுவாமி!" என்று திகைப்புடன் அவரைப் பார்த்தாள் கங்கா. "சொந்த அனுபவம் இல்லாவிட்டாலும் கேள்வி ஞானம் போதாதா சுவாமி. மற்றவர் அனுபவத்தைச் செவியால் கேட்டு வாங்கிக் கொள்வது கூடச் சிறந்த அனுபவம் தானே. அது தவிர சுவாமி எனது கணவர் என்னை அரண்மனைக்குள்ளாகவே வைத்திருக்கவில்லையே. யாத்திரைகளில் எல்லாம் என்னை அழைத்துச் செல்கிறாரே."

"நல்லது கங்கா! உலக அனுபவம் வேண்டும் என்றால் பாணரைப் போல் திரிய வேண்டும் என்பது இல்லை. கேள்வி ஞானம் கூட அனுபவத்தை நிகர்த்தது. உன் ஆசை நல்ல ஆசை. அது நிறைவேறுமாக." என்று கூறினார்.

பின்னர் கங்கா தனது ஏட்டைத் திறந்து கடின பதங்கட்கெல்லாம் அர்த்தம் கேட்க பண்டிதர் விளக்கி விடலானார்.

13

கிரியா சக்திப் பண்டிதரும், கங்காதேவியும் வடமொழி மாகவி பாணரைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

வாசலில் அப்போது நிழலாடியது.

Released by Maran's Dog. Toronto, Canada

இருவரும் நிமிர்ந்து பார்க்க, முள்வாய் ராஜ்யத்தின் சேனியாதிபதி கோபணா மெதுவாக வந்து கொண்டு இருந்தார். அவர் மேனி மெலிந்திருந்தது. முகத்தில் வாட்டம் கண்டிருந்தது. தமது வலது கையில் அவர் பட்டுத்துணி வைத்து மூடிய ஏதோ ஒன்றை எடுத்து வந்திருந்தார்.

"வாருங்கள், வாருங்கள்!" என்று சொல்லி அவருக்குப் பண்டிதர் ஆதனம் அளித்தார்.

வயதில் மூத்தவரும், தனக்குக் கிடைத்த பல குருக்களில் ஒருவருமாக இருந்ததால் கங்காதேவி கோபணாவுக்குத் தாழ்ந்து நமஸ்காரம் அளித்தாள். வடமொழியில் கோபணாவும் வல்லுநர்.

"கோபணா! என்ன யோசித்தீர்?" என்று கேட்டார் பண்டிதர்.

Released by Maran's Dog. Toronto, Canada

கோபணா மெள்ள நிமிர்ந்து பார்த்தார்.

"ஒரே முடிவுதான். ராஜரீகத்தைத் துறக்க விரும்பு கிறேன்!" என்று கூறிய அவர் தமது கையில் கொண்டு வந்திருந்த பட்டுத் துணியை மெள்ள அவிழ்த்தார். உள்ளே இரண்டு தங்கக் கங்கணங்கள் கண்களைப் பறித்தன.

Released by Maran's Dog. Toronto, Canada

பண்டிதர் திடுக்கிட்டார்.

கங்கணங்கள் இரண்டும் வீரக் கங்கணங்கள். வீரர்களுக்காக மன்னரே உகந்து பூட்டுபவை. கிழக்கில் நடந்த போர்களில் திறமை காட்டியதற்காக புக்கராயரே அவருக்கு அணிவித்தவை.

கங்காவும் திடுக்கிட்டாள்.

"கோபணா!" என்றார் பண்டிதர். "தற்சமயம் மன்னர் ஊரில் இல்லை. அவரிடம் தாங்கள் நேரிலே பேசுவது தான் உகந்தது."

Released by Maran's Dog. Toronto, Canada

Released by Maran's Dog. Toronto, Canada

"இல்லை சுவாமி! மனத்துக்குள் ஒரு அவா புகுந்து விட்டால் மற்ற பந்தங்கள் எல்லாமே போய்விடும். மன்னர் இல்லாவிடில் என்ன? அதற்கு அடுத்தாற் போல் தாங்கள் இருக்கிறீர்களே!" என்றார் கோபணா.

பண்டிதர் அவரை ஆழ்ந்து பார்த்தார். பிறகு, "கோபணா" என்றார் தழதழக்க.

"நாட்டின் தர்மங்கள் அழிக்கப்பட்டிருக்கும் போது நம் சொந்த தர்மங்களை மட்டும் காக்க விரும்புவது அவ்வளவு உத்தமம் அல்ல. இந்த விஜயநகர மண்டலேசுவரம் தோன்றியிருப்பது ஏதோ புது வம்சம் ஆரம்பிப்பதற்கோ அல்லது புதிய ராஜா பட்டத்திற்கு வருவதற்காகவோ அல்ல. தொன்றுதொட்டு நிலவி வரும் நம் தர்மங்களையும் ஒழுக்க வழக்கங்களையும் காப்பதற்காகவே தான் இந்த மண்டலம் தோன்றி இருக்கிறது. இந்த மண்டலம் தென்நாடுகள் முழுவதையும் அடக்கிக் கொண்டு ஒரு சாம்ராஜ்யமாக மாறும் வரை நாம் எல்லோரும் ஓயக் கூடாது. நமது சொந்த விருப்பங் களை நிறைவேற்றுவதற்காகச் சமயத் துறவையோ, பற்றற்ற வாழ்க்கையையோ மேற்கொள்ளக் கூடாது. தற்போதைய நிலையில் தர்மம் இதுதான்."

அவர் சொல்வதைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார் கோபணா. பிறகு தலை நிமிர்ந்தார். "சமய வாழ்வுதான் சுவாமி எனக்குப் பிடிக்கிறது!" என்று கூறினார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த கங்கா மெதுவாக, "சுவாமி!" என்று குரல் கொடுத்து கோபணாவைப் பார்த்தாள்.

"இந்தச் சிறியவள் குறுக்கே பேசுதற்காகப் பொறுத்தருள வேண்டும். நான் ஒரே ஒரு

வேண்டுகோள் விடுக்கலாமா?" என்று கேட்டாள்.

"சொல்லுங்கள் ராணி!" என்றார் கோபணா.

"சுவாமி! தாங்களும் என் குருக்களில் ஒருவர். இப்போது ராஜரீகத்தை துறக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களே! அது தாங்களாகத் தீர்மானம் பண்ணியதா? அல்லது தங்களுக்குத் தெய்வ ஆக்ஞை பிறந்ததா?" என்று கேட்டாள்.

"சொல்கிறேன் கங்கா. எனக்கு ஒரு விதத்தில் தெய்வ ஆக்ஞைதான் பிறந்திருக்கிறது!" என்றார் கோபணா.

"அப்படியா?"

"ஆமாம். கொள்ளைக்களம் போய் வந்ததிலிருந்து அடிக்கடி ஒரு கனவு வந்து கொண்டிருக்கிறது!"

"என்ன கனவு சொல்லலாமா?"

"சொல்கிறேன். ஒரு கனத்த அந்தகாரம் எதுவுமே தெரியவில்லை துழாவுகின்றேன். அப்போது திடீரென்று ஒரு தெய்வ விக்கிரகம் தென்படுகிறது. அது போன்ற பிரசன்னமான வதனத்தை நான் இதுவரை கண்டது இல்லை. அவ்வளவு அழகான முகம். கையில் சங்கு, சக்கரம், கதை இவைகளை பார்த்தால் விஷ்ணுவின் விக்கிரகமாக அது இருக்க வேண்டும்!"

"அந்த விக்கிரகத்தை ஏதாவது கோவிலில் பார்த்து இருக்கிறீர்களா?"

"இல்லை எங்கேயுமே பார்த்ததில்லை. நான் திருவரங்கமும் போனதில்லை. அரங்கனையும் பார்த்த தில்லை. ஆனால் என் அந்தரங்கத்தில் அந்த

விக்கிரகம் அரங்க விக்கிரகந்தான் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. அடிக்கடி அந்த விக்கிரகம் என் கனவில் வருகிறது. வஸ்திரம், ஆபரணம், அங்கி ஏதும் இல்லாமல் வெறுமையாக அது இருப்பதைப் பார்த்தால் என்னை அறியாமல் அந்த விக்கிரகத்தின் மீது ஒரு இரக்கமான ஈடுபாடு ஏற்படுகிறது. நான் கனவுக்குள்ளே கண்ணீர் விடுகிறேன். எழுந்த பிறகு வெகுநேரம் என்னால் எதுவும் செய்ய முடிவதில்லை. பித்துப் பிடித்தது போல் அமர்ந்திருக்கிறேன்."

"கனவில் வேறு ஏதும் தோன்றுவதில்லையா?"

"தோன்றுகின்றன. அந்த விக்கிரகம் தோன்றுவதற்கு முன்னும் பின்னும் அந்தகாரமான காடு ஒன்று தெரிகிறது!"

"சரி! இவைகளிலிருந்து நீங்கள் என்ன அனுமானிக் கிறீர்கள்?" என்று கேட்டார் பண்டிதர்.

"எங்கேயோ அரங்கன் இருந்து கொண்டு என்னை அழைக்கிறான்!" என்றார் கோபணா.

உடன் கங்கா ஆரம்பித்தாள்.

"ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன் சுவாமி. காடும் மலையும் தெய்வமும் ஒன்று சேர்ந்த இடம் என்றால் அது திருப்பதி க்ஷேத்திரமாகத்தான் இருக்க வேண்டும். ஏதாவது தீர்மானத்திற்கு வருமுன் தாங்கள் ஏன் திருப்பதி வரை சென்று தரிசனம் செய்து விட்டு வரக் கூடாது. அது தங்களுக்கு மனசில் பெரிதான தெளிவை ஏற்படுத்துமே?" என்று கூறினாள்.

அதைக் கேட்டதும் பண்டிதரின் முகத்தில் பளிச்சென்று ஒரு பிரகாசம் தோன்றியது.

"கங்கா! நீ சொன்னது சரியான யோசனை!" என்று சொன்ன அவர் கோபணா பக்கம் திரும்பினார்.

"கோபணா! தாங்கள் இதை அவசியம் அங்கீகரிக்க வேண்டும்!" என்று கூறினார்.

கோபணா திகைத்தார்.

"ஆமாம், சுவாமி! தாங்கள் ஒரு புனித யாத்திரை மேற்கொண்டால் நல்லது. தங்கள் கனவுக்கு இதில் ஒருவேளை விடை கிடைத்தாலும் கிடைக்கலாம். தவிரவும், தாற்காலிகமாகத் தாங்கள் ராஜரீகத்தைத் துறந்தவராகவும் ஆவீர்கள். மனத்தில் நிச்சிந்தையாய் யாத்திரை போய் வாருங்கள். மன்னர் இங்கே இருந்தால் இந்த யோசனையை அவரும் அங்கீகரித்திருப்பார்!" என்று கூறினாள் கங்கா.

பண்டிதரும், "அந்த யாத்திரைதான் சிறந்த வழி. அதுதான் மன்னருக்கும் உகப்பாக இருக்கும், தங்களுக்கும் உகப்பாக இருக்கும்!" என்று கூறினார்.

கோபணா முடிவில் எழுந்து, "கடவுள் சித்தம் இதுவானால் நடக்கட்டும்!" என்று கூறினார்.

அவர் தயங்கி நிற்பதைப் பார்த்து பண்டிதர், "அப்படியானால் எப்போது யாத்திரை மேற்கொள்ளப் போகிறீர்?" என்று தயக்கத்துடன் கேட்டார்.

"நாளைக்கே!" என்றார் கோபணா.

"அதுவே நல்லது!" என்றார் பண்டிதர்.

மஞ்சரி போன பிறகு, தத்தன் மீண்டும் யோசிக்க ஆரம்பித்தான்.

அவன் கிடந்த இடம் இருட்டான குச்சிலாக இருந்தது. உள்ளே பானைகளும், குதிர்களும் பழங்காற்றைச் சுவாசித்தன. மேலே இருந்து உறிகள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றின் ஊடே நூலாம்படைகள் நிறையத் தொங்கிக் கொண்டிருந்தன.

கூரையில் அவ்வப்போது எலிகள் குடுகுடுவென்று உருண்டு கொண்டிருந்தன.

குச்சிலில் வெளிச்சம் தரும் ஒரே ஒரு உபாயம், மேலே முகட்டை ஒட்டியிருந்த ஓட்டைதான்.

இவ்வளவு மோசமான ஒரு இடத்தில் இதுவரை படுத்திருந்ததில்லை.

"வல்லபன் எங்கே?

என்னை ஏன் இங்கே கொண்டு விட்டுப் போய்விட்டான்?

எங்கே போனான்?"

நினைவுகள் பின்னிக் கொண்டு வர மெதுவாக எழுந்தான். அடுத்த கணமே பொதக்கென்று கட்டிலில் விழுந்தான்.

அவ்வளவு பலகீனமா?

சரிதான். இரண்டு மூன்று நாள் காய்ச்சலில் வாடி இருப்போம் போல இருக்கிறது.

இரண்டாம் முறை ஜாக்கிரதையாக எழுந்தான். மெள்ளச் சுவரைப் பிடித்துக் கொண்டு நடந்து போனான்.

குச்சிலுக்கு இரண்டு கதவுகள் இருந்தன.

ஒன்று புழைக்கடை பக்கம் திறப்பது. இரண்டாவது உட்புறம்.

புழைக்கடைக் கதவுப் பக்கம் வந்தான். தாழ்ப்பாளை நெம்பினான். கதவு 'ஙொய்' என்றது.

பின்புறத்தில் பளிச்சென்று வெளிச்சம். அங்குள்ள சோலை பச்சைப்பசேல் என்று தெரிந்தது. அவன் கண் கூசியது.

வெளியே ஒரு அடி வைத்தான். உள்ளே ஒரு அரவம் கேட்டது. "பார்த்தீங்களா? பார்த்தீங்களா?" என்று சொல்லிக் கொண்டே மஞ்சரி ஓடி வந்தாள்.

"ஐயையோ! இப்படிப் போறீங்களே! ஆபத்து! ஆபத்து!" என்று சொல்லிக் கொண்டு அவன் கையைப் பிடித்தாள்.

"கையை விடு!" என்று கோபத்துடன் கூறி அவன் உதறினான்.

மஞ்சரிக்கு முகம் சிவந்தது. அவனை ஒரு முறை முறைத்தாள்.

"போங்க! போங்க! யாருக்கு என்ன நஷ்டம்? உங்கள் நண்பர்தான் ஆபத்து என்று எச்சரித்தார். அவர் சொல்லித்தான் உங்களைக் கண்காணிக்கிறேன். எங்க தாத்தா அடிக்கடி சொல்வார். 'மற்றவங்க விஷயத்தில் தலையிடாதே' என்று. நான் கேட்கிறதில்லை. இப்போது அவமானப்படுகிறது நான்தானே. எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்!" என்றாள் அவள்.

பிறகு விருட்டென்று சென்று புழைக்கடைக் கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போனாள்.

"இந்தா! இந்தா! இந்தா!". என்று அவன் கூப்பிடுவதைப் பொருட்படுத்தவில்லை.

தத்தன் நடையைத் திருப்பி, உள்ளே வந்தான்.

மூலையில் ஒரு வெண்கலப் பாத்திரத்தில் அவள் சூடான பாலை ஊற்றிக் கொண்டிருந்தாள்.

"இந்தா!" என்றான் அவன் கட்டிலில் அமர்ந்து கொண்டே.

"என் பெயர் ஒன்றும் 'இந்தா' இல்லை மஞ்சரி!" என்றாள் அவள் வெடுக்கென்று.

"சரி! இருக்கட்டும். பெயரைச் சொன்னால்தான் பேசுவாயா என்ன? அப்படியில்லையே. இப்போது சொல்லு இது எந்த இடம்? என் நண்பன் எங்கே? எல்லாவற்றையும் விவரமாகச் சொல்!" என்றான் தத்தன்.

"ஹூம்!" என்றாள் அவள் திரும்பிப் பாராமலே. அதற்கு அனுசரணையாகப் பாத்திரத்தை 'டங்'கென்று கீழே வைத்தாள். "நான் அப்பவே சொன்ன போது பராக்குப் பார்த்துக்கிட்டிருந்தாராம். இப்போ மட்டும் கரிசனமாகக் கேட்கிறாராம். எனக்கு என்ன இப்போது ஆத்திரமாம்!" என்று ஒடித்துக் கொண்டு எழுந்தாள். பிறகு உள்ளே போக முற்பட்டாள்.

"இந்தா!"

"இந்தா, இல்லை. என் பெயர் மஞ்சரி!"

"விஷயத்தைச் சொல்லி விட்டுப் போ! நான் என் நண்பனுக்காகத் துடித்துக் கொண்டிருக்கிறேன்!"

அவள் மெள்ளத் திரும்பினாள்.

அவளது உதட்டில் அந்தக் குறும்பான புன்னகை தவழ்ந்தது.

"ஓ! இப்போதுதான் விஷயத்தைக் கேட்டுக்க வேண்டும் என்று அக்கறை தோன்றியதோ?" என்று சொல்லிவிட்டு அருகில் வந்தாள் அவள்.

பிறகு, கீழே கவிழ்த்து வைத்திருந்த பானை மீது அமர்ந்து கொண்டு நடந்தவைகளை எல்லாம் விவரமாகக் கூறி முடித்தாள்.

கடைசியில் அவள், "நீங்கள் இன்னும் ஆபத்தில் இருக்கிறீர்கள்!" என்று சொன்ன போது தத்தன் திடுக்கிட்டான்.

"இங்கிருந்து தப்பித்துப் போய்விடவா?" என்று கேட்டான்.

"உங்களுக்கு வலு இருந்தால் அப்போதே செய்யச் சொல்லியிருப்பேனே; இப்போது இருக்கும் நிலையில் நீங்கள் வெளியில் நடந்தால் உங்களுக்கு மீண்டும் ஜன்னி கண்டுவிடும். இன்னும் ஒரு வாரம் வெளியே போக முடியாது!"

"ஒரு வாரமா?"

"ஆமாம். அவ்வளவு ஓய்வாக இருந்தால்தான் உங்களுக்கு வலு ஏற்படும்!"

"நான் என் நண்பனைப் பார்க்க வேண்டுமே?"

"இப்போது கூடாது!"

"ஏன்? இரவில் போய்ப் பார்க்கிறேனே! சத்திரத்தில் பார்த்தால் என்ன?"

"ஐயோ! நீங்கள் வெளியே போனால் ஆபத்து!"

"ஏன்? இன்னும் அந்தச் சேவகர் குழு இங்கேதான் இருக்கிறதா?"

"ஆமாம்."

"இங்கே அடிக்கடி வருகிறார்களா?"

"ஆமாம்."

"ஏன் வருகிறார்கள்?"

"ஒரு சேவகருக்குக் காலில் காயம் பட்டுவிட்டது. அவர் இங்கே படுத்திருக்கிறார்!"

தத்தன் யோசித்தான்.

"அப்போது நீ எனக்கு ஒரு காரியம் செய்ய வேண்டுமே?"

"சொல்லுங்கள்!"

"வல்லபனை நீ நேரில் போய்ப் பார்க்க வேண்டும்" அவள் யோசித்தாள்.

"எங்கே இருப்பார்?" என்று கேட்டாள்.

"சத்திரத்தில்தான்!"

"சரி, பார்க்கிறேன்"

அடுத்த நாழிகையில் வைத்தியர் வீட்டை விட்டு அவள் வெளியே வந்தாள்.

அங்குமிங்கும் வீதியைப் பார்த்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

சிறிது தூரம் போனபோது திடீரென்று நின்றாள். அவளது பிடரி குறுகுறுத்தது.

14

சத்திரத்தை நோக்கி நடந்துக் கொண்டிருந்த மஞ்சரிக்குப் பிடரியில் குறுகுறுக்கவே திரும்பிப் பார்த்தாள். யாரும் தெரியவில்லை. ஆனால் மனத்தில் ஏதோ உதைத்தது. சிறிது நேரம் சுற்றிவரப் பார்த்து விட்டுச் சந்துகள் வழியாக நடந்து சத்திரத்தை அடைந்தாள்.

கூடத்தில் நுழைந்ததும் அவள் கையை யாரோ பற்றினார்கள். "சீ விடு" என்று சொல்லித் திரும்பினாள். அருகில் நின்றது அவளுக்கு அறிமுகமான சேவகன். அவன் பலமாகச் சிரித்தான்.

மஞ்சரி பதைத்துப் போனாள். ஆனால் நொடியில்

தன் நிலைக்கு வந்து, "எச்சரிக்கை, என்னைத் தொடாதே!" என்று சீறினாள்.

"என்ன செய்வாயாம்?" என்றான் அவன்.

"சம்புவராயரிடம் சொல்லுவோம்!"

சேவகன் ஒரு கணம் திகைத்தான்.

சம்புவராயரின் பெயர் அவனை என்னவோ செய்தது.

பிறகு நிலைக்கு வந்தவனாய், "ஓகோ! அவரை உனக்குத் தெரியுமாக்கும்!" என்றான் பாதி நையாண்டியாக.

"நன்றாகத் தெரியும். என் தாத்தாவும் நானும் அவரைப் பார்க்கத்தான் போய்க் கொண்டிருக்கிறோம்!" என்றாள் அவள்.

சேவகன் மீண்டும் திகைப்பில் ஆழ்ந்தான்.

"பிறகு யாரைத் தேடுகிறாய்?" என்றான் அவன்.

"சத்திரத்தில் ஒரு பாட்டி இருப்பார்களே அவரைத் தேடுகிறேன்!" என்றாள் அவள்.

"சத்திரத்திலே ஒரு பாட்டி உண்டா?" என்றான் அவன்.

"உனக்குத் தெரியுமாக்கும்?" என்று அவன் கேள்வியையே அவனிடம் தூக்கிப் போட்டாள் அவள்.

பிறகு அவள் சுற்றும் பார்த்துவிட்டு, அவள் தேடியவரைக் காணாததுபோல் ஒரு பாவனையை உண்டு பண்ணிக் கொண்டு, சற்றும் நிற்காமல் வாசலுக்குப் போய் வீதியில் இறங்கி நடக்கலானாள்.

ஆதுர சாலைக்கு மஞ்சரி திரும்புவதற்குச் சற்று நேரம் ஆகியது. வரும் வழியில் அவளுக்கு நிறைய யோசனைகள்.

'தாத்தா சொல்வது சரிதானே! 'அனாவசியமாய் மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உனக்கே கஷ்டம் உண்டாக்கிக் கொள்கிறாய்' என்பாரே. இப்போது அப்படித்தானே ஆகிவிட்டது' என்று நினைத்தாள்.

'ஆமாம். இந்த நண்பர் என்ற ஆள் சத்திரத்தில் இல்லையா? எங்கே போயிருப்பார்?' ஒரு கேள்வி வேறு மனத்தில் அடிக்கடி உதித்துக் கொண்டிருந்தது.

மெதுவாக நடந்து ஆதுர சாலையை அடைந்தாள். படி ஏறியதுதான் தாமதம். ஐந்து குதிரைக்காரர்கள் தமதம என்று வந்து இறங்கினார்கள்.

"ஏம்மா! சம்புவராயரிடம் சொல்வாயா? ஓகோ அவ்வளவு தைரியமா?" என்று கூறியவாறு அந்தப் பழைய சேவகன் கீழே குதித்தான்.

மஞ்சரிக்கு ஆத்திரம் வெகுண்டு வந்தது. விருட்டென்று திரும்பினாள்.

"சொல்ல மாட்டேன் என்று நினைத்தாயா? நிச்சயம் சொல்வேன்" என்று படபடத்து நின்றாள்.

"சொல்லு, சொல்லு, நிறையச் சொல்லு. நாங்கள் அதற்குள் அந்த செத்த பிள்ளை பிழைத்திருக்கிறானா என்று பார்க்கிறோம்!" என்று கூறிக் கொண்டு மற்ற சகாக்கள் பின் தொடர வைத்தியர் வீட்டுக்குள் நுழைந்தான் அவன்.

மஞ்சரிக்குச் சுரீர் என்றது.

'இவர்கள் ஏன் இந்த இளைஞர்களைத் தீவிரமாக

தேடுகிறார்கள்? எல்லாம் மூடுமந்திரமாக இருக்கிறதே!' என்று நினைத்த அவள், "பகவானே! அந்த இளைஞரைக் காப்பாற்று. அரங்கநாதா, காப்பாற்று!" என்று பிரார்த்தனை செய்தாள்.

உள்ளே ஒவ்வொரு இடமாக அவர்கள் தேடும் அரவம் கேட்டது. அடிக்கடி பலத்த சிரிப்புகளும் கேட்டன.

உக்கிராண அறையிலிருந்து சேவகர்கள் வெளியே வந்த போது, மஞ்சரி கூடத்திற்குள் போனாள்.

"ஐயா சேவகர்களே!" என்று கூவி அழைத்தாள். எல்லோருமே திரும்பினார்கள்.

"உத்தரவு இல்லாமல் உள்ளே போகிறீர்களே! உள்ளே, அருக்கன், அலகம், ஆதியலம், கச்சோலம், கோலகுண்டம், பூமப்பாசம், வேரிதகம் ஆகிய பாஷாணங்கள் எல்லாம் இருக்கின்றனவே. ஒன்றை ஒன்று தொட்டு வைத்தால் விஷமாயிற்றே. தவிர துர்த் தேவதைகளை மண் குடங்களில் அடைத்து வைத்து இருக்கிறார்களே. குடம் திறந்து ஏதாவது தேவதை உங்களை பிடித்துக் கொண்டாலும் ஆபத்தாயிற்றே!" என்று சத்தம் போட்டுக் கூறினாள்.

சேவகர்கள் தயங்கி நின்றார்கள். பிறகு எதையும் பொருட்படுத்தாது உள்ளே போக ஆரம்பித்தார்கள்.

மஞ்சரிக்கும் கதம் கதம் என்றிருந்தது.

அவர்கள் போய்விட்ட ஒவ்வொரு விநாடியும் யுகம் போல் நீடித்திருந்தது.

ஏதோ ஆபத்தை அவள் உள் மனம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. நீண்ட நேரம் எதுவுமே நடக்கவில்லை. பிறகு சேவகர்கள் திரும்பி வரும் சப்தம் கேட்டது.

கூடத்திற்கு அவர்கள் திரும்பி வரும் வரை அவள் உயிர் அவள் கையில்லை.

வந்த சேவகர்கள் அவளை ஏமாற்றத்தோடும் வெறுப்போடும் பார்த்துவிட்டுத் தலை குனிந்து கொண்டே வெளியே போனார்கள்.

வீதியில் அவர்கள் மறைந்து விட்டதும் மஞ்சரி துள்ளிக் கொண்டு குச்சிலுக்குள் போனாள். குச்சில் திறந்திருந்தது. உள்ளே யாரையும் காணவில்லை. எங்கே போனார் அவர்?

குதிர்களைப் பார்த்தாள். பானைகளைப் பார்த்தாள். பரண்களில் எம்பிப் பார்த்தாள். காணவில்லை.

புழைக்கடைப் பக்கம் சென்று நெடுந்தூரம் வரை கண்ணோட்டம் இட்டாள்.

பிறகு சோர்ந்து கீழே அமர்ந்தாள். துக்கம் அவளைக் கவ்வியது.

சித்திரசாலையிலிருந்து மணங்கள் சுழிந்து எங்கும் பரவிக் கொண்டிருந்தன.

குறுகலான படிகளில் ஏறி மேல் மாடம் முழுவதும் அவை பரவி நிறைந்தன.

கூடவே இனிய கீதம் மெல்லியதாய் மேலே ஏறி வந்தது.

ஐந்து தினங்களாய் இந்த இசையும் மணமும் அவனை ஏதோ சுவர்க்க உலகத்தில் உலாவ விடுவது போலிருந்தது.

எனினும் அவை மீது நாட்டமே அவனுக்கு இல்லை. தனது நண்பன் தத்தனின் கதி ஏதாயிருக்குமோ என்பதே கவலையாக இருந்தது.

நோயாளியாகக் கட்டிலில் படுத்திருந்தானே அவனை அந்தச் சேவகர்கள் கண்டு விட்டு இருப்பார்களோ? அவர்கள் விட்டிருந்தாலும், நோய் அவனை எந்த நிலையில் வைத்திருக்குமோ தெரியவில்லையே.

பிரயாணம் போகப் போகச் சோதனைகள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சேவகர் கூட்டத்தைப் பார்த்தாலும் பார்த்தோம் சனி தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

அப்படியும் சொல்வதற்கில்லை. இந்தக் கூட்டத்தைப் பார்த்ததால்தானே அவளையும் பார்க்க நேர்ந்தது.

அவளைப் பார்த்தது பெரிய அதிர்ஷ்டம் அல்லவோ? அவளது பார்வைக்குத்தான் என்ன சுகம்!

இவ்விதமாகச் சிந்தனைகள் செய்து கொண்டு இருக்கும் போது மச்சில் படிகளில் யாரோ ஏறி வரும் சப்தம் கேட்டது.

வல்லபன் நிமிர்ந்து பார்த்தான்.

உள்ளே வந்தவள் சுகிர்த ரத்னா என்னும் பெண்மணி. அறுபது வயது மதிக்கத்தக்க அவள் அந்த ஊரில் உள்ள *எம்பெருமானடியார் கூட்டத்தைச் சேர்ந்தவள்.

சங்கீதம், நிருத்தியம், சித்திரம், ஆருடம் இவைகளில் புலமை பெற்றவள். வயதின் வளர்ச்சியினாலும், அறிவின் வளர்ச்சியினாலும் அவளுக்கு மனதில் பகவானைப் பற்றியே பிரேமை கூடியிருந்தது. பார்க்கும் யாரையும் 'கண்ணா' என்றே அழைத்தாள்.

* எம்பெருமானடிகள் - தேவதாசிகள்

மேலடுக்குக்கு வந்தவள் வல்லபனைப் பார்த்து, "காலையிலிருந்து உணவே எடுத்துக் கொள்ளவில்லையாமே, கண்ணா! எனக்குக் கவலையாக இருக்கிறதே, நானே வந்தேன்!" என்று சொல்லி மிகுந்த பரிவான உணர்ச்சிகளுடன் வெள்ளித் தட்டுக்கள் இரண்டையும் அவன் முன்னே வைத்தாள்.

வாழ்க்கையில் எல்லாவித உணர்ச்சிகளையும் முகத்தில் காட்டி அபிநயத்துப் பழக்கமானதால், இப்போது அவளிடம் தோன்றியிருந்த பரிவு உணர்ச்சி கூட இயல்பாகவே ஒரு அபிநயத்திற்கு உட்பட்டு ஒரு கலை வடிவமாகப் பரிணமித்திருந்தது.

பலமுறை 'கண்ணா!' என்று அழைத்து அவனுக்குத் தட்டில் உணவு படைத்து விட்டுக் கீழே போனாள் அவள்.

இங்கே வந்து தங்கிய ஐந்து தினங்களிலும் அவன் அவளைக் கவனித்து வருகிறான். ஒரு தாயைக் காட்டிலும் பரிவு உடையவளாக இருந்தாள் அவள். அந்த உபசாரத்திற்கும், உபசரணைக்கும் ஈடு கிடையாது. அன்பு எத்தனை இடைவெளிகள் வழியாகப் பாய்வதற்கு வசதி இருக்கிறது என்பது அவள் உபசரிப்பின் மூலம்தான் தெரிய வந்தது.

நல்லவேளை! சத்திரத்தை விட்ட இரவில் எங்கேயோ புறத் திண்ணையில் தூங்கிவிட்டு மறுநாள் காலையில் பொழுது புலரும் முன்பே எழுந்து ஒரு புகலிடம் தேடித் திரிந்த போது, இந்தப் பெண்மணியைப் பார்க்க நேர்ந்தது.

விஷயத்தைத் தெரிவித்த போது தனக்கு ஒரு விருந்தாளி கிடைத்து விட்டான் என்று எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தாள் அவள். அன்றிலிருந்து இந்த நான்கு தினங்களாக அவளது உபசரணைகளைப் பார்த்தால். . . . .

தட்டில் வந்த உணவை வல்லபன் உண்டு முடித்திருப்பான். கீழே அரவம் கேட்டது. அவன் காதுகள் எச்சரிக்கையாகிவிட்டன.

முதலில் ஒரு தோரணைக்குரல் கேட்டது. அந்தக் குரலை எங்கேயோ கேட்டது போலிருந்தது. அந்தச் சேவகர்களில் ஒருவன் குரல் அல்லவோ!

"வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?"

"சொந்தக்காரர்கள்தான் இருக்கிறோம்" என்று கூறிக் கொண்டிருந்தாள் சுகிர்த ரத்னா.

"வீட்டை நாங்கள் சோதனை இட வேண்டும்!"

"சோதனையா? அதற்கு நான் அனுமதிக்க முடியாது!"

"ஏன் அனுமதி இல்லை?"

"என் வீடு புனிதமானது. அதில் வெளியாரை அனுமதிக்க வழியில்லை!"

"எல்லார் வீட்டிலுந்தான் சோதனை போட்டு வருகிறோம். வழி விடுங்கள். . . "

அவர்கள் உள்ளே நுழைய முற்படும் சப்தம் கேட்டது. வல்லபனுக்கு மனம் பரபரத்தது.

"நில்லுங்கள்!"

உரத்த குரலில் கத்தினாள் சுகிர்த ரத்னா.

"எங்களைத் தடுக்காதே அம்மா!"

"உள்ளே போகாதே!" மீண்டும் இரைந்தாள் அவள். "நீங்கள் சம்புவராயர் நாட்டைச் சேர்ந்தவர்கள் தானே?"

"ஆமாம்."

"நாங்கள் இருப்பது சுரத்தான் நாடு! இங்கே உங்களுக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. ஒரு காத வழிக்கு அப்பால்தான் உங்கள் சம்புவராயர் சீமை துவங்குகிறது. அதற்குள் உங்கள் அதிகாரங்களை இங்கே காட்டி விடாதே! ஆமாம். சுரத்தானுக்கு ஆயிரம் பேர் *படை கொடுப்பவள் நான்! ஏதாவது அமளி பண்ணினால் நான் சுரத்தானுக்குச் செய்தி அனுப்புவேன் ஜாக்கிரதை!" என்றாள் சுகிர்த ரத்னா.

சேவகர்கள் அயர்ந்து போய் பேசாமல் நின்றார்கள்.

"ம். . . இங்கே நிற்காதீர்கள். வெளியே போங்கள்! இல்லாவிடில் செய்தி அனுப்புவேன்!" என்று கத்தினாள் ரத்னா.

சிறிது நேரம் நிசப்தம்.

பிறகு காலடி ஓசைகள் தேய்ந்து மறைவதைப் பார்த்தால் அவர்கள் வெளியே போயிருக்க வேண்டும் என்று தோன்றியது.

வல்லபன் உடனே திட்டி வாசலுக்கு ஓடினான். அந்த வாசல் வழியாகத் தட்டோட்டிக்குச் செல்லலாம். அங்கே சென்று வாசல் புறமாக உள்ள கைப்பிடிச் சுவர் பக்கம் போனான். வெளியே ஆவலோடு பார்த்தான்.

அந்த உயரத்திலிருந்து கீழே ஆட்களின் தலைகள் தான் தெரிந்தன.

* அரசருக்குத் தாங்கள் கொடுக்க வேண்டிய வரிகளுக்குப் பதிலாக தேவதாசிகள் தங்கள் செலவில் ஆயிரம் பேர் படை ஒன்றை வைத்துக் கொள்ள வேண்டி வந்தது. யுத்தக் காலத்தில் இந்தப் படையை அவர்கள் அரசருக்குக் கொடுத்து உதவ வேண்டும்.

ஆவலோடு அவன் கவனித்த போது மூன்று சேவகர்களும் வெளியே போவதை அவன் பார்த்தான்.

உவகையுடன் திரும்புகையில் எதிர்வீட்டின் மச்சில் சாளரத்தின் மீது பார்வை விழுந்தது.

விழுந்த கணத்திலேயே உறைந்து விட்டது.

அங்கே அந்த இளம் பெண் - அவனது மகர விழியாள் - நின்று கொண்டு கீழே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'இங்கே இருக்கிறேன்! இதோ! இதோ!' என்று அவன் மனம் துள்ளிக் கூவியது.

அந்தப் பெண் தன் கண்ணைத் திருப்பிப் பல இடங்களில் பார்த்தாள். அவனது பக்கம் வரை கூட அவளது பார்வை வந்துவிட்டது.

'பார்த்து விடுவாள்!' என்று அவன் நினைக்கும் போது அவள் பார்வை திரும்பிவிட்டது.

மனம் பக்கென்று இருட்டாகியது. நினைவுகள் வீழ்ந்தன.

கண்களில் மள மள என்று நீர் வழிந்தது.

15

அந்தப் பெண் - அவனது மகர விழியாள், அவனைப் பாராதது வல்லபனுக்குப் பெரிய வருத்தத்தை அளித்தது. நினைவிலேயும் ஒரு புது வேதனை நிரம்பியது. இதுவரை அவன் கண்டறியாத வேதனை.

அன்றைய நாள் முழுவதும் துக்கமாகவே இருந்தான்.

வெயிலுக்காக அவன் மச்சிலுக்கு நுழைந்த போதெல்லாம் அந்த எம்பெருமானடியார் சுகிர்த ரத்னா அவனை வந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

சேவகர்கள் ஒவ்வொரு வீட்டிலும் சோதனை போடுவதையும், ஊரில் அட்டகாசம் செய்வதையும் எடுத்துக் கூறினாள்.

"தடியை எடுப்பவர்கள் இப்படித் தண்டல்நாயகர் களாக ஆகிறார்களே. நாடு சீரழிந்து விட்டதே. இது என்று உருப்படப் போகிறதோ?" என்று கூறினாள்.

உண்மையில் அந்த ஊரிலேயே ஒரு பயம் குடி கொண்டு விட்டது. அந்தச் சேவகர்கள் அவ்வளவு தூரம் பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் எவருக்குமே அது இன்ன காரணம் என்று சரியாகப் புலப்படவில்லை.

சிலர் அவர்களைக் கொள்ளைக்காரர்கள், சம்புவராயரின் சேவகர்கள் அல்ல என்றார்கள்.

சிலர் அவர்களை வெறும் கடத்தல்காரர்கள். யாரையோ கடத்திக் ,கொண்டு போகிறார்கள் என்றார்கள்.

இது காரணம் பற்றியே பூங்குளத்து நல்லூர் என்னும் அந்தப் பேரூரில் எங்கும் பீதி நிரம்பியிருந்தது.

ஆனால் அந்தப் பீதி கடைசியாக அன்றிரவு வரைதான் நீடித்திருந்தது. மறுநாள் சேவகர்கள் ஊரை விட்டுப் போய்விட்டார்கள் என்ற செய்தி எங்கும் பரவியதும், ஊரில் பெரிய நிம்மதி ஏற்பட்டது.

Released by Maran's Dog. Toronto, Canada

மழை நாட்கள் விட்டபாடில்லை. இடையில் இரண்டு நாட்கள் வெறித்திருந்ததால், மூன்றாம் நாள் மழை அடித்தது.

பெரிதாகத் தெரிந்த அந்த ஏரி முழுவதும் நீரால் நிரம்பி இருந்தது.

வடிகால்கள் வழியே நீர் பிய்த்து ஓடிக் கொண்டிருந்தது.

அது எழுப்பும் ஓசை 'தென்னா தெனா' என்று வண்டு முரல்வது போலிருந்தது.

ஏரிக்கரைக்குச் சற்று அப்பால் மேடான பூமியில் அந்த மண்டபம் இருந்தது.

பதினாறுகால் மண்டபம் அது. தூணில் கற்றுக் குட்டிச் சிற்பங்கள் அரைகுறையான வடிவங்களில் இருந்தன.

அந்த வழியாகப் போகும் பிரயாணிகளுக்கு அது ஒரு தங்கும் மண்டபமாக இருந்தது. யாத்திரிகர்கள் தங்கி அந்த நீண்ட நெடும் ஏரியின் தண்ணீர்க் காட்சியையும், சுற்றிவரப் பரந்து கிடக்கும் பச்சை வயல்களின் காட்சியையும் கண்டு களித்துச் செல்வார்கள்.

Released by Maran's Dog. Toronto, Canada

இரவு நேரம் மழை ஓய்ந்திருந்தாலும் பிசுபிசுப்பு விடவில்லை. ஈர வாடையுடன் ஊதலாக ஒரு காற்று அந்த மண்டபத்தைக் கோதி எடுத்துக் கொண்டிருந்தது.

வெளியே எழும் முனகலுக்குப் போட்டி போடுவது போல் மண்டபத்துக்குள்ளும் ஒரு முனகல் எழுந்து கொண்டிருந்தது.

அது மெலிந்த வயோதிகரின் முனகல்!

Released by Maran's Dog. Toronto, Canada

Released by Maran's Dog. Toronto, Canada

கீழே கோரப்பாயை விரித்து அதன் மேல் துணிகளைப் பரப்பி அதற்கு மேலாகப் படுத்திருந்தார் அவர்.

அவர் அருகில் ஒரு இளம் பெண் கவலையே உருவாக அமர்ந்து அவருக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருந்தாள்.

அந்த மண்டபத்தின் இரு பகுதிகளை மண் வைத்துச் சுவர் எழுப்பி இரண்டு அறைகள் போல் தடுத்திருந்தார்கள்.

அத்தகைய தாற்காலிக அறை ஒன்றில்தான் அவர் படுத்திருந்தார்.

அவர் தலைமாட்டிற்குச் சற்று அப்பால் ஒரு திரி விளக்கு காற்றில் மினுக்கிட்டுக் கொண்டிருந்தது.

பெண் உள்ளே பணிவிடை செய்து கொண்டிருக்கும் அதே நேரத்தில், மண்டபத்தில் மற்றொரு ஓரத்தில் இரண்டு யாளிச் சிற்பங்கள் மீது சாய்ந்து கொண்டு இரு இளைஞர்கள் காரசாரமாக விவாதித்துக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் இருவரும் வல்லபனும் தத்தனும் ஆவார்கள்.

"நீ இவர்களை அழைத்து வந்தது தப்பிதம்!" என்றான் தத்தன்.

"நீயும்தான் அதற்குச் சம்மதித்தாய்!" என்றான் வல்லபன்.

"நான் சம்மதித்த காரணம் வேறு. அரங்கன் கோஷ்டியுடன் புறப்பட்ட ஐந்து பேரில் அந்தப் பெண்ணுடைய மாமன் ஒருவர் என்று சொன்னார்கள். இப்போது அந்த மாமன் காஞ்சியில் இருக்கலாம் என்றும் சொன்னார்கள். நம் காரியத்திற்கு உதவியாக இருக்குமே என்று தான் அவர்களை அழைத்து வருவதற்குச் சம்மதித்தேன்!" என்றான் தத்தன்.

"நானும் அதே காரணத்திற்குத்தான் ஒத்துக் கொண்டேன். தவிர இதில் ஒரு தார்மீக நினைவும் இருக்கிறது!" என்றான் வல்லபன்.

"என்ன நினைவு?" என்றான் தத்தன்.

"நாம் இருவரும் உயிரோடு தப்புவதற்கு அவள் பெரிதும் உதவி இருக்கிறாள், அதை மறந்துவிடாதே!"

"ஆமாம். இவள் இல்லாவிட்டால் தப்பித்திருக்க முடியாதாக்கும். வைத்தியர் வீட்டைச் சேவகர்கள் சோதனை போட்டபோது நானாகத்தான் தப்பினேன். சேவகர்களின் குரல் கேட்டதும் ஓடிப் போய் புழைக்கடைக் கிணற்றுக்குள் இறங்கிக் கொண்டேன். அந்த ஆழமான கிணற்றில் கடைசி உறையில் நின்று கொண்டிருப்பது எவ்வளவு கஷ்டமாக இருந்தது தெரியுமா? மயக்கம் மயக்கமாக வந்தது!" என்றான் தத்தன்.

"ஓகோ! பெரிதாக அதைச் சொல்ல வந்துவிட்டாய். அதற்கு முன்னால் ஜன்னி கண்டு நினைவு இல்லாமல் படுத்திருந்தாயே, அப்போது என்ன நடந்தது என்று மறந்து விட்டாயோ?"

"என்ன நடந்தது?"

"உன்னை ஒரு சேவகன் அடையாளம் கண்டுபிடித் திருப்பான். அவள் அப்போது சாமர்த்தியமாக நடந்து கொண்டாள். 'நீ இறந்து விட்டாய்' என்று பொய் சொல்லி நடித்தாள். உன்னை ரகசியமாகக் குச்சிலுள் படுக்க வைத்தாள். உனக்கு இரவும் பகலும் இடையறாது பணிவிடை புரிந்தாள்.

"ஹூம்! இது ஒரு பேருதவியா?"

"ஆமாம்! பேருதவிதான்! அது மட்டுமல்ல, பெரிய அதிர்ஷ்டம்கூட!"

"அதிர்ஷ்டமா?"

"ஆமாம். ஒரு பெண் உனக்குப் பணிவிடை செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே?"

"நான் அதை அதிர்ஷ்டமாகக் கருதவில்லை!" என்றான் தத்தன் தீவிரமாக.

"நீ உயிர் தப்பியதைக் கூடவா?"

"ஆமாம். விதி இருந்தது. பிழைத்தேன் அவ்வளவுதான்!"

எந்தவித தாட்சண்யமும் இல்லாமல் தத்தன் அப்படிச் சொல்வது வல்லபனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் சிறிது நேரம் மௌனமானான்.

சிறிது நாழிகைக்குப் பிறகு தத்தன் தலை நிமிர்ந்தான். வல்லபன் பேசாமல் இருப்பது அவனுக்கு ஏதோ போல் இருந்தது. மெதுவாக அவனைப் பேச்சுக்கு இழுக்க நினைத்து.

"என் குறிக்கோள் அரங்கனைத் தேடிக் காண்பது!" என்றான்.

வல்லபன் சடக்கெனத் திரும்பினான்.

"என் குறிக்கோளும் அதுதான்!" என்றான் அவன்.

"அதை நான் அறிவேன்!" என்றான் தத்தன்.

"அதனால்தான் அந்தப் பெண் நம்மோடு கூட வரச் சம்மதித்தேன்!" என்றான் வல்லபன்.

"அவள் வருவதால் அரங்கனைக் கண்டுபிடித்து விட முடியுமா?" என்றான் தத்தன்.

"நிச்சயமாக முடியும் என்று சொல்லவில்லை. ஒரு வேளை அவளது மாமனைப் பார்க்க நேர்ந்தால் . . . . "

"நேர்ந்தால்தானே! நேராவிட்டால்?"

"நேராவிட்டால் என்ன?" என்று சொல்லி வல்லபன் நிறுத்தினான். பிறகு தொடர்ந்து, "இதை ஒரு இரக்கத்திற்குரிய காரியமாக நினைத்துக் கொள்கிறேன்!" என்றான்.

"எப்படி?"

"இந்தப் பெண்ணை அவள் பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் பாட்டனார் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார். அதை நிறைவேற்றி வைத்தால் பெரும் புண்ணியம்தானே!"

அப்போது திடீரென்று மஞ்சரி தன் அறையிலிருந்து எட்டிப் பார்த்து, "ஐயா, ஐயா! வாருங்கள்! வாருங்கள்! தாத்தா எப்படியோ பார்க்கிறார்!" என்று இரைந்து கூவினாள்.

இருவரும் ஓடினார்கள். அறைக்குள் பாட்டனார் வெடவெடத்துக் கொண்டு இருந்தார். அவர் கண்கள் சொறுகிக் கொண்டிருந்தன. தத்தன் அவர் பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டான்.

சிறிது நேரம் கழித்த பிறகு தான் அவர் விழித்தார். அருகில் இரு இளைஞர்கள் இருப்பதைப் பார்த்துக் கண்ணீர் விட்டார். அவர்களில் தத்தனைத்தான் அவரால் அடையாளம் கண்டுபிடிக்க முடிந்தது. அவன் கைகளைப் பற்றி கொண்டார்.

பிறகு அந்தப்பாட்டனார் மஞ்சரி பக்கம் மெதுவாகத் திரும்பி, "எனக்கு வெந்நீர் வேண்டுமே!" என்றார். மஞ்சரியும், அவளுக்கு உதவியாக வல்லபனும் உடனே எழுந்து போனார்கள்.

பாட்டனார் தத்தனது கைகளைப் பற்றிக் கொண்டார்.

"அப்பா! நான் வடக்கே காஞ்சியை நோக்கிப் போகிறேன். இந்தப் பெண் என்னுடைய பேத்தி. இவளுடன் தான் போகிறேன். போகிற வழியில் எனக்குக் கடும் ஜுரம் கண்டது. அதனால்தான் பூங்குளத்து வைத்தியர் வீட்டில் தங்கினேன். வைத்தியர் எனக்கு நன்றாகச் சிகிச்சை அளித்தார். எனினும் எனக்குத் தள்ளாமை கூடிவிட்டது. இதை என் அந்திம வேளை என்று நினைக்கிறேன். அதனால்தான் உன்னிடம் ஒன்று கூற வேண்டும். கடவுளாகப் பார்த்து தான் வைத்தியர் வீட்டிலே உன் பரிச்சயத்தை ஏற்படுத்தினார் என்று நம்புகிறேன். இப்படி அருகில் வாப்பா!" என்றார் பெருமூச்சுகளுடன்.

தத்தன் அவர் பக்கம் நகர்ந்தான்.

"ஆமாம். இந்தப் பெண் என் பேத்தி. இவளது பெற்றோர்களுக்கு இவள் ஒரே குழந்தை. இந்தக் குழந்தை பிறந்தால் அவர்கள் திருப்பதி யாத்திரை போகிறேன் என்று பிரார்த்தனை செய்து கொண்டார்கள். குழந்தை பிறந்து விட்டது. ஆனால், அதற்கு நோய் அடிக்கடி வந்ததால் அதை அவர்கள் திருப்பதிக்கு எடுத்துச் செல்லவில்லை. புருஷனும், மனைவியுமாகவே திருப்பதிக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் போன வேளையில்தான் கண்ணனூர்ப் போர் நிகழ்ந்தது. இதில் வெற்றி பெற்ற துருக்கியர்கள் எல்லா ஊர்களுக்கும் சென்று சூறையாடினார்கள். போகிற வழியில் அவர்கள் கையில் மாட்டிக் கொண்டு அந்தத் தம்பதியர் இறந்து விட்டார்கள். அவர்கள் ஊருக்குத் திரும்பவே இல்லை!" என்றார் அவர்.

"அது அந்தப் பெண்ணுக்குத் தெரியாதா?"

"தெரியாது. பத்து வயது வளர்ந்த பிறகுதான் பெற்றோர்களைப் பற்றி அவள் கேட்க ஆரம்பித்தாள்.

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணம் கூறிக் கொண்டு வந்தேன். காஞ்சிபுரம் மாமன் வீட்டில் அவர்கள் இருப்பதாகவும், நாட்டில் சுல்தான் ஆட்சி நடப்பதால்தான் அவர்கள் ஊருக்குத் திரும்பவில்லை என்றும் கூறி நாட்களைக் கடத்தினேன். கடைசியில் அந்தப் பெண்ணின் வற்புறுத்தலின் பேரில்தான் இந்த யாத்திரையை மேற்கொண்டிருக்கிறேன்!" என்றார் அவர்.

தத்தன் அதிர்ச்சியடைந்தான்.

வயோதிகரை உடனே பெரிய இருமல் ஆட்கொண்டது. அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. நெஞ்சை இறுகப் பிடித்துக் கொண்டார்.

நடு ஜாமம் வரை இருமல் நீடித்தது. பிறகு எல்லாம் நின்றுவிட்டது. பெரியவர் இறந்துவிட்டார்.

ஒரு காலைப்பொழுது பொன்னிறமாகத் திகழ்ந்து எங்கும் ரம்யமான பட்சிக் கீதங்கள் எழுந்து கொண்டிருந்த போது, திருநாராயணபுரத்தில் உள்ள மகான் வேதாந்த தேசிகரின் குடிலுக்கு கோபணா விஜயம் செய்தார்.

அவருக்கு முறைப்படி நமஸ்காரங்கள் செய்த பின் "சுவாமி! அடியேன் திருப்பதி வரை யாத்திரை போய் வரவிருக்கிறேன். ஆசீர்வதியுங்கள்!" என்றார்.

"வேங்கடவனது அருள் எப்போதும் இருக்கும்!" என்றார் தேசிகர்.

"சுவாமி! அடியேனுடைய அபிலாஷை மற்றொன்றும் உள்ளது" என்றார் கோபணா.

"என்ன அபிலாஷை?" என்றார் தேசிகர்.

"அடியேன் அரங்கனைத் தேட விரும்புகிறேன். அதற்கும், தங்களது அனுக்கிரகம் வேண்டும்" என்றார் கோபணா.

தேசிகரின் திருக்கண்களில் ஒளி கூடிற்று. முகத்தில் மந்தகாசத்தில் சுடர் வீசியது.

"கோபணா! இந்த அடியவனுடைய அனுக்கிரகம் எதற்கு? சர்வகல்யாண குணங்கள் உடைய பகவானின் தயை இருந்தால் போதுமே? அந்தத் தயையின் சொரூபம் யார்? வேங்கடவனது திருமார்பில் வீற்றிருக்கும் லட்சுமி தானே! அந்த தயையிடமே தயைக் கேட்டுப் பிரார்த்திக்கலாமே!" என்று கூறினார் அவர்.

அவர் திருக்கண்கள் அப்போது மூடின.

அவற்றினின்று ஆனந்த பாஷ்பங்கள் உதிர ஆரம்பித்தன.

16

திருக்கண்களிலிருந்து ஆனந்த பாஷ்யங்கள் உதிர வேதாந்த தேசிகர் என்னும் அந்த வைணவப் பெரியவர் மெய்மறந்து விதிர் விதிர்க்க உரோமாஞ்சனம் இட்டுப் பாட ஆரம்பித்தார்.

அநுசர சக்த்யாதி குணாம்

அக்ரேஸர போத விரசிதாலோகாம் |

ஸ்வாதீன வ்ருஷ கிரீசாம்

ஸ்வயம் ப்ரபூதாம் ப்ரமாணயாமி தயாம் ||

('தயை' என்னும் தேவி சக்தி, வீரியம், பலம் போன்ற குணங்கள் தன்னைத் தொடர்ந்து வருகிற வேலைக்காரர்களாகக் கொண்டிருக்கிறாள். ஞானம் என்னும் குணம் அவளுக்கு வெளிச்சம் காட்டி முன்னே செல்கிறது. வேங்கடமலையில் உள்ள வேங்கடவனைத் தனது வசமாக வைத்துள்ளாள். தானே ஆளுகின்ற அரசியாகவும் இருக்கிறாள். இத்தகைய தயை என்னும் தேவியே (தயா தேவி) சரணடையத் தகுந்தவள் என்று நான் அறுதி இடுகிறேன்.)

தம் வாழ்நாளில் தேசிகர் நூற்றுக்கும் அதிகமான நூல்களை இயற்றி அருளி உள்ளார்.

அவற்றுள் 'தயாசதகம்' என்னும் நூலில் வரும் ஒரு பாடல் இது.

தமது இளம் பிராயத்தில் திருப்பதி சென்றிருந்த போது தேசிகர் மனம் உருகிப் பாடிய நூற்றெட்டுப் பாடல்கள் தான் 'தயாசதகம்' என்னும் பெயர் பெற்றவை.

*த்வய மந்திரத்தின் விளக்கந்தான் இந்த 'சதகம்' என்று பல வைணவர்கள் கருதுவார்கள்.

அப்படிப்பட்ட சதகத்தின் ஒரு பாடலைத் தேசிகர் கோபணாவுக்குப் பாடிக் காட்டிவிட்டு, 'தயை'யின் உருவாக இருக்கும் லட்சுமிதேவியையே பிரார்த்திக்கும் படி அவரைப் பணித்தார்.

"தன்னைக் கொண்டே தன்னைப் பாடுவித்துக் கொள்ளும் பெருமான், தன்னைக் கொண்டே தன்னைத் தேடுவித்துக் கொள்வான். ஆகையால் கோபணா! உம்நெஞ்சில் உறையும் பெருமான் உம்மையே தூண்டிவிட்டுத் தம்மைத் தேடிக் கொள்ளச்

* ஓம் நாராயணாய நம:

சொல்கிறார். எது எது எப்போது நடக்க வேண்டுமோ, அது அது அப்போது நடக்கிறது. உமக்கு தெய்வ ஆஞ்ஞை பிறந்து விட்டது. நீர் பகவானைத் தேடிக் கொண்டு போகலாம்!" என்று பல பொருள்படும்படி கூறி,

கோபணாவுக்கு 'தயா சதகத்தின்' ஒரு ஏட்டுப் படியையும் கொடுத்து வாழ்த்தி வழி அனுப்பினார்.

வெளியே வந்த கோபணா தனது அந்தரங்க ஆட்கள் மூவருடன் குதிரை ஏறிக் கொண்டு கிழக்கு திசை நோக்கிப் பிரயாணப்படலானார்.

இவ்வாறு அரங்கனைத் தேடி இரண்டாவது கோஷ்டியும் கிழக்கு நோக்கிப் புறப்பட்டது.

வல்லபனும் தத்தனும் கடைசியாகத் தங்கு மண்டபத்தை விட்டதில் இருந்து வேறு தடைகள் ஏதுமின்றிப் பிரயாணம் செய்து காஞ்சிபுரத்தை அடைந்தார்கள்.

காஞ்சீபுரம் அப்போது சம்புவராயர் ஆட்சியில் இருந்தது. ராஜகம்பீரம் என்பது அந்த ராஜ்யத்தின் பெயர். இந்த ராஜ்யத்தின் எல்லைக்குள் நுழைய இளைஞர்கள் தயங்கினாலும், தங்கள் மேல் மஞ்சரி என்னும் இளம் பெண்ணின் உருவில் ஒரு சுமை ஏற்றப்பட்டிருந்த காரணத்தால், அந்த ராஜ்யத்துள் எச்சரிக்கையோடு நுழைந்து சுற்று வழி மார்க்கங்கள் மூலம் பிரயாணித்துக் காஞ்சீபுரத்தை அடைந்தார்கள்.

அந்த நகரைக் காலை வேளையிலே அடைந்த ராஜவல்லபன் அங்குள்ள வீதிக் காட்சிகளைப் பார்த்து பிரமித்து நின்றான்.

ஒரு யானை மீது திருமஞ்சனக் குடம் வைத்து மேள தாளங்கள் தொடர, கவரிகள் சிலுசிலுப்ப, திருச்

சின்னங்கள் சப்தமிட, பெரிய குடைகள் நிழல் வீச ஊர்வலம் ஒன்று போய்க் கொண்டிருந்தது.

அது போன்ற ஊர்வலத்தை வல்லபன் இதுவரை பார்த்ததில்லை.

தவிர, நகரத்தின் வீதிகளில் கலகலவெனக் கூட்டமும், போவோர் வருவோரின் நெரிசல்களும், வண்டிகளின் ஓசைகளும், பல்லக்குகளின் எச்சரிக்கை களும், சாதாரண மக்களின் நிச்சிந்தையான முகங்களும் வல்லபனுக்குப் பெரும் ஆச்சரியத்தைத் தந்தன.

ஊரில் ஏதோ திருவிழா நடந்ததால், எங்கும் மாவிலைத் தோரணங்களும், கமுகு, வாழை, பச்சிலைகள் கட்டிய நிழற்பந்தல்களும், அவற்றின் விதானத்தில் வெண் துணிகளால் அலங்கரிக்கப்பட்ட விதவித சித்திர உருவங்களும், கீழே அகலமான வீதியில் சுத்தமாகவும், பெரியதாகவும் போடப்பட்டு இருந்த மாக்கோலங்களும் ஏதோ ஒரு புது உலகத்திற்குள் நுழைந்தாற்போல் மயக்கத்தை உண்டு பண்ணின.

ஆங்காங்கே திண்ணைகளிலும், மாளிகைக் கூடங்களிலும் திவ்வியமான பிரபந்தங்கள் அழகாக சேவிக்கப்படும் சந்தத் தமிழ் ஓசைகளும், அவற்றிற்கு இணையானாற்போல் கோஷ்டியாகப் பாடப்படும் வேதங்களின் இனிய வடமொழி ராகங்களும் அவனைப் பெரிதும் கவர்ந்தன.

"இப்படித்தானே தத்தா, தமிழ் பேசும் நாடுகள் யாவுமே அந்நாளில் இருந்திருக்க வேண்டும்? இவ்வளவு கோலாகலமாகத்தானே ஜனங்களும் வாழ்ந்து இருக்க வேண்டும்? இன்று சுல்தான் ஆட்சியிலே யாவும் மறைந்து மண்மூடிப் போயினவே!" என்று அங்கலாய்த்தான் வல்லபன்.

மஞ்சரியும் இதுவரை சுல்தான் ஆளும் நாட்டிலே வாழ்ந்ததால், (கொங்கு நாடு ஒய்சளர் வீழ்ச்சிக்குப் பிறகு மதுரை சுல்தான் கைக்கு வந்திருந்தது.) அவளுக்கும் காஞ்சியின் காட்சிகள் அதிக பிரமிப்பையும் ஆச்சரியத்தையும் உண்டு பண்ணின.

மூவரும் ஒரு சத்திரத்தில் சென்று தங்கிக் கொள்ள, அந்தப் பெண்ணின் மாமனை எப்படியாவது தேடி அவரிடம் அவளை ஒப்படைத்து விட வேண்டும் என்ற கவலையால் மேலே செய்வது என்ன என்று இரு இளைஞர்களும் தனியே ஆலோசித்தார்கள்.

பெண்ணைச் சத்திரத்தில் இருக்கச் சொல்லிவிட்டுப் பகல் முழுவதும் நகரில் இருவரும் தேடித் திரிந்து அந்த மாமனைக் காண முடியாமல் திரும்பினார்கள். "என் மாமன் பெயர் சிங்கழகர்" என்று சொல்லியிருந்தாள்.

இதனால் மேலும் விசனப்பட்டு, என்ன செய்வோம் என்று நினைக்கும் வேளையில் மாலைப் பொழுது ஏறி வர, தத்தன் வல்லபனை நோக்கி,

"வல்லபா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஊரில் எவ்வளவோ வைணவ மடங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்றிலும் சென்று இரவே விசாரித்து வருகிறேன். பகல் பொழுது போய்விட்டதால் நீ அவளுக்குக் காவல் இரு!" என்று கூறினான்.

பிறகு அவன் அவசரமாகவே வெளியே புறப்பட்டுப் போனான். இரவு விரிந்து வானம் எங்கும் நட்சத்திரப் பரல்களாகப் பரந்திருந்தன.

கீழே, நகரில் அந்த வானம் பிரதிபலிக்கிறதோ என்னும் வகையில் சுடர் விளக்குகள் எங்கும் மோகனமாக மினுமினுக்கிக் கொண்டிருந்தன.

சத்திரத்தின் பெரிய முற்றத்தில் இருந்த துளசி மாடத்தின் முன்னிலையில், இரவின் குளிர்ச்சி மெதுவாகக் கீழே படர்ந்து வரும் வேளையில், வெகு நாட்களுக்குப் பிறகு ஓய்வு கிடைப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது போல் வல்லபன் ஒரு மேடை மீது அமர்ந்திருக்க,

உள்ளே சத்திரத்து அறையிலிருந்து வெளிவந்த மஞ்சரி அவனுக்கு எதிராக உள்ள மற்றொரு கல்மேடையில் தயங்கியவாறு அமர்ந்து கொண்டாள்.

அமர்ந்தவள், "அவர் தனியாகப் போயிருக்கிறாரே. ஏதாவது ஆபத்து விளையாதோ?" என்று மெல்லக் கேட்க,

அவளை ஏறிட்டுப் பார்த்த வல்லபனும், "அவன் ஒரு நல்ல சூரன்! எப்படியும் வந்துவிடுவான்!" என்று சமாதானம் கூறினான்.

தத்தன் மீது அந்தப் பெண்ணுக்கு அப்போது ஏற்பட்டிருக்கும் கரிசனம் அவன் மனத்தை ஏதோ செய்தது.

வரும் வழியெல்லாம் அவளை அவன் கவனித்து வந்திருக்கிறான். தத்தனை உபசரிப்பதிலோ, அவனுக்குத் தேவைப்படுவதை நுணுக்கமாக உணர்ந்து நிறைவேற்று வதிலோ அவள் காட்டிய சிரத்தை அவனை ஆச்சரியப்பட வைத்திருக்கிறது.

அருந்துவதற்கு நீர் எடுத்துக் கொடுப்பதிலிருந்து உலர்த்திய துணிகளை அவனுக்குக் கொடுக்கும் வரை எத்தனை வித இங்கிதங்கள், பாங்குகள், அனுசரணைகள், நளினங்கள், லளிதங்கள்!

இவைகளைக் காணும் போதெல்லாம் ஒரு பெண் செய்யும் அன்பு நிறைந்த சேவைகள் எவ்வளவு இனிமையானவை என்பது அவனுக்கு முதன்

முதலாகத் தெரிந்தாலும், கூடவே அவை அவன் மனத்தில் விவரமறியா வேதனைகளையும் எழுப்பிவிட்டன.

தத்தனின் இடத்தில் தன்னையும், மஞ்சரியின் இடத்தில் மகர விழியாளையும் வைத்துப் பார்த்து, 'நமக்கு அந்த ராஜகுமாரி சேவை செய்தாலும் இப்படித்தானே செய்வாள்!' என்று அடிக்கடி எண்ணிப் பார்த்துக் கொண்டான்.

'ஆனால் நான் நினைப்பது எல்லாம் கற்பனைதான்! நிஜத்தில் நடக்காது!' என்ற எண்ணம் மேலே எழுந்து ஒரு வேதனையும் அவனை நிறைத்துக் கொண்டிருந்தது.

அப்படி நினைக்கும் போதெல்லாம் மஞ்சரியின் உபசரணைகளுக்கு தத்தன் ஆளாவது கூட அவன் மனத்தில் சொல்லொணாத் தாபத்தை எழுப்பிக் கொண்டிருந்தது.

இப்போது இந்தச் சத்திரத்து முற்றத்தில் அவன் எதிரே மஞ்சரி அமர்ந்து கொண்டு தத்தனைப் பற்றிக் கரிசனத்தோடு கேட்ட போது, வல்லபனுக்கு மீண்டும் அந்தத் தழல்தான் எழுந்து கொண்டது.

'என் மகர விழியாளுக்கு என் மீது இந்தக் கரிசனம் இருக்குமா?' என்று நினைத்தான் அவன்.

மகரவிழியின் நினைவு வந்ததும் உடன் அவன் நினைவு பரபரத்தது. அவளைப் பற்றி இந்தப் பெண்ணிடம் கேட்கலாமே! இப்போது தத்தன் இங்கு இல்லையே! இது நல்ல தருணம் அன்றோ! என்று நினைத்தான்.

உடனே அவன் மஞ்சரியைப் பார்த்து, "ஆமாம், உன்னிடம் ஒன்று கேட்க வேண்டுமே! நல்லூரில் இருந்த போது சேவகர்கள் வந்தார்களே! அவர்கள்

ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு வந்திருக்க வேண்டுமே! நீ பார்த்தாயா?" என்று கேட்டான்.

"பார்த்தேனா? இரண்டு நாட்கள் அவள் பக்கத்தி லேயே இருந்தேன். அவளுக்கு உடம்பு சரியில்லை. அதனால்தான் அந்த ஊரில் சேவகர்கள் தங்கி விட்டார்கள்!" என்றாள் மஞ்சரி.

"அப்படியா? என்ன உடம்பு?" என்றான் வல்லபன் பதைத்துக் கொண்டு.

"நல்ல ஜுரம், வயிற்றில் ஒரு வலி, பிரஞ்ஞை இல்லாமல் கிடந்தாள்!" என்றாள் மஞ்சரி.

"எங்கே கிடந்தாள்?"

"முதலில் ஆதுர சாலையில் கிடந்தாள். பிறகு அங்கே ஆட்கள் நிறைய வருகிறார்கள் என்று சொல்லி அன்றிரவே வேறு வீட்டுக்குக் கொண்டு போய் விட்டார்கள். யாரையும் அந்தப் பெண்ணிடம் நெருங்க விடவில்லை. பார்க்கவும் விடவில்லை. ரகசியமாக வைத்திருந்தார்கள்."

"உன்னை மட்டும் நெருங்க விட்டார்களா?"

"என்னையும் வைத்தியரையும் மட்டும் நெருங்க விட்டார்கள். வீட்டுக்கு அவளை எடுத்துச் சென்ற பிறகு என்னைக் கூட நெருங்க விடவில்லை. எங்கள் இருவரையும் அவர்கள் பலமாக எச்சரித்து விட்டுச் சென்றார்கள். அவளைப் பற்றி வெளியே மூச்சு விடக் கூடாது என்று. ஆதுர சாலைக்கு வருகிறவர்களைக் கண்காணிப்பதற்காக ஒரு நாடகம் கூட நடத்தினார்கள்!"

"என்ன நாடகம்?"

"சேவகன் ஒருவனைக் காலில் அடிபட்டுக் கிடப்பது போல் அங்கே படுக்க வைத்திருந்தார்கள். அது பொய் என்பது எனக்கு அப்புறந்தான் தெரிந்தது."

பிறகு அவள் அந்த இளம் பெண்ணைப் பற்றி விவரித்தாள். அவள் நிரம்ப அழகாக இருந்தாள் என்றும், ஒரு ராஜகுமாரியாக இருக்கலாம் என்றும் கூறினாள். சேவகர்கள் அவளை ஒரு பிரபுவின் மகள் என்றார்களாம். ஆனால் அந்தப் பெண் பேசவே யில்லை. எப்போதும் ஒரு மயக்கத்திலேயே இருந்தாள். அதுதான் மஞ்சரிக்கும் அந்த வைத்தியருக்கும் அச்சமாக இருந்தது. அவள் ஒரு கடத்தப்பட்ட பெண் என்று அவளும் அவரும் ஊகித்துக் கொண்டார்கள்.

அவள் சொல்லச் சொல்ல, வல்லபன் மேலும் விசாரித்துக் கொண்டே போனான். மகரவிழி எப்படிப் பேசினாள், எப்படி விழித்தாள், எப்படி நடந்தாள், எப்படிப் படுக்கையில் படுத்திருந்தாள் என்றெல்லாம் நுணுக்கமாக விவரம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

"உங்களுக்கு அவள் தெரிந்தவளா?" என்று கேட்டாள் மஞ்சரி கடைசியில் சிரித்துக் கொண்டே.

"தெரியாது. வெறுமனே கேட்டேன். அவள் மீது ஒரு அனுதாபந்தான்!" என்றான் வல்லபன்.

இரவில் வெகுநேரம் கழித்துத்தான் தத்தன் சத்திரத்திற்குத் திரும்பினான்.

அதற்குள் வல்லபன் படுத்திருந்தாலும், மஞ்சரி விழித்துக் கொண்டே அவனுக்காகக் காத்திருந்தாள்.

அவன் வந்ததும் கால் தண்டை சினுங் என்று சப்திக்கத் துள்ளி எழுந்து, "உணவுக்கு நாழியாகவில்லையாக்கும்!" என்று உரிமையோடு பொய்யாகவும் செல்லமாகவும் கடிந்து கொள்வது வல்லபனின் காதுகளில் விழுந்தது.

தத்தன் அவளுக்கு ஏதாவது மறுமொழி சொல்வானா என்று வல்லபன் ஆவலோடு கவனித்தான். எதுவும் சொல்லவில்லை.

உடன், "என் மாமனைக் கண்டீர்களா?" என்று மஞ்சரி ஆவலோடு கேட்பது கேட்டது.

"காணவில்லை" என்று சிறிது நாழிகைக்குப் பிறகே தத்தன் மறுமொழி சொன்னான்.

"அவர் எங்கிருப்பார் என்றாவது தெரிந்ததா?"

"இல்லை!"

"நான் துரதிர்ஷ்டக்காரி! காஞ்சிக்கு வந்தும் என் பெற்றோர்களை நான் இன்னும் அடையவில்லை?" அவள் குரல் சோகத்துடன் கேட்டது.

பிறகு தத்தன் வல்லபன் இருக்கும் இடத்திற்கு வந்து அமர்ந்தான். இரவு வெகு நேரம் இருவரும் ஆலோசனை பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

பொழுது புலர்ந்து ஒரு நாழிகை ஆன போது தத்தன் மஞ்சரியைத் தேடி வந்தான்.

எளிமையான முறையில் சிங்காரித்துக் கொண்டிருந்த மஞ்சரி காலையின் இளவெயிலில் பொன் போல் விகசித்துக் கொண்டு இருந்தாள்.

"மஞ்சரி!" என்றான் தத்தன்.

முதன்முறை தத்தன் தன்னைப் பெயர் சொல்லி அழைப்பதைக் கண்டு புளகிதம் அடைந்த அந்தப் பேதை ஆனந்தமுடன் திரும்பி அவனைப் பார்த்தாள்.

"உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டுமே!" என்று கூறித் துளசி மாடத்தின் அருகில் அமர்ந்தான் தத்தன். அவளும் அமர்ந்தாள்.

அதன்பின் ஒரு நாழிகை நேரத்தில் தத்தன் சிறிது சிறிதாகப் பல விஷயங்களைக் கூறிக் கடைசியில் அவளது பெற்றோர்கள் உயிரோடு இல்லை என்பதை மெள்ள மெள்ளக் கூறினான்.

ஒரு பொன்னிற மலர் அப்போது மெள்ள வாடியது. அதன் தூய சிவப்பு நிறம் மாறி வெளிறியது. அதன் மடல்கள் வெம்மைப் பெருக்கால் சோர்ந்து போய் சரிந்து விழுந்தன.

கண்ணீர் வருவதைப் பார்த்துத்தான் அவள் உயிருள்ளவள் என்று கூற முடியும். மற்றபடி அவள் ஒரு சிலையாக இருந்தாள்.

துக்கத்தின் முதல் ஆர்ப்பரிப்புகள் வடிவதற்குப் போதிய அவகாசம் கொடுத்த பின்னர் தத்தன் மெதுவாக, "மஞ்சரி!" என்று அழைத்தான்.

அவள் நிமிரவில்லை.

"மஞ்சரி!" என்றான் மீண்டும்.

அவள் நிமிரவில்லை.

"மஞ்சரி! இதோ பார். என்னைப் பார்!" என்றான்.

அவள் உடல் மெள்ள உலைந்தது. சோகம் பிழியும் வதனத்தை நிமிர்த்தி மழை பொழியும் கண்களுடன் அவனைப் பார்த்தாள்.

அவன் முகத்தில் அபரிமிதமாய் ஒரு இரக்கம் தேங்கி இருந்தது. மிகுந்த பரிதாபத்துடன் அவளை அவன் பார்த்தான். கண்களிலே ஈரம் கசிந்தது.

"மஞ்சரி! நாட்டில் நடந்த படையெடுப்புகளில் எத்தனை பெற்றோர்கள் மடிந்தார்கள்! எத்தனை பெரியவர்கள் உயிர் இழந்தார்கள்! இவர்கள் யாவரும் சொர்க்கத்தில் வாழக் கடமைப்பட்டவர்கள். பெற்றோர் களைப் பற்றி அதிகம் துக்கியாதே!" என்றான் தத்தன்.

அவள் கண்களைத் துடைத்தாள். முகம் தேம்பியது.

"ஐயா. . . . இந்தக் காஞ்சியை மிதித்ததும் என் பெற்றோர்களைப் பெற்றேன் என்று நினைத்தேன். இப்போது தாங்கள் கூறிய செய்தியிலிருந்து இழந்தேன் என்று நினைக்கிறேன். ஆக நினைப்பிலேயே என் பெற்றோர்களைப் பெற்றேன். நினைப்பிலேயே அவர்களை இழக்கிறேன். ஒரு நினைப்பை உண்டு பண்ணினேன். அந்த நினைப்பையே அழிக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் எல்லாம் நினைவிலேயே நடந்து விட்டது!" என்றாள் விம்மலுடன்.

அவள் ஆழமான அறிவுடையவள் என்பதை அவளது பேச்சிலிருந்து தெரிந்து கொண்ட தத்தன் வெகு ஆச்சரியப்பட்டான்.

வயது இளசானாலும் நினைவு முதிர்வுதான்! என்று நினைத்தான்.

அவளை அவன் பலவாறாகச் சமாதானப்படுத்த முயன்றான். வெகுநேரம் அதில் ஈடுபட்டிருந்தான்.

17

பின்னர் தத்தன், 'இவள் தனக்குள்ளேயே ஆறட்டும். அப்போதுதான் சரியாவாள்' என்று எண்ணி மஞ்சரியை அங்கேயே விட்டுவிட்டு உள்ளே போனான்.

உள்ளே நுழையுமுன் இரக்க மிகுதியால் அவளை ஒரு முறை பார்த்தான். எப்படி கலகலவென்று இருப்பாள் இவள்? இப்போது ஒரு நிழல் போல்

வற்றிவிட்டாளே, என்று அவனுள் ஒரு நினைவு ஓடியது.

பிறகு ஒரு நாழிகையில் வல்லபனுடன் அவன் திரும்பி வந்து, "வா, போகலாம்!" என்று கூறினான்.

மஞ்சரி நிமிர்ந்து பார்த்தாள்.

"எங்கே?" என்றாள் மெதுவாக.

"உங்கள் மாமனின் வீட்டுக்கு!" என்றான் தத்தன்.

"கண்டுவிட்டீர்களா?" என்றாள் சிறிது பரபரப்புடன்.

"நேற்றைக்கே கண்டுவிட்டேன்!"

"என்னிடம் இல்லை என்றீர்களே!"

"பொய் சொன்னதற்குப் பொறுத்தருள். உன் பெற்றோர் விஷயத்தை உன்னிடம் சொன்ன பிறகு தான் உன்னை அழைத்துப் போக விரும்பினேன்!" என்றான் தத்தன் வருத்தத்துடன்.

அவள் பார்வை மீண்டும் நிலைகுத்தி நின்றது. உள்ளே எழும் பொருமல் அவள் உதடுகளை நடுக்கியது. தன் கண்ணீரை மறைப்பதற்காகத் தலைகுனிந்தாள். பிறகு கண்களை மூடிக் குபுக்கென்று அழுதாள்.

"என் பாட்டனார் எனக்கு இதமானதைத்தான் செய்வார். என் பெற்றோர்களைப் பற்றி என்னிடம் சொல்லாமலிருந்தது கூட என் நன்மையைக் கருதிதான் என்று நினைக்கிறேன். ஆனால் தீமையும் அதனால் நேர்ந்துவிட்டது. நான் யௌவனம் அடைந்த இதுநாள் பரியந்தம் என் பெற்றோர்களை நினைத்து நினைத்துப் பெரிய கனவுகளை வளர்த்து விட்டேன். இப்போது அவர்கள் இல்லை என்பது

எனக்குப் பெரிய சூனியத்தைத் தருகிறதே. என் பாட்டனார் என் சிறு வயதிலேயே சொல்லியிருக்கக் கூடாதா?" என்று நொந்து கொண்டாள் அவள்.

சிறிது நேரம் அவள் விசித்தாள்.

"புறப்படுகிறாயா?" என்றான் தத்தன் மெதுவாக.

அவள் மறுமொழி கூறவில்லை. அந்த இடத்தை விட்டு அகன்று உள்ளே போனாள். தனது துணிமணிகள் அடங்கிய சுருக்குப் பையை எடுத்து வந்தாள். மூவரும் புறப்பட்டார்கள்.

சிங்கழகர் என்ற மஞ்சரியின் மாமன் ஒரு நந்தவனத்தை அடுத்த மண் வீட்டில் வசித்து வந்தார். விஷக்கடி பாதித்ததால் அவருக்கு அதிகமாக நடமாட முடியாது. வயது அறுபது இருக்கும்.

வல்லபன், தத்தன், மஞ்சரி மூவரும் வந்த போது அவர் அதிசயப்பட்டு, அவர்களுக்கு ஆதனம் அளித்து உபசரித்து, "அடியேனால் ஏதாவது ஆக வேண்டுமா?" என்று விநயமாகக் கேட்டார்.

தத்தன் அவரிடம் மஞ்சரியைக் காட்டி அவள் யார் என்பதை விளக்கினான். அவ்வளவுதான்! சிங்கழகர் அதிசயமும், சோகமும் ஒருங்கே அடைந்தார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. மஞ்சரி அருகே சென்று அவள் தலையை வருடிக் கண்ணீர் உகுத்தார். இளைஞர்களைப் பார்த்து, "கடைசிக் காலத்தில் பற்றில்லாமல் வாழ நினைத்தேன். கடவுள் ஒரு சுமையைக் கொடுத்து விட்டாரே! எனினும் இது எனக்குப் பாந்தமான சுமை! சொந்தமான சுமை. இவளை வைத்துக் காப்பாற்றுவேன்!" என்று கூறினார்.

இளைஞர்கள் இருவரும் சிறிது நேரம் பேசியிருந்து விட்டு மறுநாள் மீண்டும் வருவதாகக் கூறிவிட்டுப் புறப்பட்டார்கள். நந்தவனத்தை அவர்கள் தாண்டுவதற்குள், "ஐயா!" என்று குரல் கேட்டுத் திரும்பினார்கள்.

மஞ்சரி கூப்பிடுவதைப் பார்த்து வல்லபன், "தத்தா நீ போ!" என்றான்.

தத்தன் மஞ்சரி அருகிலே வந்தான். மஞ்சரி நிமிர்ந்து பார்த்ததும் குபுக்கென்று கண்ணீர் வடித்தாள். அவளது நெஞ்சம் தேம்பியது.

"என்ன மஞ்சரி?" என்றான் அவன்.

"இல்லை" என்றாள் அவள் விசும்பலுடன். "வந்தீர்கள், உடனே புறப்பட்டு விட்டீர்களே! என் மனம் படும்பாட்டை சிறிதாவது அறிந்தீர்களா?" என்று கேட்டாள்.

"நாங்கள் தான் நாளைக்கு வரப் போகிறோமே, மஞ்சரி!" என்றான் தத்தன்.

அவள் மேலும் தேம்பினாள்.

"இந்தப் புதிய இடம் எனக்கு என்னவோ போல் இருக்கிறது. என் மாமன் இங்கே இருக்கிறார் வாஸ்தவமே. ஆனால் உங்களை விட அவர் அந்நியமாகத் தோன்றுகின்றாரே! அவரை விட உங்களிடம் அதிகம் பழகிவிட்டேன். ஆதலால் அவரைக் காட்டிலும் நீங்கள் தான் எனக்கு ஏதோ உறவு போலத் தோன்றுகிறது. அப்படி இருக்க, உங்களை எல்லாம் விட்டுச் சீக்கிரம் பிரியவே கஷ்டமாக இருக்கிறது. நிரந்தரமாகப் பிரிய வேண்டும் என்று நினைக்கும்போது அது அதிக சோகமாக இருக்கிறது!" என்று கூறினாள்.

தத்தன் அவளைச் சமாதானப்படுத்தித் தேறுதல் வார்த்தைகள் பல சொல்லி அவளது வருத்தத்தைச் சிறிதளவு மிதப்படுத்தினான்.

காஞ்சியில் இருக்கும் வரை தினம் வந்து பார்ப்பதாகக் கூறிவிட்டு விடை பெற்றுப் போனான்.

சத்திரத்திற்குத் திரும்பியதும் மஞ்சரியின் தேம்பிய முகம் அடிக்கடி நினைவில் வந்தது. அது அவனுக்கு அதிசயமாக இருந்தது.

பாவம்! அந்தப் பெண்ணிடம் எவ்வளவு கொடுமையாக நடந்து கொண்டிருந்தோம். அதை நினைத்தால் எவ்வளவு வருத்தமாக இருக்கிறது?

மறுநாள் காலையில் இளைஞர்கள் சிங்கழகா் வீட்டிற்குச் சென்றார்கள். மஞ்சரி அவர்களைக் கண்டதும் மிகுதியாகச் சந்தோஷப்பட்டாள். மனை போட்டு அமர வைத்து விசிறி கொண்டு கொடுத்து, குளிர்நீர் கொணர்ந்து வைத்து, சடக்கென உள்ளே சென்று காய்ச்சிய பாலையும் கொண்டு வந்து அளித்தாள்.

ஆசுவாசமாக அமர்ந்து கொண்டு சம்பிரமப் பேச்சுக்களில் சிறிது நேரம் ஈடுபட்ட பிறகு, இளைஞர்களும் அரங்கனைப் பற்றி அறிய ஆவல் மிகுந்தவர்களாய், "சுவாமி!" என்று தொடங்கி, தாங்கள் காஞ்சி வந்திருக்கும் காரியத்தையும், தாங்கள் யார் என்பதையும் விஸ்தாரமாகக் கூறினார்கள்.

அவ்வளவில் ஆதனம் விட்டெழுந்த சிங்கழகர், இளைஞர்களை நோக்கிப் பாய்ந்து வந்து அவர்களை ஆரத் தழுவிக் கொண்டு, "என்ன சொன்னீர்? என்ன சொன்னீர்? அரங்கனைத் தேடி வந்தேன் என்று தானே சொன்னீர்கள். அரங்கனைத் தேடுவாரும் உண்டோ?" என்று கூறித் தழதழத்தார்.

பின்பு வல்லபனை இன்னார் என்று இன்னும் ஒரு முறை கேட்டுத் தெரிந்து கொண்டு முன்னிலும் பல மடங்காய் ஆனந்தம் பெருக, அவனைத் தழுவிக் கொண்டு,

"அப்பா, குழந்தாய்! உன் தகப்பனாரை அப்படியே உரித்தாற்போல் பிறந்திருக்கிறாயே! அதே தேஜஸ், அதே வீரியம், அதே கம்பீரம்! எல்லாம் உன்னிடம் சோபிக்கிறதே! அரங்க நகரையும், மக்களையும், அரங்க நாதரையுமே ரட்சிக்க என்ன பாடுபட்டார் அவர்! உன் தாயார் வாசந்திகா எத்தனை சீலமும், ஞானமும் உள்ளவளாகத் திகழ்ந்தாள். எல்லோரையும் விட்டுப் பிரிந்து எத்தனை நாட்களாகி விட்டன!" என்று கண்ணிலே நீர் சொரியக் கூறினார் அவர்.

பின்னர் அவர், "அரங்கனைத் தேடுவாரும் இனி உண்டோ! நாடுகள் அழிந்து, சமயங்கள் சீர்குலைந்து விட்டனவே!" என்று வெதும்பிப் பெரிதாக அரற்றினார்.

வல்லபன் உடனே அவரை நோக்கி, "சுவாமி! கடைசியாக மேல் கோட்டையிலிருந்து அரங்கப் பெருமானை எடுத்துப் புறப்பட்ட ஐவர்களில் தாங்களும் ஒருவர். தங்களுக்கு நேர்ந்ததை எல்லாம் அறிய ஆவல் உள்ளவராக இருக்கிறோம். அன்றியும் அரங்கன் இப்போது எங்கிருக்கிறார், அவரை நாங்கள் காண முடியுமா என்று அறிய வேட்கை உடையவர்களாக இருக்கிறோம். தாங்கள் எல்லாவற்றையும் விவரமாகக் கூற வேண்டும்!" என்று வினயத்தோடு கேட்டுக் கொண்டான்.

சிங்கழகரும் நல்லதென்று யோசித்து, நடந்த விவரங்களை எல்லாம் ஒன்று விடாமல் கூற ஆரம்பித்தார்.

"பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் அரங்கரின் விக்கிரகத்தை மேல்கோட்டை என்னும்

திருநாராயணபுரத்தில் எழுந்தருள வைத்துக்கொண்டு அந்த ஊரிலேயே தங்கிவிட்ட பக்த கோடிகளில் அடியேனும் ஒருவன்.

நாங்கள் ஸ்ரீரங்க நகரிலிருந்து அரங்க விக்கிரகத்தோடு கோஷ்டியாகப் புறப்பட்டவர்கள்.

மொத்தம் அறுபது பேர் புறப்பட்டோம்.

யாத்திரையில் நடந்த கடினமான சோதனைகளில் பலர் எங்கள் கோஷ்டியை விட்டுப் பிரிந்து விட்டார்கள்.

நோய் வாய்ப்பட்டுச் சிலர் அங்கங்கே தங்கி விட்டார்கள். அசக்தியும் களைப்பும் அதிகமாகியதால் சிலர் அரங்கனை விட்டுப் பிரிந்தார்கள்.

இப்படிப் பலரும் பிரிந்து போன பிறகு, எஞ்சிய சில பேர்களுடன் கன்னட நாட்டிலுள்ள மேல் கோட்டையில் தங்கி இருந்தோம்.

பல்லாண்டுகள் தங்கிய பின்னர் ஒய்சள அரசர் வல்லாள கண்டர் மதுரை சுல்தானுடன் சண்டை இடுகிறார் என்று கேள்விப்பட்டு, மேல்கோட்டையை விட்டுப் புறப்பட்டு, கொங்கு நாட்டிலுள்ள சத்தியமங்கலத்திற்குள் நுழைந்தோம்.

ஆனால் யுத்தத்தில் ஒய்சள வல்லாள கண்டர் கொல்லப்பட்டார் என்ற செய்தி கிட்டியதும், மிகவும் விசனப்பட்டு மேல்கோட்டைக்கே திரும்பிவிட்டோம். இந்தச் சமயத்திலே, சுல்தானியர்கள் முன்னிலும் அதிகமாகக் கோபங்கொண்டு, ஒய்சள அரசருக்கு உட்பட்ட நாடுகளையும், கோவில்களையும் சூறையாடத் தொடங்கினார்கள். அந்தச் செய்தி எங்கும் பரவியது.

குறிப்பாக அரங்க விக்கிரகத்தைத் தேடி மேல் கோட்டைக்கு வருவார்கள் என்றும் செய்தி பரவியது.

பீதி அடைந்த நாங்கள் அரங்க விக்கிரகத்தை எழுந்தருளவிட்டுக் கொண்டு வேறு எங்கேயாவது தூர தேசம் போய்விட எண்ணினோம்.

ஆனால் வட நாட்டிலே எங்கும் துருக்கியர் ராஜ்யம் ஆகிவிட்ட படியினால் அங்கே போக விரும்பாதவராய் கிழக்கே, திருப்பதி நோக்கிப் போய் அங்கே தங்கி விடத் தீர்மானித்தோம்.

இப்படித் தீர்மானம் பண்ணிய பேர்கள் மொத்தம் ஐந்து பேர்தான். திருவரங்கத்திலிருந்து புறப்பட்ட அறுபது பேர்களில் மிஞ்சியவர்கள் இந்த ஐந்து பேர்கள்தான்.

இவர்களில் அடியேன் சிங்கழகர், ஒருவர் மாலழகர், மற்ற மூவரும் ஒருவருக்கொருவர் பந்துக்களான கொடவர்களான குருகூர்தாசர், சீராமதாசர், வில்லிப்புத்தூர் தாசர். இதில் சீராமதாசர் என்பார் குருகூர்தாசரின் மகன். வில்லிபுத்தூர்தாசர் என்பார் சீராமதாசரின் தாய் மாமனாகும்.

நாங்கள் ஐந்து பேரும் அரங்கனை எம்முடன் சேர்ந்து அணைத்துக் கொண்டு புறப்பட்டோம். அரங்கனுக்குச் சொந்தமான பொன் நகைகள், அணிமணிகள் யாவற்றையும் ஒரு சுமையில் கட்டி எடுத்துக் கொண்டோம்.

அரங்க விக்கிரகம் நல்ல கனமாக இருந்ததால், ஒருவர் மாற்றி ஒருவர் சுமந்து கொண்டு சென்றோம்.

வழியில் நாடெல்லாம் தக்க அரசின்றிக் கொந்தளித்துக் கொண்டிருந்ததால், ஜாக்கிரதையாக யாருக்கும் தெரியாமல் நடந்து, அங்கங்கே வைணவர்கள் உதவியைப் பெற்று இரகசியமாகத் தங்கி விட்டு கடைசியில் நாற்பது நாட்கள் கழிந்த பின்னர் கிழக்கே சந்திரகிரி கோட்டையை அடைந்தோம்.

அப்போது சந்திரகிரி கோட்டையை சுல்தானியரின் ஆட்கள் சூறையாடுகிறார்கள் என்று கேள்விப்பட்டு, "கடைசியில் இந்த இடத்திற்கா வந்து சேர்ந்தோம்?" என்று பிரலாபித்துக் கொண்டு, கோட்டையைத் தவிர்த்து விட்டுக் காட்டு மார்க்கத்தில் இறங்கி விரைவாய்ப் பிரயாணப்படலானோம்.

ஆனால், தனிப் பாதையில் யாராவது கிடைப்பார்கள் என்று நம்பி நின்றிருந்த மூன்று துருக்கிய வீரர்கள், எங்களைப் பார்த்து விட்டார்கள்.

அவர்கள் விரைந்து ஓடிவர, மாலழகர் என்பவர், தாம் தைரியசாலி என்பதாலும், மல்யுத்தம் எல்லாம் பழகினவர் என்பதாலும்,

எங்களைப் பார்த்து, "நான் அவர்களைத் தடுத்து நிறுத்துகிறேன். நீங்கள் எல்லோரும் தப்பித்து ஓடுங்கள்!" என்று கூறிவிட்டு, காட்டுப் புதர்களில் காய்ந்து போய்க் கிடந்த விருகம் கம்பு ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு, துருக்கியர்களை எதிர்பார்த்து நின்றார்.

வந்த வீரர்கள், கோபாவேசமாய் அவரைத் தாக்க, அவரும் சிலம்பம் கற்றவர் ஆதலால் விருகம் கம்பைச் சுழற்றி சுழற்றி மிக லாகவமாக அவர்கள் மூவரையும் எதிர்த்துச் சண்டையிட,

அரங்கனை எடுத்துச் சென்ற நாங்கள் இதுதான் தருணம் என்று விரைந்து காட்டுக்குள் புகுந்து மறைந்து போனோம்.

வீரர்களுக்கும், மாலழகருக்கும் சண்டை உக்கிரமாக நடக்க, துருக்கிய வீரர்களும் முன்னைவிட உக்கிரமாகப் போரிட்டு மாலழகரைத் தாக்கி முடிவில் அவரைக் குற்றுயிராய்க் கீழே தள்ளினார்கள்.

பிறகு அவரை அவர்கள், 'நீ யார்? எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?' என்றெல்லாம் கேட்டு சித்திரவதை செய்ய அவரும் உபாதை பொறுக்காமல், 'அரங்கா அரங்கா' என்று சொல்லிப் புலம்புவராயினர்.

உடனே வீரர்கள், 'ஆகா! இவர்கள் கொண்டு போவது அரங்க விக்கிரகமோ? இவர்கள் கையில் கொண்டு போன மூட்டையில் ரத்தினங்களும், வைர, வைடூரியங்களும் இருக்க வேண்டுமே!' என்று பேசிக் கொண்டு, 'வாருங்கள் கோட்டைக்குள் போய் படையாட்களை அழைத்து வருவோம். காட்டில் வேட்டையாடினால் மற்றவர்கள் கிடைத்து விடுவார்கள்' என்று சொல்லி மாலழகரை நரியும் கழுகும் தின்னும்படியாய் கால்களை வெட்டிப் போட்டுவிட்டுப் போனார்கள்.

இதற்குள் அரங்கனோடு போன நாங்கள் வெகு தூரம் போய்விட, நான் மற்றவர்களைப் பார்த்து, "நீங்கள் அரங்கனோடு இந்தப் புதரின் அடியில் பதுங்கி இருங்கள். நான் போய் மாலழகர் கதி என்ன ஆயிற்று என்று பார்த்து வருகிறேன்?" என்று கூறி கொடிகளையும், செடிகளையும் விலக்கிக் கொண்டு விரைவாக வந்து மாலழகர் கீழே கிடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தேன்.

அங்கே மாலழகர் கால்கள் பின்னப்படுத்தப்பட்டு கிடப்பதையும், அவருக்குக் கடைசி நாடியில் உயிர் ஒட்டிக் கொண்டிருப்பதையும் பார்த்து, கண்ணீர் பெருக்கி, அவரது தலையை எடுத்து என் மடி மீது வைத்துக் கொண்டு, "மாலழகரே! மாலழகரே!" என்று இரைந்து கூப்பிட்டேன்.

மாலழகரும் மெல்லக் கண் திறந்து பார்த்து என்னைக் கண்டு, "அவசரம்! அவசரம்! அவர்கள் அரங்கனைக் கண்டு கொண்டார்கள். உடன் போய்ப்

பெருமாளைக் காப்பாற்றுங்கள்!" என்று சொல்லி, நடந்த எல்லா விவரங்களையும் கூறி சில வினாடிகளில் உயிரைத் துறந்தார்.

அவரது திருமேனியை பள்ளத்தில் கிடத்தி தழை, கொடி, கொம்புகளால் மூடிவிட்டு, விரைவாக இதர சகாக்களைத் தேடி ஓடினேன்.

சகாக்களைக் கண்டு, "அவசரம்! படையாட்கள் நம்மைத் தேடி வரப் போகிறார்கள். விரைவாகப் போவோம்!" என்று சொல்லி, அவர்களை அழைத்துக் கொண்டு காடாந்தகாரமாக இருக்கும் அந்த வனத்துள் தலை தெறிக்க ஓடினோம்.

பல நாழிகை ஓடும் வேளையில் திருப்பதி க்ஷேத்திரத்தின் அஞ்சனாத்ரி மலையைக் கண்டு புளகிதம் அடைந்து, இந்த மலைமேல் ஏறி, மேலே போய்விட்டால், பகைவர்கள் நம்மைத் தேடி வருவது துர்லபம் என்று நினைக்கவே,

மூன்று கொடவர்களும் என்னை நோக்கி, "நாங்கள் பெருமாளை மேலே அழைத்துச் செல்கிறோம். நீங்கள் கீழே ஒளிந்திருந்து படையாட்கள் வருகிறார்களா? என்று பார்த்துக் கொண்டு இருங்கள். மூன்று நாட்கள் வரை அவர்கள் வரவில்லை என்றால் நீர் மேலே வந்து எம்மிடம் சேர்ந்து கொள்ளும். நிச்சிந்தையாக இருப்போம்!" என்று கூறினார்கள்.

நானும், 'சரி' என்று சொல்லிக் கீழே பாறையும் புதர்களும் அடர்ந்த ஒரு பாதுகாப்பான இடத்தில் தங்கிவிட்டேன்.

நான் அங்கே தங்கி இரண்டு நாழிகை கூட ஆகியிராது. பலத்த ஆரவாரத்துடனும், இரைச்சலுடனும் துருக்கியர் படையாட்கள்

காட்டுக்குள் புகுந்து அஞ்சனாத்ரி மலையை நோக்கி வருவதை நான் காண நேர்ந்தது.

'ஆகா! காரியம் கெட்டுப் போயிற்றே!' என்று சொல்லி, 'அரங்கா! அரங்கா!' என்று பிரலாபித்தேன்.

18

சிங்கழகர் என்னும் அந்தப் பெரியவர் தமக்கு நேர்ந்த அனுபவங்களைச் சிலிர்ப்பும், அதிசயமும் பொங்கும் வண்ணம் கூறிக் கொண்டிருந்தார்.

அவர் முன்னால் ஆச்சரியத்தால் விரிந்த கண்களுடன் அமர்ந்திருந்த இரு இளைஞர்களும் அதிக சிரத்தையுடனே அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதில் ராஜவல்லபனுக்கு அடிக்கடி உணர்ச்சி ஒரு குப்பலாய்ப் பிரவகித்துக் கொண்டிருந்தது.

அரங்க நகரிலிருந்து புறப்பட்ட *அறுபது திருநாமங்களுக்கு நேர்ந்த கதிகளை நினைத்துப் பார்த்தான். சிலர் பிரிந்தார்கள். சிலர் இறந்தார்கள். சிலர் காணாமல் மறைந்தார்கள்.

அப்படியும் நம்பிக்கை அவர்களை விடவில்லை. அரங்கனைக் கட்டிக் காப்பதன் மூலம் ஒரு சமுதாயத்தின் நம்பிக்கையையே அவர்கள் காப்பதாக நினைத்தார்கள்.

ஆமாம், அரங்கன் ஒரு சமுதாய நம்பிக்கையின் சின்னம். அவரைக் காப்பதன் மூலம் ஒரு நம்பிக்கைதான் காக்கப்படுகிறது.

* அறுபது திருநாமங்கள் – அறுபது பேர்கள்

அந்தப் பணியில் ஈடுபட்டு, அஞ்சனாத்ரி மலை அருகிலே அந்த ஐந்து பேரும் பட்ட கஷ்டத்தை நினைத்ததும் வல்லபனுக்குக் கண்களில் நீர் கசிந்து விட்டது.

"சுவாமி! தாங்கள் சொல்வதைக் கேட்கக் கேட்கத் துயரம் குமுறுகிறதே!" என்றான் அவன் சிங்கழகரை நோக்கி.

அதற்குச் சிங்கழகர், "அப்பா, குழந்தாய்! இது உன் நல்ல உள்ளத்தையே காட்டுகிறது. எதையாவது மனத்துள் நினைத்து, அதற்காகக் கசிந்து கண்ணீர் விடுபவன் ஒரு சுத்த ஆத்மா. எனக்கு உங்கள் இருவரையும் பார்க்கும்போது மனத்தில் புளகாங்கிதம் ஏற்படுகிறது. அரங்கனைத் தேடுவாரில்லையே என்று நினைத்து, *தர்மோ நஷ்ட: என்று இத்தனை ஆண்டுகளாக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். இப்போது உங்களைப் பார்த்ததும் மனம் பொங்கி எழுகிறது. ஆனந்தம் உற்பவிக்கிறது!" என்று சொல்லிக் கதையை மேலே கூறலானார்.

அஞ்சனாதரி மலைக்கு அடிவாரத்தில் உள்ள காடாந்தகாரமான காட்டில் பதுக்கலான ஒரு புதர் அருகிலே சிங்கழகர் நின்று கொண்டு சுற்றுப் புறங்களைக் கவனித்துப் பரிதவித்துக் கொண்டிருந்தார்.

துருக்கியப் படைகளானால் சமுத்திரம் போலே காட்டை ஊடுருவிக் கொண்டு வந்து கொண்டு இருக்கின்றன.

அதைப் பார்த்து, பட்சிகளும், மிருகங்களும், அலறிப் புடைத்துக் கொண்டு நாலா பக்கங்களிலும் ஓடிக் கொண்டிருக்கின்றன.

---

* தர்மோ நஷ்ட: – தர்மம் அழிந்து விட்டது

இந்த இக்கட்டான நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தார்.

அவர் கண்களில் மாலை மாலையாய் நீர் சுரந்து கொண்டிருந்தது.

எதுவும் தோன்றாது போகவே, "நடப்பது நடக்கட்டும்" என்று நினைத்துச் சோகத்துடன் அமர்ந்து விட்டார்.

அவ்வளவில் படையாட்கள் அடிவாரத்தை அடைந்து விட்டார்கள். சுற்று முற்றும் அவர்கள் கழுகுப் பார்வையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மலை மேலே ஏறிக் கொண்டிருக்கும் மூன்று கொடவர்களுக்கும் இந்த விஷயம் தெரியாது. 'முகட்டிலே ஏறுகிறோம். இனி ஆபத்து என்ன வரப் போகிறது?' என்று நினைத்து நிச்சிந்தையாகவும், ஆனால் அதி வேகமாகவும் ஏறிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் போகும் வழியெல்லாம் புதரும், மரங்களும் அடைத்துக் கொண்டிருந்தாலும், மேலே போகப் போகச் சிற்சில இடங்களிலே செடி கொடி என்ற பேச்சே இல்லாமல் வெறும் பரலைக் கற்களும், பாறைகளும் நிறைந்து வெட்டவெளிகளாக இருந்தன.

அப்படிப்பட்ட வெட்டவெளி ஒன்றிலே அவர்கள் போன போது, படையாட்கள் அவர்களைப் பார்த்து விட்டார்கள். உடனே ஆகாகாரம் அவர்களிடமிருந்து எழுந்து விட்டது. கொடவர்களும் அதே சமயம் எதேச்சையாகத் திரும்பிப் படையாட்கள் அடிவாரத்தை ஆரம் போல் சுற்றிக் கொண்டு நிற்பதைப் பார்த்து விட்டார்கள்.

"ஆகா மோசம் போனோமே!" என்று கிலேசித்து, வெகு விரைவாகத்தானே அந்தப் பரல் வெளியைக்

கடந்து, மீண்டும் தழைகள் மூடிய புதர்க் கூட்டத்திலே அவர்கள் மறைந்த பிறகு.

'இனி திருப்பதி மலைமேலே போய் வேங்கடவர் கோவிலுக்குப் போனால் படையாட்களால் கோவிலுக்குத் தீங்கு ஏற்படும்' என்று ஆலோசனை பண்ணி, அருகிலே உள்ள முகடு மேல் ஏறுவதுதான் சாலச் சிறந்த வழி என்று தீர்மானித்து அதிலே போய் ஏறிக் கொண்டார்கள்.

பின்னர் அவர்கள் கீழே கவனிக்கும் வேளையில் படையாட்கள் அவர்களைத் தேடி மலை மேலே ஆட்கள் ஏவுவதைக் கண்டார்கள். ஆபத்துத் தங்களைச் சூழ்கிறது என்று நினைத்து, 'இனி அரங்கனைக் காப்பாற்றுவது எப்படி?' என்று சிந்தித்து விசனத்தில் மூழ்கினார்கள்.

இந்தக் கொடவர்களின் பெயர்கள் திருக்குருகூர் தாசர், திருவில்லிபுத்தூர்தாசர், சீராமதாசர் என்பது ஆகும். திருவரங்கம் கோவிலில் பணி செய்யும் *பத்துக் கொத்துப் பரிசனங்களில் இரண்டாவது கொத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்குதான் 'கொடவர்கள்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கொடவர்களில் குருகூர்தாசன் மூத்தவர். அவருக்கு மைத்துனர்தான் வில்லிபுத்தூர்தாசர், மகன் தான் சீராமதாசர். முறையே அறுபத்திரண்டு, ஐம்பது, நாற்பத்திரண்டு வயதுகளில் அவர்கள் திருவரங்கத்தை விட்டு அரங்கனுடன் புறப்பட்டவர்கள். இப்போது எண்பத்திரண்டு, எழுபது, அறுபத்திரண்டு பிராயங்கள் அவர்களுக்கு ஆகியிருந்தன.

இந்த தாசர்களில் மூத்தவர், மற்ற இரு தாசர்களையும் அழைத்து, 'நம்மைக் கண்டுபிடிக்க

* கோவில் ஊழியங்களைச் சீர்படுத்தி இவ்விதம் பிரித்தவர் ஸ்ரீராமானுஜர்.

படையாட்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தப்புவதற்கு வழி தேடுவோம்' என்று கூறி சுற்றி வரப் பார்க்கும் காலையில்,

அந்த மலை முகடானது மூன்று புறங்களிலே சரிவாகவும், நான்காவது புறத்திலே பாம்பு படம் எடுத்தாற்போல செங்குத்தாகவும் இருப்பதைக் கண்டார்கள். அந்த விசேஷ இயல்பைப் புரிந்து கொண்டு துருக்கியர்கள் தங்கள் படையாட்களைச் சரிவான மூன்று புறங்களிலும் நிற்க வைத்து நான்காவது செங்குத்தான புறத்திலே யாரும் இறங்க மாட்டார்கள் என்று எண்ணி யாரையும் நிறுத்தாமல் வைத்து இருப்பதையும் கண்டார்கள்.

இதைப் புரிந்து கொண்ட மூத்த கொடவரான குருகூர்தாசர் கணத்திலே ஆலோசித்து மற்றவர்களை அழைத்து, 'தாசர்களே! கீழே செங்குத்தான பகுதியிலே படையாட்கள் யாரும் இல்லை. ஆகவே நீங்கள் ஒன்று செய்யுங்கள். காட்டுக் கொடிகளைக் கொண்டு வந்து அரங்க விக்கிரகத்தை என் உடம்போடு கட்டுங்கள். பிறகு கொடிகளால் ஒரு கயிறு கட்டி அந்தக் கயிற்றில் கட்டிக் கீழே இறக்கி விடுங்கள். செங்குத்தான பள்ளம் இங்கிருந்து பார்த்தால் பதினைந்து ஆள் *பிருதம் இருக்கிறது. அதற்கு அப்பால் இறக்கம் கிடு கிடுவென்று சரிவாகப் போகிறது. அந்த இடத்திலே யாரும் நிற்க முடியாது. ஆனால் உருண்டு போகலாம். அந்தச் சரிவில் நான் தட்டிக் கொண்டதும், நீங்கள் பிடித்திருக்கும், கொடிக் கயிறுகளை நழுவ விடுங்கள். அரங்கன் விக்கிரகத்துடன் சரிவில் உருண்டு போகலாம். அந்தச் சரிவில் உருண்டு போய் அடிவாரத்தை அடைந்து விடுகிறேன்' என்று கூறினார்.

* பிருதம் – ஆழத்தைக் குறிக்கக் கூடிய சொல்

உடனே மற்ற இருவரும் திடுக்கிட்டுத் திகைத்துப் போய், 'இது ஆபத்தான காரியம் அன்றோ?' என்று கூறினார்கள்.

'அரங்கனைக் காப்பாற்ற வேண்டுமானால் இப்படிச் செய்து ஆக வேண்டும்' என்று மூத்த தாசர் கூறினார்.

அதற்கு அந்த இரு தாசர்களும் இணங்காமலிருக்க மூத்த தாசர் அவர்களுக்குச் சமாதானம் பல சொல்லி, அப்போது இருக்கும் நிலையில் அதுதான் சிறந்த வழி என்றும், இல்லாவிடில் அரங்கன், படையாட்கள் கைகளிலே சிக்கி விடுவார் என்றும் கூறினார்.

கடைசியில் வேறு வழியில்லாமையால் இரு தாசர்களும் மூத்தவரின் ஆலோசனைக்கு இணங்கிவிட,

உடனே பச்சைக் கொடிகளைக் கொணர்ந்து கயிறு திரிக்கும் வேலை துரிதமாக ஆரம்பித்தது.

கொடிக்கயிறு திரித்தானதும் மூத்த கொடவரை மற்ற இருவர்களும் மல்லாந்து படுக்க வைத்து அவர் வயிற்றின் மீது அரங்கன் விக்கிரகத்தைக் குப்புறக் கிடக்க வைத்து மூலிகைக் கொடிகளால் உடலையும், விக்கிரகத்தையும் பிணைத்துக் கட்டி விட்டார்கள்.

பிறகு விக்கிரகத்தையும், மூத்த கொடவரையும் தொட்டுத் தொட்டுச் சேவித்துக் கொண்டு கொடிகயிற்றின் ஒரு மூலையைப் பிடித்திழுத்து வந்து மூத்தவரின் இடுப்பில் சுற்றிப் பிணைத்துக்கட்டி விட்டு, மறுமூலையைப் பிடித்திழுத்து அங்குள்ள பருமனான ஆலம் விழுது ஒன்றிலே கட்டி வைத்தார்கள்.

அப்பால் அவர்கள் அரங்கனைப் பிரார்த்தனை செய்து கொண்டு, மூத்த கொடவரைப் பக்திபூர்வமாக அஞ்சலி செய்து அவரிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு அவரது திருமேனியை முகட்டின் நுனிக்கு எடுத்துச் சென்று அவரையும் அரங்கரையும் மெதுவாக பதப்பற நிதானமாகக் கீழே இறக்கிவிட்டார்கள். மூத்தவரும் கயிற்றில் தொங்கியபடியே அந்த கெடு பாதாளத்தின் அந்தரத்திலே ஊசலாடிக் கொண்டு கீழ் நோக்கிப் போகலானார்.

அந்த மலை முகடு பாம்பு படம் எடுத்தாற் போல் மேல் உச்சியில் வளைந்திருந்தபடியால் கீழே எதையும் வசதியாய்ப் பார்க்க ஒண்ணாதபடி இருந்தது.

மேலே இரு கொடவர்களும் கொடிக் கயிற்றை மெள்ள மெள்ள நழுவவிட்டு, பின்பு முன்பே கயிற்றில் கணித்துள்ள இடம் வந்ததும் முழுக்கொடியையும் நழுவ விட்டார்கள்.

அதே நேரத்தில் சரிவு தட்டிய மூத்த கொடவரும் அந்த கிடுகிடு சரிவில் அரங்கனோடு உருண்டு வெகு வேகமாகப் போகலானார். சரேல் என்று இறங்கி ஓடும் அந்தச் சரிவு கீழே நெடுந்தூரம் சென்றுதான் அடிவாரத்தைத் தொட்டது. அந்தப் பயங்கரச் சரிவில் பரல் கல்லிலும், பாறைத் துண்டுகளிலும் முட்டி மோதிக் கொண்டு அவர் உருண்டு கொண்டிருந்தார்.

அவர் அப்படி உருண்டு போவதை உச்சியில் ஓடி வந்து கொடவர் ஒரு கணமே பார்த்தார். பின்னர் இரு கொடவர்களும் பரபரத்து, உடனே அடிவாரத்திற்குப் போக எண்ணினார்கள்.

அதன்படியே காரியத்தில் இறங்கி இரண்டு நாழிகை அவகாசத்தில் அடிவாரத்தை அடைந்து, மூத்த கொடவரை உடனே தேடலானார்கள்.

ஒரு முகூர்த்த அளவில் தேடுங்காலையில், 'இதோ' என்று திடீரென்று, பயங்கரமான ஒலியில் வில்லிப்புத்தூர்தாசர் என்னும் கொடவர் கூச்சலிட, சீராமதாசர் என்பார் உடனே ஓடிச் சென்று பார்த்தார்.

அங்கே சங்கு மலர்கள் புஷ்பித்திருந்த செடிக் கூட்டத்தின் ஓரத்திலே காலும், கையும் இரு தோள்களும் ஒடித்து கிடக்க, முகத்திலே கண், வாய், மூக்கு இருந்த இடத்தில் இரத்தம் தோய்ந்த சதைகள் மட்டுமே பிய்ந்து கொண்டு தெரிய, மூத்த கொடவரின் உடல் மல்லாந்து வானை நோக்கிக் கிடந்தது.

உடனே சீராமதாசர் (மூத்த கொடவரின் மகன்) 'அப்பா' என்று கூவி அவர் உடலையும், கையையும் தொட்டுப் பார்க்க, அவரது உயிர் எப்போதோ பிரிந்து விட்டிருப்பது தெரிய வந்தது.

வயிற்றின் அடியிலிருந்து ஒரு துக்கம் சமுத்திரம் போல் எழும்பி மேலே வர, அடியற்ற மரம்போல் சீராமதாசர் அந்த மூத்த கொடவரின் இரத்தம் தோய்ந்த உடல் மீது விழுந்தார். கண்களில் அழுகை குபீரிட்டு வெளி வர, 'என் அப்பா' என்று பலமுறை அரற்றி அரற்றி அழுதார்.

நெடு நேரம் அழுது சிந்திய பிறகு ஒருவாறு தேறித் தனது மாமனான வில்லிப்புத்தூர் தாசர் நிலைகுத்திய பார்வையுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு அவர் அருகே சென்றார்.

அவர் முன்னால் குனிந்து, "மாமா! மாமா! இது என்ன அறியாயம்? அப்பா இறந்து விட்டாரே" என்று கூற, அந்த மாமனான வில்லிப்புத்தூர் தாசர் பேச்சு ஏதும் சொல்லாமல் இருந்தார்.

அவர் அப்படி இருப்பதைப் பார்த்து, சீராமதாசர் அவரது தோள்மேல் கை வைத்து, "மாமா!" என்று கூப்பிட,

அவ்வளவில் அந்த மாமனின் உடல் சடக்கெனச் சரிந்து கீழே விழுந்துவிட்டது.

பதைத்துப் போய் சீராமதாசர் தம் மாமனைக் கையில் ஏந்தி வைத்துக் கொண்டு அவர் நாசியையும், நாடியையும் பார்க்க, அவை எல்லையில்லா மௌனத்தில் கிடப்பதைக் கண்டார்.

உடன், "மாமா!" என்று ஒரு அலறல் அவரது அடி வயிற்றிலிருந்து புறப்பட்டது.

மூத்த கொடவர் இறந்து கிடப்பதைப் பார்த்த உடனேயே இரண்டாவது கொடவர் அதிர்ச்சியில் உயிர் துறந்திருந்தார்.

அதை உணர்ந்த சீராமதாசர் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு, "எல்லாம் இழந்தேனே!" என்று பிலாக்கணமாய்ப் புலம்பி, தரையிலே தலையை அடித்துப் புரட்டி அழுது ஒரு பெரும் சோகக் கடலில் மூழ்கிக் கிடக்கலானார்.

உணர்ச்சி பூர்வமாக அதுவரை யாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த வல்லபனும், தத்தனும் அப்படியே கண்ணீர் உகுக்கலானார்கள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு நாசியை வழித்து விட்டுச் சிங்கழகர் மேலே பேசாமல், "இருங்கள் சொல்கிறேன்! என் நெஞ்சு துக்கத்தில் நிரம்பியிருக்கிறது" என்று சொன்னார்.

பின்னர் அவர் அந்த இரு இளைஞர்களின் முன்னிலையில் ஓசைப்படாமல் கண்ணீர்விடத் தொடங்கினார்.

கூடத்தில் அமர்ந்து யாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த மஞ்சரி கூட அப்படியே துக்கத்தில் தோய்ந்து சமைந்துவிட்டாள்.

அந்த எளிமையான மண் வீட்டிலே சோக உணர்ச்சி ஒரு பனி போல் நிரம்பிக் கிடந்தது.

சிறிது நேரம் கழித்து, தம்முள் தாமே தேறிய சிங்கழகர், மஞ்சரியைப் பார்த்து, "அம்மா மஞ்சரி! பருகுவதற்குத் தீர்த்தம் கொண்டு வா!" என்றார்.

அரங்கனைப் பற்றி அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற கவலையில் இரு இளைஞர்களும் அவரையே உற்றுப் பார்த்திருந்தார்கள். பிறகு நீரைக் குடித்த அவர், "அரங்கனின் கதியைச் சொல்கிறேன்" என்று ஆரம்பித்தார்.

19

சிங்கழகர் வீட்டு மண் குடிலிலே, ராஜவல்லபனும் காலதத்தனும் ஆவலோடு அமர்ந்து, அழகரின் முகத்தையே உற்று நோக்கிய வண்ணம் இருந்தார்கள்.

அந்த இருவர்களின் மனமும் கனத்து வழிந்தது. எதிரே இருந்த அழகரோ, நினைக்க ஒண்ணா எதையோ நினைத்துவிட்டது போல் பழமையை நினைத்து உள்முகமாக மனத்துள் நைந்து கொண்டிருந்தார்.

மஞ்சரியும் மண் தரையில் சிற்றாடை பரந்து கிடக்க, கன்னங் கரிய விழிகளும் பவழ வாயும் ஆச்சரியத்தால் விரிந்து இருக்க சிங்கழகரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தீர்த்தம் பருகிய சிங்கழகர், ஆசுவாசமாக மூச்சு விட்டு, உள்வெப்பம் தணிந்தாற் போல், "அப்பாடா" என்று கூறித் தனது ஆழமான கண்களை முன் உத்திரியத்தால் துடைத்துக் கொண்டு,

"அரங்கனைப் பற்றிதானே தெரிய வேண்டும்! இதோ சொல்கிறேன்!" என்று ஆரம்பித்தார்.

அவர் தமது உத்தண்டமான குரலில் சோகம் பளபளக்க மேலே சொல்லிக் கொண்டே போக, இளைஞர்களின் கண்கள் முன்னே காட்சிகள் மீண்டும் விரிய ஆரம்பித்தன.

அஞ்சனாத்ரி மலையின் அடிவாரத்திலுள்ள அகோரமான காட்டிலே குருகூர்தாசரும் அவரது மைத்துனரான வில்லிப்புத்தூர்தாசரும் உயிர் பிரிந்து கிடப்பதைக் கண்டு மிகுந்த வியாகூலத்துக்கு ஆட்பட்ட சீராமதாசர் அப்படியே உன்மத்தம் ஆனாற்போல் உறைந்து கிடந்தார்.

நாழிகை ஏறியதும், மனத்தில் தேறிக் கொண்டு அரங்கனின் நினைவு கொண்டவராய்த், திடீரென்று எழுந்து சுற்றிவரப் பார்க்குங்காலையில்,

சங்கு மலர்ப் புதரிலே அடர்த்தியாகக் கொடிகள் சிக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து. 'இது நாம் இழுத்துக் கயிறு பண்ணிய கொடி அல்லவோ!' என்று எண்ணி அந்தக் கொடிகள் சிக்கியிருக்கும் பகுதியை நோக்கிப் பாய்ந்து சென்றார்.

போகப் போகக் கொடிகளின் சிக்கலானது அவரையும் சேர்த்துச் சிடுக்கில் மாட்டி வைக்க,

பொறியில் அகப்பட்ட பிராணிபோல் பல நிமிட நேரங்கள் தடுமாறித் தத்தளித்து,

பின்னர் இடுப்பிலிருந்த கத்தியை எடுத்து அவற்றைச் சீவிக் கொண்டு உள்ளே செல்லலாயினார்.

செல்லச் செல்ல எங்கும் கொடிகள் தென்பட்டனவே ஒழிய அரங்க விக்கிரகம் தென்படவே இல்லை.

'இதென்ன விநோதமாயிருக்கிறதே' என்று எண்ணி களைப்பும் துக்கமும் மேலிட அப்படியே இற்றுப் போய் அமர்ந்து.

"அரங்கா! சோதனை போதும், அப்பா! இனியும் பொறுக்ககில்லேன். இருக்கும் இடத்தைக் காட்டுவாய்" என்று பிரார்த்தனை செய்து கண்மூடி அமர்ந்து விட்டார். அப்பால் சிறிது நேரத்தில் கண் திறந்து பார்க்கும் போது, சூரியன் கீழே இறங்கி விட்டமையால், அதன் சாய்ந்த கிரணங்கள் புதர்களை எல்லாம் கோதி எடுத்து புதிய கோணமாக வீசிட,

சங்கு மலர்ச் செடிக் கூட்டத்தின் மறு பகுதியிலே பளபளவென்று ஏதோ ஒளிவீசி அடிப்பது தெரிந்தது.

கண் திறந்து சீராமதாசர் அதைக் கண்டதும் துள்ளி எழுந்து, புதர்களை எல்லாம் விலக்கிக் கொண்டு போய், ஆவலோடு உற்றுப் பார்க்க,

அங்கே பசுந்தழைகளும், கொடிகளும், செடிகளும் பின்னியிருந்த படுகை ஒன்றிலே அரங்கனது விக்கிரகம் அதுங்கலோ பிதுங்கலோ இன்றி, மல்லாந்து குழந்தை கிடப்பது போல் கிடந்து முறுவலிடுவதைக் கண்டு,

"என் *குட்டனைக் கண்டேனே!" என்று விம்மிக் கொண்டு போய் அரங்கனை எடுத்து மடி மீது அமர்த்திக் கொண்டார்.

பிறகு சிறிது நேரம் விக்கிரகத்தை வெறித்துப் பார்த்து, "உமக்கு ஒரு குறையும் இல்லை. ஆனால் என்னைக் குறையுள்ளவன் ஆக்கினீரே!" என்று துக்கித்து அழுதார்.

நெடுநேரம் வரை அவர் அப்படியே மூச்சுப் பேச்சின்றிப் பிரமையிட்டதுபோல் அமர்ந்திருந்தார்.

இதற்கிடையிலே, தனிமையாய்க் கிடந்து தவித்த சிங்கழகரோ, அஞ்சனாதிரியில் துருக்கியப் படையாட்களால் அரங்கனுக்கும், கொடவருக்கும் என்ன நேர்ந்ததோ என்று எண்ணி வெகுநேரம் சோகித்திருந்தார்.

மாலை ஏற ஏற அவருக்கு மனத்திலே பெரிய தவிப்பு கூடிக் கொண்டிருந்தது. இருப்பினும் துருக்கியப் படை ஆட்கள் மலையைச் சூழ்ந்திருக்கும் வரை தாம் நகரலாகாது என்று நினைத்திருந்தார்.

வெகுநேரம் வரை அப்படியே அமர்ந்திருக்க மாலையின் நிழல்கள் நீண்டு கொண்டே சென்றன.

மெள்ள மெள்ள அந்தி நிழல் அந்தக் காட்டை மூடிவருங்கால், முன்னிலும் அதிகமாய் அவர் கிலேசித்திருக்க, தூரத்தில் எங்கேயோ மிகச் சன்னமாய், "அழகர் சுவாமி! அழகர் சுவாமி!" என்று ஒரு குரல் இடை விட்டுக் கேட்க ஆரம்பித்தது.

அவ்வளவில் புளகிதம் அடைந்து, குரல் நன்றாகச் செவியில் விழும்வரை பொறுத்திருந்து, பின்னர் சப்தம் வருகிற திக்கைக் கணித்துக் கொண்டு, அங்கு நோக்கி நடக்கலானார் சிங்கழகர்.

அவர் நடந்து செல்லச் செல்ல, குரலும் அருகருகிப் பெரிதாகிக் கொண்டே வந்தது.

பின்னர் சிங்கழகர் தொலைவிலே சீராமதாசரைக் கண்டு விட,

* குட்டன் - குழந்தையை விளிக்கும் அன்புச் சொல்.

ஆனந்த மேலீட்டால், கை தூக்கி ஆட்டிய வண்ணம், "சீராமரே! சீராமரே!" என்று கத்திக் கொண்டு ஓடினார்.

இழைக்கும் மூச்சுகளுடன் இருவரும் சந்தித்துக் கொள்ள ஒருவரை ஒருவர் இறுகத் தழுவி, முகம் புதைத்து, தெளிவில்லாத ஆனந்த வார்த்தைகளைக் கொட்டி, இன்பப் பரவசத்தில் ஆழ்ந்தார்கள்.

சிங்கழகரும் உடனே அரங்கனுக்குத் தெண்டனிட்டு எழுந்திருந்து, சீராமதாசரை நோக்கி, "நடந்ததெல்லாம் என்ன?" என்று கேட்க,

தாசரும் ஏதும் கூறாது தாரை தாரையாய்க் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தார்.

பின்னர் படிப்படியாகத் தேறிய அவர், நடந்தவைகளை எல்லாம் விக்கிக் கொண்டே சொல்லி முடித்தார்.

துக்கத்துடன் யாவற்றையும் கேட்ட சிங்கழகர் வெகு நேரம் வரை ஏதும் பேசாமல் கண்ணீர் சிந்தினார்.

பிறகு இரவு வந்ததால் இருவரும் அங்கேயே தங்கிக் கழித்தார்கள். நிசி முழுவதும் தாசர் என்னவெல்லாமோ புலம்பிக் கொண்டிருந்தார்.

காலையில் எழுந்ததும் சிங்கழகர், இறந்து போன இரு தாசர்களின் திருமேனிகளையும் தேடி, அவற்றுக்கான கடைசி கிரியைகளைச் செய்துவிட விரும்பினார்.

தமது விருப்பத்தை சீராமதாசரிடம் கூறிவிட்டுப் புறப்படும் வேளையில், சிங்கழகர் ஒன்று கவனித்தார்.

தாம் எது கூறினாலும், அந்த தாசர் 'உம்' கொட்டிக் கொண்டிருந்தாரே ஒழிய வேறு ஏதும்

பேசவில்லை. தாசரின் கண்களும் வெறித்த பார்வையாகவே இருந்தன. இது பற்றி அவருக்குப் பலவித சந்தேகங்கள் ஏற்பட்டன.

எனினும் தாசர்களின் கடைசிக் கிரியைகளை நடத்த விரும்பியமையால், சீராமரை அப்படியே விட்டு விட்டுப் போக நினைத்தார். 'இவர் அதீத துக்கத்தில் இருக்கிறார். போகப் போகச் சரியாகிவிடுவார்!' என்று நினைத்து சீராமரை உலுக்கி,

"நான் போய் வருகிறேன். ஜாக்கிரதையாக இருங்கள்!" என்று கூறிவிட்டு அவரிடம் மறுஉத்தரவு ஏதும் பெறாமல் அவரை அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டார்.

வெகு நேரம் அலைந்து, நடுப்பகல் வரும் வேளையில் இறந்து போன தாசர்களின் திருமேனிகளைச் சிங்கழகர் கண்டு கொண்டார்.

அவர் மனத்தில் துக்கம் பொங்கி வழிந்தது. "அரங்கனே! அறுபதாகப் புறப்பட்டது. இப்போதும் வெறும் இரண்டாக அருகி நிற்கிறதே!" என்று வருத்தப்பட்டார்.

அப்பால் அந்த இரு திருமேனிகளையும் எட்டத்திலிருந்த ஒரு ஓடையின் படுகைக்கு எடுத்துச் சென்றார்.

அதன் மணலில் தமது கைகளால் குழிபறித்து, திருமேனிகளை அவற்றுள் பள்ளிப்படுத்தி விழிசோரப் பிரார்த்தனைகள் செய்து பின்னர் மேனிகளை மண் அடர்த்தியால் மூடி வைத்தார்.

பின்னர் பழைய இடம் நோக்கித் திரும்பலானார்.

அங்கு சென்று பார்த்தபோது சீராமதாசரையும் காணவில்லை. அரங்கனையும் காணவில்லை.

திடுக்கிட்டுச் சுற்று முற்றிலும் புகுந்து பார்த்தார். "சீராமா! சீராமா!" என்று குரல் கொடுத்தார்.

மாலை நேரம் வரை தேடியும் சீராமரைக் காணவே இல்லை.

அப்போது எங்கும் கருகரு என்று இருட்டிக் கொண்டு வர, "கடைசியில் இப்படியும் ஒரு கதி வந்ததே!" என்று நினைத்து, அன்று இராப் பொழுதை அங்கேயே கழிக்க எண்ணிச் சோர்ந்து படுத்து விட்டார்.

மறுநாள் காலையில் எழுந்திருந்து பார்க்க, இருகால்களும் இயங்கவில்லை என்று தெரிந்து ஆச்சரியத்துடன் கால்களை நோக்கினார்.

முட்டுப் பிரதேசம் வரை நீலம் பாரித்திருந்தது.

அப்போதுதான் ஒன்று புலனாகியது. கடைசிக் கிரியைகளுக்காகப் புதர்களை ஊடுருவிக் கொண்டு போன போது அங்கங்கே ஊசி குத்தினாற் போல் காலில் ஏதோ வலி தோன்றுவதை அறிந்திருந்தார். 'முள் செடிகள் தான் குத்துகின்றன.' என்று நினைத்திருந்த வருக்கு இப்போது கால்களைப் பார்க்கும்போது ஒரு பெரிய அதிர்ச்சியே ஏற்பட்டது.

ஏதோ விஷப் பூச்சிகளோ ஜந்துக்களோ கால் களைத் தீண்டியிருக்க வேண்டும். அதனால்தான் கால்கள் நீலம் பாரித்துக் கட்டையாகிவிட்டன என்று எண்ணினார். இந்த நிலையில் எழுந்து முறையாக நடக்க முடியாது என்று தெரிந்த போது அவரது அதிர்ச்சி பெருமடங்காகியது.

உதவி இல்லாமல் இனிப் போவது கஷ்டம் என்று தெரிந்ததால் சீராமதாசர் வருகிறாரா பார்ப்போம் என்று நினைத்து மற்றொரு பகல் பொழுதையும் இராப்பொழுதையும் அங்கே கழித்தார்.

இரண்டாம் நாள் பொழுது புலர்ந்ததும் இனி சீராமருக்குக் காத்திருப்பது சரியில்லை என்று தோன்றியது.

காட்டைவிட்டு உடனே வெளியேற வேண்டும், இல்லாவிடில் கொடிய விலங்குகளால் ஆபத்து ஏற்படும் என்று எண்ணிய அவர் தரையில் ஒரு பிராணி போல் தவழ்ந்து கொண்டே அந்தக் காட்டில் ஊடுருவி நடக்கலானார்.

பசியும் சோர்வும் மேலிட மூன்று நாட்கள் தவழ்ந்தபின் காடு முடிவடையாமல் போகவே வழி தவறிவிட்டோமே என்று பரிதவிக்கலானார்.

நான்காம் நாள் காலையில் பசியும் தாகமும் வாட்டிவிட இனி ஒரு அங்குலமும் நகர்வது கடினம் என்ற நிலை ஏற்படும் போது செஞ்சு இனத்தைச் சேர்ந்த மலை வேடவர்கள் அவரைக் கண்டெடுக்க நேர்ந்தது.

அவர்கள் அவருக்கு நீரும் தேனும், பழங்களும் கொடுத்துப் போஷித்து மெள்ள மெள்ள அவர் விருத்தாந்தங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

பின்னர் அவரைத் தோலால் செய்த ஒரு டோலாவில் ஏற்றி வைத்துக் காட்டைக் கடக்கப் பண்ணி நாட்டுப்புறத்திற்கு அழைத்து போய் அங்கே ராஜபாட்டை அருகில் அவரை இறக்கி விட்டார்கள்.

வேடவர்களிடம் நன்றி பிரதிபலிக்க விடைபெற்ற சிங்கழகரும் பின்னர் போக்கு வண்டிகள் பலவற்றில் ஏறிக் கடைசியாக காஞ்சிபுர க்ஷேத்திரத்தைச் சென்று அடைந்தார்.

பூரணமாக மரத்துப் போன இரு கால்களுக்கும் அங்கே ராஜ வைத்தியம் செய்து கொண்டு ஓரளவு

கால்களில் உணர்வுகளைப் பெற்றவராய் அந்த காஞ்சிபுர நகரத்திலேயே வசித்து வரலானார்.

"அவர் பதினெட்டு ஆண்டுகள் இந்த காஞ்சி நகரத்தில் வாழ்ந்து விட்டாரப்பா! அவரது ஆசைகளும், எண்ணங்களும் மனோரதங்களும் இந்த பதினெட்டு ஆண்டுகளில் சிறிது சிறிதாக நைந்து மறைந்து விட்டன அப்பா! கேவலம் ஒரு நடைப்பிணம் போல் வாழுகிறாரப்பா!" என்று சொல்லி முட்ட முட்டக் கண்ணீர் பெருக்கித் தம் கதை முழுவதையும் சொல்லி முடித்தார் சிங்கழகர்.

இளைஞர்கள் இருவரும் கற்சிலைகள் போல் சமைந்து கிடந்தார்கள். ஏதோ ஒரு பெரும் இதிகாசம் முழுவதையும் கேட்டது போலவும், கடைசியில் அதன் சோக முடிவைக் கேட்டுத் துக்கித்துக் கிடப்பவர்கள் போலவும் இருவரும் கிடந்தார்கள்.

மஞ்சரியும் தனது குனிந்த தலையை நிமிர்த்தாமலே இருந்தாள்.

இறுகிப் போன ஒரு துக்கம் அங்கே கனமாகச் சூழ்ந்திருந்தது.

அப்பால் கால் நாழிகை யாவரும் மௌனமாய் இருந்த பிறகு சிங்கழகர் தம்மை ஓரளவு தேற்றிக் கொண்டு இளைஞர்களை நிமிர்ந்து பார்த்து, "பிள்ளைகாள்!" என்று அழைத்தார்.

இளைஞர்கள் இருவரும் திடுக்கிட்டு நினைவு வந்தவர்களாய் அவரை ஏறிட்டுப் பார்த்தார்கள்.

"பிள்ளைகாள்! ஒரு சோக காவியத்தை இதுவரை கேட்டிருக்கிறீர்கள்; உங்கள் நெஞ்சங்கள் எல்லாம் வெகுவாகக் கனக்குமே! நீங்கள் ஆசுவாசப்பட்டு இங்கே இந்த அடியவனின் குடிலில் இன்று முழுவதும் தங்கியிருக்க வேண்டும். கனம் சிறிதளவு குறைந்தவுடன் அடியேனுடன் மேலும் உரையாடி விட்டுச் செல்ல வேண்டும்!" என்று கைகூப்பிக் கூறினார்.

இரு இளைஞர்களும் அவர் சொல்வதற்கு மறுப்புச் சொல்லாமல் மௌனமாக இருந்து விட்டார்கள்.

அவ்வளவில் சிங்கழகர் மெள்ள எழுந்து நொண்டி நொண்டி நடந்து கொண்டு புழைக்கடை நந்தவனத் திற்குச் சென்றுவிட்டார்.

இளைஞர் இருவரும் கூடத்திலேயே அமர்ந்திருக்க, அவர்கள் செவிகளில் திடீரென்று ஒரு விசும்பல் ஒலி கேட்டது.

மஞ்சரிதான் விசும்பிக் கொண்டிருந்தாள்.

20

மஞ்சரியிடமிருந்து விசும்பல் சப்தம் கேட்டுத் திடுக்கிட்ட இளைஞர்கள் அவளைத் திரும்பிப் பார்த்தார்கள்.

"மஞ்சரி! உனக்கு என்ன நேர்ந்தது? ஏன் விசும்புகிறாய்?" என்று ஆதுரத்துடன் காலதத்தன் வினவ,

மூக்கு உறிஞ்சி, கண் கசக்கி, வாய் பொத்திய மஞ்சரி சிறிது நேரம் ஆற்றாமையுடன் இருந்துவிட்டுப் பின்னர் தத்தனை நோக்கிப் பேசத் துவங்கினாள்.

"ஐயா! இந்த நாட்டிலே எத்தகைய அமளி துமளிகள் நடந்தேறிவிட்டன. அகிலத்து அரசர்கள்

எல்லாம் வந்து பள்ளிக்கட்டின் கீழ் தவமிருக்கும்படியான சம்பத்தைப் பெற்ற நம் அரங்கனுக்குக் கூட எத்தகைய துக்கங்கள் நேர்ந்து விட்டன. அவருக்கே அவை நேர்ந்ததென்றால் சாமானிய ஜனங்களுக்கு நேர்ந்ததைச் சொல்ல முடியாதே!

"ஒரு நாட்டின் வாழ்க்கையையே சிறை செய்து விட்டார்களே சுல்தானியர்கள். இப்படி நடந்ததால் அன்றோ என் தாய் தந்தையரை ஒருங்கே நான் இழக்க நேர்ந்தது. நான் இழந்தது மட்டுமல்ல; ஒவ்வொரு குடும்பமும் ஆள், வீடு, பூமி என்று எதையாவது இழந்துவிட்டு நிற்கிறதே! அரங்கனும் தம் திருவரங்கத் *திருவை இழந்து நிற்கிறாரே! ஒரு நாடே இப்படி அனாதையாகிவிட்டதே! இதை கேட்பார் இல்லையே! கண்டிப்பார் இல்லையே.

"ஒரு காலதோஷத்தில் நாட்டில் எல்லோரும் பெண்களாகி விட்டார்களே! வீரமும், தைரியமும், மனோதிடமும் ஏட்டிலே வெறும் எழுத்துக்களாகி விட்டனவே! அதை நினைத்தால்தான் துக்கம் பொங்கி வருகிறது. வேதனை தகைந்து வருகிறது." என்று படபடப்புடன் கூறினாள்.

அவள் பேசியதைக் கேட்டு, தத்தன் வாய் அடைத்து நின்றான்.

ஆனால், அதே நேரத்தில் ராஜவல்லபன் உள்ளத்தில் ஒரு எரிமலை கொழுந்து விட ஆரம்பித்தது. அவன் கண்கள் உணர்ச்சி வசமாகின. உதடுகள் பிலுபிலு என்று துடித்தன.

"மஞ்சரி!" என்றான் அவன். "நீ சொல்வதெல்லாம் என் மனத்தில் அம்பு போல்

* திருவரங்க நகரம் என்னும் செல்வம்.

தைக்கிறது. அவை என்னை வாட்டி வதைக்கின்றன. என்னைப் போல் இளைஞர்கள் வாளாவிருந்தது ஒரு பெரும் தப்பிதம். மற்றவர்கள் எப்படியோ எனக்குத் தெரியாது. நாங்கள் இப்போது பெரும் லட்சியத்தை மனத்தில் கொண்டு புறப்பட்டிருக்கிறோம். அதை நிறைவேற்றி வைக்கும் வரை நாங்கள் உறங்க மாட்டோம். இது சத்தியம்!" என்று ஆவேசம் வந்தவன் போல் கூற சுவரில் இருந்த பல்லி ஒன்று பலமுறை கொட்டியது.

பிறகு அவன் இடுப்பிலிருந்து பளபளக்கும் குறுக்கத்தி ஒன்றை நறுக்கென்று எடுத்து, அதை மஞ்சரி முன்னே வைத்து, "மஞ்சரி! இந்தக் கத்தியை உன் கையால் தொட்டுக் கொடு! அப்படிக் கொடுத்தால் இது இடுப்பிலே உறங்கிக் கொண்டிருந்தாலும், நெஞ்சிலே குத்திக் கொண்டே இருக்கும். உன் வெதும்பிய வார்த்தைகள் என் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கும். உறங்கும் என் நினைவுகளை ஓச்சிவிட்ட தாகவும் இருக்கும்!" என்று ஒரே தீவிரமாய்க் கூறினான்.

அவன் கூறிய வார்த்தைகளில் ஆவேசத்தையும், அழுத்தத்தையும் கண்டு மஞ்சரியின் கண்கள் பாஷ்பங்களைச் சொரிந்தன.

முகத்தில் அழுகை கவிழ்ந்திருந்தாலும், உதட்டில் முறுவல் முகிழ்த்துவர, வல்லபனை நோக்கி, அவள் நடந்து வந்து அவன் கையிலே குறுக்கத்தியை எடுத்துக் கொடுத்து.

"ஆகா! இப்போது என் மனம் பரவசமாகிறதே! எனக்குப் புதிய உற்சாகம் பிரவேசிக்கிறதே!" என்று ஆவேசத்துடன் கூறினாள்.

அதே நேரத்தில் அங்கு நடந்ததை எல்லாம் கேட்டவாறு வெகு வேகமாக நொண்டிக் கொண்டு

உள்ளே வந்த சிங்கழகர், "ஆகா! ஆகா! பதினெட்டு ஆண்டுகளாய்க் கேளாத வார்த்தைகளை இன்று கேட்டுவிட்டேன். செய்கையில் காட்டாவிட்டாலும் வேண்டாம். சொல்லிலாவது தைரியம் காட்டினீர்களே, அது போதும் தம்பி! அது போதும்!" என்று சொல்லி வல்லபனை ஆரத் தழுவிக் கொண்டார்.

அன்று இரவு அங்கே உறங்கிவிட்டு, காலையில் எழுந்து இரு இளைஞர்களும் தங்கள் சத்திரத்திற்கு மீளவும் சென்றார்கள்.

வெளியே சென்றால் என்ன ஆபத்து எதிர்ப்படுமோ என்று எண்ணி இருவரும் சத்திரத்துக்குள்ளேயே இருந்து விட்டு, மதியத்திற்கு மேல் சிங்கழகரின் குடிலுக்கு மீளவும் சென்றார்கள்.

அவர்கள் போன சமயம் ராஜசேவகர்கள் மூவர் நின்று கொண்டு சிங்கழகருடன் கோபமாக வார்த்தை சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இதைக் கண்டு இளைஞர்கள் இருவரும் புறம்பே ஒதுங்கி நிற்க.

சிறிது நேரத்தில் அந்தச் சேவகர்கள் மூவரும் குடிலை விட்டு வெளியே வந்து வேகமாகப் போய்விட்டார்கள்.

அப்பால் இளைஞர்கள் உள்ளே போனதும், சிங்கழகர் அவர்களை வரவேற்று உபசரித்து,

"பிள்ளைகாள்! உங்களைத்தான் எதிர்பார்த்து இருக்கிறேன்!" என்று கூறினார்.

இளைஞர்கள் இருவரும் தரையில் அமர்ந்து கொள்ள வல்லபன் சிங்கழகரை நோக்கி, "இந்தச் சேவகர்கள் யார் சுவாமி? எதற்கு வந்தார்கள்?" என்று கேட்டான்.

"இவர்கள் சம்புவராயரின் ராஜபடர்கள். இறை வாங்க வந்திருக்கிறார்கள். இப்போது ஊரிலே எதை எடுத்தாலும் இறை விதித்து விடுகிறார்கள். ராஜரீகம் மிகவும் மோசமாக நடக்கிறதே, உங்களுக்குத் தெரியாதோ!" என்று கேட்டார் சிங்கழகர்.

"எதுவும் தெரியாது, சுவாமி!" என்றான் வல்லபன்.

"இந்தச் *சம்புவராயர் ராஜ்யம் காலம் காலமாய் தர்மத்தில் நின்று வந்திருக்கிறது. ஆனால் இப்போது வரவர ராஜ்யத்திலே அநீதிகள் நிறையத் தலைகாட்டத் தொடங்கி விட்டன. அவைகளைப் பார்த்தும் அரசர் வாளாவிருக்கிறார். அவருக்கு ஏன் இப்படிப் புத்தி மாறிப் போனது என்று தெரியவில்லை. குடி ஜனங்கள் இதைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்!" என்றார் சிங்கழகர்.

"சுவாமி!" என்றான் வல்லபன். "மதுரை சுல்தானுக்கு இந்த சம்புவராயர் கப்பம் கட்டுபவர்தானே!" என்று கேட்டான்.

"நன்றாகக் கேட்டாய் கேள்வி! கப்பம் கட்டுவதனால் தானே அவர் தம் ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. இல்லாவிடில் ஏனைய சோழ பாண்டியர் களுக்கு நடந்திருக்குமே அந்தக் கதி இவருக்கும் நேர்ந்திருக்கும்!

"சம்புவராயர்கள் தந்திரசாலிகள், முதன்முதல் சுல்தானியர்கள், படையெடுத்து வந்த போது, அவர்களுக்கு அடி பணிந்து வழிவிட்டார்கள். சிற்றரசர்களாக இருந்து கப்பம் கட்டுவதாக வாக்களித்தார்கள். இதனால்தான் அவர்கள் ராஜ்யம்

---

* செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு (சிதம்பரம், கடலூர் தாலூகா நீங்கலாக) ஆகியவற்றை உள் அடக்கிய பூமியே சம்புவராய ராஜ்யம்!

பிழைத்தது. அவர்கள் ஆட்சி இன்னமும் நடந்து வருகிறது!" என்றார் சிங்கழகர்.

தத்தன் இடைமறித்து, "சுவாமி! இந்தச் சம்புவராயர்கள் நமது வேதாந்த சமயங்களைச் சேர்ந்தவர்கள் ஆயிற்றே! இவர்கள் மதுரைச் சுல்தானை எதிர்த்துப் போரிட்டு இந்த நாடுகளை மீட்கக் கூடாதோ?" என்று கேட்டான்.

"அப்பா, காலதத்தா! நல்ல கேள்வி கேட்டாயே! இந்த சுல்தானியர்களை விரட்டுவதற்கான தைரியம் இவர்களிடம் எது? போதிய படைகளும் ஏது? இப்போது கூட இந்த சம்புவராயர்கள் ஆட்சி நடத்துகிறார்களே, எப்படி நடத்துகிறார்கள் என்று நினைக்கிறாய்? சுல்தானியருக்குப் பயந்து நடுங்கிக் கொண்டு ஆட்சியை நடத்தி வருகிறார்கள். இது உனக்குத் தெரியாதா?" என்றார் சிங்கழகர்.

"தெரியாது சுவாமி! நாங்கள் முதன் முதல் காஞ்சீபுரத்தில் நுழைந்த போது ஜனங்கள் நிச்சிந்தையாய்ப் போய் வருவதைப் பார்த்தோம். கோவிலுக்குத் திருமஞ்சனக் குடம் போவதைப் பார்த்தோம். இவையெல்லாம் பார்த்தால் இங்கே இந்தச் சம்புவராயர்கள் பூரணமான சுதந்திரமுடன் தர்மராஜ்யம் நடத்தி வருகிறார்கள் என்று நினைத்தோம்!" என்றான் வல்லபன்.

"நல்லது பிள்ளாய்! நீ பார்த்தது எல்லாம் மேல் பூச்சு! உள்ளே தோண்டிப் பார்த்தால் அவ்வளவும் அனர்த்தங்கள்! சுல்தானியர்கள் இவர்களை அவ்வப்போது பணம் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இவர்களும் ஜனங்களை இறை கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இதனால் ஜனங்கள் நைந்து வருந்துகிறார்கள். இங்கே கோவிலில் பூஜை நடப்பதெல்லாம் காலையில் ஒரு நாழிகை! மாலையில் ஒரு நாழிகை! மற்ற நேரம் எல்லாம் அவை அடைத்தே கிடக்க

வேண்டும். இந்த பூஜைகள் கூட சுல்தானியருக்குத் தெரியாமல் நடந்து வருகிறது. தெரிந்தால் விபரீதங்கள் நேர்ந்து விடும். இவ்வளவு லட்சணத்தில்தான் சம்புவராயரின் ஆட்சி இங்கு நடந்து வருகிறது. இவர்களால் மதுரையை எதிர்த்து என்றுமே போராட முடியாது என்பது என் துணிவு! இங்கே இந்த ராஜ்யத்தில் ஒரே ஒரு நன்மை! எங்களைப் போன்ற திக்கற்றவர்களுக்கு இது ஒரு 'அஞ்சினான் புகலிடமாக' இருந்து வருகிறது. அவ்வளவே தான்!" என்று கூறினார்.

பின்னர் அவர் சம்புவராயர் ஆட்சி எப்படிப் படிப்படியாக இப்போது க்ஷீணித்து வருகிறது என்பதையும், நாட்டில் எப்படி அக்கிரமங்கள் பெருகி வருகின்றன என்பதையும் விரிவாகக் கூறினார். நாடு போகிற நிலையைப் பார்த்தால் கடவுள் தான் ஏதாவது கண் திறந்து செய்ய வேண்டும் என்பதையும் கூறினார்.

அவர் சொல்வதை எல்லாம் மிக உன்னிப்புடன் இரு இளைஞர்களும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு எதிலும் அப்போது ஒரு சூன்யமே தோன்றிக் கொண்டிருந்தது.

அதை அறிந்து கொண்ட சிங்கழகர், "பிள்ளைகாள்! கலங்க வேண்டாம்! அது நடக்க வேண்டிய வேளைகளில் தானாகவே நடக்கும். நாம் கவலைப்பட வேண்டுவதில்லை. இப்போது பாருங்கள்! நீங்கள் இருவரும் அரங்கனைத் தேடி இங்கே வந்திருக்கிறீர்கள் என்பதே ஒரு நல்ல துவக்கத்தின் அறிகுறி! இதுவே ஒரு பெரும் போராட்டத்திற்கு வழி வகுத்தாலும் வகுக்கும், நான் சொல்வதை நம்புங்கள்! நம்பிக்கை வையுங்கள்! நீங்கள் இருவரும் இங்கே வந்திருப்பதே ஒரு சுப சகுனம்!" என்றார் சிங்கழகர்.

அவர் சொல்வது கேட்டு, தெய்வ வாக்கு என மனத்தில் தெளிவு பெற்ற வல்லபன் அவரை நோக்கி, "சுவாமி! தாங்கள் கூறும் மொழிகளால் எங்களது தவிப்புகளும் சந்தேகங்களும் நீங்கி வருகின்றன. தாங்கள் கூறுவது போல் அரங்கனைத் தேடிக் கண்டுபிடித்தால் அதுவே பின்னர் ஒரு போராட்டத்திற்கு வழி வகுத்தாலும் வகுக்கலாம்! பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின் உங்களைத் தேடி நாங்கள் கண்டுபிடித்ததே அதற்கான சுப சூகமாகவும் இருக்க லாம்! இப்போது சொல்லுங்கள், சுவாமி! அரங்கன் அதன் பிறகு என்ன ஆனார்? அவரை நீங்கள் எங்கே யாவது காண நேர்ந்ததா? அரங்கனை எடுத்துச் சென்ற சீராமதாசர் என்ன ஆனார்? அவரையும் நீங்கள் பார்த் தீர்களா?" என்று சரமாரியாகக் கேட்டான் வல்லபன்.

அதற்கு சிங்கழகர், "அப்பா வல்லபா! நான் உனக்குச் சொல்லி நிறுத்தினேனே, அதை விட்டு ஒரு அங்குலம் கூட எனக்குக் கதை தெரியாது. சந்திரகிரிக் காட்டிலிருந்து பல்லாண்டுகளுக்கு முன் தப்பித்து வந்தவன் நான்! அதற்குப் பிறகு எவ்வளவோ முயற்சி செய்தும் சீராமதாசரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. திருவரங்கனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. எத்தனையோ பேர்களிடம் விசாரித்து அனுப்பி விட்டேன். யாரும் சீராமதாசரைப் பற்றியாவது, அரங்கனைப் பற்றியாவது ஒரு செய்தியையும் கொணர வில்லை. இருக்கும் ஆத்திரத்தில் நானே சென்று சந்திரகிரிக் காட்டில் தேட வேண்டும் என்று நினைத்த துண்டு. ஆனால் என் கால்கள் சரியில்லாத நிலைமை யில் எப்படிச் சென்று தேடுவேன்? ஆகவே கூண்டுக் குள் அடைபட்டவன் போல் சிக்குண்டு ஏதும் செய்ய முடியாமல் இத்தனை நாள் இருந்துவிட்டேன். இப்போது பல வருஷங்களாய் ஒரு அசக்தி என் மீது

ஆவிர்பவித்து வருகிறது. என் ஆசைகளும், லட்சியங்களும் மெள்ள மெள்ள நைந்து வரத் தொடங்கி விட்டன. 'இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அரங்கன் இனிக் கிடைக்கவா போகிறான்?' என்ற எண்ணமும் மனத்திலே வளரத் தொடங்கிவிட்டது. இந்த நிலையில் நீங்கள் வந்ததால் தான் என் பழைய உணர்ச்சிகள் மீளவும் கொப்பளித்து எழுந்துள்ளன. பிள்ளைகாள்! நீங்கள் இருவரும் என் ஆசை லட்சியங்களின் வெளியுலகப் பிரத்யட்சங்கள். அரங்கனைப் பற்றிய எனது தாங்கொணா வேட்கைதான் இளம் பருவப் பயிர்களாய் உங்கள் உருவில் ஜனித்திருக்கிறது என்று நினைக்கிறேன். என் உள் ஆசைகளின் வெளி வடிவங்கள் நீங்கள்!

"ஆகவே நீங்கள் எனக்காகச் செய்ய வேண்டுவது இதுதான்! நீங்கள் என்ன செய்வீர்களோ? ஏது செய்வீர்களோ? சந்திரகிரிக் காட்டைக் குடைந்து எடுத்து அரங்கனைத் தேடிப் பாருங்கள்! அங்குலம் அங்குலமாக பூமி முழுவதையும் தேடுங்கள்! அரங்கன் நிச்சயம் அகப்படுவார் என்பது என் நம்பிக்கை! ஒரு வேளை அரங்கனே திருவுள்ளம் பற்றினால் அவரே தம்மைத் தாமே காட்டிக் கொண்டாலும் கொள்ளுவார். ஆகவே, முயற்சியில் இன்று முதலே ஈடுபடுங்கள்! முயற்சி திருவினையாக்கும்!" என்று கூறினார்.

பின்னர் இளைஞர்கள் இருவரும் அவரிடம் சந்திரகிரிக் காட்டின் இயல்புகளையும், அதன் நீள அகல விஸ்தீரணங்களையும் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

காட்டுக்குள் பொதுவாக எதிர்ப்படும் கொடிய விலங்குகளையும், விஷ ஜந்துக்களையும் பற்றி அவரிடமிருந்து அறிந்து கொண்டார்கள்.

காட்டில் வேடுவ ஜனங்கள், எந்தப் பகுதியில் இருக்கிறார்கள், அவர்களிடம் என்னென்ன உதவிகள் பெறலாம் என்பதையும் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

சிங்கழகரிடமிருந்து ஒரு பூரணமான அறிவைப் பெற்ற பிறகு இளைஞர்கள் இருவரும் மறுநாளே சந்திரகிரியை நோக்கிப் புறப்படச் சித்தமானார்கள்.

21

புறப்படும் வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. இரு இளைஞர்களும் மீசை தாடி அணிந்து சந்நியாசிகள் போல் வெளியே வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து சிங்கழகரும் வந்தார்.

"வேடம் சரியாக இருக்கிறது" என்றார் சிங்கழகர்.

சம்புவராய ராஜ்யத்தில் இளைஞர்களுக்கு ஏதாவது ஆபத்து வரக் கூடாது என்பதற்காகச் செய்த ஏற்பாடு இது.

சிங்கழகர் வீதியில் போய்த் தம் நிழலைத் தாமே அளந்து மனத்தில் கணக்குப் போட்டுப் பார்த்தார்.

பிறகு இளைஞர்களைப் பார்த்துத் திரும்பி, "நல்ல நேரம் வருவதற்கு இன்னும் அரை நாழி போக வேண்டும்!" என்று சொல்ல,

இளைஞர்கள் திண்ணையில் அமர்ந்தார்கள்.

அப்போது ராஜ வல்லபன் சிங்கழகரைப் பார்த்து, "சுவாமி! ஒரு சந்தேகம்!" என்று கூறினான்.

"என்ன?" என்றார் சிங்கழகர்.

"தாங்கள் சந்திரகிரிக் காட்டிலிருந்து வந்து பதினெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன அல்லவா?" என்றான் வல்லபன்.

"ஆமாம், பிள்ளாய்!" என்றார் சிங்கழகர்.

"இத்தனை ஆண்டுகள் சென்ற பின்பும் அரங்கன் அந்தக் காட்டிலே இன்னமும் இருந்து வருவார் என்று நம்புகிறீர்களா?" என்று கேட்டான் வல்லபன்.

"ஆமாம், பிள்ளாய்! அப்படித்தான் நினைக்கிறேன். அரங்கனைத் தூக்கிச் சென்ற கொடவர் மாத்திரம் காட்டை விட்டு வெளி வந்திருந்தால் அந்தச் செய்தி எப்படியாவது என் காதுகளுக்கு எட்டியிருக்கும்!" என்றார் சிங்கழகர்.

"அப்படியானால் அந்தக் காட்டுக்குள்ளேயே இருந்து வருகிறார் என்று நம்புகிறீர்களா?"

"ஆமாம். அப்படித்தான் நம்ப வேண்டி இருக்கிறது. ஆனால் அந்தக் கொடவர் எது காரணம் பற்றியோ காட்டை விட்டு வெளி வராதிருக்க வேண்டும். அல்லது அவருக்கு ஏதாவது நேர்ந்திருக்க வேண்டும். எப்படி இருப்பினும் அரங்கன் காட்டுக்குள் தான் இருப்பார் என்பது எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது!"

வல்லபன் சிறிது நேரம் மௌனமானான்.

பிறகு அவன் சிங்கழகரை நோக்கி, "சுவாமி! அரங்கனது அணிமணிகள் அடங்கிய பொதி ஒன்றைக் கொடவர்கள் மலைக்கு மேல் எடுத்துச் சென்றார்களே, அது என்ன ஆயிற்று?" என்று கேட்டான்.

"அதை மேலே முகட்டில் புதைத்து விட்டார்கள். அதனால்தான் இரண்டு கொடவர்களும் மலை

மீதிருந்து கீழே கை வீசிக் கொண்டு இறங்க முடிந்தது. அடிவாரத்தில் சூழ்ந்திருந்த துருக்கிய வீரர்களுக்கு ஊடே தந்திரமாகவும் ஊடுருவிப் போக முடிந்தது!" என்றார் சிங்கழகர்.

இதற்குள் சிங்கழகர் மீண்டும் நிழலை அளந்து பார்த்து விட்டு வந்து, "வேளை கூடி விட்டது!" என்றார்.

அவ்வளவில் வல்லபனும் தத்தனும் தங்களது சுமைகளைத் தோளில் தூக்கிக் கொண்டார்கள்.

வீட்டுக்குள்ளிருந்து மஞ்சரி அப்போது ஓடி வந்தாள். பொன் போன்ற தகதகத்த பித்தளைத் தகட்டில் செக்கச் செவேலென்று குங்கும அம்பாரங்களை ஏற்றி வந்தாள். வல்லபனின் நெற்றியிலும் தத்தனின் நெற்றியிலும் தன் தளிர் விரல்களால் வட்டமான திலகங்களை அணிவித்தாள். தத்தனை நெருங்கிய போது அவள் இளம் விரல்கள் சிறிது நடுங்கின. கடைக்கண்ணால் அவனைப் பார்த்தவாறே திலகத்தை வைத்தாள்.

பிறகு இரண்டடி பின் நகர்ந்து, "ஜய விஜயீ பவ!" என்று கூறினாள். கீழே தலை குனிந்தவாறே, "ஐயா! திரும்பிப் போகும்போது இந்த அடியவளைக் காண இருவரும் அவசியம் வர வேண்டும்!" என்று கூறினாள்.

சிங்கழகர் மல்கும் கண்ணீருடன் நின்றார்.

"பிள்ளைகாள்! அரங்கனைக் காண்பதற்கோர் உபாயம் கூறுகிறேன். அவன் திருநெற்றியில் கஸ்தூரி கமழும். திருமார்பில் குடகுச் சந்தனம் வாசம் இடும். திரு அங்கமெல்லாம் சிந்தூரம் மணந்து ஊறும். எங்கே தெய்வீகமான பரிமள கந்தங்கள் காற்றில் வீசுகிறதோ அங்கே அரங்கன் நிச்சயம் இருப்பான்.

காலம் காலமாய்த் தம் திருமேனியிலே இந்தப் பரிமள வஸ்துக்களைத் தரித்திருந்த அரங்கன் அந்தப் பரிமளங்களாகவே கமழ்வான்!" என்று கூறினார்.

பின்னர் அவர் அந்த இரு இளைஞர்களையும் ஆரத் தழுவி உச்சி தொட்டு ஆசீர்வதித்து, கண்களில் பொல பொல என்று நீர் வடிய விடை கூறி அனுப்பினார்.

மஞ்சரி நிலையைப் பிடித்து நின்று இட்ட கையும் இட்ட காலும் இட்ட சிந்தனையும் இட்டபடியாகவே உறைந்து கிடக்க, இளைஞர்கள் இருவரும் வீதியில் நடை நடந்து போவதை அப்படியே இமையா விழிகளுடன் பார்த்து நின்றாள்.

இளைஞர்கள் அப்பால் கோபுர தரிசனம் செய்து நேராக வைணவ மடம் ஒன்றை அணுகி, "மேற்கே போவோர் உண்டோ?" என்று கேட்க, "அடியேன் போக இருக்கிறேன்" என்று ஒரு வைணவர் கூற, அவரிடம் சத்தியமங்கலம் வாசந்திகாவுக்கு (வல்லபனின் தாயார்) ஒரு முறி எழுதிக் கொடுத்து விட்டு விறு விறு என்று இருவரும் நகரத்தை விட்டு அப்பால் செல்லலாயினர்.

பத்து நாட்களாக நடந்து சந்திரகிரி ஊரை அடைந்தார்கள். ஊருக்குள் செல்லாமல் அருகிலுள்ள மலை மீது ஏறிக் காட்டை நோக்குங்கால், அந்தக் காடு காதம் காதமாய்ப் பரந்து கிடப்பதைக் கண்டு மலைத்துப் போனார்கள்.

இந்தக் காட்டிலே அரங்கனைத் தேடுவது என்பது சமுத்திர மணலிலே எள்ளைத் தேடுவது போல இருக்குமே என்று அவர்கள் எண்ணி மனம் வெதும்பினார்கள். இருந்தும் தளராமல் அரங்கன் மீது பாரத்தைப் போட்டு விட்டு அந்த மகா அரண்யத்தின்

தென் திசையிலிருந்து உள்ளே அவர்கள் நுழையத் தொடங்கினார்கள்.

முதல் தினத்தில் விறகு வெட்டிகளின் உதவி பெற்று காட்டுக்குள் போகும் பற்பல வழிகளைத் தெரிந்து கொண்டு அவைகளில் தடம் பிடித்து அவர்கள் நடந்து போனார்கள்.

போகப் போக மனித நடமாட்டம் படிப்படியாகக் குறைந்து காட்டின் நெருக்கம் அதிகமாகிக் கொண்டே வந்தது.

எனினும் தளராமல் அவர்கள் இடைவெளிகளைக் கண்டுபிடித்து மேலே மேலே போய்க் கொண்டு இருந்தார்கள்.

மூன்று நாட்கள் பயணத்திற்கு பிறகு அவர்கள் மிகுதியாகச் சோர்ந்து விட்டார்கள். அப்போது வல்லபன் தத்தனைப் பார்த்து, "தத்தா! இவ்வளவு தூரம் தனியாக வந்து விட்டோமே. இனியும் நாம் தனியே போக முடியுமோ?" என்று கேட்டான்.

"நானும் அதைத்தான் பார்க்கிறேன். காட்டில் பல காத தூரம் போனால் காட்டுவாசிகளின் குடியிருப்புகள் வரும் என்றார்களே. ஏதும் இப்போது தென்பட வில்லையே!" என்று கூறினான் தத்தன்.

இருவரும் மலைத்துப் போய், 'இனி என்ன செய்யலாம்?' என்று யோசித்திருக்கும் வேளையில் "தூக்கா! தூக்கா! தூக்கா!" என்ற குரல் எங்கிருந்தோ கேட்டது.

அந்தக் குரல் வந்த திசையைப் பிடித்துக் கொண்டு இருவரும் போய்ப் பார்க்க அங்கே பெரிய சுனையில் எருகுல இனத்தைச் சேர்ந்த ஒரு பெண் குளித்துக் கொண்டிருப்பதை கண்டார்கள்.

ஆடவர்கள் இருவர் வருவதைக் கண்டு ஆச்சரியத்துடன் எழுந்த அந்தப் பெண் கரையேறி மும்முழத் துணியால் சடேரென்று தன் மானத்தை மூடி அவர்களைப் பார்த்து புன்னகையோடு வந்தாள்.

மலைமுகடுகளில் தவழும் காற்றும் நீரும் அந்தக் காட்டு இளம்பெண்ணை வஞ்சனை இல்லாமல் வளர்த்திருந்தன. அவள் கன்னங்களிலும் கண்விழி களிலும் சுழிங்த செவிகளிலும் ஒரு தறி கெட்டுப் போன யௌவனம் காட்டோடை போல் துள்ளிக் குதித்து உல்லாசமாய் ஓடிக் கொண்டிருந்தது.

முதன் முறையாக ஒரு காட்டு இனப் பெண்ணைப் பார்த்த இளைஞர்கள் அதிசயத்துடன் நின்றார்கள்.

அப்போது தத்தன் அவளைப் பார்த்து, "இங்கே குடியிருப்பு ஏதேனும் இருக்கிறதோ?" என்று கேட்க, பாஷையைப் புரிந்து கொள்ளாத அந்தப் பெண்ணும் வெறும் தலையை மட்டும் புன்னகையோடு அசைத்துக் காட்டினாள்.

பிறகு அவள் அவர்களைப் புரிந்து கொண்டது போல் அழைத்துக் கொண்டு முன்னே செல்ல, இருவரும் அவள் பின்னே நடந்து மௌனமாகச் சென்றார்கள்.

கால்நாழிகை கடந்த பிறகு ஒரு வேடக் குடியிருப்பு அவர்கள் கண்ணுக்குத் தென்பட்டது. இளைஞர்கள் இருவரும் அதை நோக்கிப் போனதும் குடியிருப்புகளின் ஜனங்கள் யாவரும் ஒருங்கு திரண்டு இளைஞர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களது திடகாத்திர வெற்று உடம்புகளைக் கண்டு இளைஞர்கள் அதிசயிக்க, இரு எருகுல ஆண்கள் முன்னே வந்து அவர்களை அழைத்துக் கொண்டு தங்கள் தலைவரிடம் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

*ஏகலைவ ராஜா என்ற அந்தத் தலைவர் வயதான வராய் இருந்தார். தமது *ஒக ஸ்தலத்தில் அவர் அமர்ந்து கொண்டு இளைஞர்களை வரவேற்றார். காட்டுக் கனி களை அவர்களுக்கு வழங்கிய பின், தனது எருகுல பாஷையில், "ஐயா தாங்கள் இந்த மகா அரண்யத்துக் குள் வந்த காரணம் தெரியலாமோ?" என்று கேட்டார்.

தமது பாஷை அந்த இளைஞர்களுக்குத் தெரியாது என்று தெரிந்ததும், தமிழும் தெலுங்கும் கலந்தபடி பேசினார்.

அந்தத் தலைவரின் இனிதான உபசரிப்பையும், ஆதரவான மொழிகளையும் கேட்ட இளைஞர்கள் பரவசம் அடைந்தார்கள். இத்தனை நாள் நடந்து வந்த களைப்பும், பட்ட சிரமங்களும் நொடியில் ஆறிப் போனது போல் நினைத்தார்கள். அவர்களும் அந்த தலைவரைப் பார்த்து, "ஐயா! நாங்கள் அரங்கனைத் தேடி வந்தோம்!" என்று சொல்லி ஆதியோடு அந்தமாய் அரங்கன் அந்தக் காட்டுக்குள் வந்த கதையை விவரமாகச் சொல்லி முடித்தார்கள்.

அதைக் கேட்ட அந்த ஏகலைவர் கை கட்டி வாய் பொத்தி அப்படியே வெகு நேரம் அமர்ந்திருந்தார். அவர் கண்களிலே ஈரம் மெதுவாக இலங்கியது.

மெதுவாகத் தன் நிலைக்கு வந்த அந்தத் தலைவர் "ஐயன்மீர்! அந்தத் துருக்கியப் படைகள் அஞ்சனாத்ரி மலையைச் சுற்றி நின்றதுவரைதானே உங்களுக்குக் கதை தெரியும். அதற்கு மேலும் உங்களுக்குக் கதை தெரியுமோ?" என்று கேட்க,

* ஏகலைவ ராஜா - ஏகலைவனின் வமிசத்தார்கள் தாங்கள் என்று இந்த இனத்தவர் கருதினார்கள்.

* ஒக ஸ்தலம் - பஞ்சாயத்து வழங்கும் இடம்.

"தெரியாதே!" என்று சொன்னார்கள் இளைஞர்கள்.

"கேளுங்கள்!" என்று சொன்ன ஏகலைவர் மேலே தொடர்ந்து,

"ஐயன்களே! மலைமேலே அரங்கனைத் தேடி துருக்கியர்கள் வீரர்களை அனுப்பினார்கள். அவர்கள் எல்லோரும் வெறும் கையோடு திரும்பினார்கள். இது கண்டதும் துருக்கியர்களுக்கு ஆத்திரம் மூண்டது. காட்டுக்குள் புகுந்து எங்கள் இனத்துக் குடியிருப்புகளில் எல்லாம் சென்று, 'அரங்கனையும் அவரது அணிமணிகளையும் எடுத்துச் சென்ற மூன்று ஆட்களையும் பார்த்தீர்களோ?' என்று கேட்டார்கள். 'இல்லையே!' என்று அவர்கள் சொன்னார்கள். அதைத் துருக்கியர்கள் நம்பவில்லை; பொய்தான் இவர்கள் சொல்கிறார்கள் என்று எண்ணி இரவோடு இரவாகக் காட்டுப் பகுதிகளில் பல இடங்களில் தீயை வைத்துவிட்டு சந்திரகிரி நோக்கி ஓடிவிட்டார்கள்.

புதரிலும், மூங்கில் மரத்திலும் தீ பரவி சீக்கிரமே ஒரு மலைபோல் வளர்த்துவிட்டது. காடு முழுவதும் ஜகஜ் ஜோதியாய்ப் போய்விட்டது. பறவைகளும், பிராணிகளும் திக்கு முக்காடிப் போயின. இதில் எழுந்த புகை ஒரு மேகக் கூட்டம் போலக் காட்டை அடைந்து விட்டது. எங்கள் ஆயுளில் அது போன்ற நெருப்பைப் பார்த்ததில்லை.

ஒரு மாதம் தீ எரிந்தது. அது முழுதுமாக அணைய இரண்டு வாரமாகியது. நெருப்பு ஆறி பூமி குளிர மேலும் இரண்டு வாரம் பிடித்தது. எல்லாம் முடிந்த பிறகு உள்ளே நுழைந்து பார்த்தால் எங்கள் குடியிருப்புகள் பலவற்றைக் காணோம். எல்லோரும் எரிந்து சாம்பலாகி விட்டார்கள். அப்படிப்பட்ட கோரக் காட்சியை இதுவரை நான் பார்த்ததில்லை!" என்று கூறினார்.

இளைஞர்கள் இருவரும் நடந்ததை எல்லாம் கேட்டுப் பிரமித்து இருந்தார்கள்.

உடனே தத்தனானவன் ஏகலைவரை நோக்கி, "ஐயா! அப்படியானால் எங்கள் அரங்கனும், அந்தக் கொடவரும் தீயில் அகப்பட்டிருப்பார்களா?" என்று சோகத்தோடு கேட்க,

"ஐயன்களே! உங்கள் கடவுள் தான் எத்தனையோ ஆபத்துக்களிலிருந்து தப்பி இருக்கிறாரே! இதில் இருந்தும் நிச்சயம் தப்பியிருப்பார். யோசனை பண்ணினால் எனக்கு ஒன்று தோன்றுகிறது. அந்தத் தீ எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. அது தெற்கேயிருந்து வடக்காகப் பரவிச் சென்றது. அப்படிச் சென்றதால் உங்கள் கொடவர் வடக்கு நோக்கி ஓடியிருக்கலாம். அங்கே போகப் போக பயங்கரமான காட்டுப் பகுதிகள் இருக்கின்றன. அந்தக் காடுகளில் செஞ்சு இனத்தவர் வாழ்கிறார்கள். நீங்கள் அங்கே சென்று பார்த்தால் உங்களுக்குத் தடயம் கிடைத்தாலும் கிடைக்கலாம். அவர்கள் உங்களுக்கு நிறைய உதவி செய்யலாம். இன்று இங்கு தங்கியிருந்து நாளைக் காலை நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள்! உங்களுக்குத் துணையாக சுகலிகளை அனுப்புகிறேன்!" என்று கூறினார் அவர்.

இரவு சுட்ட கிழங்குகளை அருந்தி விட்டு இளைஞர்கள் இருவரும் படுக்கும் போது கிளுக்கென்று ஒரு இனிதான சிரிப்புக் கேட்க,

அங்கே அவர்கள் முன்னிலையில் அந்தச் சுனையில் கண்ட பெண் கையில் சுழுந்திக் கற்றை எரிய நின்று கொண்டிருந்தாள்.

இவள் இங்கே எதற்கு வந்திருப்பாள் என்று இருவரும் நினைக்கும் போது, அந்தப் பெண் சுழுந்தியைத் தூரத்தில் வைத்து விட்டு வெகு

சுபாவமாக அந்த இருவரின் நடுவே வந்து அமர்ந்து கொண்டாள்...

பிறகு இ வரையும் மாறி மாறிப் பார்த்துச் சிரித்தாள்.

22

இராவேளையில் அந்த எருகுலப் பெண் இளைஞர்களின் இருக்கைக்கு வந்து சிரிப்பதைப் பார்த்ததும் அவர்கள் திடுக்கிட்டார்கள்.

இவள் எதற்கு வந்தாள் என்று அவர்கள் யோசிக்குமுன் அந்தப் பெண்ணோ தன் பின்புறம் தொங்கிக் கொண்டிருந்த மூங்கிற் குடுவையை எடுத்து அவர்கள் கைகளில் அருமையான மலைத்தேனை வார்த்து விட்டாள்.

இருவரும் அதை ருசித்த போது அமிர்தம் போல் இனித்தது.

அப்பால் அவள் இளைஞர்களின் மூட்டையில் இருந்துத் தொங்கிக் கொண்டிருந்த தாடி, மீசைகளை வெளியே எடுத்துக் கையில் வைத்துப் பார்த்தாள். (காட்டுக்குள் நுழைந்த பிறகு இளைஞர்கள் தங்கள் சந்நியாச வேடத்தைக் கலைந்திருந்தார்கள்.) அவை களைத் தன் முகத்தில் வைத்துக் கொண்டு கிளுக் கிளுக் என்று நீர்க்குமிழிகளைப் போல் சிரித்துச் சிதறினாள்.

"இவள் என்ன *பிச்சியோ?" என்ற இளைஞர்கள் ஐயத்தோடு நினைத்தார்கள்.

---

* பிச்சி - பைத்தியம்

அப்போது அவள் தமிழும் எருகுலப் பாஷையும் கலந்து கடகடவெனப் பேச ஆரம்பித்தாள்.

"ஐயா, நீங்கள் எங்கள் காட்டுக்கு வந்தது ரொம்ப சந்தோசம். உங்களைப் பார்த்தாலே என்னைப் போல் உள்ள எருகுலப் பெண்களுக்கு மிக்க ஆனந்தம். ஏனெனில் நாங்கள் நாட்டைப் பார்த்ததே இல்லை. காடுதான் எங்கள் ஒரே வாசம். உங்களைப் போன்றோரைப் பார்ப்பதற்கே எங்களுக்குப் புதுமையாக இருக்கிறது. உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். உத்தரம் சொல்லுங்கள். நீங்கள் வேட்டையாடவா வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

அதற்கு வல்லபன், "இல்லை!" என்று கூறினான்.

உடனே அந்தப் பெண், "நல்லது! அதை உங்கள் முகத்திலிருந்தே கண்டு கொண்டேன். கேளுங்கள்! சுனை அருகிலே உங்களைப் பார்த்ததும், என் மனசில் குறிச்சொல் நீர்ஊற்றுப் போல் சுரந்தது. நான் குறி சொல்பவள். ஆனால் இது போன்று ஒரு அருவியாய் என் மனசில் குறிகள் ஊறியதை இதுவரை கண்டதில்லை. உங்களைச் சீக்கிரமே பார்த்துக் குறி சொல்ல நினைத்தேன். அதற்கு இப்போதுதான் சந்தர்ப்பம் கிடைத்தது!" என்று கூறி,

வல்லபனின் வலது கையை இழுத்து அதன் மீது தனது குறி சொல்லும் கோலை வைத்துக் கொண்டாள்.

கோலை வைத்ததுமே அவள் விழிகளில் நீர் விரவி வந்தது.

"ஐயா! காட்டிலே உடம்பிருக்கு! ஆனால் நாட்டிலே மனசிருக்கு. கெண்டை விழியாள் ஒருத்தியைக் கண்டு கொண்ட நாள் முதலாய், பாதி மனசினை நீ அந்தப் பாவைக்கு விற்று விட்டாய்!

மஞ்சத்தில் படுத்தாலும், மெய்மறந்து கிடந்தாலும், ஊரைக் கடந்தாலும், காதங்கள் போனாலும், கொஞ்சு மொழியாளின் கோமள நினைவெல்லாம், செஞ்சுடர் சூரியனாய் பிஞ்சு முகம் ஒளி வீசும் உன்னிடத்தே இருக்குதையா! உண்மையேதான் சொன்னேனய்யா!" என்று கூறி முடித்தாள்.

பிறகு தத்தனின் கையை எடுத்துச் சிறிது நேரம் உற்றுப் பார்த்து, "கரி வண்டு கண் ஒன்று உன்னைப் பார்த்த நாள் முதலாய் மருவுற்றுக் கிடக்குதையா, மனசெல்லாம் வாடுதையா, சொல்லத் துடிக்குதையா; சொல்லாமல் வேகுதையா; எல்லை கடந்தே நீ, எங்கேதான் போனாலும் முல்லை மலராளின் மோகன மனமெல்லாம் துள்ளி வருகுதையா, துடித்தோடி வருகுதையா! வேறுகுறியோடு நீ வேறு பல நினைத்தாலும் பாவையை மறவாதே, ஒரு பாவம் பழி ஏற்காதே!" என்று கூறினாள்.

பின்னர் அவள் காட்டு தேவதைகளை எல்லாம் அவர்களுக்கு அனுகூலங்களைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்துவிட்டு, பலமுறை அவர்களை வணங்கிவிட்டு விடைபெற்றுப் போய்விட்டாள்.

அவள் போன பிறகு அவள் விட்டுச் சென்ற சுழுந்தி வெகுநேரம் எரிந்து கொண்டிருந்தது.

பின்னர் இளைஞர்கள் இருவரும் மௌனமாய்ப் படுத்துக் கொண்டார்கள்.

கண்ணை மூடியதும், வல்லபன் மனத்தில் திடீரென்று அந்த மகரவிழியின் நினைவு துள்ளி வந்தது. இவ்வளவு நாட்களும் அந்த நினைவு சற்று ஒதுங்கியே இருந்து வந்தது.

இன்று அந்தக் காட்டுப் பெண் குறி சொல்லி விட்டதும் அந்த மகர விழியின் நினைவு தன்னைப்

பிணைத்திருந்த சங்கிலிகளையெல்லாம் உடைத்து எறிந்து கொண்டு அவன் முன்னே முன்னிலும்விட வந்து குதித்தது.

"மகரவிழி! மகரவிழி! நீ எங்கே இருக்கிறாய்? உன்னை மீண்டும் சந்திப்பேனா? இந்தக் காட்டுப்பெண் என்னிடம் உன்னைப் பற்றிக் குறி சொல்லி விட்டாளே! அவள் சொல்வது உண்மையானால் நீ என்னைப் பற்றித் தான் நினைக்கிறாயா? இது நிஜந்தானா அல்லது மனத்துக்கு இதமானதையே சொல்ல விரும்பும் இந்தக் குறிக்காரி வேண்டுமென்றே இப்படிக் கூறுகிறாளா? எதுவும் புரியவில்லையே!" என்று மனத்துள் புலம்பினான்.

தத்தன் எதுவும் நினைக்கவில்லை. எதையும் நினைக்க விரும்பவுமில்லை. ஆனால், 'மீண்டும் ஒருமுறை திரும்பி வாருங்கள்!' என்ற ஒரு கனிவு மிகுந்த சொல் மாத்திரம் தூரத்திலிருந்து வந்து அவனது இரும்பான மனத்தை உடைத்துக் கொண்டு அடிக்கடி கேட்டது.

மறுநாள் காலையில் இருவரும் எழுந்து சுனையில் நீராடி புறப்படச் சித்தமானார்கள்.

அப்போது அந்த எருகுலத் தலைவர் தனது சுற்றம் சூழ அவர்கள் இருப்பிடம் வந்தார்.

அவர்களுக்கு வெகுமதியாக நல்ல கனி வர்க்கங்களைக் கொடுத்துவிட்டு, "ஐயன்மீர்! தாங்கள் இருவரும் இங்கு வந்ததால் எங்கள் ஸ்தலமே புனிதமாயிற்று. நீங்கள் மேற்கொண்டு உள்ள காரியம் எல்லாம் வெற்றி பெற வேண்டும்!" என்று கூறினார்.

பின்னர் இரு ஆணும் இரு பெண்ணுமான சுகலிக் கூட்டம் ஒன்றை அழைத்து,

"ஐயன்களே! செஞ்சு வேடர் வாழும் பூமி வரை இவர்கள் உங்களுக்குத் துணையாக வருவார்கள். உங்களுக்கு எந்தக் கவலையும் வேண்டாம். நல்லபடியாய்ச் சென்று வாருங்கள்!" என்று கூறினார்.

சுகலிகள் என்பவர்கள் ராஜஸ்தான் நாட்டைச் சேர்ந்த நாடோடிகள் ஆவார்கள். எந்த இடத்திலும் தங்காமல் அலைபவர்கள். முதன் முதலாகத் தென் நாடுகள் மீது டில்லி சுல்தானியர்கள் படையெடுத்த போது, அவர்களது சுமைகளைத் தூக்கி வருவதற்காக இந்த நாடோடிகளில் நூற்றுக்கணக்கானவரை தெற்கே அழைத்து வந்தார்கள்.

சுல்தானியர்கள் பின்னர் திரும்பிப் போன போது, அந்த நாடோடிகளின் ஒரு பகுதியினர் சந்திரகிரிக் காட்டில் தங்கிவிட்டார்கள். இந்த நாடோடிகள் 'சுகலிகள்' என அழைக்கப்பட்டார்கள்.

அந்த சுகலிகளை அறிமுகப்படுத்திக் கொண்ட வல்லபனும், தத்தனும் பின்னர் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள்.

சுகலிப் பெண்கள் இருவரின் பெரிதான பாவாடைகளில் கட்டியிருந்த மணி ஓசைகள் சிணுசிணுங்கிக் கொண்டே போக,

இரு இளைஞர்களும் தங்கள் புதிய அனுபவங்களை எண்ணியவாறு நடந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் சிறிது தூரம் போனதும், 'தூக்கா' என்று ஒரு குரல் கேட்கத் திரும்பிப் பார்த்தார்கள்.

அந்தச் சுனைப் பெண் புன்முறுவல் இட்டுக் கொண்டு அவர்கள் முன்னால் வந்தாள். அவள் கையில் சுவஸ்திகா வடிவில் கட்டப்பட்ட காட்டு வேர் பிம்பம் இரண்டு இருந்தது.

"இவை உங்களுக்கு ரட்சைகள்!" என்று அந்தப் பெண் அந்தப் பிம்பங்களை அவர்கள் கையில் கட்டி விட்டு மாறாத முறுவலுடன் விடை கொடுத்தாள்.

அன்று முழுவதும் அந்த சுகலிக் கூட்டத்தின் பின்னால் சென்ற இளைஞர்கள் நெருங்கிப் படர்ந்த அகோரமான காட்டில் பல பகுதிகளைக் கடந்து இரவு வேளையானதும் ஒரு வசதியான பாறை அடர்வில் தங்கிக் கொள்ள.

அப்பாறையில் சுகலிப் பெண்கள் இருவரும் தெரியாத மொழியில் நாட்டுப் பாடல்களைப் பாடிக் கொண்டே காட்டுக் கிழங்குகளை நெருப்பில் சுட்டு வந்து எல்லோருக்கும் அளித்தார்கள்.

இரண்டாம் நாள் பிரயாணம் கடினமாக இருந்தது. காட்டின் மரங்கள் நெருக்கி அடித்துக் கொண்டு இருந்தமையால் போகும் வழிகளை சுகலிகள் வெட்டிக் கொண்டே போக வேண்டி வந்தது. "போன மாதந்தான் இந்த வழியில் போனோம். ஒரு மாதத்திற்குள் தூர்ந்து விட்டது. மரங்கள் அப்படி வளர்கின்றன!" என்றார் சுகலிகள்.

வெளிச்சம் இல்லாத பாதைகளையும், ஆழமான ஓடைகளையும், சுனைகளையும் சதுப்பு நிலங்களையும், வழுக்கலான பாறைகளையும் கவனமாக கடந்து கொண்டு,

மாலை சோரும் வேளையில் செஞ்சு இனத்தாரின் எல்லையை அடைந்தார்கள்.

அவ்வளவில் சுகலிகள் இளைஞர்களை நோக்கி, "ஐயாக்களே! நாங்கள் இத்துடனே நின்று கொள்கிறோம். விடை பெறுகிறோம்!" என்று கூறி விடை பெற்றுத் திரும்பினார்கள்.

இருட்டுவதற்குள் செஞ்சு இனத்தாரின் குடியிருப்பை அடைந்து விட எண்ணி இளைஞர்கள் இருவரும் சுகலிகள் காட்டிய திசை நோக்கி விரைவாக நடந்தார்கள்.

நினைத்ததைவிட வெகு சீக்கிரமே அவர்கள் அந்தக் குடியிருப்பை அடைந்து விட,

குடியிருப்பின் ஜனங்கள் எல்லோரும் அவர்களைச் சூழ்ந்து கொண்டு ஏதோ அதிசயமாய்ப் பார்த்து விட்டு அவர்களைத் தங்கள் தலைவரின் முன்னால் கொண்டு போய் விட்டார்கள்.

தலைவரும் மிகவும் பிரீதியுடன் அவர்களை வரவேற்று உபசரிப்பின் சின்னமாகத் தேன் கொடுத்து நீர் கொடுத்துப் பின்னர் ஆதுரத்துடன் அவர்கள் வந்த காரியம் வினவ,

இளைஞர்கள் இருவரும் நடந்ததை எல்லாம் சுருக்கமாகக் கூறி, "அரங்கனைக் கண்டுபிடிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

தலைவர் அவர்களை நோக்கி, "ஐயன்மீர்! தாங்கள் சொல்வதிலிருந்து பார்த்தால் உங்கள் கொடவர்கள் முதலில் சந்திரகிரியிலிருந்து அஞ்சனாத்ரி மலையை நோக்கிப் பிரயாணம் செய்திருக்கிறார்கள். நீங்களும் அந்த வழி சென்று அல்லவோ அரங்கனைத் தேட வேண்டும். இங்கே வந்து இருக்கிறீர்களே!" என்ன,

வல்லபனும் செஞ்சுத் தலைவரை நோக்கி,

"தாங்கள் சொல்வது முறைதான் ஐயா! நாங்கள் அந்த வழிதான் சென்று கொண்டிருந்தோம். ஆனால் எருகுல இனத்தார் தீ விபத்து பற்றி எங்களிடம் கூறி நாங்கள் தேட இருந்த இடங்கள் எல்லாம் அந்தத் தீயில் மூழ்கிய இடங்கள் தான் என்று கூறினார்கள்.

அதனால் தான் எங்கள் கொடவர் உங்கள் பிரதேசத்திற்கு வந்திருப்பார் என்னும் அவாவினால் இங்கே வந்துள்ளோம்!" என்று கூறினார்கள்.

அவ்வளவில் அந்தத் தலைவனும் அவர்கள் தேடும் முறை சரிதான் என உணர்ந்து கொண்டான்.

உடன் அவன் அந்த இளைஞர்களை நோக்கி, "ஐயன்மீர்! அடியவன் *அகோபிலத்திலிருந்து வந்து பத்து ஆண்டுகள் தான் ஆகின்றன. ஆகவே, இங்கே பஞ்சாயம் நடத்தும் பெரியவர்களை அழைப்பிக்கிறேன்!" என்று கூறிப் பஞ்சாயம் பண்ணும் பெரியவர்களுக்கு ஆட்களை அனுப்பினார்.

பஞ்சாயக்காரர்களில் இருவர் வயோதிகராய் இருந்த படியால் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த காட்டுத் தீயைப் பற்றி நன்கு அறிந்திருந்தார்கள்.

"அந்தத் தீ தெற்கே எருகுலக் காட்டில் எழுந்தது. வடக்கே வேகமாகப் பரவி வந்தது. நாங்கள் எல்லோரும் பயந்து விட்டோம். எங்கள் நரசிங்க சுவாமியை வேண்டிக் கொண்டோம். அவருக்கும் படையல் போட்டோம். எங்கள் கன்னி லட்சுமிகள் எல்லோரும் விரதம் இருந்து கூத்து ஆடினார்கள். நல்லவேளை! நரசிங்க சுவாமி எங்கள் மருமகப் பிள்ளை ஆயிற்றே! உக்கிரமாக வந்த தீயை, எங்கள் சிலும்போடைத் தென் கரையிலே நிறுத்தி விட்டார். தீ அதற்கு மேல் வரவில்லை. ஆனால் தீ விபத்தில் எங்களுக்கு மற்ற விளைவுகள் ஏற்படாமல் இல்லை! துஷ்ட மிருகங்கள் எல்லாம் இந்தப் பக்கம் வந்து விட்டன. எங்களுக்கு இதனால் ஏகப்பட்ட தொல்லைகள். எங்களுக்கு நிம்மதி ஏற்பட ஒரு வருஷம் ஆகிவிட்டது. பெருச்சாளிகள், பாம்புகள் எல்லாம் எங்கள் பக்கம் படை எடுத்து விட்டன. இந்தத் தீயில் யார் அகப்பட்டாலும் உயிர் இழந்திருப்பார்கள். எருகுலக் குடியிருப்புகள் பல சாம்பலாகிவிட்டன. பல இடங்களில் தீ சுற்று வளையமாகச் சூழ்ந்து கொண்டது. இதில் அகப்பட்டு இருந்தால் உங்கள் கொடவர் கட்டாயம் இறந்திருப்பார். ஒரு வேளை, தீயிலிருந்து தப்பித்து இந்தப் பக்கம் வந்திருந்தார் என்று வைத்துக் கொள்ளுங்கள்! துஷ்ட மிருகங்கள் அவரை விட்டிருக்குமா என்பது சந்தேகமே! இத்தனை நாள் எங்களுக்குத் தெரியாமல் இருப்பதும் அபூர்வமே!" என்று அவர்கள் கூறினார்கள்.

உடனே ராஜவல்லபன் அவர்களை நோக்கி,

"ஐயன்மீர்! தாங்கள் கூறுவதை எல்லாம் ஒப்புக் கொள்கிறேன்! எனினும் எங்கள் அரங்கர் எங்கேயோ நித்தியமாக இருந்து வருகிறார் என்ற உணர்வு எங்களிடம் இருந்து வருகிறது. இது ஒரு உறுதியான உணர்வு. இதை மாற்ற வழியில்லை. தவிரவும் எங்கள் விசாரணைகளில் அரங்கன் நிச்சயம் இந்தக் காட்டுக்குள் இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. ஆகவே, அங்குல அங்குலமாகவேனும் இந்தக் காட்டைச் சோதித்தால் ஒழிய, நாங்கள் நிச்சயப்பட மாட்டோம்! இந்தச் சோதனையில் எங்கள் வாழ்நாளை ஒழிக்க நேர்ந்தாலும் தயங்க மாட்டோம்!" என்று கூறினான்.

இளைஞர்களின் தீவிரத்தைப் பார்த்த பெரியவர்கள் தங்களுக்குள் ஆலோசனை நடத்தினார்கள்.

* செஞ்சு இனத்தவர் அகோபிலம் என்னும் தலத்திலும் நிறைந்து வாழ்பவர்கள்.

அகோபிலத்துப் பெருமாள் தமது நரசிங்க அவதாரத்தில் செஞ்சு இனத்தைச் சேர்ந்த செஞ்சுலட்சுமியைத் திருமணம் செய்து கொண்டார் என்று ஒரு ஐதீகம்.

கீழே மண் தரையில் சோழியைக் கொண்டு கோடுகள் வரைந்து சந்திரகிரியிலிருந்து அஞ்சனாத்ரி மலைக்குப் போகும் வழியை விளக்கினார்கள். அஞ்சனாத்ரி மலையில் அந்தப் பாம்புப் பட முகடு எங்கிருக்கிறது என்பதையும் அங்கிருந்து ஒருவர் கீழே உருண்டால் எந்த இடத்தில் வந்து சேருவார் என்பதையும் ஆராய்ந்தார்கள்.

"பெரியவர்களே! இந்த இடத்தில்தான் கொடவர் விழுந்திருக்கவேண்டும். இங்கே தான் மற்ற இரு கொடவர்கள் இறந்தவரைப் பார்த்திருக்க வேண்டும். இதே இடத்தில்தான் எஞ்சிய ஒரே கொடவரும் அரங்கன் விக்கிரகத்துடன் காணாமல் மறைந்திருக்க வேண்டும். அவர் போயிருந்தால் எங்கே போயி ருப்பார்? தீ பரவிய போது எங்கே இருந்திருப்பார்? இதைத் தான் நாம் ஆராய வேண்டும்" என்று கூறினார் ஒருவர்.

அதை மற்றவர் எல்லோரும் ஆமோதிக்கவே, அந்தக் கொடவர் தீ பரவியபோது எங்கே போயிருப்பார் என்பதை ஆலோசிக்கலானார்கள்.

பல இடங்களைப் பற்றிப் பேசிய அவர்கள் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்து ஐந்து இடங்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஒரு இடம் அந்த செஞ்சு குலத்தார் வாழும் காட்டுப்பரப்பு. மீதி நான்கு இடங்கள் மலைச் சரிவுகள் ஆகும்.

"இந்த ஐந்து இடங்களுக்குத்தான் அந்தக் கொடவர் போயிருக்க முடியும்! இந்த ஐந்து இடங்களையும் தேடுவோம்!" என்று கூறினார்கள்.

உடனே செஞ்சுத் தலைவன் அரங்கனைத் தேடுவதற்காகக் குழுக்களை நியமிக்க ஆரம்பித்தான்.

23

செஞ்சு இனத்தவர்கள் தனித்தனிக் கூட்டங்களாக வாழ்பவர்கள். அவர்களது *பெண்டாக்களுக்கு ஆட்களை அனுப்பி விஷயத்தைச் சொல்லிவிட்டார் செஞ்சுத் தலைவர்.

முதல் நாட்களில் செஞ்சுக்கள் தாங்கள் வாழும் பிரதேசம் முழுவதையும் தேடினார்கள். உயரமான காட்டு மரங்கள் மீதும், செங்குத்தான பாறைகள் மீதும், ஏறி எல்லாப் புறங்களையும் ஆய்ந்து பார்த்தார்கள். பொதுவாக செஞ்சுக்கள் உயரமான இடங்களில் ஏறுவதில் மிக வல்லவர்கள். காட்டுத் தேனை அடைவதற்காக அவ்விதம் உயரங்களில் ஏறிப் பழக்கப்பட்டவர்கள். நெடிதுயர்ந்த மரங்களின் உச்சாணிகளில் ஏறி சுற்றியுள்ள பிரதேசங்களை அங்குல அங்குலமாக அவர்கள் ஆராய்ந்தார்கள்.

அரங்கனும் கிடைக்கவில்லை. கொடவரும் கிடைக்கவில்லை. மேலும் மூன்று நாட்கள் அந்த பிரதேசத்தைக் கோதி எடுத்தார்கள். அரங்கனைப் பற்றி எந்தப் புலனும் கிடைக்கவில்லை.

இனிச் சரிவுக்குச் சென்று தேடுவதுதான் ஒரே வழி என்று நினைத்தார்கள். சரிவுகளுக்குப் போவது என்பது கடினமாக இருந்தது. அந்தப் பகுதிகளில் மரங்களின் அடர்த்தி மிகையாக இருந்தது. எந்நேரமும் காட்டுக்குள் இருள் உறைந்து கொண்டிருந்தது. தவிரவும், துஷ்ட மிருகங்கள் கூட்டம் கூட்டங்களாக ஆங்காங்கே சஞ்சரித்துக் கொண்டிருந்தன.

* பெண்டா – செஞ்சுக்களின் குடியிருப்பின் பெயர்

இவ்விதம் பயங்கரமாக இருந்த அந்தப் பகுதிகளுக்குச் செஞ்சு இனத்தவர் சென்றதே இல்லை. எனினும் தெய்வ காரியம் என்பதால் ஒரே முனைப்போடு அவர்கள் இதில் இறங்கினார்கள்.

ஒரே வாரத்தில் மூன்று சரிவுகளை முடித்து விட்டார்கள். பலன் ஏதும் இல்லை.

நான்காவது சரிவை நோக்கிச் சென்ற குழுவில் வல்லபனும் தத்தனும் சேர்ந்தார்கள்.

காடுகளின் கொடுமைகளையும், ஆபத்து களையும் கடந்து கொண்டு அவர்கள் அந்தக் குழுவோடு சென்றார்கள்.

ராஜவல்லபனின் மனம் அப்போது வெகுவாய் அடித்துக் கொண்டது.

"அரங்கனே! உன்னை நான் எப்படியும் கண்டுவிட வேண்டுமே" என்று நெக்குருக வேண்டிக் கொண்டான். "அப்போதுதான் என் தாயாரின் ஆசை நிறைவேறும், அதன் மூலம் என் தந்தையாரின் லட்சியமும் பாதி அளவில் பூரண அடையும்! அரங்கனே! நீ இருக்கும் இடத்தைக் காண்பிப்பாய்!" என்று பிரார்த்தனை செய்தான்.

அடிக்கடி. "ஓம் நமோ நாராயணாய!" என்று அஷ்டாட்சர மந்திரத்தை ஜபித்துக் கொண்டான்.

புறப்பட்ட நாள் மாலை வேளையில் அலர்மேல் மங்கைச் சரிவு எனப்படும் சரிவை அவர்கள் நெருங்கினார்கள்.

பொழுது சாயும் வேளை ஆதலால், செஞ்சுக்கள், "இனிக் காலையில்தான் சரிவுக்குப் போக வேண்டும்!" என்று தீர்மானித்து, பாறை வெளியில் தீ மூட்டிப் படுத்துக் கொண்டார்கள்.

மறுநாள் காலையானதும் எழுந்து, இரு நாழிகைக்குள் சரிவுப் பகுதியை அடைந்தார்கள்.

காடாந்தகாரம் என்று சொன்னால் அந்தப் பகுதிக்குத் தான் பொருந்தும். அப்படி ஒரு இருட்டான காடு. எங்கேயோ அபூர்வமாக வெளியோ, வெளிச்சமோ தெரிந்தால்தான் உண்டு. மரங்களும், கொடிகளும் அவ்வளவு நெருங்கி அடித்துப் பின்னியிருந்தன. உள்ளே போகப் போக வனத்து இருளின் திண்மை தெரிந்தது. கனத்து ஒரு கட்டி போல் அந்தக் காட்டுக்குள் அது உறைந்து கிடந்தது.

காலம் காலமாய் இறுகிய இருள் சூரிய வெளிச்சம் பட்டால்கூட உடைந்து விடாத இருள். உள்ளே சூழ்ந்திகளைக் கொளுத்திக் கொண்டு செஞ்சுக்கள் நுழைந்தார்கள்.

சில்லென்று குளிர்ச்சியுடன், சப்தமே இறந்து போய்க் கிடந்த அந்தக் காட்டுக்குள் அவர்கள் குனிந்தும், தாவியும், விழுதுகளைப் பிடித்து ஊஞ்சல் ஆடியும் சென்றார்கள்.

அந்தச் செஞ்சுக்களை நிழல்போலத் தொடர்ந்தன அவர்களது வேட்டை நாய்கள். அவைகளும் மனிதர்க்கு இணையாக அங்கங்கே தாவி முன்னால் ஓடின.

'இந்தக் கன இருள் தோய்ந்து கிடக்கும் கானகத்தில் அரங்கன் இருப்பாரா? அந்தக் கொடவர் இருப்பாரா?' என்ற கேள்விகள் அடிக்கடி வல்லபனின் மனத்தில் தோன்றின. இங்கே நுழைந்து தேடுவது எல்லாம் வியர்த்தத்தில் முடியுமோ என்று ஒரு சந்தேகம் அவன் மனத்தில் எழுந்தது.

எனினும் நம்பிக்கையை விடாமல் அந்த செஞ்சுக்களுடன் அவன் சென்று கொண்டிருந்தான்.

போகும்போது அவன் கண்கள் அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே சென்றன.

திடீரென்று ஏதாவது ஒரு இடத்தில் அரங்கன் தனது பொன்மேனியுடன் பளிச்சிடுவார் என்று அவன் உள்மனம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

மதிய வேளை ஆகும்போது அவர்கள் ஒரு வெட்டவெளியை அடைந்தார்கள். அந்த வெளியைப் பார்த்த உடனேயே அவர்களுக்கு ஆனந்தமும் நிம்மதியும் ஏற்பட்டன.

பாறைகள் நிறைந்த அந்த இடத்தை மரங்கள் ஆக்கிரமிக்க முடியாமல் தவிர்த்திருந்தன. அந்தப் பகுதியில் அமர்ந்து களைப்பாறித் தாங்கள் கொண்டு வந்திருந்த உணவுகளை எல்லோரும் வயிறார உண்டார்கள்.

அப்பால் செஞ்சுக்களில் வயதான ஒருவர் எழுந்து செங்குத்தாக நெடு உயரம் வளர்ந்திருந்த பாறை ஒன்றைச் சுட்டிக் காட்டினார்.

"மருமகன்களே! மைத்துனர்களே!* இந்தப் பாறை ஒரு சரியான இடத்தில்தான் நிற்கிறது. இதன் உச்சியில் ஏறிக் கண்ணோட்டம் விட்டால், இந்தப் பிரதேசம் முழுதும் ஒரு தாம்பாளத்தில் வைத்த பொருள் போல் தெரிந்துவிடும். அது நமது நடையை மிச்சப்படுத்தும். இதில் ஏறுவதற்கு வழி காணுங்கள்!" என்று கூறினார்.

* ஒரு செஞ்சு இறந்தால் அவனது மனைவியை அவனது தம்பி திருமணம் செய்து கொள்ளுவான். இதனால் செஞ்சுக்கள் ஆபத்தான காரியங்களைச் செய்யும் பொழுது தங்கள் தம்பிகளை அழைத்துச் செல்வதில்லை. தங்களை அவர்கள் விபத்துக்கு உள்ளாக்கி இறக்கச் செய்து விடுவார்கள் என்று நம்பினார்கள். ஆகவே, செஞ்சுக்கள் தம் மைத்துனர், மருமகன்மார்களைத் தான் வேட்டைக்கு அழைத்துச் செல்வதுண்டு.

அவ்வளவில் அவரது மைத்துனர்களும், மருமகன்களும் பாறையின் பக்கம் சென்று கண்ணோட்டம் விட்டு, பக்கவாட்டங்களையும் ஆராய்ந்து வந்து, "மாமா! பாறை செங்குத்தாக இருக்கிறது, பிடிமானமே இல்லை. ஏறுவது முடியாது!" என்று கூறினார்கள்.

உடனே அந்தத் தலைவனும் பாறை அருகில் சென்று நோட்டங்கள் விட்டு வெகுநேரம் யோசித்தார்.

பிறகு திரும்ப வந்து, "மருமகன்களே! ஒரு யுக்தி இருக்கிறது. அதோ ஒரு நீல வாகை இருக்கிறதே! அதன் கிளையில் ஒரு ஊஞ்சல் கட்டுவோம். அதை வேகமாக ஆட்டிவிட்டால் அதன் முனை அந்தப் பாறையின் பாதியில் தெரியும் விளிம்பு வரை எட்டிக் கொள்ளும். ஊஞ்சலிலிருந்து அந்த விளிம்புக்கு யாராவது தாண்டிவிட்டால், பின்னால் அங்கிருந்து பாறையின் உச்சிக்கு போக எளிதாக முடியும். அந்த உயரத்துக்கு மேல் பிடிமானங்கள் இருக்கின்றன!" என்று கூறினார்.

மற்றவர்களும் அவர் சொல்வதை ஆமோதிக்க, எல்லோரும் ஒன்று கூடிக் காரியத்தில் இறங்கினார்கள்.

நீளநீளமான கொடிகளை நறுக்கி வந்து, ஒன்றோடு ஒன்றை முடைந்து நீளக்கயிறு போல் செய்து கொண்டார்கள். அதில் ஒரு முனையில் ஒரு ஆள் நிற்கும் அளவுக்கு வளையம் ஒன்றைச் செய்து கொண்டார்கள்.

கொடியின் மறு முனையை மரத்தின் மீது ஏறி உயரமான கிளையில் இறுக்கமாகக் கட்டி வைத்தார்கள்.

எல்லாம் முடிந்த பிறகு ஒருவன் அந்த வளையத்தில் நின்று கொண்டு ஊஞ்சல் ஆட ஆரம்பித்தான்.

மெது மெதுவாக ஆடி, பின்னர் வீசிப் பாயும் அளவுக்கு வேகத்தைப் பெருக்கினான்.

ஊஞ்சலின் வீச்சல் பாறையின் விளிம்பைத் தொடும் படியாக வந்துவிட்டது.

எல்லோரும் ஊஞ்சல் ஆடுபவனைத் திகிலோடு கவனித்தார்கள்.

ஆடுபவன் பலமுறை ஊஞ்சலிலிருந்து பாறை விளிம்புக்குத் தாவ முயன்றான்.

பிறகு நிச்சயம் தோன்றாமல் தவித்தான்.

கடைசியில் விருட்டென்று அவன் பாய, ஊஞ்சல் அவனை விட்டு விட்டுத் துவண்டு கீழே இறங்கியது.

தாவிய அவனோ, பாறை விளிம்பில் கையை வைத்துப் பிடிக்க, பிடித்த இடம் வழுவ, ஆ, என்று சொல்லிப் பாறையின் கீழே உருண்டான்.

மறுகணம் பொத்தென்று கீழே கனமான ஒரு உடல் விழுந்தது.

உடன் மற்ற செஞ்சுக்கள் ஓடிப் போய் அவனைப் பார்த்தார்கள். விழுந்தவன் கால்களில் அடிகள் பட்டு இரத்தம் ஆறாய்ப் பெருகுவதைக் கண்டார்கள். சிறிது நேரத்திற்கு அப்பால்தான் அவன் சுயநினைவுக்கு வந்தான். இவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தாலும், இவனுக்கு நினைவு இருக்கிறதே? அந்த அளவுக்குத் தேகம் திடகாத்திரமாக இருக்கிறதே? என்று நினைத்தான் வல்லபன்.

விழுந்தவனை மற்றவர்கள் அப்புறப்படுத்தி அவன் கால்களுக்குச் சிகிச்சை அளிக்கும் போது வல்லபன் தைரியத்தோடு ஊஞ்சலில் ஏறிக் கொண்டான். தத்தன் திகிலோடு அவனைப் பார்த்தான்.

சீக்கிரமே ஊஞ்சலை வீசி வீசி ஆட்டிக் கடைசியில் ஒரே எவ்வலில் பாறை விளிம்பைப் போய்க் கனமாய்ப் பிடித்துக் கொண்டான். அவ்வளவில் மற்ற செஞ்சுக்கள் ஆரவாரம் செய்தார்கள்.

உடனே அவன் பாறையின் மீது ஏறிப் போனான். மேலே ஏறிய வல்லபன், வெகு நேரம் வெவ்வேறு திசைகளைப் பார்த்தான்.

பிறகு கீழே இறங்கிப் பாறை விளிம்புக்கு வந்தான்.

அப்போது செஞ்சு ஒருவன் ஊஞ்சலில் ஏறி ஆடிப் பாறை விளிம்புவரை எம்பி வந்தான்.

ஒரு எம்பலில் அவன் ஒரு கொடிக் கயிற்றைத் தூக்கி எறிய அதை வல்லபனும் சடக்கெனப் பிடித்துக் கொண்டு விளிம்பை விட்டு எவ்விக் குதித்து ஊஞ்சலில் பிணைத்திருந்த கயிற்றுடன் ஆட ஆரம்பித்தான்.

இருவரும் ஆடி ஆடி அமிழ்ந்த பிறகு மரத்திலிருந்து கீழே இறங்கி வந்தார்கள்.

"நண்பர்களே! தெற்கிலும், கிழக்கிலும் ஒரே காடுகள் தான். வடக்கே தான் பல இடைவெளிகளைப் பார்த்தேன். கொடவரைத் தேடுவதாக இருந்தால் இந்த இடைவெளிகளில் தேடினால் போதும். இந்த வெளிகளில் தான் மனிதனே வாழ முடியும். காட்டுக்குள் வாழ முடியாது" என்று கூறினான் வல்லபன்.

இதற்குள் பொழுது சாய்ந்து விட்டது.

இனி மறுநாள் வடதிசைக்குப் போக வேண்டும் என்று அவர்கள் தீர்மானம் செய்தார்கள்.

இரவு அந்த வெட்டவெளியில் படுத்து இருந்து விட்டு, மறுநாள் காலையில் எழுந்ததும் வடக்கு நோக்கிப் பிரயாணப் படலானார்கள்.

வல்லபன் கூறியதுபோல் காடுகளின் நெருக்கங் களில் ஆங்காங்கே இடைவெளிகளும் தென்பட்டுக் கொண்டிருந்தன.

அந்தப் பகுதிகளில் எல்லாம் அவர்கள் விஸ்தாரமாகத் தேடி அலைந்து எதையும் காணாதவர்களாய் மாலை வீழ்கிற வேளையில் ஒரு பெரிய சுனை ஒன்றை அடைந்தார்கள்.

அந்தச் சுனையின் ஓரத்தில் ஒரு சிற்றோடை நீர் வந்து விழுந்து கொண்டேயிருந்ததால், சல, சல, சல என்று ஒரு இரைச்சல் கேட்டுக் கொண்டேயிருந்தது.

இந்த இடத்தில் எல்லோரும் களைத்துப் போய் அமர்ந்து கொண்டார்கள்.

அப்போது அந்த செஞ்சு கோஷ்டியின் தலைவன் வல்லபனை நோக்கி, "சுவாமி, இரண்டு நாட்கள் நடந்து இந்தப் பகுதியெல்லாம் தேடி விட்டோமே! இனியும் அரங்கன் இங்கே கிடைப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டான்.

அந்தக் கேள்வியே வல்லபனைக் கலக்கியது. அவன் மனத்திலும் ஒரு ஐயம் தோன்றியிருந்தது. எனினும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல்,

"வேடப் பெருமக்களே! நம்பிக்கையை இழக்க வேண்டாம். எங்கேயாவது, எந்த வழியிலாவது நிச்சயம் அரங்கன் நமக்கு கிடைத்து விடுவார். இதை நிச்சயமாக நம்புங்கள்! எங்கள் அரங்கன்தான் நீங்கள் வணங்கும் அகோபில மடம் நரசிம்மரும்கூட! எனவே நாம் ஓய்ந்துவிட வேண்டாம்!" என்று கூறினான்.

எனினும் அவர்களுக்கு உற்சாகம் ஏற்பட்டாலும் முழு நம்பிக்கை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பாறையிலிருந்து விழுந்தவன் அடிக்கடி உபாதையால் ஏதாவது முணுமுணுத்துக் கொண்டே இருந்தான். அவன் எங்கே நகர வேண்டியிருந்தாலும் யாரின் முதுகிலாவது ஏறித்தான் போக வேண்டி வந்தது. அவனும் மற்றவர்களும் இருக்கும் நிலையைப் பார்த்தால் மறுநாள் அவர்கள் எங்கும் நகரமாட்டார்கள் போல் தோன்றியது. அவ்வளவுக்கு எல்லோரும் ஏதாவது ஒருவிதத்தில் சோர்ந்து இருந்தார்கள்.

இதனால் மனம் வெதும்பிய இரு இளைஞர்களும் மிகுந்த வியாகூலத்துடனே அப்பால் சென்று யோசித்திருந்துவிட்டு, பிறகு மனம் பொறுக்காமல் கால் போனபடி நடந்து போனார்கள்.

அந்தச் சோகமே அவர்களை யோசிக்க வைக்காமல் மேலே மேலே நடக்க வைக்க, சிறிது தூரத்தில் ஓடை ஒன்றின் பசுமையான கரைக்கு இருவரும் வந்து சேர்ந்தார்கள்.

தாக மேலீட்டால் தத்தன் அங்கே ஓடையின் நீரைக் குடிக்கப் போக,

வல்லபனின் பார்வை திடீரென்று மறு கரையில் தூரத்தில் தெரிந்த ஏதோ ஒன்றின் மேல் விழுந்தது.

"தத்தா! அது என்ன?" என்று அவன் வினவ,

பாதி நீர் குடித்துக் கொண்டிருந்த தத்தனும் ஆச்சரியத்தால் அவன் காட்டிய திசையைப் பார்த்தான்.

அங்கே தூரத்தில் காட்டுப் பகுதி தொடங்கும் இடத்தின் முன்னால் கறுப்பாக ஏதோ தெரிந்தது. முதலில் அது ஒரு கரடி போல் தெரிந்தது. ஏனெனில்

அது காலையோ கையையோ அசைப்பது தெரிந்தது.

அது நிற்கிறதா, அமர்ந்திருக்கிறதா போகிறதா என்று முதலில் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை.

"கரடிதான் அது!" என்றான் தத்தன்.

"இல்லை, இப்போது பார்! அது நடக்கிறது!" என்றான் வல்லபன்.

"ஓநாயாக இருக்கும்!" என்றான் தத்தன்.

"இல்லை" என்று சொன்னவன், திடீரென்று குதித்து, "பார்! பார்! அது நடந்து போகிறது!" என்று கூறினான்.

"அது ஒரு காட்டுக் குரங்காக இருக்க வேண்டும் அல்லது மனிதனாக இருக்க வேண்டும்!" என்றான் வல்லபன்.

"மனிதன் இங்கே ஏது? குரங்காகத்தான் இருக்க வேண்டும்!" என்றான் தத்தன்.

பிறகு இருவரும் சர்ச்சை செய்து, அது என்னதான் என்பதைக் காண விரும்பி, அது நடக்கிற திசைப் பக்கம் ஆவலோடு போனார்கள்.

போகப் போக அவர்களுக்கே ஆச்சர்யமாக இருந்தது. இதுவரை அவர்கள் காணாத ஐந்துபோல் அது தோன்றியது. அது நடந்து கொண்டே காட்டுப் பகுதியுள் நுழைய ஆரம்பித்தது.

இரண்டு பின்னங் கால்களை மட்டும் பூமியில் வைத்து அது நடப்பதைப் பார்த்து தான் அவர்களுக்குச் சந்தேகம் அதிகமாகியது.

அவர்கள் ஒரே வேகமாக அந்த ஐந்து நடந்து போகும் திசையை நோக்கி விரைய ஆரம்பித்தார்கள்.

விரையும் போது ஒரு சமயம், "ஓ!" என்று கூச்சல் இட, ஐந்து திக்பிரமையுடன் திரும்பிப் பார்த்தது.

அதன் முகத்தில் படர்ந்திருந்த உரோமக் குவியலைப் பார்த்து, 'ஒருவிதக் கரடியா இது?' என்று அவர்கள் நினைக்க, அந்த ஐந்து அவர்களைப் பார்த்த வேகத்தில் திரும்பி வேகமாக ஓட ஆரம்பித்தது.

அது இரண்டு கால்களிலேயே ஓடுவதைப் பார்த்ததும் வல்லபன், "தத்தா! அது மனிதன் தான்! மனிதனேதான்! கரடி இரண்டு கால்களில் ஓடாது!" என்று கூவினான்.

உடன் இருவரும் அந்த உருவம் ஓடின திசை நோக்கி விரைவாக ஓடினார்கள்.

காட்டுக்குள் உருவம் அவசரமாக ஓடியது. அதைக் குறி வைத்துக் கொண்டே இளைஞர்களும் விரைவாக ஓடினார்கள்.

ஓட ஓட அவர்கள் இடையே உள்ள இடைவெளி குறுகிக் கொண்டே வந்தது.

உருவத்தால் அதிக வேகமாக ஓட முடியவில்லை என்பது அவர்களுக்குச் சீக்கிரம் புலனாகியது.

விரைந்து அவர்கள் தாவித்தாவி ஓட, முன்னால் ஓடும் உருவம் ஒரு மனித உருவம்தான் என்று தோன்ற ஆரம்பித்தது.

ஆனால் என்ன மனிதன்?

காட்டு மனிதனா?

ஆதிகால மனிதனா?

அந்த மனிதன் நின்றான். திரும்பிப் பார்த்தான். இளைஞர்களுக்கு மயிர்க் கூச்செறிந்தது.

24

அந்தக் காட்டு மனிதனைப் பார்த்தால் பயங்கரமாக இருந்தது. மூஞ்சியில் சிங்கம் போல் உரோமங்கள் அடர்ந்திருந்தன. கண், மூக்கு, இருந்த இடங்களைத் தேட வேண்டி இருந்தது. உடம்பைப் பார்த்தால் செதில் செதில்களாகத் தெரிந்தன. இது என்ன மனிதனா? புருஷா மிருகமா?

இளைஞர்கள் இருவரும் சிறிது அச்சத்துடன் நிற்க, வல்லபன் தைரியம் அடைந்து கையை உயர்த்தி 'ஹோ' என்று இரைந்தான்.

அந்தச் சப்தம் கேட்டதுதான் தாமதம் அந்த உருவம் மீண்டும் ஓட ஆரம்பித்தது.

அதைத் தொடர்ந்து இளைஞர்களும் ஓட, மீண்டும் ஒரு ஓட்டப் பந்தயம் தொடங்கியது.

ஆனால், இந்தத் தடவை உருவம் திடீரென்று காட்டில் மறைந்து விட்டது. எந்த இடத்தில் மறைந்தது என்று தெரியவில்லை. இளைஞர்கள் நின்றார்கள்.

"இதென்ன, பேயா, மாயையா?" என்று கேட்டான் தத்தன்.

"வா, திரும்பலாம். காட்டுக்குள் எங்கேயோ வந்து விட்டோம். செஞ்சுக்கள் தேடுவார்கள்!" என்றான் தத்தன்.

"இல்லை, இந்த ஆளை நாம் விடக் கூடாது. தேடிப் போக வேண்டும்!" என்றான் வல்லபன்.

"அதனால் ஏதேனும் பலன் இருக்குமா?" என்றான் தத்தன்.

"ஏன் இருக்காது? இவரே நமது கொடவராக இருக்கக்கூடாதா?" என்றான் வல்லபன்.

"எனக்கு நம்பிக்கை இல்லை!" என்றான் தத்தன்.

பிறகு இருவரும் சர்ச்சை செய்து, அரைநாழிகை யாவது அந்த உருவத்தைத் தேடுவது என்று முடிவு செய்தார்கள்.

இருவரும் பிரிந்து சென்று, "தத்தா", "வல்லபா" என்று மாறி மாறிக் குரல்களை எழுப்பிக் கொண்டு வெவ்வேறு திசைகளில் தேடினார்கள்.

அரை நாழிகை தேடிய பிறகு, தத்தன் களைப்பு மேலீட்டால், "வல்லபா, போதும் திரும்பு!" என்று கத்தினான்.

மறுகுரல் வரவில்லை.

இதனால் குழப்பம் அடைந்த தத்தன் பரபரப்போடு வல்லபன் போன திசையில் நடக்க ஆரம்பித்தான்.

அடிக்கடி அவன் கூவிக் கொண்டே போகத் திடீரென்று "தத்தா!" என்று ஒரு சன்னமான மறுகுரல் தொலைவிலிருந்து கேட்டது.

கால் நாழிகை நடந்து, செடி, புதர்களை விலக்கிக் கொண்டு தத்தன் அந்தக் குரல் வந்த திசையைப் போய்ப் பார்க்க,

அங்கே வல்லபன் ஏதோ பிரமை பிடித்தவன் போல் அதிசயமாக நின்று கொண்டிருந்தான்.

அவனுக்கு என்ன நேர்ந்தது?

கலவரத்துடன் அவன் அருகில் செல்ல,வல்லபன் சைகை காட்டி தத்தனைப் பேசாமல் இருக்கச் சொன்னான்.

தத்தனும் வியப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

வல்லபன் அவனிடம், மெதுவாக, "முகர்ந்து பார்! இங்கே வாசம் வீசுகிறது!" என்று கூறினான்.

"என்ன வாசம்?"

"பரிமளமான கஸ்தூரி!"

தத்தனுக்கு எதுவும் தெரியவில்லை.

"அது மட்டுமல்ல, சந்தனம், கர்ப்பூரம், சிந்தூரம் எல்லாம் பரிமளித்து வீசுகின்றன பார்!" என்றான் வல்லபன்.

தத்தன் காற்றை முகர்ந்து பார்த்தான்.

அவனுக்கு எதுவும் புலனாகவில்லை.

"கூர்ந்து நுகர்ந்தால் காற்றின் ஏதாவது ஒரு இழையில் இந்த சுகந்தங்கள் வருவது தெரியும். இதை முகர்ந்து கொண்டு இவ்வளவு தூரம் வந்துவிட்டேன்!" என்றான் வல்லபன்.

தத்தன் முயன்று பார்க்க, பளிச்சென்று ஒரு கணம் அந்த வாசம் அவன் நாசியைத் தொட்டுவிட்டு மறைந்தது.

"ஆமாம், வாசம் நுகர முடிகிறது. இது என்ன என்று சொல்கிறாய்?" என்று கேட்டான் தத்தன்.

"அரங்கனது திருமேனியில் இந்தப் பரிமளமான வாசம் வீசும் என்று சிங்கழகர் சொன்னாரே, மறந்து விட்டாயா?" என்று கேட்டான் வல்லபன்.

"சொன்னார்! ஆனால் இது அரங்கன் மீதிருந்து வரும் வாசம் என்று எப்படிச் சொல்வாய்? காட்டில்தான் மூலிகை வாசங்கள் பல கமழுமே?" என்றான் தத்தன்.

"அப்படியல்ல! இது போன்று வாசங்கள் சேர்ந்து வீசுகிறதே அது அபூர்வம்! ஆகவே, அது அரங்கன் மீதிருந்துதான் வீசியிருக்க வேண்டும்!" என்றான் வல்லபன்.

"வல்லபா!" என்றான் தத்தன். "நீ கூறிய அனுமானத்தை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அதை நிச்சயமாகவும் கூறிவிட முடியாது. இப்போது நேரமாகி விட்டது. செஞ்சுக்கள் காத்திருப்பார்கள். நாளை ஆராய்ச்சியை வைத்துக் கொள்வோம்!"

வல்லபன் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. மறுநாள் காற்றின் திசை மாறிவிடும் என்றும், அன்றைக்கே அந்த வாசம் வரும் இடத்தைத் தேடினால்தான் ஆயிற்று எனவும் கூறினான்.

தத்தனும், "சரி விரைவாகத் தேடுவோம்!" என்று சொல்ல,

வாச இழையை மோப்பம் பிடித்துக் கொண்டே காட்டுக்குள் செல்லலானார்கள்.

கற்றைக் கற்றையாக இருக்கும் கொடிகளை விலக்கிக் கொண்டு போகும்போது, ஆங்காங்கே நடமாட்டத்தினால் ஏற்பட்ட தடங்கள் சில பதிந்திருப்பதையும் அவர்கள் பார்க்க நேர்ந்தது.

நம்பிக்கை அதிகமாகிவிட அவர்கள் முனைந்து முன்னே சென்றார்கள்.

திடீரென்று ஒரு இடத்தில் வெளிச்சம் விழுந்திருப்பது தெரிந்தது.

அங்கே மட்டும் வெட்டவெளி ஒன்று இருப்பதைப் பார்த்து அதனுள் அவசரமாக நுழைய,

சுற்றிவரப் பார்த்த வல்லபன், "அதோ!" என்று துள்ளிக் கொண்டே கூவினான்.

அவன் காட்டிய திசையில் கொடிகளால் ஆன ஒரு பந்தலின் நுழைவாயில் தெரிந்தது. அது ஒரு கூண்டு போன்றும் தெரிந்தது.

அதன் உள்ளே இருந்து கண்ணைப் பறிக்கும் படியான ஒரு ஒளி பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.

அதிசயத்தோடு அந்தக் கொடிக் குடிலை நோக்கி அவர்கள் சென்றார்கள்.

கீழே குனிந்து அதன் இருட்டுக்குள் உற்றுப் பார்த்த வல்லபன், "கண்டேன், தத்தா!" என்று துள்ளினான்.

பரபரப்பு அடைந்த தத்தன் அவன் என்ன சொல்கிறான் என்பதை அறியுமுன்;

வல்லபன் அந்தக் குடிலுக்குள் பார்க்கிறதுமாய் தத்தனைப் பார்க்கிறதுமாய் இருந்துவிட்டு, கடைசியில் ஒரே பாய்ச்சலில் தத்தனைக் கட்டிக் கொண்டு,

"தத்தா! பார்! இவர் நமது பெருமாளா பார்! அரங்கனா பார்!" என்று கூவி அழைத்தான்.

தத்தன் குனிந்து குடிலுக்குள் பார்க்க, அங்கே அந்தத் தழைக் கூடத்திற்குள் நாயகமாக ஒரு விக்கிரகம் மிகக் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது.

தழை இடுக்குகள் வழியாக அதன் மீது மாத்திரம் சூரிய வெளிச்சம் விழுந்திருந்தால், அது பளீரெனத் துலங்கிக் கொண்டிருந்தது.

கையில் கதையும் சக்கரமும் இலங்கிட, முறுவல் முகத்துடன் நிற்கும் அந்த விக்கிரகத்தைக் கண்டதும், "அரங்கா! இது நீதானே! நீதானே!" என்று சொல்லி இருவரும் தடால் என்று பூமியில் விழுந்து மண்ணைப் பிடித்துக் கொண்டு அரற்றினார்கள்.

பிறகு இருவரும் எழுந்து ஆசை கொள்ளுமட்டும் விழுந்து விழுந்து சேவித்தார்கள். மேலே மண் துகள்கள் எல்லாம் சாயம் போல் ஒட்டிக் கொள்ள ஒருவாறு அடங்கி நிமிர்ந்து பார்த்த போது,

அங்கே அந்த வெட்ட வெளியில் மறுபுறத்தில் அந்தக் காட்டு மனிதன் திடீரென்று தோன்றி நிற்பதைப் பார்த்தார்கள்.

பயமும், ஆச்சரியமும் அடைந்தவாறு அவன் நின்று கொண்டிருந்தான்.

கண்களில் ஆனந்தமாகக் கண்ணீர் பெருக, இளைஞர்கள் "ஐயா! ஐயா!" என்று அந்த மனிதனை அழைத்தார்கள்.

மனித உருவத்திற்குப் பயம் தெளியவில்லை. இப்போது அதற்கு ஆத்திரமும் கோபமும் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

திடீரென்று அது ஓடப் பார்க்க உடனே ஒரே பாய்ச்சலில் தத்தன் ஓடிப் போய் அதனது கால்களைப் பற்றிக் கொண்டான்.

அந்த உருவம், "பே! பே!" என்று கத்திக் கொண்டு ஓட முடியாமல் தொபுகடீரென்று கீழே விழுந்தது. விழுந்தவரது அருகில் சென்று வல்லபன் பார்த்தான். முகத்தில் பெருந்தாடியும், வெளிறிய கண்களும், வயோதிகத்தால் விழுந்த சுருக்கங்களும் இருப்பதைக் கண்டான்.

இடுப்பில் அந்த மனிதர் ஒரு காட்டுக் கொடியைக் கட்டியிருந்தார். அதில் கமுகப் பட்டையால் கௌபீனம் தரித்திருந்தார். தேக்கு மடல்களால் *ஆச்சாதநம் தரித்து இருந்தார்.

* ஆச்சாதநம் - மறைக்கும் துணி

கொத்தான் கொடியை உடம்பில் பூணுலாகப் போட்டிருந்தார்.

எண்பது அளவு வயதாகிய அவர் கண்களில் இன்னும் ஒரு பீதி உறைந்து கொண்டிருந்தது. இளைஞர்கள் இருவரையும் அவர் பயத்தோடு பார்த்தார்.

அவர் நடுங்குவதைப் பார்த்த வல்லபன், "சுவாமி! தாங்கள் யார்? கொடவர்தானே? சீராமதாசர்தானே? சொல்லுங்கள்! சொல்லுங்கள்!" என்று கத்தினான்.

அவர் மறுமொழி கூறவில்லை. பயப்பிராந்தியோடு அங்குமிங்கும் பார்த்தார்.

வல்லபன் கேட்டதைப் பொருட்படுத்தவுமில்லை. அவருக்குச் சித்தப் பிரமை உள்ளது என்பதை வல்லபன் உடனே புரிந்து கொண்டான்.

சிங்கழகர் கூறினாரே, கடைசி நாள் அந்தக் கொடவரைப் பார்த்தபோது, அவர் ஏதும் பேசாது அதிசயமாய் இருந்தார் என்று. அதன் காரணம் இப்போது வல்லபனுக்கு நன்கு புரிந்தது. இந்தக் கொடவருக்கு அன்றிலிருந்து சித்தப் பிரமை தோன்றியிருக்க வேண்டும். தம் கண்ணால் நேரில் கண்ட கொடுமைகள் அவரது நிலையான மனத்தைக் கலைத்திருக்க வேண்டும். உன்மத்தமாய் ஆக்கியிருக்க வேண்டும்.

அவரிடம் பேசுவதில் பயனில்லை என்பதைக் கண்டு கொண்ட வல்லபன், அவரைப் மெதுவாகப் பிடித்து எழுப்பி, பயப்பட வேண்டாம் என்பது போல் சமிஞ்ஞை செய்து.

பின்னர் அவரை மெள்ள அழைத்துக் கொண்டு, அந்தத் தழைக் குடிலை நோக்கி நடையிட்டுச் சென்றான்.

அங்கே அவரை நிறுத்தி, உள்ளே இருக்கும் விக்கிரகத்தைக் காட்டி, "இவர் அரங்கர்தானா? அரங்கரா?" என்று பலமுறை கூவிக் கேட்க,

வயோதிகரும் அவன் கேட்டதைக் காதில் வாங்கிக் கொள்ளாதது போல் இருந்து விட்டு முடிவில் தாமாகவே, "ரங்கா! ரங்கா!" என்று மழலைக் குழந்தை கூறுவது போல் நாவிழிந்து கூறினார்.

அவ்வளவில் இருந்த சிறிது சந்தேகத்தையும் தவிர்த்துக் கொண்ட இரு இளைஞர்களும், உடனே "கொடவர் சுவாமி! உம்மைக் கண்டதில் புண்ணியம் பெற்றோமே!" என்று வேரற்ற மரம் போல அவர் பாதங்களில் விழுந்தார்கள்.

பிறகு தெளிந்து எழுந்து ஊற்று ஊற்றாக, வியர்வை விட்டுக் கொண்டு இருந்த கொடவரை மெள்ளக் கீழே அமர்த்தி,

அவர் படுத்துக் கொள்ளும் வண்ணம் தங்கள் மேல் உத்திரியத்தைக் கீழே விரித்து அதில் அவரைப் படுக்க வைத்து,

"இந்தப் பெரியவருக்கு இந்தத் துயரங்கள் எல்லாம் நேர்ந்ததே! அப்படியும் அவர் விடாமல் அரங்கனைக் காப்பாற்றி வந்துள்ளாரே!" என்று நினைத்து,

"ஒரு நம்பிக்கையின் சின்னத்தை இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையே பதினெட்டு ஆண்டுகளாகக் காத்து வந்திருப்பவர் இவரைப் போல் யாரும் இருந்திருக்க மாட்டார்கள்!" என்று உறுதியாக நினைத்து,

அந்தப் பெருமகனார் இப்போது எண்பது பிராயமாகி வயோதிகத்தால் உடல் தளர்ந்து அங்கே அவர்கள் முன்னால் கிடப்பதைப் பார்த்து,

கண் உருகி, மனது உருகி, நெஞ்சுருகி, சுருண்டு விழும் கண்ணீர்த் திவலைகளுடன்,

ஒருவர் மாற்றி ஒருவர் தங்களது நெகிழ்த்திய ஆடைகளைக் கொண்டு, விடாமல் விசிறி விட்டார்கள்.

அந்த வயோதிகரின் வியர்வையையும் களைப்பை யும் ஒருவாறு போக்கிய பின்தான் இருவரும் சிறிது ஆசுவாசப்படலானார்கள்.

தன் துயரமான வாழ்க்கையில் திடீரென்று இந்த உபசாரங்களுக்கு ஆளான அந்த வயோதிகக் கொடவரும் பயம், சிறிது சிறிதாக நீங்கினவராய் இளைஞர்கள் மீது நம்பிக்கை கொள்வாராயினர்.

அப்பொழுது பொழுது கிறுகிறுவென்று இறங்கிக் கொண்டிருந்ததால், இரு இளைஞர்களும் உடனே மேலே என்ன செய்வதென்று யோசனை பண்ணி,

கொடவப் பெரியவருடன் பாதுகாப்பாக வல்லபன் தங்குவது என்றும்,

தத்தன் போய் செஞ்சு கோஷ்டியாரை அழைத்து வருவது என்றும் முடிவு பண்ணினார்கள்.

அப்பால் தத்தன் விடை பெற்றுப் போக, வல்லபன் அந்தக் கொடவர் பெரியவருடன் அங்கே தங்கி விட்டான்.

அன்று மாலை மறையும் வரை தத்தன் திரும்பி வரவில்லை. வல்லபனுக்கு இது கவலையைத் தந்தது.

மறுநாள் விடிந்து பல நாழிகை ஆகியும் தத்தனும் வரவில்லை. செஞ்சுக்களும் வரவில்லை.

பொழுது ஏற ஏறப் புதுக் கவலைகள் அவனை ஆட்கொண்டன.

தத்தன் செஞ்சுக்கள் இருக்கும் இடத்துக்குப் பத்திரமாகப் போய்ச் சேர்ந்திருப்பானா,

அல்லது வழியில் அவனுக்கு ஏதாவது நடந்திருக்குமா? அல்லது அவன் வழி தவறி வேறு எங்கேயாவது போய்விட்டானா? என்று பல ஐயங்கள் அவன் மனத்தை வெகுவாகக் கலக்க ஆரம்பித்தன.

எது எவ்வாறாயிலும் விஷயம் ஏதாவது தெரியும் வரை அந்த இடத்தைவிட்டு நகரக் கூடாது என்று நினைத்தான்.

இந்த எதிர்பார்த்தலில் மேலும் ஒரு நாள் ஓடியது.

இதற்குள் அவனுக்கும், அந்தக் கொடவப் பெரியவருக்கும் ஒரு பிணைப்பு ஏற்பட்டிருந்தது.

அங்கு தங்கிய நாளில் அந்தப் பெரியவர் ஒரு யந்திரம் போல் வாழ்வதை அவன் கண்டு கொண்டான்.

எழுந்திருப்பது - குளிப்பது - உணவு தேடிப் போவது, உணவு உண்பது எல்லாமே நியதி பிசகாமல் ஒரே கதியில் அவர் செய்து கொண்டிருந்தார்.

எல்லாவற்றிலும் மேலாக அரங்க விக்கிரகத்திற்கு அவர் தினமும் வெறும் கைகளாலேயே மானசீகமாகப் பூஜையும், காட்டுக் கனிகளைக் கொண்டு நைவேத்தியமும், இதர உபசாரங்களும் ஒன்று விடாமல் செய்து கொண்டிருந்தார்.

ஆக, இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் அரங்கன் எந்தவித உபசாரக் குறைவும் இன்றி இருந்து வந்திருக்கிறார் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

இனி சீக்கிரம் அவரையும் அரங்கனையும் நாட்டுக்கு அழைத்துப் போக வேண்டும் என்று

அவன் துடிக்கும் போது, தத்தன் இப்படி வராமல் இருக்கிறானே என்று தோன்றியது.

மூன்று நாட்களும் ஓடிவிட்டன. வல்லபனுக்குப் பயம் ஏற்பட ஆரம்பித்தது.

25

அதன் பிறகு மூன்று நாட்கள் மழை அடித்தது. பிரளயம் போல் நீர் தறிகெட்டு எங்கும் ஓடியது. ஓடைகளும் அருவிகளும் மலைச்சரிவில் மாலைகளாகி விழுந்தடித்து ஓடின.

ஒரு ஆச்சா மரத்தின் மேலே கட்டைகளை வைத்துத் தாற்காலிகப் பரண் உண்டாக்கி வல்லபனும், கொடவப் பெரியவரும் தங்கி இருந்தார்கள். கீழே தழைப் பந்தல் எல்லாம் அடித்துக் கொண்டு போய் விட்டபடியினாலே அரங்கனை மேலே ஏற்றி மரத்தோடு ஏகாந்தக் கயிறு கட்டிப் பாங்காக அமர்த்தி வைத்திருந்தார்கள்.

இலைகள் எல்லாம் சொட்டுச் சொட்டாக அபிஷேக நீர் போல் வர்ஷிக்க, அவ்வளவு நெருக்கத்தில் பெருமாளைப் பார்க்கும்படியான பேறுபெற்ற வல்ல பனின் மனக் கண்ணில் பல காட்சிகள் வந்து ஓடின.

அவனது தந்தை குலசேகரன் அரங்கனைத் தோள் மேல் போட்டுக் கொண்டு, டில்லி வீரர்களிடமிருந்து குதிரையில் தப்பிய காட்சி,

அவனது தாயார் அரங்கனைத் தம் தோளில் அணைத்துக் கொண்டு குலசேகரன் முன்னால் நிறுத்திய அந்த அந்திமக் காட்சி யாவும் சரம்

அவிழ்ந்தாற் போல் அவன் மனக் கண் முன்னால் வந்து ஓடின.

பழைய கதையை எத்தனையோ முறை அவனது தாயார் வாசந்திகா வாய் வலிக்காமல் கூறி இருக்கிறாள். அவனும் செவி அலுக்காமல் கேட்டிருக்கிறான்.

இப்போது அவையெல்லாம் நினைவுக்கு வர, அந்த வரலாற்றுக்கு எல்லாம் அடிப்படையாக இருக்கும் அரங்கன் அவன் முன்னே இப்படி ஒரு ஆச்சா மரத்தின் பரண் மேல் மிக மிக நெருக்கமாக அமர்ந்து சமமான ஆதனத்தில் வீற்றிருப்பதைக் கண்டு மனத்தில் துக்கமும் ஆனந்தமும் ஒரே நேரத்தில் கொண்டான் அவன்.

அரங்கனது திருமேனியை அடிக்கொரு தரம் பார்த்து,

அவரது அனைத்து அழகுகளையும், கண்ணால் பருகி மனத்திலே நினைத்தறியா அமைதி கண்டான் அவன்.

அவ்வளவில் நான்காம் நாளில் வானம் சுத்தமாகி எங்கும் புதிய வெளிச்சம் பரவி நிறைந்துவிட, பட்சி ஜாலங்கள் எல்லாம் கீச்சிட்டும் வீறிட்டும் எங்கும் பறந்து ஆனந்தமாய் உலாவ ஆரம்பித்தன.

செஞ்சுக்களை அழைத்து வருகிறேன் என்று போன தத்தன் ஆறு நாள் ஆகியும் வரவில்லையே,

என்று எண்ணி வல்லபன் வருத்தம் மிக்கக் கொண்டிருக்க,

திடீரென்று கிழக்குப் புறமாக ஏதோ சத்தங்கள் எழக் கண்டு திரும்பிப் பார்த்தான்.

அங்கு இரண்டு இருளர்கள் சடக்கெனத் தோன்றிக் கூச்சல் போட்டுக் கொண்டு வருவதையும், அவர்கள் முன்னால் ஒரு கருங்குரங்கு காலுடன் தப்பித்து ஓடுவதையும் அவன் நோக்க நேர்ந்தது.

உடனே மரத்திலிருந்து, வல்லபன் கீழே குதித்து நிற்க, இருளர்கள் இருவரும் அவனைப் பார்த்து வியந்து போய் நின்றார்கள். இரு இனத்தாரும் ஒருவரைப் பற்றி ஒருவர் பரஸ்பரம் விசாரிக்க,

"நாங்கள் இருளர்கள்! எங்களுக்குக் கருங்குரங்கின் இறைச்சி வெகுவாகப் பிடிக்கும். ஆகவே வேட்டை யாட இங்கு வந்தோம்!" என்று அந்த வேடர்கள் கூறினார்கள்.

அவர்களை அமர வைத்து, "ஐயா, தெய்வம் போல் வந்தீர்களே! காட்டில் தவித்துப் போய் விட்டோம்!" என்று கூறிய வல்லபன்,

தான் அங்கு வந்த காரணத்தை எல்லாம் விவரமாகக் கூறி,

"இப்படி நான் என் நண்பனையும், செஞ்சுக் கூட்டத்தாரையும் பிரிந்து நிற்கிறேன். அவர்கள் இருக்கும் இடம் தேடி அழைப்பித்து வர வேண்டும்!" என்று சொன்னான்.

அதற்கு அந்த இருளரானவர்கள், "ஐயா, செஞ்சு வாழும் காட்டுக்குள் கூட்டமாகப் போனால்தான் துஷ்ட மிருகங்களிடமிருந்து தப்ப முடியும். இருவரும் தனியாகப் போக முடியாது!" என்று கூற,

வல்லபனும் "அப்படியானால் இனி என்ன செய்ய?" என்று கூறிச் சோகித்திருந்தான்.

உடனே இருளர்கள், "ஐயா! மூன்று நாள் மழை அடித்து ஓய்ந்திருக்கிறது. சிறுத்தைகளும், புலிகளும் இரையில்லாமல் திண்டாடி இருக்கும். ஓநாய்களும், கருங்கரடிகளும் கூடக் கூட்டம் கூட்டமாக உணவு தேடி அலையும். ஆகையால் இந்த செஞ்சுக் கூட்டத்தார் நிச்சயம் தங்கள் பெண்டாக்களுக்குத் திரும்பி இருப்பார்கள். இந்த வேளையில் நீங்கள் குறிப்பிடும் இடத்திற்கு போவதே ஆபத்து. ஆனாலும் உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய எண்ணுகிறோம். இந்த மலைச் சரிவின் குறுக்காகப் பள்ளத்தாக்கில் புகுந்து நாட்டுப்புறம் போக எங்களுக்கு வழி தெரியும். நாட்டுப் புறத்தாரின் உதவி உங்களுக்குத் தேவையானால், சொல்லுங்கள்! செய்து முடிக்கிறோம்!" என்று கூறினார்கள்.

உடனே வல்லபனும் பளிச்சென்று யோசனை பண்ணி, "ஐயாக்களே! அருகில் பட்டணம் என்ன இருக்கிறது?" என்று கேட்க,

"சந்திரகிரி இருக்கிறதே, தங்களுக்குத் தெரியாதோ?" என்று இருளர்கள் கேட்க,

"நன்றாகத் தெரியும். இப்போது அந்தப் பட்டணத்தை யார் ஆளுகிறார்கள்?" என்று கேட்க,

"ஸ்ரீரங்கநாத யாதவராய ராஜா ஆளுகிறார்!" என்று இருளர்கள் உத்தரம் சொல்ல,

"நல்லது! அவர் பெயரே ஸ்ரீரங்கநாதனாக இருக்கிறது. அவர் நிச்சயம் உதவி செய்வார். அவரிடம் போய்ச் சொல்லுங்கள். தெற்கே ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தின் ரங்கநாத சுவாமி இருக்கிறாரே, அவர் பதினெட்டு ஆண்டுகளாய் இந்தக் காட்டில் மறைந்து இருந்தார். இப்போது அகப்பட்டு விட்டார். அவரைச் சகல மரியாதைகளோடு நாட்டுப்புறத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று விஞ்ஞாபித்துக் கொள்ளுங்கள்!" என்று கூறினான்.

"அவ்விதமே செய்கிறோம்!" என்று இருளர்கள் கூற.

வல்லபன் உடனே தனது முடிந்திருந்த மடியைத் திறந்து வீரசம்பா குளிகை ஒன்றை அவர்களுக்கு வெகுமானமாக எடுத்துக் கொடுத்தான். இருளர்களும் அளவற்ற ஆனந்தம் அடைந்து விடைபெற்றுச் சென்றார்கள்.

கிழக்குத் தொடர் மலையின் சரிவிலும், சுவர்ணமுகி ஆற்றின் கரையிலும், திருப்பதி க்ஷேத்திரத்திற்கு மேற்கே சற்று தூரத்திலும் (ஏழு மைல்) இருந்தது இந்த சந்திரகிரிப்பட்டணம். (இப்போது மலைச்சரிவில் கோட்டையும், கொத்தளமுமாகத் தெரிவதுதான் இந்தப் பட்டணம். இப்போது இது பாழடைந்து கிடக்கிறது. இதன் பெயரைத் தாங்கிய சிறு கிராமம்தான் மீதம் உள்ளது. உள்ளேயிருந்த அரண்மனைகளும், மாளிகைகளும் இன்று வயல்களாக மாறிவிட்டன.)

இந்தச் சந்திரகிரி பட்டணத்தைக் கதை நிகழும் காலத்தில், "யாதவராயர்" என்னும் வம்சத்தினர் ஆண்டு வந்தார்கள். கதை நிகழும் காலத்திற்கு முந்நூற்று அறுபதாண்டுகளுக்கு முன் (கி.பி.999-ல்) யாதவராய வம்சத்தின் பூர்வீகரான இம்மடி நரசிங்க யாதவராயர் என்பவர் நாராயணவனம் என்னும் சீமையை ஆண்டு வந்தார்.

இவர் திருமலையில் உள்ள திருவேங்கடவரின் பக்தர். ஆகவே திருமலை பர்வதத்தின் தரிசனத்திலேயே எப்போதும் குடியிருக்க வேண்டும் என்று நினைத்து அந்த மலைக்கு இணையாக உள்ள சந்திரகிரி மலையைத் தேர்ந்தெடுத்து அதில் கோட்டையும் அரண்மனைகளும் கட்டிக் கொண்டார். இவ்வாறு உருவானதுதான் இந்தச் சந்திரகிரிப் பட்டணம்.

இம்மடி நரசிங்க யாதவராயர் வம்சத்தில் பதினோராவது மன்னராகப் பட்டத்திற்கு வந்தவர்தான் ஸ்ரீரங்கநாத யாதவராயர் (கி.பி.1336).

இந்த வம்சத்தார்கள் பெரும்பாலும் சிற்றரசர்களாகவே வாழ்ந்து வந்தார்கள்.

ஸ்ரீரங்கநாத யாதவராயர் என்பவர் ஒய்சளத்தின் அரசரான வல்லாள தேவரிடம் சிற்றரசாக இருந்து வந்தார்.

இந்த வல்லாளதேவர் போரில் (மதுரை சுல்தானுடன் நிகழ்த்தியது) இறந்த பிறகு ஸ்ரீரங்கநாத யாதவராயர் அந்த விஜயநகர ராஜ்யத்தின் சிற்றரசராக மாறிக் கொண்டார்.

அதாவது ஒய்சளத்தின் தலைமையை விட்டு நேராக விஜயநகர ராஜ்யத்திற்கே தம்மைச் சிற்றரசராக பிரகடனம் படுத்திக் கொண்டார்.

இந்த யாதவராயர் சந்திரகிரிச் சீமையை நன்கு பாலித்து வரும் நாளையில்,

இருளர்கள் இருவரும் அந்தச் சந்திரகிரிக் கோட்டைக்குள் சென்று மன்னரைத் தரிசிக்க விரும்பினார்கள்.

ஆனால் அதற்குச் சில சிரமங்கள் ஏற்படவே,

நேராக அவர்கள் கோட்டைக்குக் கீழ்ப்புறத்திலுள்ள கண்ட மண்டபத்திற்குச் சென்றார்கள்.

இந்த மண்டபம் திருமலைப் பர்வதத்தை நோக்கிக் கொண்டிருந்த ஒரு மண்டபமாகும்.

இந்த மண்டபத்தில் பெரியதொரு வெண்கல மணி தொங்கிக் கொண்டிருந்தது.

திருமலை மீதுள்ள திருவேங்கடவர்க்கு நைவேத்தியம் ஆன பிறகு அங்கே மலை மேல் இருக்கும் ஒரு *கண்ட மண்டபத்தின் மணி உடன் ஒலிக்கப்படும்.

அந்த ஒலியைக் கேட்டு, சந்திரகிரி மலையில் உள்ள கண்ட மண்டபத்தின் மணி உடனே ஒலிக்கப்படும்.

இந்த மணியின் ஒலி கேட்ட பிறகு தான், அரசர் யாதவராயர் திருவேங்கடமுடையான் அமுது உண்டு விட்டார் என்று அறிந்து, தாம் உணவு அருந்தச் செல்வார்.

இப்படியொரு வழக்கத்தைத் தமக்கு ஏற்படுத்தி இருந்தார் ஸ்ரீரங்கநாத யாதவராயர்.

இருளர்கள் இருவரும் நேராக இந்தக் கண்ட மண்டபம் சென்று, அங்கே சேவகன் இல்லா வேளையில், அந்தப் பெரிய மணியை அடித்து விட,

"இதென்ன? வேளை கெட்ட வேளையில் மணி ஒலிக்கிறதே!" என்று அரசரும் திடுக்கிட, சேவகர்கள் உடனே விரைந்துபோய், இருளர்களைப் பிடித்து வந்து அரசர் முன்னிலையில் நிறுத்தி வைத்தார்கள்.

அரசரும் அவர்களிடம் காரணத்தை வினவ,

"பிரபுவே! ஸ்ரீரங்கத்துப் பெருமாள் பதினெட்டு ஆண்டுகள் காணாமல் இருந்தாராமே! அவர்

* இந்த மண்டபம் இன்னும் இருந்து வருகிறது. திருமலைக்கு நடந்து செல்லும் போது எதிர்ப்படும் முழங்கால் முறிப்பான், முக்குபாவி (கிணறு) ஆகியவைகளுக்கு அப்பால் நடைபாதைகளுக்குப் புறம்பாக இந்த மண்டபம் இப்போதும் இருக்கிறது.

இப்போது நம் காட்டிலே கிடைத்து விட்டார். பெருமாளைக் கண்டு கொண்ட பிள்ளை, தங்களை உடனே வந்து சகல மரியாதைகளுடன் அவரை அழைத்துப் போக விண்ணப்பித்துக் கொண்டார்!" என்று கூறினார்கள்.

அவ்வளவில் யாதவராயரும், ஏதோ பூர்வ ஜன்ம வாசனை தட்டியதுபோல், ஒய்சள அரசர் வல்லாளரையும் அவர் ஸ்ரீரங்கத்தை மீட்பதற்காகச் செய்த கடைசி யுத்தத்தையும் நினைவு கூர்ந்து,

"அடே, நம் பெருமாள் அகப்பட்டாரோ? நமது காட்டிலே வாசம் செய்தாரா?" என்று ஆச்சரியத்துடன் கூறி, உடன் பிரதானியை அழைத்துப் பிரயாணத்திற்குச் சித்தம் செய்யச் சொல்லி, "காலை புறப்பட வேண்டும்" என்று கட்டளை இட்டார்.

காலையில் இருளர்கள் வழிகாட்டிக் கொண்டு போக, பரிவாரத்துடன் யாதவராயர் பின் தொடர,

பள்ளத்தாக்குகள் வழியாகப் புகுந்து, மாலை நேரத்திற்குள் அரங்கன் இருக்கும் இடத்தை எல்லோரும் அடைந்தார்கள்.

வெட்டவெளிக்கு நடுவே, செம்பொன் ஒளிர்வது போல் ஒளி விட்டுக் கொண்டிருந்த அரங்கனைக் கண்டு,

அப்படியே யாதவராயர் அடியற்ற மரம் போல் விழுந்து வணங்கி,

"சுவாமி! என்ன அபசாரம் செய்தோம்! இத்தனை ஆண்டுகள் நம் காட்டில் வாசம் செய்ததை அறியாது இருந்து விட்டோமே. அபசாரம்! அபசாரம்!" என்று கண்ணீரை ஆறாகப் பெருக்கி, தொண்டை அடைத்துக் கொள்ள நெக்குருகப் பிரார்த்தித்து,

அந்தக் கணமே தமது பீதாம்பரத்தைக் கலைத்து அரங்கனுக்கு விதானமாக இருக்க வைத்து, கொடிக் கம்பங்கள் நட்டு, தூப, தீப, நைவேத்தியங்கள் சமர்பித்துக் கிடைக்கப் பெறாத பெரும் பேற்றைப் பெற்றவர் போல் மனத்தில் மிக்க சந்தோசம் கொள்வாராயினர்.

பின்னர் அவர் வல்லபனை அழைத்து, "பிள்ளாய்! நீ யார்? இங்கே எப்படி வந்தனை? அரங்கனை எப்படிக் கண்டுபிடித்தனை?" என்று கேட்க,

வல்லபனும் அவர் முன்னில் மிகக் கம்பீரமாக அமர்ந்து கொண்டு, ஆதியோடு அந்தமாய், பெருமாள் திருவரங்கத்திலிருந்து புறப்பட்டது முதல் சந்திரகிரிக் காட்டில் புகுந்தது வரை விவரமாய்க் கூறி முடித்தான்.

அதைக் கேட்டு அதிசயமும் அதிர்ச்சியும் ஒருங்கே அடைந்த அந்த மன்னர் உடனே கொடவர் பக்கம் எழுந்து நின்று அவர் பாதங்களில் விழுந்து வணங்கி அவருக்கு எல்லா உபசாரங்களையும் செய்து, அந்த மகான் இப்போது வெறும் சித்தப் பிரமையில் இருக்கிறாரே என்று மனத்துள் துக்கிக்கலானார்.

பிறகு அவர் வல்லபனை அழைத்து, "பிள்ளாய்! உனது முயற்சிகளைக் குறித்து மிகவும் சந்தோஷப் படுகிறேன். உன்னை ஊக்கி வைத்த தாயாரையும் மனதார வணங்குகிறேன்!" என்று அந்தப் பிள்ளையை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டி விட்டு, இருட்டி விட்டதால் கூடாரம் அடித்து நித்திரை போனார்.

காலையில் எழுந்ததும், சேவகர்களை அனுப்பி செஞ்சுக் காட்டில் காலதத்தனைத் தேடச் சொன்னதின் பேரில் அவர்கள் உள்ளே புகுந்து எல்லா

இடங்களையும் தேடி, பின்னர் ஒரு தீவாந்தரம் போல் இருந்த பாறை மேல் குத்துயிரும், குலை உயிருமாக இருந்த தத்தனைக் கண்டுபிடித்து, அவனிடம் செய்திகளை வினவ,

அவனும் தான் புறப்பட்டுப் போகும் வேளையில் யானைக் கூட்டம் ஒன்று அவனைத் துரத்திக் கொண்டு வந்ததையும், இந்தப் பாறை மீது அவன் சரண் புகுந்ததையும், இதன் மேலேயே அன்ன ஆகாரம் ஏதுமின்றி ஒரு வாரம் தங்கிவிட்டதையும், யானைகள் ஆறு நாள் வரை பழியாக அந்தப் பாறைப் பக்கமே சுற்றி அவனுக்குப் பயம் விளைவித்ததையும் விவரமாகக் கூறினான்.

அப்பால் சேவகர்கள் அவனுக்கு உணவுகளைக் கொடுத்து தெம்பு ஏற்றி அழைத்து, வல்லபன் இருக்கும் இடத்திற்குக் கொண்டு போய்விட, இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு மிகவும் பரவசப்படலானார்கள்.

நண்பர்கள் கூடிய பின், யாதவராயர் அவர்களை அழைத்து, "பிள்ளைகாள்! நல்லவேளை எல்லாம் இனிதே நடந்திருக்கிறது. இனி மற்ற விஷயங்களில் ஈடுபடுவோம். இப்போது நாம் அரங்கரைக் கண்டு பிடித்திருக்கிறோமே, அவரை எங்கே நாம் எழுந்தருளச் செய்வது?" என்று கேட்டார்.

"ஏன், மன்னர் பெருமானே! அவரை மீளவும் திருவரங்கத்தில் எழுந்தருளச் செய்வதுதான் முறை!" என்று கூறினான் வல்லபன்.

அவனை ஆழ்ந்து பார்த்தார் யாதவராயர். பிறகு புன்னகையோடு, "பிள்ளாய் வாப்பா! உனக்கு இவ்வளவு துடிப்பு இருப்பதை மிகவும் பாராட்டுகிறேன். ஆனால் என்னால் செய்ய முடியாததை நீ கூறுகிறாயே!" என்று கூறினார்.

"எது மன்னவா, தங்களால் முடியாது?" என்று கேட்டான் வல்லபன்.

"அரங்கனைத் திருவரங்கம் அழைத்துச் செல்வது தான். பிள்ளாய்! திருவரங்கம் இப்போது யார் கையில் இருக்கிறது? சுல்தானியர்களின் கையில் அல்லவா இருக்கிறது! அவர்களை என்னால் வெல்ல முடியுமா? நான் ஒரு குறுநில மன்னன் தான்!" என்று கூறினார் அவர்.

அவர் சொல்வதைக் கேட்ட வல்லபன் யோசனையில் ஆழ்ந்தான்.

26

"நான் வெறும் குறுநில மன்னன்தானே! என்னால் எப்படி மதுரைச் சுல்தானியர்களை ஜெயிக்க முடியும்?" என்று மிக்க விநயமுடன் ஸ்ரீரங்கநாத யாதவராயர் என்னும் சந்திரகிரி நாட்டு அரசர் கேட்ட போது, வல்லபனுக்குத் துக்கம் பொங்கி வந்தது.

அதை யாதவராயர் புரிந்து கொண்டார்.

உடனே அவர், "அப்பா, வல்லபா! உன் மன வேதனையை நானும் அறிகிறேன். உன்னைப் போல் பல முறை மனத்தில் கொதித்து எழுந்திருக்கிறேன். எங்கள் வம்சத்தார்கள் பாண்டியருக்கும், சோழருக்கும், ஒய்சளருக்கும் சிற்றரசர்களாக வாழ்ந்து வந்திருக் கிறார்கள். பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் ஒய்சள வல்லாள தேவர் சுல்தானியருடன் சண்டைக்கு போனாரே அப்போது நானே என் படைகளை அனுப்பி உதவி இருக்கிறேன். ஆனால் கஷ்டம்! போரில் அந்த வல்லாளர் கொல்லப்பட்டார். நான்

அதை நினைத்து வெகுவாக வேதனைப்பட்டு இருக்கிறேன்!" என்று கூற,

வல்லபனும் இடைமறித்து, "தாங்கள் வல்லாளருக்கு உதவினீர்கள் என்பது எனக்கு இப்போதுதான் தெரியும், பிரபோ!" என்று கூறினான்.

உடனே மன்னரும், "அப்பா, வல்லபா! இதில் அதிசயம் இல்லையே! நாம் கடைப்பிடிக்கும் தர்மங்களுக்குத் தீங்கு வந்தால் நம்மால் வாளாவிருக்க முடியுமோ? ஒய்சளருக்கு உதவுவது என் கடமை! உதவினேன். ஆனால் அவர்கள் ஆட்சி மறைந்த பிறகு சுல்தானியர்கள் கோபம் கொண்டு எங்கள் நாட்டை எல்லாம் குறையாடினார்கள். சந்திரகிரியும் நாராயண வனத்தையும் கொள்ளை அடித்தார்கள்" என்று கூறினார்.

வல்லபன் சடக்கென, "அச்சமயம் தான் மன்னவ, எங்கள் அரங்கன் கோஷ்டியார் அவர்களிடம் சிக்கியிருக்க வேண்டும்!" என்று கூறினான்.

"ஆமாமப்பா! அப்படித்தான் நடந்திருக்க வேண்டும்!" என்று யாதவராயர் கூறினார்.

"தாங்கள் அவர்களை எதிர்க்கவில்லையா?" என்று கேட்டான் காலதத்தன்.

"எனக்கு அவ்வளவு துணிவு இல்லையப்பா! நான் அந்த சுல்தானியருக்குப் பெரும்தொகை கொடுத்துச் சமாதானம் பேசிக் கொண்டேன். என்னால் வேறு எதுவும் செய்ய இயலவில்லை. நான் வெறும் குறுநில மன்னன்தானே!. . . எனினும் நான் செய்த செய்கை என் மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. நல்லவேளை எனக்கு ஒரு நம்பிக்கை கிடைத்தது!" என்றார் யாதவராயர்.

"என்ன நம்பிக்கை, மன்னவா?" என்று கேட்டான் வல்லபன்.

"வடக்கே துங்கபத்திரை நதிக்கரையில் எழுந்த நம்பிக்கைதான் அது. ஹரிஹர ராயர் புக்கராயர்கள் விஜயநகரப் பட்டணத்தை நிறுவி ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்க துணிந்திருந்தார்கள். என் போன்ற சிற்றரசர்கள் எல்லோரும் அந்தச் சகோதரர்களுக்கு எல்லா உதவிகளையும் அளிக்க முன் வந்தோம். இதனால் இந்த ராஜ்யம் இப்போது பல்கிப் படர்ந்து பெரிதாகிவிட்டது. தெற்கே தமிழ் மொழி பேசும் பூமியைத் தொட்டு நிற்கிறது. அரங்கன் அருளால் அந்த பூமியும் சொந்தமாகிவிட வேண்டும். பின்னர் நம் தர்மங்கள் குறைவில்லாமல் செழித்து வளரும்!" என்றார் யாதவராயர்.

இந்த மன்னர் நினைத்தால் பகைவர் மீது படையெடுத்து அவர்களைத் தவிடு பொடியாக்கி விடலாம். இவர் வீரம் காட்டாது இருக்கிறார் என்று மனத்திலே சிறு தாபம் கொண்டான் வல்லபன்.

எனினும் அவன் அதை வெளியே காட்டிக் கொள்ள வில்லை.

பின்னர் எல்லோருமாகச் சேர்ந்து அரங்கனை இனி எங்கே எழுந்தருளச் செய்வது என்று யோசனை செய்தார்கள்.

"சந்திரகிரிக்கு எழுந்தருள வைக்கலாமே!" என்று தத்தன் கூற.

"பிள்ளாய் அந்த இடம் சரியான இடம் அல்ல. திடீரென்று துருக்கியர்கள் படை எடுத்து வந்தால் அது எளிதில் சிக்கக்கூடிய இடம். நானே அங்கே இருப்பதைத் தவிர்த்து விட்டு பெரும்பாலும் திருப்பதி மலை மீது தான் இருந்து வருகிறேன். எனக்காக அங்கே ஒரு அரண்மனையும் கட்டி வைத்துள்ளேன். ஆகவே அரங்கனையும் மலை மேல் எழுந்தருள வைப்பதுதான் முறை!" என்று கூறினார் யாதவராயர்.

அவர் சொல்வது சரி என்று யாவரும் ஆமோதிக்க, மறுநாள் காலையில் பரிவாரங்களுடன் எல்லாரும் திருமலை நோக்கிப் பிரயாணப் படலானார்கள்.

திருவரங்கத்துப் பெருமாள் தம்முடன் வருகிற படியினாலே, குறுக்கு வழியில் போக எண்ணாமல் திருப்பதி வழியாகவே திருமலை மீது ஏறுவதற்கு எண்ணினார் யாதவராயர்.

ஆறு நாழிகைகள் பிரயாணம் செய்து மாலை சாயும் வேளையில் திருப்பதி க்ஷேத்திரத்தை எல்லோரும் அடைந்தார்கள்.

ஊரை அடைந்தவுடன், யாதவராயர் இளைஞர் களிடம் பேசுவது போலவும், அதே நேரத்தில் அரங்கனிடம் விண்ணப்பிப்பது போலவும் பேசி, "இந்த ஊர் புனிதம் வாய்ந்தது. ஸ்ரீராமானுஜரே இந்த ஊரைத் தோற்றுவித்தார்.* மேலே திருமலைக்குப் போகிறவர்களுக்கு வசதியாக இதைத் தோற்றுவித்தார். தவிர, சிதம்பரத்திலிருந்து கோவிந்தராஜப் பெருமாளையும், இங்கே எழுந்தருள வைத்துக் கோவிலில் பிரதிஷ்டை பண்ணி வைத்தார். கோவிலில் பார்த்தசாரதியும் கோவிந்தராஜனும் சேவை சாதிப்பது கண்கொள்ளாக் காட்சி!" என்று கூறினார்.

* கி.பி.1130 – ல், நான்கு ராஜ வீதியும், ஒரு வடக்கு மாட வீதியும், ஒரு சந்நிதித் தெருவும் உண்டான திருப்பதி நகரத்தை உருவாக்க ஸ்ரீ ராமானுஜரே திட்டம் இட்டார். இந்த ஊருக்கு ராமானுஜபுரம் என்றும் பெயர் உண்டு.

இரவு திருப்பதியில் தங்கிவிட்டுக் காலை புலரும் முன்பு மீண்டும் புறப்பட்டார்கள்.

அரங்கனுக்குப் பாங்காக ஒரு டோலா அமைத்து, அவருக்கு உபசாரங்கள் செய்வதற்காக அர்ச்சகர் களையும் நியமித்து, எல்லா வசதிகளையும் உன்னிப்பாகக் கவனித்து, கடைசியில் மன்னர் தாமும் ஒரு டோலாவில் ஏறிக் கொண்டார்.

அதோ போல் கொடவருக்கும், இளைஞர் களுக்கும் தனித்தனியாக டோலா அமைத்துக் கொடுத்து அவரவர் விருப்பங்களை எல்லாம் கவனமாக நிறைவேற்றி வைத்தார் மன்னர்.

பரிவாரம் மலை அடிவாரம் சென்று அடிப்படியை (இப்போது அலிபிரி என்று மருவியிருக்கிறது) மிதித்துப் பிரயாணம் செய்து ஆழ்வார் தீர்த்தம் வரை சென்று, பின்னர் *காலி கோபுரம் (காற்றுக் கோபுரம்) அடைந்து, அவாசாரிகோனா வழியே போய் முழங்கால் முறிப்பானைக் கடந்தது.

அங்கே ஸ்ரீராமானுஜர் மண்டபத்தை அடைந்ததும் மன்னவர் டோலாவிலிருந்து முன் போல் இறங்கி இளைஞர்களையும் அரங்கனையும் ஒருங்கே பார்த்து, "இங்கே தான் முதன் முதலில் ஸ்ரீராமானுஜர் வந்த போது அவரைத் திருமலை நம்பி எதிர்கொண்டு வரவேற்றார். இந்த மண்டபம் நிற்கும் இடத்தில்தான் நம்பிகள் அவருக்கு இராமாயணத்தின் தத்துவார்த்தங் களையும் உபதேசித்தார்!" என்று கூற.

இளைஞர்களும் மிக்க விநயத்துடனே அந்த மண்டபத்தையும், ராமானுஜரின் சந்நிதியையும் தரிசித்தார்கள்.

* காலி கோபுரத்திற்கு இப்போது நேராய் வழி இருக்கிறது. அந்நாளில் ஆழ்வார் தீர்த்தம் போய்ப் போவார்கள்.

பிறகு ஆங்காங்கே அரங்கனை நிறுத்தி தீப நைவேத்தியங்களை எல்லாம் சமர்ப்பித்து பரிவாரங்கள் மேலே ஏறி ஏறிப் போக.

மதியத்திற்கு மேல் ஒரு நாழிகை ஆகும் வேளையில் திருமலைக் கோவிலை யாவரும் சௌக்கியமாய்ப் போய்ச் சேர்ந்தார்கள்.

அரங்கன் வருகிறார் என்கிற செய்தியை முன்னரே அனுப்பி வைத்தபடியால்,

கோவில் ஸ்தானத்தாரும், பரிசனங்களும் அவருக்காகக் காத்திருந்து,

அரங்கன் வந்தவுடன் அவரை மேளதாள வாத்ய விருத்தங்களுடனும், வேத பாராயணங்களுடனும் எதிர்கொண்டு ஜயகோஷம் செய்து ஆனந்தமாய் ஆர்ப்பரித்து வரவேற்று,

முறையே அவரை உள்ளே எழுந்தருள வைத்துப் போய்ச் சந்நிதியில் மலைகுனிய நின்ற பெருமாளுடன் திருமலைக் கோவிலில் உள்ள உற்சவ மூர்த்திக்குப் பெயர் மலையப்பா என்றும் வழங்கப்படுகிறார்.) ஸ்தாபிதம் செய்தார்கள்.

மனித வாழ்க்கையைப் போலவே திருமலையில் உள்ள வேங்கடவன் வாழ்க்கையிலும் ஏற்றத் தாழ்வுகள் அவ்வப்போது இருந்து வந்துள்ளன.

ஸ்ரீராமானுஜர் காலத்திற்குப் பிறகு திருவேங்கடம் மகோன்னதமான திசையை நோக்கிப் போய்க் கொண்டு இருந்தது. கோவிலுக்கு விடப்பட்ட மான்யங்களும் யாத்திரிகர்களின் கூட்டமும் அதிகமாகிக் கொண்டு வந்தன. பின்னால் வந்த யாதவராய அரசர்கள் கோவிலில் நிர்வாகத்தை வெகு திறமையோடு சீர் செய்து வைத்தார்கள்.

ஆனால் கி.பி.1310-லிருந்து தெற்கே டில்லிப் படை எடுப்புகள் நிகழ்ந்த பிறகு தென் நாடுகள் யாவும் ஒரு கொந்தளிப்பில் ஆழ்ந்து விட்டன.

இந்தக் கொந்தளிப்பின் காரணமாக ஜனங்களின் நிம்மதியான வாழ்க்கை முறை பாதிக்கப்பட்டுவிட்டது.

ஜனங்கள் நெடுந்தூரம் யாத்திரை சென்று தலங்களைத் தரிசிக்கும் பழக்கங்களை மெள்ள மெள்ள நிறுத்திக் கொள்ள வேண்டி வந்தது.

இதனால் திருமலைக்கு வருவோரின் தொகையும் குறைந்து வந்தது. அதன் வருவாயும் குறைந்து வந்தது.

கதை நிகழும் காலத்தில் கோவிலுக்கு யாத்திரிகரால் ஏற்படும் வருவாய் மிகவும் குறைந்து விட்டது. பழைய மான்யங்களின் வருவாயினால் கோவிலின் நிர்வாகம் அதிகமாக ஏதும் தங்கு தடை இல்லாமல் நடந்து வந்தது. எனினும் ஜனத் திரள்களால் நிரம்பிய பழைய விமரிசைகள் குறைந்து இருந்தன.

இவ்விதம் ஓரளவு பாதிக்கப்பட்டிருந்த கோவிலில் ஆதரவற்ற ஒரு அந்நியர் போல் அரங்கர் இருக்கிறாரே என்ற ஒரு எண்ணம் திருமலைக்குப் போன அன்று இரவிலேயே இரு இளைஞர்களுக்கும் ஏற்பட்டது.

இரவில் ஒருவருக்கொருவர் தங்கள் வேதனை களைப் பரிமாறிக் கொண்டு உறக்கம் கொள்ளாமல் பொழுதைக் கழித்தார்கள்.

காலையில் எழுந்ததும் இருவரும் யாதவராயர் முன்னால் சென்று தயக்கத்தோடு நின்றார்கள். ராயரும் அவர்களைப் பார்த்து, "வாருங்கள் பிள்ளைகாள்! உங்கள் முகத்தில் விசனக் குறி காணப்படுகிறதே! ஏன்?" என்று வினவ,

"மன்னவா! அதைச் சொல்வதற்காகத்தான் விரைந் தோம்!" என்று சொல்லி ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்து நிற்க,

மன்னவரும் புன்னகையிட்டு, "பிள்ளைகாள்! தைரியமாகக் கூறுங்கள்!" என்று கூறினார்.

அவ்வளவில் வல்லபனும், "மன்னர் பெரும! எங்கள் அரங்கர் திருவரங்கத்தில் ராஜபோகமாய் வாழ்ந்தவர். மாட்சிமையோடு ஆட்சி செலுத்தியவர். அரசர் எல்லோரும் அவர் வாசல் கடைப் பக்கம் வந்து நிற்பார்கள். அப்படிப் பட்ட மகிமை வாய்ந்தவர் இங்கே ஒரே சந்நிதியில் மலை குனிய நின்ற பெருமாளுடன் இருந்து வருகிறாரே என்பதை நினைத்தோம். வேதனைப் பட்டோம்!" என்று கூற, யாதவராய மன்னரும் சற்று நேரம் யோசித்திருந்தார்.

பின்னர் அவர் இளைஞர்களைப் பார்த்து, "பிள்ளைகாள்! உங்கள் தயக்கக் குறிப்பை உணர்ந்து கொண்டேன். அரங்கர் மலைகுனிய நின்ற பெருமாளுடன் சந்நிதியைப் பகிர்ந்து கொண்டு இருப்பதும் தெரிகிறது. நீங்கள் நினைக்கும் முன்பே எனக்கு இந்த நினைவு வந்து விட்டது!" என்று கூறினார் அவர்.

"அப்படியா?" என்று இளைஞர்கள் ஆச்சரியத் தோடு கேட்க,

"ஆமாம் பிள்ளைகாள்! எனக்கு அந்த நினைவு வந்ததற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. திருவேங்கட முடையானின் வழிபாட்டுமுறை வைகானஸ ஆகம வழியில் நடந்து வருகிறது. திருவரங்கத்திலோ பாஞ்சராத்ர ஆகம வழியில் வழிபாட்டு முறை நடந்து வருகிறது. எனவே அரங்கனுக்கு உகந்த வழியில் அவருக்கு வழிபாடு நடப்பதுதான் நல்லது! இதற்காக, இரவு யோசித்து

அரங்கன் இங்கே தங்குவதற்கென ஒரு மண்டபமும், (இந்த மண்டபம் பின்னர் 'ரங்க மண்டபம்' என்று அழைக்கப் பெற்றது.) சந்நிதியும் கட்டத் தீர்மானித்து உள்ளேன். அரங்கன் தனியாக இருந்தே ராஜ்ய பரிபாலனம் செய்வார்! நீங்கள் அஞ்ச வேண்டாம்!" என்று கூறினார்.

உடனே இரு இளைஞர்களும் அவர் காலடியில் விழுந்து வணங்கித் தங்கள் நன்றிக் கடனைத் தெரிவித்தார்கள்.

அதனால் புளகித்த அரசனும், "பிள்ளைகாள்! உங்களைக் கண்டு என் நெஞ்சு சிலிர்க்கிறது; நாட்டில் தர்மம் அழிந்து விட்டதோ என்று நினைக்கும் வேளையில் இரு சிங்கங்கள் புறப்பட்டாற்போல் புறப்பட்டு வந்துள்ளீர்கள். உங்கள் அனுபவங்கள், சாகசங்கள், போராட்டங்கள், எல்லாமே என் மனத்தை வெகுவாகக் கவர்ந்துவிட்டன.

"அரங்கப் பெருமாளைக் காப்பதற்காக அரும்பெரும் தியாகங்கள் செய்த மூன்று கொடவப் பெரியவர்களும் என் மனத்தில் நீங்காது நின்று விட்டார்கள். இப்படிப்பட்ட தியாக புருஷர்களால் தான் நாடு சிறக்கிறது.

"நேற்றைக்கு இரவிலிருந்து எனக்கு ஒரு அவா தோன்றி விட்டது. இந்தத் தியாக புருஷர்கள் தியாகங்கள் நடத்திய மகத்தான புண்ணியத் தலங்களை நான் நேரில் கண்ணாலே காண வேண்டும். அந்த இடங்களுக்கு எல்லாம் நம் கொடவர் வழி காட்டுவாரோ?" என்று கேட்க,

உடனே இரு இளைஞர்களும், "மன்னவ! எங்களுக்கும் அந்த ஆசை தான். முயன்று பார்ப்போம்!" என்று கூறினார்கள்.

மாலையில் கொடவரை அழைத்து வல்லபன் பல கேள்விகள் கேட்க, அவர் சரியாக உத்தரம் கூற முடியாமல், "பே! பே!" என்றே மறுமொழி கொடுத்தார்.

எனினும் வல்லபன் அவரை விடாமல் சைகை செய்து தன் கேள்விகளை அவருக்கு உணர்த்த முயன்றான்.

கொடவரும் ஐந்தாறு நாட்களாய் மனிதர்களுடன் பழக நேர்ந்ததால் தம்மைச் சூழ இயங்கும் மனித நடவடிக்கைகளை ஒருவிதமாய் புரியத் தொடங்கி இருந்தார்.

இதில் கூட ஓரளவு வரைதான் அவரால் போக முடியும் என்றும், இனி அவர் தமது பூரண அறிவையும், பேச்சையும் ஒரு நாளும் திரும்பப் பெறப் போவதில்லை என்பதையும் வல்லபன் நன்றாக உணர்ந்திருந்தான்.

ஆகவே அவன் ஒரு யுக்தி செய்து கொடவரை ஒரு நாள் காலையில் ஒரு பல்லக்கில் வைத்து திருமலையின் வடக்கே உள்ள மலை முகடுகளை நோக்கிச் சென்றான்.

பல்லக்கைத் தொடர்ந்து யாதவராயரும் வந்தார். பரிவாரங்களும் வந்தன.

வடக்கே உள்ள அந்த முகடுகளின் விளிம்புகளில் ஒவ்வொரு பகுதியாகச் சென்று, கொடவரைக் கீழே இறக்கி அவர் என்ன செய்கிறார் என்பதை உற்றுக் கவனித்தான் வல்லபன்.

பல பகுதிகளைக் காட்டியும் கொடவப் பெரியவர் எந்தவித உணர்ச்சியும் கொள்ளாமல் இருந்தார்.

கடைசியாக உள்ள பகுதியில் சென்று கொடவரைப் பல்லக்கில் இருந்து கீழே இறக்கி,

சுற்றிவரப் பார்க்கும்படி வைத்ததில் அங்கும் அவர் எந்தவிதச் சலனமும் இல்லாமல் இருந்தார்.

அதைக் கண்டு ஏமாற்றமடைந்த வல்லபன் இனித் திரும்ப வேண்டியதுதான் என்று நினைத்தான்.

அப்போது அவன் கொடவரைப் பார்க்க, அவர் முகம் மாறி இருந்ததைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

கொடவர் இரண்டு திசைகளை வெறியோடு பார்த்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. கண்கள் பெரிதாகி உடம்பு தடதடவென்று வீசி அடித்தது. மார்பில் வியர்வை பொங்கி வந்தது.

திடீரென்று ஒரு ஆவேசம் அவரைத் தாக்கவே, கைகளை மேலே ஆகாயத்தில் தூக்கி, "ஹோ" என்று இரைந்தார்.

வல்லபன், தத்தன், யாதவராயர் பரிவாரங்கள் யாவருமே திடுக்கிட்டு நின்றார்கள்.

27

திருமலைக் கோவிலிருந்து புறப்பட்டு வடக்கு முகமாகச் சென்று அனந்தமான காடுகளையும் சிற்றாறு களையும் சுனைகளையும் கடந்து, ஏற்றம் இறக்கங்களில் ஏறி இறங்கி இரண்டு நாழிகை பிரயாணம் செய்து அந்த மலை விளிம்பிற்கு வல்லபனும் தத்தனும், யாதவராய ரும், கொடவரும் ஏனையவர்களும் வந்திருந்தார்கள்.

அந்த இடத்தில் நின்ற கொடவப் பெரியவர் அரண்ய விஸ்தீரணம் முழுவதையும் ஒரு வீசலாய்ப்

பார்த்து, 'ஹோ' என்று இரைந்ததும் வல்லபனுக்கும், மற்றவர்களுக்கும் தூக்கி வாரிப் போட்டது.

இங்கேதான் ஏதோ விசேஷம் இருக்க வேண்டும் என்று நினைத்து,

வல்லபன் கொடவப் பெரியவரின் அருகில் வந்து "என்ன விஷயம்?" என்று கேட்பது போல் பல முறை சமிக்ஞை செய்தான்.

கொடவரும் பாதிச் சிரிப்பதும், பாதி அழுவதுமாய் இருந்துவிட்டு வல்லபனது இழுப்புக்கு இணைந்து கொண்டு முன்னால் சென்றார்.

சிறிது தூரம் சென்றதும் ஆவேசம் வந்தவர்போல் ஒரு இடத்தைக் குறித்து, "இதுதான் இதுதான்" என்பது போல் அபிநயித்தார்.

அந்த இடத்தைத் தோண்டிப் பார்க்க அங்கே இரண்டடி ஆழம் போன பின், மண்ணில் மட்கிய தங்கக் கிரீடமும், பொன் நகைகளும், பொற்காசுகளும் கிடப்பதைக் கண்டு அதிசயித்தார்கள்.

வல்லபனும் மன்னரை நோக்கி, "மன்னவ, இவை அந்தக் கொடவர்கள் புதைத்து வைத்தவை! இவற்றைப் புதைத்த பிறகு தான், மூத்த கொடவர் தம்மைக் கொடிகளால் பிணைத்துக் கொண்டு அரங்கனோடு சரிவில் உருண்டார்!" என்று கூறினான்.

அச்சமயம் அந்தக் கொடவப் பெரியவர் முகட்டிலிருந்து விறுவிறு என்று கீழ் நோக்கி இறங்கலானார்.

மற்றவர்களும் சிரமப்பட்டுக் கொண்டு அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

சரிவில் இறங்க இறங்க கண்ணுக்கு இனிய காட்சிகள் விரிந்து கொண்டே போயின.

மரகதப் பச்சை நிறத்தில், மனிதர்கள் படாத காடுகள் செழுமையாய் அடர்ந்து பசேர் என இலைகளையும் தழைகளையும் ஒளிர்வித்துக் காட்டிக் கொண்டு இருந்தன.

பலாசம், புன்னை, சுரபுன்னை, குங்கிலியம், தேக்கு, செஞ் சந்தனம், வாகை, மருவு, ஆச்சா, வாழை, மா, பிள்ளைமருது, மஞ்சள்நாறி என்ற பல வகை மரங்கள் தறிகெட்டு எங்கும் அடர்ந்து வளர்ந்திருந்தன.

மலர்களின் வாடை குளிர்ச்சியாகவும் திரள் திரளாகவும் எங்கும் விசியது.

அப்படிப்பட்ட ரம்மியமான சூழலில் கீழே சரிவாக இறங்கி அகல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார் கொடவப் பெரியவர்.

எண்பது பிராயத்தில் அவர் அப்படி விரைவாக இறங்குவதைப் பார்க்க பார்க்க மற்றவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஒரு நாழிகை நேரமாக இறங்கிக் கடைசியில் அடிவாரத்தை அடைந்தார் அந்தப் பெரியவர்.

மற்றவர்களும் அவரைப் பின்பற்றிக் கீழே வந்து சேர்ந்தார்கள்.

இறங்கி இருந்த இடம் குறுகலான ஒரு பள்ளத்தாக்காக இருந்தது. அதன் இருபுறத்திலும் பெரிய அரண்போல் மலைத் தொடர்கள் எழுந்து வானைத் தொட்டுக் கொண்டு நின்றன.

அந்த இடத்தில் நின்று கொண்டு கொடவர் சுற்றி வர ஊன்றிக் கவனித்துப் பார்த்தார்.

பிறகு சமிக்ஞை செய்து அவர்களை மேலே வரும்படி அழைத்தார்.

மிகக் குறுகலானதும், இரு பக்கமும் மரங்கள் செழித்து வளர்ந்ததுமான தடத்தில் எல்லோரும் கஷ்டப்பட்டுச் சென்றார்கள்.

போகப் போக ஒரு நீர்வீழ்ச்சியின் சத்தம் தோன்றிப் பெரிதாகிக் கொண்டே வந்தது.

அந்த இடத்தை அடைந்த போது ஒரு பரந்த காட்சி அவர்கள் கண்களில் இனிமையாக விழுந்தது.

நீர்வீழ்ச்சி ஒன்று அலை அலையாக நீரை உயரத்திலிருந்து வர்ஷித்துக் கொண்டிருந்தது.

கீழே வீழ்ந்த நீர் பாறைகளில் ஆழமான மடுக்களை ஏற்படுத்திக் கொண்டு சலசலத்து ஸ்படிக நிறத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

மடுக்களில் ஏராளமான மீன் வகைகள் துள்ளி விளையாடிக் கொண்டு இருந்தன.

ஒருபுறம் பார்த்தால் அங்கே ஒரு குகையின் வாயில் தெரிந்து கொண்டிருந்தது.

(இந்த நீரோட்டப் பகுதி இப்போது தும்புருகோனா என்று வழங்கப்படுகிறது.)

நீரோட்டத்தோடு ஓரமாகச் சென்று ஒரு புறத்தை அடைந்ததும், கொடவர் திடீரென்று நின்றார்.

அங்கே கூழாங்கற்களால் சச் சதுரமாகப் பரவப் பட்டிருந்த ஒரு இடத்தைத் திடீரென்று அவர் இனம் கண்டு கொண்டு வல்லபன் கைகளைப் பிடித்தவராய்,

"இதுதான்! இதுதான்!" என்பது போல அடையாளம் காட்டினார்.

அந்த இடந்தான் மூத்த கொடவரும் அரங்கனும் உருண்டு விழுந்த இடம் என்றும், அதனை நினைவூட்டுவதற்காக கொடவர் அந்த வெள்ளைக்

கற்களை அங்கு பரப்பியிருந்தார் என்றும் வல்லபன் அறிந்து கொண்டான்.

அதை எல்லோரிடமும் அறிவித்த போது திடுக்கிட்டு அந்தப் பூமியைப் பார்த்தார்கள்.

எல்லோர் மனங்களிலும் அந்தப் பரிதாபமான காட்சி உதித்து, கண்களில் தாரையாக நீரை வரவழைத்தது.

கண்களில் விநயமும், பக்தியும் கனக்க,

கீழே மெள்ளக் குனிந்து அந்தப் புண்ணியத் தலத்திலின்றும் மண்ணை எடுத்து தம் சிரம் மேல் சிரத்தையுடன் வைத்துக் கொண்டார் யாதவராயர்.

பிறகு பிரதானியை அழைத்து, "இந்த இடம் மிகப் புனிதமானது. கொடவரின் தியாகத்தை நினைவூட்டுவதற்காக இங்கே ஒரு *மண்டபம் கட்டுவோம். அதற்கு ஆவன செய்யுங்கள்!" என்று கூறினார்.

"உத்திரவு பிரபோ!" என்றார் பிரதானி.

வல்லபன் மேலே மலை உச்சிகளை அண்ணாந்து பார்த்து "பாருங்கள் மன்னவ!" என்று கூறினான்.

"அந்த மலை உச்சி பாம்புப் படம் எடுத்தாற்போல் இருக்கிறதே! அதிலிருந்துதான் மூத்த கொடவர் கீழே உருண்டார்!" என்று கூறினான்.

மன்னவர் மேலே உற்றுப் பார்க்க உயரத்திலே அந்த மலைமுகடு பாம்புப் படம் எடுத்தாற் போல் ஒரு தோற்றத்தைக் காண்பித்தது.

* யாதவராயர் கட்டிய இந்த மண்டபம் இன்னும் இருந்து வருகிறது. தும்புரு கோனாவின் நீர் இந்த மண்டபத்தின் இரு மருங்கிலுமே இப்போது சலசலத்து ஓடுகிறது.

இருவர் கண்களிலிலும் நீர் ஊறியது. "ஆகா! என்ன துணிச்சல்! என்ன தைரியம்? என்ன தியாகம்? இந்தச் சரிவிலே ஒருவர் உருண்டால் பிழைக்க முடியுமா? அப்படியும் அந்த சாகசத்தைச் செய்தாரே மூத்தக் கொடவர்!" என்று பிரலாபித்தான் வல்லபன்.

"இதில் இன்னொரு விசேஷம் பார்! அந்தக் கொடவர் வேண்டுமென்றே திருமலைக் கோவில் இருக்கும் இடத்தை விட்டு இந்தப் பக்க மலையைத் தேர்ந்தெடுத்தார். இதன் மூலம் துருக்கியப் படைகளுக்குத் திருமலைக் கோவிலைக் காட்டிக் கொடுக்காமல் இருந்திருக்கிறார். என்னே அவரது கூரிய புத்தி!" என்று கூறினார் யாதவராயர்.

பிறகு எல்லோரும் அந்த தீர்த்தக்கரையில் தங்கி சிரமப் பரிகாரம் செய்து கொண்ட பின்னர் திருமலைக்கு மீண்டும் புறப்பட்டார்கள்.

திருவேங்கடமுடையான் இருக்கும் திருமலை அந்நாளில் ஒரு சிற்றூராகத்தான் இருந்தது. மிகச் சில பரிசனங்களும், பக்தர்களுமே அங்கே நிரந்தரமாகத் தங்கி இருந்தார்கள். மிகச் சில வீடுகள் தான் மலை மீது இருந்தன. அந்நாட்களில் திருமலை மீது வசதிக் குறைவு மாத்திரமல்ல விஷநோய்கள் மனிதனை அவ்வப்போது துன்புறுத்திக் கொண்டிருந்தன. இதன் காரணமாக அர்ச்சகர்களில் பலர் கூட கீழே அடிவாரத்தில் தங்கினார்கள். இவர்களும் மற்ற பரிசனங்களும் தங்கு வதற்கு என்றே இராமானுஜர் அடிவாரத்தில் திருப்பதி என்னும் தலத்தைத் தோற்றுவித்திருந்தார். (திருப்பதி என்னும் பெயரைச் சூட்டியவரும் அவர்தான்.)

மலைமீது வசதிக் குறைவுகளைப் பொருட்படுத் தாமல் கடவுளுக்குச் சேவை செய்வதே குறியாகக் கொண்ட தொண்டர்கள் பலர், அந்நாட்களில்

திருமலைக் கோவிலைச் சுற்றித் திரு நந்தவனங்கள் அமைத்து அவற்றைச் செவ்வையாகத் 'திருத்திப் பாடுபட்டு' திருவேங்கடமுடையானுக்கு அன்றாடம் புஷ்பங்களையும், கனி வர்க்கங்களையும் சமர்ப்பித்து வந்தார்கள்.

இவர்களது திரு நந்தவனங்கள் அந்நாளில் கோவிலைச் சுற்றித்தான் நிறைய இருந்தன. இந்த நந்தவனங்களில் யாத்திரிகர்கள் தங்குவதற்கு என்று சில மண்டபங்களும், மடங்களும் இருந்து வந்தன.

கோவிலின் மேற்கே உள்ள வண்சடகோபன் திரு நந்தவனத்திலே ஒரு மடத்தினுள் வல்லபனும், தத்தனும் தங்கிக் கொண்டார்கள். (இந்த நந்தவனம் இருந்த இடத்தில் தற்போது அகோபில மடம் இருக்கிறது.)

பல மாதங்களாக ஓய்வில்லாமல் சுற்றிய அவர்கள் அந்தத் திருமலை பர்வதத்தின் மேலே சில நாட்கள் நிம்மதியாகத் தங்கித் தங்கள் களைப்பை எல்லாம் ஆற்றிக் கொள்ளத் தலைப்பட்டார்கள்.

அவர்கள் அப்படித் தங்கியதற்கு மற்றொரு காரணமும் இருந்தது.

இரு இளைஞர்களும் தங்கள் ஆயுளில் அரங்கனைப் பார்த்ததில்லை. இப்போதுதான் முதன் முறையாகப் பார்க்கிறார்கள். தினமும் மூவேளை களிலும் அவரைக் காணக் கொடுத்து வைத்ததே அவர்களுக்குப் பெரும் பேறாகத் தோன்றியது.

தவிர, அது நாள் வரை ஒரு கோவிலில் முறையாகப் பூஜை நடப்பதைப் பார்த்ததே இல்லை.

கோவிலில் தூப தீபங்கள் சமர்ப்பிப்பது, அமுது படைப்பது, மந்திரம் ஓதுவது, மணி அடிப்பது, திரு மஞ்சனம் செய்வது ஆகிய எல்லாக் காரியங்களையுமே அவர்கள் பார்த்ததில்லை.

ஆகவே திருமலைக் கோவிலில் அனைத்தையும் முதன் முறையாகப் பார்ப்பதில் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம் எழுந்து கொண்டு இருந்தது.

மேலும் திருமலையில் பழங் காலத்திலே குடியிருந்து, வேங்கடவருக்குச் சேவை செய்த பழைய ஆசாரிய புருடர்களின் திருமாளிகைகளைக் காணவும் அவர்களுக்கு கொடுத்து வைத்தது.

கோவிலின் தென் புறத்திலேயே (தற்போதைய தெற்கு மாடவீதி) உள்ள மண்டபத்தில் மண்ணால் சுவர் தடுத்து திருமலை நம்பி என்னும் பெரியவர் வாழ்ந்த திருமாளிகையை அவர்கள் கண்டார்கள்.

(இராமானுஜருக்கு தாய்மாமனான திருமலை நம்பி பத்தாம் நூற்றாண்டு இறுதியில் வாழ்ந்தவர். இராமானுஜருக்கு இராமாயணத்தின் தத்வார்த்தங் களைக் கற்பித்தவர்.)

அது போலவே தெற்கே சற்றுத் தள்ளி (தற்போது தெற்கு மாட வீதி, மேற்கு மாட வீதியைச் சந்திக்கும் இடத்தில்) திரு அனந்தாழ்வாரின் திருமாளிகை யையும் அவர்கள் கண்டார்கள். (இராமானுஜரின் பிரசித்தி பெற்ற சீடரான அனந்தாழ்வார் பதினோராம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர்.)

இன்னும் திருச்சுகனூரைச் (இந்நாளில் திருச்சானூர் என்று பெயர்) சேர்ந்த ஆசாரியர்கள் பலருடைய மாளிகைகளும் மலை மீது இருந்தன.

இவைகளை எல்லாம் தரிசித்து, தங்கள் சமயத்தின் பழம்பெருமைகளை நினைத்துச் சந்தோஷப்படும் நேரத்தில் அந்த இளைஞர்களின் மனத்தில் ஒரு துக்கமும் இழையூடி ஓடிக் கொண்டிருந்தது.

திருமலையைப் போன்று பிரசித்தமாகத்தானே திருவரங்கமும் இருந்திருக்க வேண்டும். திருமலையை விடக் கூட, மகத்தான பெருமைகளைப் பெற்ற ஊராயிற்றே. ஆழ்வார்களும், ஆசிரியர்களும் உகந்ததோர் இடம் அல்லவா அது.

அந்தத் திருவரங்கத்தை இன்னும் கண்ணால் பார்க்க கொடுக்க வில்லையே! அந்நியர் ஆட்சியில் அது பாழடைந்து வருகிறதே! அதை மீட்டுத் தருவார் யாரும் இல்லையே!

இப்படி நினைக்குங்காலையில் அரங்கனது தற்போதைய கதி கூட அவர்களுக்குத் தாங்கொணாத துக்கத்தைக் கொடுத்தது.

ஒரு அதிதி போல் இந்தத் திருமலையில் அவர் குடி வந்திருக்கிறார். யாருடைய நிழலிலோதானே அவர் தங்கி இருக்கிறார்.

திருவரங்கத்தை விட்டு முப்பத்து மூன்று வருடங்களாக இந்த கதி தானே அரங்கருக்கு இடையறாது இருந்து வந்திருக்கிறது.

இதைக் கவனிப்பார் யாருமில்லையா?

இப்படிப் பல எண்ணங்கள் தோன்றத் தோன்ற இரு இளைஞர்களுக்கும் யாதவராயர் மீது தான் ஆத்திரம் பொங்கி வந்தது.

இவரும் ஒரு மன்னரா? பல பேரரசர்களிடம் சிற்றரசராக இருந்து போர்களில் வெற்றி வாங்கி கொடுத்தேன் என்கிறாரே?

இவர் ஏன் மதுரை மீது படையெடுக்க கூடாது?

மனம் வைத்தால் இவரால் நிச்சயமாக முடியும்.

மனம் வைக்கவில்லை அவ்வளவுதான்!

இதுபோன்று அவர்கள் இரு வாரமாக நினைத்து மனத்தில் குமுறி ஒரு நாள் காலையில் அவர்கள் நேராக யாதவராயரைச் சந்தித்து தங்கள் உள்ளக் குமுறல்களைக் கூறினார்கள்.

அதைக் கேட்ட யாதவராயர் ஆச்சரியப்பட்டார். பிள்ளைகள் இருவரையும் அழைத்துக் கொண்டு திருமலைக் கோவிலுக்குள் போனார்.

அங்கே முன் பகுதியில் அரங்கருக்காக கட்டப்பட்டு வரும் மண்டபத்தின் ஆரம்ப வேலைகள் நடப்பதைக் காட்டினார்.

பின்னால் அவர்களை உள்ளே அழைத்துச் சென்று வரதராஜ சந்நிதியையும், நரசிம்மர் சந்நிதியையும் காண்பித்தார்.

"இதை எதற்கு எங்களுக்கு காட்டுகிறீர்?" என்று இளைஞர்கள் வினவ,

"தென்னாடுகள் மீது டில்லித் துருக்கியர்கள் படை எடுத்து வந்தபோது காஞ்சி வரதராஜரும் அகோபிலம் நரசிம்மரும் இங்கே வருவார்கள் என்று நினைத்தேன். அதற்கு முன்னேற்பாடாக இந்த சந்நிதிகளைக் கட்டி வந்தேன். ஆனால் அவர்கள் வரவில்லை. திருவரங்கத்து அரங்கருக்கு நான் முன்னேற்பாடு எதுவும் செய்யவில்லை. ஆனால் அவர் வந்துவிட்டார். அவருக்காக இதோ உடனே மண்டபம் கட்ட ஏற்பாடு செய்துவிட்டேன். என்னால் செய்ய கூடியதெல்லாம் இவ்வளவுதானே! பிள்ளைகாள்! இதற்கு மேலே எதுவும் செய்வதற்கு நான் அசக்தன் அன்றோ எனக்கு வயதும் ஆகிவிட்டதே!" என்றார் யாதவராயர்.

இளைஞர்கள் இதைக் கேட்டு மௌனமாக நின்றார்கள்.

"பிள்ளைகாள்! நான் உள்ளூர நோய்வாய்ப்பட்டு இருக்கிறேன் என்பது உங்களுக்கு தெரியாதோ? நீண்ட பயணம் செய்வதற்கு நான் அசக்தன். வேங்கடவன் மலையிலே இறக்க எண்ணித்தான் இங்கேயே எனக்கு அரண்மனைக் கட்டி கொண்டு விட்டேன். இதுவும் தெரியாதோ?" என்று கேட்டார்.

28

ஸ்ரீரங்கநாத யாதவராயர் மனம் விட்டுத் தன் நிலையை அந்த இளைஞர்களிடம் கூறினார்.

இளைஞர்கள் மௌனமாக நின்றார்கள். யாதவராயரிடம் ஆர்வம் இருக்கிறது. ஆனால் தீரம் இல்லையே என்று நினைத்தார்கள்.

வல்லபன் உடனே அரசரை நோக்கி, "மன்னவ! தாங்கள் கூறுவதெல்லாம் சரி! அரங்கனுக்கு தனி மண்டபம் கட்டி அவருக்கு எல்லா விமரிசைகள் அளிப்பது எங்களுக்கும் மகிழ்ச்சியாயிருக்கிறது. ஆனால் இன்னொரு குறை எம் மனங்களில் உள்ளது சொல்லலாமோ?" என்று கேட்டான்.

"சொல்லுங்கள்!" என்றார் மன்னவர்.

"எம் அரங்கனைப் பற்றி நாங்கள் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம். அரங்கத்தில் அவர் ராஜரீதியாகவும் சமய ரீதியாகவும் அரசு செலுத்தியவர். அவரது சன்னிதியிலே தீந்தமிழ்ப் பிரபந்தங்கள் எப்போதும் கேட்டுக் கொண்டிருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த தமிழ் பிரபந்தங்களை அரங்கன் பெரிதும் உகப்பார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கேயும் அவர் வாசலிலே பிரபந்தங்களைச் சேவிப்பதற்கு வழி செய்ய வேண்டும்" என்று கூறினான் வல்லபன்.

யாதவராயர் மெள்ளப் புன்னகையிட்டு, "அப்பா பிள்ளாய்! இதுதானா உன் வேண்டுகோள்? அவசியம் இதனை நிறைவேற்றுவோம். கவலைப்பட வேண்டாம்!" என்று கூறினார்.

மறுநாள் காலையில் தமிழ்ப் பிரபந்தங்களைக் கோவிலில் பாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தார் அவர்.

இதற்காகப் பிரபந்தம் தெரிந்த வைணவர்களைத் திருப்பதியிலிருந்தும், மற்ற ஊர்களிலிருந்தும் தேடிக் கொணர வேண்டி வந்ததால் பிரபந்தங்களைப் பாடும் ஏற்பாடு நடைபெறுவதற்கு சில நாட்கள் ஆயின.

ஆனால் முதல் நாளில் வைணவர்கள் பிரபந்தங் களைப் பாட வரும்போது கோவிலில் உள்ள பரிசனங் களில் பலர் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவே பிரபந்தங்களின் சேவிப்பு உடனே நிறுத்தப்பட்டது.

இதைக் கேட்ட இரு இளைஞர்களும் ஆத்திரம் அடைந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியைச் சரியாக அறிந்து கொள்வதற்கு நாம் அந்நாளில் (பதினான்காம் நூற்றாண்டில்) கோவில்களில் இருந்த நிலவரங்களைப் பற்றிச் சற்று அறிய வேண்டும்.

ஆழ்வார்கள் பதினிருவரும் அருளிச் செய்த தீஞ்சுவைப் பாடல்களான திவ்யபிரபந்தம் வடமொழியில் உள்ள வேதங்களுக்கு ஒப்பானது என்று எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளிலேயே அறிஞர்களும் பக்தர்களும் நினைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

இதன் காரணமாய் கோவில் வழிப்பாட்டில் தமிழ்ப் பிரபந்தத்தை ஈடுபடுத்த வேண்டும் என்று பலரும் நினைத்து அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றிருந்தார்கள்.

பதினான்காம் நூற்றாண்டு தொடக்கங்களில் திருவரங்கத்திலேயே இதற்கான எதிர்ப்புகள் நிறைய இருந்தன.

இதற்குப் பெரும்பாலும் ஆதரவு செய்தவர்கள் தெலுங்கு, கன்னடம் தெரிந்த வைணவர்கள்தான்.

பிரபந்தங்களை கோவிலில் பாடலாமா, கூடாதா என்ற விஷயம் தர்க்க ரீதியாக வெகு மும்முரமாக வாதிடப்பட்டது.

அப்போது வேதாந்த தேசிகர் என்னும் வைணவ ஆசிரியர் திருவரங்கத்துக்கு வரவழைக்கப்பட்டார். அவர் வடமொழி, தென்மொழி இரண்டிலும் விற்பன்னர்.

சகலவித கலைகளையும் சாஸ்திரங்களையும் அறிந்து இருந்தார். தமிழ்ப் பிரபந்தங்களை எதிர்ப்பவருடன் அவர் வாதங்களுக்கு போனார்.

தமது திறமையினாலும், அறிவினாலும், எதிர்ப்புக் காரர்கள் யாவரையும் வாதத்தில் வென்று வாகை சூடினார்.

அதனால் திருவரங்கன் கோவிலில் தமிழ்ப் பிரபந்தங்கள் பாடப்படுவது ஒரு அங்கமாகவே ஆகியது.

திருவரங்கத்தில் கிடைத்த இந்த வெற்றி மற்ற கோவில்களில் மெள்ள மெள்ளத் தொடர்ந்தாலும் பிரபந்தத்தை வழிபாட்டில் அறவே சேர்த்துக் கொள்ளாத பல கோவில்களும் அந்நாளில் இருந்து வந்தன.

இவற்றுள் திருமலையில் உள்ள திருவேங்கடவர் கோவிலும் ஒன்று.

இந்தக் கோவிலில் வைகானஸ வழிபாட்டு முறைகளைக் கடைபிடித்து வந்தார்கள்.

புராதனமான வடமொழி மட்டுமே வழிபாடுகளில் உபயோகிக்கபட்டு வந்தது. தமிழ், தெலுங்கு, கன்னடம் பேசும் அரசர்கள் இந்தக் கோவிலின் நிர்வாகங்களின் பங்குக் கொண்டாலும் கோவிலின் புராதன வழிபாட்டு முறைகளுக்குப் பங்கம் ஏதும் இல்லாமல் பாதுகாத்து வந்தார்கள்.

இவ்வித மரபுகள் வளர்க்கப்பட்ட கோவிலில் அரங்கனுக்காக தமிழ்ப் பிரபந்தம் பாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்த போது, அதை கோவிலாரும், பரிசனங்களும் கண்டிப்பான முறையில் ஆட்சேபித்தார்கள்.

இந்த நிகழ்ச்சிகளை அறிந்த போது இரு இளைஞர்களுக்கும் ஆத்திரம் பொங்கி வந்தது.

"இதென்ன? அரங்கனுக்காகத் தமிழ் மறையைப் பாடுவதில் இவர்களுக்கு என்ன வருத்தம்? அவருக்கு தமிழ்ப் பிரபந்தம் உகந்தது என்றால் அதைப் பாட வைப்பதுதானே முறை!" என்று விவாதித்தார்கள்.

கோவில் பரிசனங்களோ அவர்கள் சொல்லை ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இல்லை.

இதனை அறிந்த வல்லபன் தத்தனைப் பார்த்து, "தத்தா! அரங்கனுக்கு தமிழ் பிரபந்தம்தான் அமுது என்றால் அந்த அமுதத்தை அவருக்கு வழங்காமல் இருப்பது அவரைப் பட்டினி போடுவதற்குச் சமானம் ஆகும். அரங்கர் உண்ணாதிருந்தால் நமக்கு அழகா குமோ? ஆகவே நானும் இந்தக் கோவிலடியிலே உண்ணாமல் உபவாசம் இருப்பேன்!" என்று கூறி,

சுவாமி புஷ்கரணிக்குச் சென்று கை கால்களை சுத்தம் செய்து அங்கே மண்டபத்துள் அமர்ந்து ஆனந்த நிலைய விமானத்தை நோக்கி உபவாசம் இருக்க ஆரம்பித்தான்.

ஏழு நாள் ஓட்டியும் பரிசனங்கள் மனம் இறங்காமல் இருக்கவே பதைத்துப் போன தத்தன் யோசனை பண்ணினான்.

கீழே சந்திரகிரிக்குப் போயுள்ள யாதவராயரை உடனே மேலே வரவழைக்க எண்ணி, துணிச்சலுடன் மலை மீதுள்ள கண்ட மண்டபத்திற்குச் சென்று வேளையில்லா வேளையில் அந்த மணியை பலத்தோடு அசைத்து விட்டான்.

இவன் எதிர்பார்த்தது நடந்துவிட்டது. மணியோசை யைக் கேட்ட யாதவராயர் என்னவோ ஏதோ என்று நினைத்து டோலாவில் ஏறி மாலை நேரத்துக்குள் திருமலை வந்து சேர்ந்தார்.

நடந்தவைகளை எல்லாம் கேள்விப்பட்டதும், பரிசனங்களை அழைத்து,

"பெரியீர்காள்! இதென்ன? யாதவகுலத்தார் சொல்லுக்கும் மறுசொல் உண்டோ? இந்தத் திருமலை கோயிலை யாதவகுலந்தானே மீளவும் உன்னதமாக்கிக் கொண்டு வந்திருக்கிறது. அன்றாட வழிபாட்டுக்குக் கூட வழியில்லாமல் இருந்த சமயம் என் முன்னோர்கள் தானே இந்தக் கோவிலை மீண்டும் சீரமைப்புச் செய்ய ஆரம்பித்தார்கள். அப்படிப்பட்ட யாதவகுல அரசரின் கட்டளையை நீங்கள் நிறைவேற்ற வேண்டாமோ? நம் கிருகத்திற்கு ஒரு விருந்தாளி வந்தால் அவருக்கு உகந்த வழியில் அவரை வரவேற்பது தானே நம் கடமை! இது நமது தர்மமும் அன்றோ! ஆகவே இந்தச் சீமையை ஆளும் மன்னன் என்பதால் உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். கோவிலிலே தமிழ்ப் பிரபந்தம் சேவிப்பதற்கு தடங்கல் செய்ய வேண்டாம்!" என்று கூறினார்.

அதைத் தொடர்ந்து பரிசனங்களிடையே ஒரு விவாதம் எழவே, சிறிது நேரம் வரை முணுமுணுப்பு களே காதில் கேட்டன.

உடனே மன்னர், "பெரியீர்காள்! உங்களிடம் மிகவும் நயந்து கேட்டுக் கொண்டேன். நீங்கள் சீக்கிரம் முடிவு காண்பதாய் இல்லை. இனி நான் இடுவது கட்டளைதான். இதை நீங்கள் நிறைவேற்றித்தான் ஆக வேண்டும்!" என்று சினந்து கூறினார்.

அவ்வளவில் பரிசனங்கள் அவர் காலடியில் வீழ்ந்து, "மன்னவா! பொறுத்தருள்க!" என்று வேண்ட,

பொறுமையுடைய மன்னரும், "பொறுத்தோம்!" என்று சொல்லிவிட்டு, நேரே புஷ்கரணி அருகில் உள்ள மண்டபத்திற்கு உடனே சென்றார்.

அங்கே நலிந்தும் மெலிந்தும் கல் தரையின் வெறுமையிலே கிடக்கும் வல்லபனைப் பார்த்து, நாவும் நெஞ்சும் தழதழக்க,

"பிள்ளாய்! என் அருமைப் பிள்ளாய்! நான் பிள்ளை இல்லாதவன். உன்னைப் பார்த்தால் என் பிள்ளை என்று தான் நினைக்கிறேன். என் அன்பான பிள்ளாய்! நீ இப்படி உபவாசம் இருக்கலாமோ? இந்த யாதவச் சீமையில் நியாயத்தை வேண்டி ஒருவர் உபவாசம் இருந்தார் என்றால் அது எமக்கு அவமானமன்றோ! எனக்குச் சொல்லிவிட்டால் வந்திருப்பேனே! உபவாசம் இல்லாமலேயே உன் எண்ணங்களைப் பூர்த்தி செய்திருப்பேனே! பிள்ளாய் உன் மனோரதம் எல்லாம் நான் நிறைவேற்றி

விட்டேன். இந்தா என் கையாலேயே இந்தத் தேனை அருந்துவாய் உனக்கு மங்களம் உண்டாகட்டும்!" என்று கூறினார்.

அவர் கூறுவதைக் கேட்ட வல்லபன் ஈனமான குரலில்,

"மன்னவ! இந்த எளியவனின் எண்ணங்களைப் பூர்த்தி செய்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் ஒன்று தங்களிடம் சொல்ல வேண்டும்!" என்று கூறினான்.

"சொல்வாய் அப்பா!" என்றார் யாதவராயர்.

"மன்னவ! தமிழ்ப் பிரபந்தங்களை கோவிலில் சேவிக்க வழி வகுக்க வேண்டும் என்பதற்காகத்தான் உபவாசம் இருந்தேன். ஆனால் யோசிக்க யோசிக்க இன்னுமோர் எண்ணமும் தோன்றிவிட்டது. எங்கள் அரங்கன் இப்படி ஒரு அனாதைப் போல் திரிவதால்தானே அவருக்கு இந்த அவமானங்கள் எல்லாம் ஏற்படுகின்றன? எங்கள் அரங்கன் திருவரங்கத்திற்கே போய்விட்டால் இந்த அவமானங்கள் எதுவும் ஏற்படாது அல்லவே. அவர் அங்கே போவதற்குத் தடையாக இருப்பது எது? அரசர்களின் ஒற்றுமையின்மை தானே! சம்புவராயர் யாதவராயர். கன்னடர்கள். தெலுங்கர்கள். விஜயநகர மண்டலத்தார் எல்லோரும் ஒன்று சேர்ந்தால் மதுரையிலே சுல்தானை அழித்து விடலாம் அன்றோ! அது செய்யாது எல்லோரும் வாளாவிருப்பது தர்மமோ? முறையோ? எல்லோரும் கூடி முயற்சி எடுக்க வேண்டாவோ? ஆகவே. யோசித்து நான் ஒரு முடிவு செய்தேன். இம்மன்னர்கள் எல்லோரும் கூட வேண்டும்; மதுரை மீது படை எடுக்க வேண்டும். இந்தக் காரியத்திற்காக இங்குள்ள மன்னர்களில் யாராவது ஒருவர் உறுதி எடுத்துச் சபதம் எடுத்தால்

என் உபவாசத்தை நிறுத்துவேன். இல்லாவிடில் நான் இறந்து விடுவதேமேல்; அரங்கனுக்கு மேலும் மேலும் துன்பங்களும். கஷ்டங்களும் ஏற்பட என் மனம் சகியாது மன்னவ! இது உறுதி!" என்று கூறினான்.

அவனது குரலில் கேட்ட ஆவேசத்தைக் கண்டு மன்னர் திடுக்கிட்டார்.

உடனே அவர். "பொறு பொறு பிள்ளாய்! அவசரப்பட்டு முடிவு எடுக்காதே! நான் சொல்வதைக் கேள்! நீ இப்போது மன்னர்களை வரிசையாக அடுக்கிக் கொண்டு போனாயே! அவர்களில் சம்புவராயரைத் தவிர ஏனைய பேரெல்லாம் விஜய நகர மண்டலத்தார்க்கு அடக்கம். மதுரையைக் கைபற்ற வேண்டும் என்று ஒருவர் முடிவெடுக்க வேண்டுமானால் அப்படிச் செய்ய வேண்டியவர்கள் விஜயநகர மண்டலத்தார்தான்! மீதி பேராகிய நாங்கள் முடிவெடுக்க அருகதை அற்றவர்கள். ஆகவே பிள்ளாய்! நன்கு யோசனை செய்! அவசரப்படாதே!" என்று கூறினார்.

அதற்கு வல்லபன். "மன்னவா! நான் ஏற்கெனவே முடிவு செய்து விட்டேன். இதை இனி மாற்ற ஒண்ணாது!" என்று துணிந்து கூறினான்.

திடுக்கிட்ட அரசர். "பிள்ளாய்! யாது காரியம் செய்தாய்! இப்படி நீ உறுதி எடுக்கலாமோ? விஜயநகர காரர்களுக்கு உன் உபவாசத்தைப் பற்றி அறிவிக்க வேண்டாமோ? அறிவித்தாலும் அவர்கள் யோசனை பண்ண அவகாசம் தர வேண்டாமோ? இப்படித் திடும் பிரவேசக் காரியமாய் நீ உபவாசம் இருக்கலாமோ?" என்று கேட்டார்.

உடன் வல்லபன். "மன்னவா! நானும் யோசனைப் பண்ணித்தான் உபவாசம் தொடங்கினேன். எண்ணம் ஈடேறும் என்ற நம்பிக்கையில் தொடங்கவில்லை.

அரங்கர் இப்படி நிர்கதியாக இருக்கிறாரே அனாதையாக இருக்கிறாரே என்ற ஆற்றாமை தான் என்னை அந்த உறுதியை எடுக்க வைத்தது. இதில் என் உயிருக்கே முடிவு வந்தாலும் பாதகமில்லை. ஒரு எண்ணத்தை காற்றிலே தூவி விதைத்தால் அது எங்கேயாவது முளைத்து எழுகிறதா பார்ப்போம், இந்த ஆசையால் தான் இப்படி ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். நான் தவறு செய்திருந்தாலும் இதை மாற்றுவதற்கு வழியில்லை பிரபோ!" என்று கூறினான்.

உடனே மன்னர், "பிள்ளாய்! விஜயநகரம் வரை ஒருவர் போய் வருவது என்றால் பதினைந்து நாட்கள் ஆகுமே. போய் வரக் கூட அவகாசம் தர வேண்டாமா?" என்று பரபரப்புடன் வினவினார் மன்னவர்.

உடன் வல்லபனும், "மன்னவ! எனக்கு என்ன மறுமொழி கொடுப்பதென்றே தெரியவில்லை. முடிவு எடுத்து விட்டேன். அதை நிறைவேற்ற முடிந்தால் நிறைவேற்றுவது உம் போன்ற மன்னர்களின் முடிவு!" என்று கூறிக் கண்களை மூடினான்.

அன்றிரவே யாதவராயர் நான்கு தூதர்களை அழைப்பித்து உயர்ந்த ஜாதிக் குதிரைகளை அவர்களிடம் கொடுத்து தக்கபடியான ஒரு ஓலையும் எழுதி விஜயநகர அரசரான புக்கராயருக்கு அனுப்பி வைத்தார்.

மறுநாள் என்ன நடந்ததோ என்று தவித்துப் போய் அரசர் புஷ்கரணிக்கு வந்து மண்டபத்தைப் பார்க்க,

அங்கே, கண்கள் தாமாக மூடியிருக்க, கைகள் குச்சிகளாய் கீழே துவண்டிருக்க, மேலே எலும்புகள் கூடுகளாய் பரிணமித்திருக்க, உடுத்திய ஆடை

பிடிப்பில்லாமல் நெகிழ்ந்திருக்க, உதடுகள் உலர்ந்து போய் வெடித்திருக்க, கண்டத்தில் மெல்லிதான மூச்சுகளோடு வல்லபன் கீழே கிடப்பதையும், அவனருகிலே கைகளை நெஞ்சில் கோர்த்து கண்களில் நீராய்ச் சொரிந்து துக்கம் பொங்கியவனாய் தத்தன் நிற்பதையும் காண நேர்ந்தது.

"பிள்ளாய்! பிள்ளாய்!" என்று அவர் பலமுறை அழைக்க வல்லபனிடமிருந்து மறுமொழி வரவில்லை.

"மன்னவ, நினைவு பிசகிவிட்டதே!" என்று பொறுமலுடன் தத்தன் சொல்ல,

புடைத்து எழுந்து மன்னர் ஸ்தம்பித்து நின்று, கண்களில் தாரைகள் வழிய மெள்ள முன்னால் குனிந்து, "அப்பா! பிள்ளாய்! யாது செய்தாய் நீ? யாது செய்தாய்?" என்று கேட்டு, மெள்ள தம் இரு கைகளாலும் ஆதரவாக, அணைவாக வல்லபனை அள்ளி எடுத்து,

அவனைத் தன் ஈரம் வழியும் கண்களால் சோகத்தோடு நோக்கி,

"பிள்ளாய், பிள்ளாய்! நீ இப்படிச் செய்யலாமோ? எம்மை இப்படித் தவிக்க விடலாமோ?" என்று கூறித் தம் மார்போடு அவனை அணைத்துக் கொண்டு விழி நீர் தெறித்து ஒழுக மெள்ள மெள்ள நடக்கத் தொடங்கினார்.

29

குறுநில மன்னவரான ஸ்ரீரங்கநாத யாதவராயர் வல்லபனைத் தம் கைகளில் குழந்தை போல் அள்ளி எடுத்துக் கொண்டு தம் அரண்மனையை நோக்கி நடந்தார்.

அவர் கண்கள் நீர்க்குளமாக இருந்தன. அரண்மனைக்குச் சென்று வல்லபனைத் தமது அம்சதூளிகா மஞ்சத்திலே படுக்க வைத்து, ராஜ வைத்தியருக்கு ஆளை அனுப்பினார்.

தத்தனும், "பிரபோ! வல்லபன் என்னிடம் சொல்லி விட்டு எதையும் செய்யவில்லை. தானாகவே தீர்மானம் பண்ணி இதைச் செய்துவிட்டான். நான் சொல்லியும் கேட்கவில்லை. அத்தனை தூரம் அவனுக்கு அரங்கன் மீது பற்று! இப்போது இவன் இருக்கும் நிலை கண்டால் எனக்கு பயமாக இருக்கிறதே! இவனுக்கு ஏதாவது நேர்ந்தால் இவனது தாயாரை எப்படி எதிர்கொள்வேன்? மன்னவரே தாங்கள் தான் அவனுக்கு வாக்குறுதி கொடுத்து அவன் உயிரைக் காப்பாற்றலாகாதா?" என்று கேட்டான்.

அதற்கு மன்னவர், "பிள்ளாய்! எங்கள் குலமும் வைணவ குலமாயிற்றே! நாங்கள் அரங்கனிடமே பொய் சொல்லலாமா?" என்று கேட்டார்.

"தாங்கள் எவ்விதம் பொய் சொல்ல வேண்டி இருக்கும்?" என்று அவன் கேட்க,

"பிள்ளாய்! வாக்குறுதி ஒரு புனிதமான பந்தம்! பெருமாள் விஷயத்தில் அதைக் கொடுத்துவிட்டு வெறுமனே இருக்க முடியுமா? ஏதாவது நிச்சயம் செய்தாக வேண்டும். நான் என்ன செய்ய முடியும்? வெறும் குறுநில மன்னன்தானே நான்! நாலு நாழிகை சேர்ந்து நடப்பதற்கே என் ராஜ்யம் நீளம் பற்றாதே! அப்படியிருக்க படைபலம் இல்லாத நான் என்ன செய்ய முடியும்?" என்று தாபத்துடன் கேட்டார்.

பின்னர் ராஜ வைத்தியர் அங்கு வந்து சேர, அவரிடம் யாதவராயர் விஷயமெல்லாம் கூறி ஆலோசனை கேட்டார்.

அவரும் வல்லபனைச் சோதனை செய்து, நாடி பிடித்து பார்த்து, "பிரபோ, திடீர்ப் பட்டினியால் மூர்ச்சையாகி இருக்கிறான். இரவுக்குள் நினைவு தெளிந்து விடுவான். இனி நாலைந்து நாள் வரைதான் உபவாசத்தை இவன் உடல் தாங்கும்!" என்று கூறினார்.

மன்னர் பின்னர் கவலையோடு பிரதானியரோடு ஆலோசனை செய்யலானார்.

அதே நாள் காலையில் மூன்று யாத்திரிகர்கள் திருப்பதி க்ஷேத்திரத்தில் வந்திறங்கி, குதிரைகளை மடாலயங்களில் விட்டு வைத்து கோவிலுக்குள் சென்று, கோவிந்தராஜப் பெருமாளையும் பார்த்தசாரதிப் பெருமாளையும் தரிசித்து நேராக மலை அடிவாரத் திற்குச் சென்று அடிப்படியை (அடிப்படி என்பது தான் அலிபிரி என்று இப்போது மருவி இருக்கிறது.) மிதித்து மேலே ஏற ஆரம்பித்தார்கள்.

ஆழ்வார் தீர்த்தம், காலி கோபுரம், பாஷ்யக்காரர் சந்நிதி ஆகிய இடங்களில் சிறிது சிறிதே தங்கி இளைப்பாறி விட்டு,

மதியத்திற்கு இரண்டு நாழிகைக்கு மேல் திருமலையைப் போய் அடைந்தார்கள்.

அங்கே, புஷ்கரினி சென்று நீராடி, தூய உடை உடுத்தி, திருவேங்கடமுடையானின் கோவிலைப் பயபக்தியுடன் அணுகி உள்ளே சென்று,

துவஜஸ்தம்பத்தைக் குளிரக் கண்டு, கருடாழ்வாரை வணங்கி,

அப்பால் வரதர் சந்நிதிக்குச் சென்று அவரை வணங்கி, இராமானுஜர் சந்நிதியிலும், நரசிங்கர் சந்நிதியிலும் தாழ வீழ்ந்து வணங்கி,

உள்ளே திருவிளங் கோவிலில் நுழைந்து, கருவறை நோக்கிச் சென்றார்கள்.

அங்கே சங்கும், சக்கரமும் பொற் கிரீடமும் பல்கலன்களும் அணிந்து காண்பவர்க்கு எல்லாம் அருள் மழை போல் கடாட்சம் அருளும் வேங்கடத்துப் பெருமாளைத் தரிசித்து,

உடலெல்லாம் மயிர்க் கூச்செறிய, கண்களில் பக்தியால் நீர் மல்க, அஞ்சலி செய்த கையராய் அவர்கள் வெகு நேரம் பரவசத்தோடு நின்றார்கள்.

பின்னர் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர், அவர்களில் தலைவனாகத் தெரிந்தவரிடம் பெயர் கேட்க,

அவர்களில் ஒருவன், "ஸ்ரீ ஸ்ரீ ஆபஸ்தம்ப சூத்திரம் பரத்வாஜ கோதரம் கோபணார்ய சுவாமி" என்று கூற,

அவ்வளவில் அர்ச்சகர்களும் வெலவெலத்து, "சுவாமி!" என்று நன்றி பெருக்கோடு அஞ்சலி செய்து விட்டு, அர்ச்சனையைத் தொடங்கினார்கள்.

விஜயநகர மண்டலத்தின் ஒரு அங்கமான முள்வாய் ராஜ்யத்தின் சர்வ சைனியாபதியான கோபணா மிகுந்தப் பக்தி பெருக்குடன் திருவேங்கட முடையானைத் தலை தாழ்த்தி வணங்கினார்.

பின்னர் அர்ச்சகர் கற்பூரத் தட்டை சுழற்றி உற்சவ மூர்த்தியான மலை குனிய நின்ற பெருமாளையும் நன்றாக தரிசிக்கப் பண்ணினார்.

அந்த மூர்த்தியையும் அவரது இரு நாச்சிமார் களையும் கோபணா கண்குளிரத் தரிசிக்கும் போது,

திடீரென்று தலையை நிமிர்த்தி, "சுவாமி! மலைகுனிய நின்ற பெருமாள் அருகிலே மற்றொரு

பெருமாள் எழுந்தருளி இருக்கிறாரே, அவர் யாவர்?" என்று கேட்டார்.

அர்ச்சகரும் திரும்பி, "அவர்தாம் திருவரங்கத்து அரங்கநாதர்!" என்று கூறினார்.

'அரங்கன்' என்ற சொல் கேட்டதுதான் தாமதம், அப்படியே விதிர்விதிர்த்தவராய் மெய்மறந்து கோபணா சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்தார்.

பிறகு மீண்டும் மீண்டும் தெண்டனிட்டு எழுந்து,

"சுவாமி! சுவாமி! என்ன சொன்னீர்கள்? இவர் அரங்கன் என்றுதானே சொன்னீர்கள்? என் காதுகள் சரியாகத்தானே கேட்கின்றன? நான் கனவு ஏதும் காணவில்லையே!" என்று அர்ச்சகரை நோக்கி மீண்டும் கேட்டார்.

கோபணாவின் செய்கைகளைக் கண்டு அதிசயித்து அர்ச்சகரும்,

"பிரபோ! தாங்கள் கேள்வியுற்றது உண்மைதான்! இவர் திருவரங்கத்து அரங்கன்தான்! இவர் இங்கே வந்து சேர்ந்து மூன்று வாரங்கள்தான் ஆகின்றன!" என்று கூறினார்.

ஒரே உணர்ச்சிப் பெருக்கில் இருந்த கோபணாவும், ஏதும் சொல்ல முடியாமல் பரபரத்து, மீண்டும் பலமுறை அரங்கன் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து எழுந்திருந்து,

"அரங்கா! நான் தேடி வருவதற்கு முன்னமேயே எனக்குச் சேவை தந்தாயோ? என்னே உனது அருள்!" என்று பலவாறாக அரங்கனைத் துதித்தார்.

பின்னர் கண்களில் ஆனந்த புரஷ்பங்கள் பெருக, உள்ளே அர்ச்சகப் பரிசனங்களை நோக்கி,

"ஐயன்மீர்! நம் பெருமாள் இங்கே எழுந்தருளிய விதம் என்ன? அவரைத் தேடி அல்லவா நான் வந்திருக்கிறேன்!" என்று கூற,

அர்ச்சகர்களும், இரு இளைஞர்கள் சந்திரகிரிக் காட்டில் அரங்கனைக் கண்டெடுத்த விவரத்தைக் கூறி,

"பிரபோ! அந்த இரு இளைஞர்களும் இப்போது திருமலையில் தான் இருக்கிறார்கள்!" என்று சொன்னார்கள்.

"எங்கே இருக்கிறார்கள்?" என்று பரபரப்புடன் கேட்டார் கோபணா.

"நமது யாதவராயர் அரண்மனையில்" என்று சொல்லவும், கோபணா உடன் தமது சகாக்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

யாதவராயரின் இருக்கைக்கு கோபணா போய்ச் சேர அவரை இன்னார் என்று அறிந்து கொண்ட மன்னர் தகுந்த மரியாதைகளுடன் அவரை ஆனந்தப் பரவசராய் வரவேற்றார்.

உடன் கோபணாவும், "மன்னர் பெரும! நான் இங்கே வந்த காரணம் இரு இளைஞர்களைப் பார்க்கத்தான்!" என்று அரங்கரைப் பார்த்த விஷயத்தைக் கூறியதும்,

யாதவராயர் உடனே மிகவும் புளகிதம் அடைந்து, அவரை அழைத்துக் கொண்டு தமது சயனக் கிருகத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

அங்கே, அம்சதூளிகா மஞ்சத்தில் மெலிந்த உடலுடன் வல்லபன் படுத்திருக்க, ராஜ வைத்தியர் அவன் அருகே கவனத்தோடு அமர்ந்திருப்பதையும், தாதிமார்கள் மெல்ல ஆலவட்டம், வீசிக் கொண்டு

நிற்பதையும் கண்ட கோபணா மெதுவாக நடையிட்டு, அந்தத் தூளியின் அருகிலே சென்றார்.

அங்குள்ளவர்களை அதிசயத்துடன் பார்த்த அவர், "இந்தக் குமாரனுக்கு என்ன?" என்று ராஜ வைத்தியரை நோக்கிக் கேட்டார்.

"இந்தப் பிள்ளையாண்டான் உபவாசம் இருக்கிறான்!" என்றார் வைத்தியர்.

"ஏன்? எதற்கு இந்த உபவாசம்?" என்று கேட்டார் கோபணா.

உடன் யாதவராயர் கோபணாவின் முன் வந்து சந்திரகிரிக் காட்டிலிருந்து தொடங்கி,

திருமலைக்கு அரங்கன் எழுந்தருளியது வரை நடந்த விஷயங்கள் எல்லாம் விவரமாகக் கூறி,

"சைனியாதிபதிகளே! அரங்கத்தை நோக்கிப் படை எடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்தால் தான் உபவாசத்தைத் தவிர்ப்பேன் என்று கூறுகிறான். நாங்கள் என்ன சொல்லியும் பயனில்லாது போய்விட்டது!" என்று கூறினார்.

அவ்வளவில் மிகவும் மனம் உருகிய கோபணா மெள்ள வல்லபனின் மஞ்சத்தின் அருகிலே சென்று,

மெலிந்து போன அவன் முகத்தைத் தம் பக்கம் திருப்பி, கொஞ்சம் தழதழத்து வர,

"அப்பா! அருமைப் பிள்ளாய்! அரசர்கள் செய்ய மறந்தவை நீயும் உன் நண்பனுமாகத் துணிந்து செய்தீர்கள். பெரிய பெரிய வீரர்களோ, தனவந்தர் களோ செய்யாததை நீயும் நண்பனுமாக முனைந்து செய்து வைத்திருக்கிறீர்கள். உங்களுக்கன்றோ நாடு கடமைப்பட்டிருக்க வேண்டும்?

"உங்கள் சேவையை அன்றோ மாந்தர் எல்லாம் பாராட்ட வேண்டும். இப்படி ஒரு அரும்பெரும் செயலைச் செய்துவிட்டு, பெருமை யாகவும், சந்தோஷமாகவும் இருக்க வேண்டிய நீ இவ்விதம் உபவாசமிருந்து உடம்பை வருத்திக் கொள்ளலாமா? அப்படி செய்வதற்கு நாங்கள் அனுமதித்தால் நாங்கள் பதிதர்கள் ஆக மாட்டோமா?

"பிள்ளாய்! பிள்ளாய்! நல்ல சரியான நேரத்தில் தான் என்னை அரங்கன் இங்கே அனுப்பி உள்ளார். என்னைப் பார் பிள்ளாய். நான் இங்கு வந்த காரணமே அரங்கனைத் தேடுவதற்குதான். அந்தத் தேடலை நீயே செய்து முடித்து விட்டாய்! அது போதும் எனக்கு. மெத்த மகிழ்ச்சி! இனியும் உள்ளதை நான் செய்கிறேன்! நானே செய்கிறேன்!" என்று வல்லபனின் கைப்பிடித்துக் கூற,

வல்லபனும் ஆச்சரியத்துடன் முகம் திரும்பி அவரைப் பார்த்தான்.

யாதவராயர் அவன் காதருகே சென்று, வந்திருப்பவர் யார் என்று கூற, வல்லபனின் மங்கிய கண்களில் ஒளி துள்ளியது.

மேலும் தழதழத்த கோபணா, கண்ணில் ஆனந்த நீர் பொங்க,

"ஆமாம் பிள்ளாய்! புறப்படும்போதே அந்த எண்ணத்துடன்தான் புறப்பட்டேன். இங்கே உன்னையும் அரங்கனையும் கண்டபின் என் உறுதி பன்மடங்காகிவிட்டது. இதோ உன் முன்னாலேயே சபதம் உரைக்கிறேன். கேள், முள்வாய் ராஜ்யத்தில் சர்வ சைனியாதிபதியாக இருக்கும் கோபணாவான நான் அரங்கனைத் திருவரங்கத்தில் மீண்டும் எழுந்தருளச் செய்து விடுவேன் என்று சபதம் எடுக்கிறேன். இனி இந்தச் சபதம் ஒன்றைத்தான் லட்சியமாகக் கொள்வேன். இதுவும் உறுதி!" என்று கூறியதும்,

கூடியிருந்த யாதவராயரும், தத்தனும், வைத்தியரும், இதர பணியாளர்களும் "ஜய விஜயீ பவ, கோபணார்யர் வாழ்க!" என்று கோஷம் எழுப்பினார்கள்.

வல்லபன் கண்களில் ஆனந்தம் பொங்க, சைனியாதிபதியைப் பார்த்தான்.

அவ்வளவில் அவனது மஞ்சத்தின் கீழே, தாயைப் போன்ற வாத்சல்யம் முகத்தில் பொங்க, மண்டியிட்டு அமர்ந்த கோபணா,

வல்லபன் மெலிந்த கை ஒன்றை மெதுவாகப் பற்றி,

"பிள்ளாய்! என் உறுதி போதுமா? சபதம் போதுமா? சில மாதங்களுக்கு முன் என் ராஜரீகப் பதவியைத் துறந்து, துறவறம் பூண வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் இங்கே வந்து உன்னையும், உன் உபவாசத்தையும் அரங்கனையும் கண்ட பிறகு நான் ராஜரீகத்தை விடுவது சரியல்ல என்று நினைக்கிறேன்.

"ஏனெனில் நான் ராஜரீகத்தில் இருந்தால்தானே உனக்குக் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றி வைக்க முடியும். தவிர என் ராஜரீகந்தானே மதுரையை ஜயிக்க எனக்கு உதவியாக இருக்க போகிறது. அதைத் துறந்தால் நான் என்ன செய்ய முடியும்?

"ஆகவே ராஜரீகத்தை வைத்துக் கொள்கிறேன். அது ஒரு சிறப்பான தெய்வ காரியத்திற்கு உதவப் போவதால் அதை மனமுவந்தே வைத்துக் கொள்ளப் போகிறேன்.

"பிள்ளாய்! நான் சொன்ன உறுதி மொழிகள் போதுமா? நான் சொல்வதெல்லாம் உனக்கு ஒரு நிம்மதியைக் கொடுத்திருக்குமே! போதும் பிள்ளாய், போதும் உன் உபவாசம்! உன் எண்ணம் வெற்றி அடைந்து விட்டது. நீ போட்ட ஆணை நிறைவேறி விட்டது. இனியும் தயக்கம் காட்டாதே! என் கையால் தேன் அருந்து பிள்ளாய்! பிள்ளாய்!" என்று கூறினார்.

வல்லபன் கண்களில் நீர் வழிந்தது.

30

முள்வாள் ராஜ்யத்தின் சர்வசைனியாபதி கோபணாவின் சபதத்தைக் கேட்டு வல்லபன் அவரை அதிசயத்துடன் திரும்பி பார்த்தான்.

"ஐயா தாங்கள் கூறுவது என்னை தேற்றுவதற்கு அல்லவே? மெய்யாகத்தானே கூறுகிறீர்கள்!" என்று ஆர்வமுடன் கேட்டான்.

அவன் சொல்லுவதைக் கேட்டு கோபணா மெள்ளச் சிரித்தார்.

அதே சமயத்தில், "புத்தி, புத்தி!" என்பது போல் யாதவராயர் தன் வாயில் போட்டுக் கொண்டார்.

வல்லபன் இதுபோல் கேட்டு விட்டானே? என்று ஒரு ஆதங்கம் அவருக்கு.

"பிள்ளாய்!" என்றார் கோபணா. "நன்று கேட்டனை! நாட்டில் எவ்வளவோ ஆண்டுகளாய் நல்லது நடக்காமல் இருந்து விட்டதால் உனக்கு எதிலும் அவநம்பிக்கை வந்துவிட்டது! உனக்கு நான் உறுதிமொழி கூறுகிறேன்! நான் சொன்னதை நிறைவேற்றுவேன். அதற்காகவே இனி வாழ்வேன். இது சபதம்! நீ கலங்க வேண்டாம்!" என்று மீண்டும் உரத்துக் கூறினார்.

அவ்வளவில் வல்லபன் அவர் கைகளைப் பற்றிக் கண்களில் ஒத்திக் கொண்டு, "தன்யன் ஆனேன், தன்யன் ஆனேன்!" என்று மெய்சிலிர்க்கக் கூறினான்.

அவன் கண்களில் நீர் பெருகிட, கோபணாவின் கண்களும் நிறைந்து விட்டது.

அப்படியே அவர் வல்லபனை ஆரத்தழுவிக் கொண்டார்.

பின்னர் எலுமிச்சையும், தேனும் கலந்த நீரை அவர் கொணரச் செய்து, அதை ஆதுரத்துடன் வல்லபனிடம் கொடுக்கவே, அவனும் அதை நுனி நாவால் மெள்ள ருசித்து துளித் துளியாய்ப் பருகித் தனது உபவாசத்தை முடித்துக் கொண்டான்.

அதைக் கண்ட எல்லோரது முகங்களிலும் மகிழ்ச்சி தளும்பியது.

வல்லபன் உடல் தேறுவதற்கு இரு வாரங்கள் ஆகின.

தேறியதும் அவன் தத்தனை அழைத்துக் கொண்டு நேராக யாதவராயரிடம் சென்று, "மன்னவ! விடைகொடுங்கள்! நாங்கள் வருகிறோம்!" என்று கூறினான்.

மன்னவரும் ஆச்சரியத்துடன் அவர்களைப் பார்த்து, "பிள்ளைகளே, அவ்வளவு அவசரமா? அரங்கனுக்கு சந்நிதி கட்டிக் கொண்டிருக்கிறோம். அவரை அங்கே எழுந்தருளச் செய்யும் வரை காத்திருக்கக் கூடாதா?" என்று கேட்டார்.

“இல்லை மன்னவ! எங்கள் உறவினர்கள் கவலையோடு காத்திருப்பார்கள். நாங்கள் ஊரைவிட்டுப் புறப்பட்டு ஆறு மாத காலம் ஆகிவிட்டது. நாங்கள் அவசியம் போக வேண்டும். பின்னர் திரும்பி வருவோம்!” என்று கூறினார்கள்.

பின்னர், மன்னரும் அவ்விருவரை வெகுவாகப் பாராட்டி, பொன், வஸ்திரம், தானியம் ஆகிய வெகுமானங்களைக் கொடுத்து அன்போடு அனுப்பித்து வைத்தார்.

அவர்கள் பிறகு திருவேங்கடமுடையான் கோவிலுக்கு சென்றார்கள்.

அங்கே வேங்கடவரைத் தொழுது, பின்னர் அரங்கனைத் தரிசித்து அவர் முன்னே வெகுநேரம் மெய்மறந்து நின்று முடிவில் பிரியாமனத்துடன் விடைபெற்று வெளியே வந்தார்கள்.

கோபுரவாயிலில் அவர்கள் வந்த நேரம் வைணவர்கள் அங்கே நின்று கொண்டு அரங்கனுக்காகத் தமிழ் பிரபந்தங்களைப் பாடும் நேரமாக இருந்தது.*

தமிழின் இனிய ஓசை மிருதுவான அலைகளாய் மெள்ள மெள்ளத் தவழ, ஆழ்வார்களின் மெய்யுருக்கும் எண்ணங்கள் அதன் இனிய சொல் திவலைகளாய் மிதந்து வெளிவந்தன.

அதனைச் செவியார இரு இளைஞர்களும் கேட்டு நின்றார்கள்.

* இவ்விதம் தமிழ்ப் பிரபந்தங்களைப் பாடும் வழக்கத்தை யாதவராயர் கி.பி.1360-ல் தொடங்கி வைக்க, பின்னால் அது திருமலைக் கோவில் வழிபாட்டில் ஒரு அங்கமாகவே ஆகிவிட்டது.

அதே நேரத்தில் அவர்கள் இருவரது கண்களும் அங்கே வாயிலருகே பெரிதாய் எழுந்து கொண்டிருக்கும் மண்டபத்தின் மீதும், அதன் முன்னால் வேலை செய்து கொண்டிருக்கும் ஸ்தபதிகள் மீதும், கலைஞர்கள் மீதும் விழுந்தன.

உடன் வல்லபன் பெருமிதம் பொங்க தத்தனை நோக்கி, “தத்தா? வெளியே அரங்கனுக்குச் சொல்லால் ஒரு மாளிகை எழுகிறது. உள்ளே கல்லால் எழுகிறது!” என்று கூறினான்.

உடன் தத்தனும், “இவ்விரண்டுக்குமே நாம் ஓரளவாவது காரணமாக இருந்தோம் என்பது பெருமையாக இருக்கிறது!” என்று கூறினான்.

இருவரும் மனத்தில் நிறைவோடு வெளியே வந்து கடைசியாய்க் கோபுரத்தையும் வணங்கிவிட்டு, வண்சடகோப நந்தவனத்தை நோக்கி விறுவிறு என்று நடந்தார்கள்.

அந்த வனத்துள் நுழைந்து, நடுவே உள்ள மண்டபத்திற்குச் சென்று, அதன் வலதுபுறத் தாழ்வறையில் மெள்ள எட்டிப் பார்க்க, அங்கே, கோபணா சுகாசனம் இட்டு அமர்ந்து கண்களை மூடி ஜபம் செய்து கொண்டிருந்தார்.

அவர்கள் போன நேரத்தில் அவர் ஜபம் முடிந்து கண் விழிக்க, இரு இளைஞர்களும் அவருக்கு விநயத்தோடு அஞ்சலி செய்து,

“பிரபோ! நாங்கள் வருகிறோம்! எங்கள் ஊர் செல்கிறோம்!” என்று கூறினார்கள்.

“அப்படியா? ஆச்சரியமாயிருக்கிறதே! அரங்கனோடு இருந்து விடுவீர்கள் என்றல்லவா நினைத்தேன்!” என்றார் கோபணா.

"இருக்கத்தான் விரும்புகிறோம். ஆனால் எம் பந்துக்களைப் பிரிந்து வெகுநாட்கள் ஆகிவிட்டன. ஆகவே புறப்பட்டுச் செல்கிறோம். மீண்டும் சீக்கிரம் வருவோம். ஆனால் எங்களை விட ஆயிரம் மடங்கு வல்லமை உள்ளவரிடம் அரங்கனை ஒப்படைத்தாகி விட்டதே! இனி என்ன கவலை?" என்று கூறினார்கள்.

அதன் உட்பொருளை அறிந்த கோபணா மெள்ளச் சிரித்து,

"நன்று சொன்னீர்கள், பிள்ளைகாள்! விஜயநகருக்கு எம் தூதர்களை அனுப்பிவிட்டேன். அங்கிருந்து மறுமொழி வந்ததும் காரியத்தில் இறங்குவேன்! அவர்களுக்காகவே இங்கே காத்திருக்கிறேன்!" என்று கூறினார்.

பின்னர் அவரும் அந்த இளைஞர்களை நல்ல வார்த்தைகளால் புகழ்ந்து பேசி, தம் வெகுமானமாய் இரு துளசி மாலைகளைக் கொடுத்து வழி அனுப்பி வைத்தார்.

பின்னர் இளைஞர்களும் திருமலைக்குப் போன ஞாபகார்த்தமாய் 'சந்தனப் பலகைகளையும் செஞ்சந்தனப் பொம்மைகளையும் வாங்கிக் கொண்டு மலையை விட்டு எட்டு நாழிகையில், கீழே இறங்கி திருப்பதியை அடைந்தார்கள்.

அங்கே கோவிந்தராஜப் பெருமாளையும், பார்த்தசாரதி பெருமாளையும்* தரிசித்து இரவு மடம் ஒன்றில் தங்கிவிட்டு, மறுநாள் காலை திருச்சுகனூருக்கு (இந்த ஊர் இப்போது திருச்சானூர் என்ற பெயராக மருவி இருக்கிறது) போய் அலர்மேல்மங்கைத் தாயாரையும் தரிசித்துவிட்டு,

* பார்த்தசாரதியின் மூல உருவம் சமீப காலம் வரை காறையால் மூடப்பட்டிருந்தது. இப்போது திறக்கப்பட்டு விட்டது.

மனத்தில் நிறைவு பெருக, தென் திசை நோக்கிப் பிரயாணப்படலானார்கள்.

மூன்று நாள் பிரயாணம் செய்து, சம்புவராய ராஜ்யத்தை அடைந்து மீண்டும் சன்னியாசி போல் இருவரும் வேடம் தரித்து காஞ்சிபுரத்தை நோக்கி விரைவாக நடந்தார்கள்.

கோபுர தரிசனம் தூரத்திலிருந்தே கிடைத்துவிட, இருவரும் மிகவும் சந்தோஷப்பட்டு, சிங்கழகர் எவ்விதம் தங்களை வரவேற்கப் போகிறார் என்பதையும்,

அரங்கனைப் பற்றிக் கேள்விப்பட்டதும் எவ்விதம் ஆனந்தம் கொள்ளப் போகிறார் என்பதையும் கற்பனை செய்து கொண்டு அதைப் பற்றியே ஒருவருக்கொருவர் விமர்சித்துக் கொண்டு,

மாலை ஆகும் தருவாயில் நகரின் எல்லைக்கு வந்து சேர்ந்தார்கள். நகரின் கோட்டையை நெருங்கியதும் அவர்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

அதன் பிரமாண்டமான கதவுகள் மூடப்பட்டு இருந்தன.

என்ன காரணமாயிருக்கும் என்று ஆலோசித்து, அதன் வாயில் அருகே சென்று நின்றார்கள்.

"யார் அங்கே?" என்று மதில் மீதிருந்து குரல் கேட்டது.

"யாத்திரிகர்கள்! வரதனைச் சேவிக்க வந்திருக்கிறோம்" என்றார்கள் இளைஞர்கள்.

மேலே இருந்த சேவகன் விடுவிடென்று கீழே இறங்கித் திட்டி வாயில் கதவைத் திறந்து அவர்களை உற்றுப் பார்த்தான்.

வல்லபனும் தத்தனும் அவனை ஏறிட்டார்கள்.

சேவகன் உண்மையில் ஒரு வைணவராக இருந்தார்.

பிறகு "உம் உம்! சுவாமி பெயரைச் சொல்லி விட்டீர்கள். போங்கள், போங்கள்!" என்று உள்ளே அனுப்பினான்.

ஊருக்குள் சந்தடி இல்லை.

முன்பிருந்த அரவமும் கலகலப்பும் இப்போது இல்லை.

இந்த நகருக்கு என்ன நேர்ந்தது என்று இருவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

வீதிகளில் சேவகர்கள் நடமாடிக் கொண்டு இருந்ததால் ஓரமாகவே சென்றார்கள்.

அரை நாழிகையில் சிங்கழகரின் மண்குடிலை அணுகினார்கள்.

நெஞ்சங்கள் படபடக்க நந்தவனத்தின் நாதங்கியைத் திறந்து கொண்டு உள்ளே சென்றார்கள்.

குடிலை நெருங்க நெருங்க இருவருக்கும் இன்பமயமான துடிப்புகள் பெருகின.

குடிலின் வாயிலை அடைந்ததும் பாதக்குறடுகளை கழற்றி ஓரமாய் வைத்து விட்டு மெல்லிதான குரலில், "சுவாமி!" என்றார்கள்.

மறுமொழி எதுவும் வராததால் மீண்டும், "சுவாமி!" என்றார்கள்.

அப்போது உள்ளே அரவம் கேட்டது. மெள்ளக் கதவும் திறந்தது. கரிதான உள்புற நிழலிலிருந்து ஒரு உருவம் மெள்ளப் பிரிந்து முன் நோக்கி வந்தது.

இரு இளைஞர்களும் ஆச்சரியத்தோடு அந்த உருவத்தைப் பார்த்தார்கள்.

யார் இது?

அவர்கள் கண்களையே அவர்களால் நம்ப முடியவில்லை.

ஓடிசலான குச்சி போல் ஒரு உருவம் அவர்கள் எதிரே நின்றது. முகமும் உடலும் சோகை பிடித்தாற் போல் வெளிறியிருந்தன.

துகில் கட்டியிருப்பதைப் பார்த்தால்தான் அவள் ஒரு பெண் என்று தெரிந்தது.

எனினும் அவளை அடையாளம் கண்டு கொண்ட வல்லபன் திடுக்கிட்டு, "மஞ்சரி!" என்றான்.

அந்த உருவம் துள்ளியது.

"நீங்களா?" என்று அதன் வாயினின்றும் குரல் எழுந்தது.

"நாங்கள்தான் மஞ்சரி!" என்றான் வல்லபன் முன்நோக்கி நடந்து கொண்டு.

மஞ்சரி இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். கண்களில் நீர் பொங்கியது.

இளைஞர்கள் இருவரும் அவள் பின்தொடர உள்ளே நுழைந்தார்கள்.

உள்ளே போனதும் மூட்டைகளை இறக்கிக் கீழே வைத்துக் கொண்டு,

"சிங்கழகர் சுவாமி எங்கே? எங்கே?" என்று பரபரப்புடன் கேட்டான் வல்லபன்.

"சுவாமி எங்கே? கூப்பிடு! அருமையான செய்தி கொண்டு வந்திருக்கிறோம்!" என்று கூறினான் தத்தன்.

இளைஞர்கள் இருவரும் கீழே அமர்ந்தார்கள்.

மஞ்சரி பேசாமல் இருப்பதைப் பார்த்து ஆச்சரியமாக இருந்தது.

"மஞ்சரி! அவசரம்! உடனே அவரைக் கூப்பிடு!" என்றான் வல்லபன் தன் மூட்டையை அவிழ்த்துக் கொண்டே.

இதற்குள் தத்தன் தன் மூட்டையிலிருந்து செஞ் சந்தன மரப் பொம்மைகளை கீழே வரிசையாக வைத்திருந்தான்.

'ஹக்' என்று விம்மும் குரல் கேட்டது.

இருவரும் நிமிர்ந்து பார்த்தார்கள்.

மஞ்சரி தன் முகத்தை மறைத்துக் கொண்டு விம்மினாள்.

"மஞ்சரி! என்ன விஷயம்? ஏன் அழுகிறாய்?" என்றான் வல்லபன் கலவரத்துடன்.

மஞ்சரி தலை குனிந்தாள். விம்மல்கள் அடுக்கடுக்காக வெளி வந்தன. கண்ணீரும் தாரையாக சிற்றாடைகளில் வழிந்தது.

"மஞ்சரி என்ன விஷயம்?"

அந்தக் கேள்வியைக் கேட்கும்போதே வல்லபனின் அடிவயிற்றில் ஏதோ குமட்டியது.

"மஞ்சரி என்ன விஷயம்?"

"சொல்லு, மஞ்சரி!"

"மஞ்சரி, மஞ்சரி!"

எதற்கும் பேசவில்லை. அவள் விம்மல்கள் தான் பெரிதாகிக் கொண்டு வந்தன.

திடுக்கிட்டு வல்லபன் சுற்றிவரப் பார்த்தான்.

மூலையைப் பார்த்ததும், அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அங்கே சிங்கழகரின் கைதடி தனியாக நின்று கொண்டு இருந்தது.

அந்தக் கைத்தடி என்றுமே, எப்போதுமே தனியாக இருந்ததில்லை.

நடந்த போதெல்லாம் வேண்டி வந்ததால் அதை இணைபிரியாமல் தம் அருகிலேயே வைத்திருப்பார் சிங்கழகர்.

தூங்கும் போது அருகிலேயே படுக்க விட்டிருப்பார்.

அவ்விதம் இணைபிரியாத அவருடன் எப்போதுமே ஒட்டியிருந்த கைத்தடி ஏன் இப்போது தன்னந் தனிமையில் ஒதுங்கி ஒதுங்கி நிற்கிறது?

அதை விட்டுப் பிரிந்து சிங்கழகர் எங்கே சென்றிருப்பார்?

அந்த நினைப்பு மனதில் ஓட,

பகீர் என்று ஒரு எண்ணம் அவன் உணர்வுகளைத் தூக்கி அடித்தது.

அதை நினைக்கும்போதே உடலெல்லாம் பரபரத்தது.

சிங்கழகர் இவ்வுலகை விட்டுப் *பரமபதத்திற்கு எழுந்தருளி விட்டாரோ?

படீரென்று பாய்ந்த இந்த நினைவு அவனையே ஒரு உலுக்கு உலுக்கியது.

* பரமபதம் - மேல் உலகு

"மஞ்சரி சுவாமி எங்கே? எங்கள் சுவாமி எங்கே?" என்று கத்தினான் அவன்.

அவன் கையிலிருந்து நழுவிய சந்தனப்பலகை நாராசமான சத்தத்தோடு நீள உருண்டு ஓடியது.

மூலை வரை உருண்டு சென்ற அந்தப் பலகை கைத்தடியை நெருங்கிச் சப்பட்டையாக விழ,

அதன் அதிர்ச்சி தாளாமலோ என்னவோ கைத்தடியும் சடேரென்று ஆடி அதன் மீது விழுந்தது.

அந்த அதிசயமான காட்சியே அந்தக் குடிலில் நேர்ந்துள்ள ஒரு துக்க விஷயத்தை சங்கேத முறையில் அந்த இளைஞர்களுக்குக் கூறிவிட்டது போலிருந்தது.

மஞ்சரி அதைப் பார்த்ததும் குலுங்கி அழுதாள்.

திடுக்கிட்டு வல்லபன் எழுந்தான்.

மஞ்சரி அருகில் சென்றான்.

தேம்பி நிற்கும் அந்தப் பேதையின் சிரம் மேல் மெள்ள கையை வைத்தான்.

அவனது துக்கத்தை விட அவளைப் பற்றிய துக்கத்தான் அவனுக்கு மிதமிஞ்சி வந்தது.

மெதுவாக அவளது சிரத்தைத் தடவினான்.

பொல பொலவெனக் கண்ணீர் ஒரே பெருக்காய் அவள் கன்னங்களில் வழிந்தது.

"மஞ்சரி" என்றான் துக்கம் கரகரக்கும் குரலில்.

அந்த வாத்சல்யனமான தழுவலுக்கும், குரலுக்கும் மட்டும் மஞ்சரி காத்திருந்தாள் போல் தோன்றியது.

அது அவளது மனத்தில் மண்டிக் குமைந்து கொண்டிருக்கும் அளவிறந்த துக்கத்திற்கு ஒரு வடிகால் வடித்துக் கொடுத்தது போலிருந்தது.

"ஓ!" என்று கத்தினாள் அவள். பிறகு துக்கத்தின் அபரிமித சக்தி, அந்த பூஞ்சையான உடம்பில் ஆவிர்ப்பவிக்க,

கீழே தரையில் படீரென்று உருண்ட அவள் கைகளையும், கால்களையும் உதைத்துக் கொண்டு, "அம்மா, என் அப்பா! என் பெற்றோர்களே! என்னை இப்படித் தனியாய் ஆக்கினீர்களே! என்னையும் கொண்டு செல்லுங்களேன்! என்னையும் சாக வையுங்களேன்! இனியும் நான் இருந்து பிரயோசனம் என்ன? என் அம்மா! என் அப்பா! நீங்கள் எங்கிருக்கிறீர்கள்?"

என்று பீறிட்டுப் புலம்பித் தரையில் வெகுவாக அடித்து கொண்டு அழுதாள்.

வல்லபன் அழுதான்.

தத்தனது கல் மனமும் கரைந்து கண்களில் இரு சொட்டுக்கள் உதிர்ந்துவிட்டன.

31

காஞ்சீபுரத்திலுள்ள அந்த மண் குடிலில் ஒரு அபரிமிதமான சோகம் விழுந்திருந்தது.

அதன் பிரதித்துவனிகள் மஞ்சரியின் புலம்பல்களாக உள்ளே பரிணமித்தன.

வல்லபன் திகைத்துப் போய் நின்றான்.

அவன் காதுகளில் சிவ்வென்று ஒரு உணர்வு ஊடுருவி உடம்பெல்லாம் ஓடியது.

துக்கத்தினால் மஞ்சரி தரையில் புரளுவதை அப்படியே பார்த்துக் கொண்டு நின்றான். இறக்கை அடிக்கும் பறவை போல் அவள் கீழே தத்தளித்துக் கொண்டிருந்தாள்.

அவனுக்கே பிறகு தாளாமல் போகவே, "மஞ்சரி, மஞ்சரி!" என்று சொல்லி அவளருகில் தரையில் அமிழ்ந்தான்.

அந்த இளம் பெண்ணைத் தடுத்து அவளது தலையை ஆதரவாகப் பற்றிக் கொண்டான்.

பிழியும் கண்ணீருடன் கருணை தளும்ப அவளை நோக்கி, "அம்மா! மஞ்சரி! என்னாலேயே தாங்க முடியவில்லையே! நீ எப்படித் தாங்குவாய்? உன் பிஞ்சு மனம் இதை எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கும்? அம்மா, மஞ்சரி! அழாதே! அழாதே! உனக்கு நாங்கள் இருக்கிறோமே! புது பந்தமாக நாங்கள் கிடைத்து விட்டோமே! உன்னை நாங்கள் தவிக்க விடுவோமா? அழாதே! எழுந்திரு! எழுந்திரு!" என்று கூறினான்.

மஞ்சரியின் துக்கத்தை ஆற்ற முடியவில்லை. வெறி பிடித்தவள் போல் வல்லபனின் கையையும் மீறி துடித்து அழுதாள்.

"ஓ, ஓ" என்று ஒரு அழுகையின் குரலே எங்கும் தீனமாய் எதிரொலித்தது.

அழுவதெல்லாம் அழுது தீரட்டும் என்று வல்லபனும் பொறுமையாக இருந்தான்.

இருளாகி வெகு நேரம் வரை மஞ்சரி அழுது கொண்டே இருந்தாள்.

பிறகு அழுகையை சிறிது சிறிதாய் விம்மல்களாக்கி விசிப்புகளாக்கி கடைசியில் அதையும் அவள் நிறுத்தினாள்.

இரவில் யாரும் அதற்கு மேல் பேசவில்லை. மனத்தில் தாங்கல்களோடு அரைகுறையாய் உறங்கினார்கள்.

காலையில் எழுந்த போது எல்லோரது மனங்களிலும் ஒரு தெளிவு விழுந்திருந்தது.

மஞ்சரி சுவரில் சாய்ந்து கொண்டு மெதுவாகப் பேசினாள்.

திருப்பதிக்கு இளைஞர்கள் புறப்பட்டுச் சென்ற பிறகு, இரு வாரங்கள் வரை சிங்கழகர் நலமாக இருந்தார் என்றும்,

அதன் பின்னால் அவருக்கு உடலில் உபாதையும், நோயும் கூடியது என்றும் கூறினாள்.

"அது என்ன நோய் என்று தெரியவில்லை, மடத்திலிருந்து வைத்தியர் வந்து பார்த்தார். பஸ்மங்களையும் சூரணங்களையும் கொடுத்தார். குணம் ஏற்படவில்லை. உபாதை காலில் முற்றியது. உடம்பில் நீல நிறம் ஏறிக் கொண்டே வந்தது. அவருக்கே தமது அந்திம நாட்கள் என்று தெரிந்து விட்டது.

"கண்களில் மாலை மாலையாகக் கண்ணீர் பெருக என்னிடம் பேசினார். 'உன்னைவிட்டு போகிறேனே' என்று சொல்லித் தவித்தார். 'ஆனால் உன்னை ஆண்டவன் கைவிடமாட்டார். உனக்கு அவர் எந்தவிதத்திலாவது துணை செய்வாரம்மா!' என்று கூறினார். ஒரு மாதம் இழுத்து பறித்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் பகலில் தூக்கத்திலிருந்து திடீரென எழுந்தார். 'மஞ்சரி! மஞ்சரி! அரங்கன் கிடைத்து விட்டார்' என்று கத்தினார். ஓடோடிப் போய் பார்த்தேன். யாரையும் காணவில்லை. இவர் கனவு கண்டிருக்கிறார்."

"என்னைப் பார்த்ததும் அவர், 'மஞ்சரி! அரங்கன் கிடைத்து விட்டாரம்மா!' என்று கத்தினார்.

'எங்கே?' என்று கேட்டேன்.

'இதோ பார் அரங்கன்! பக்கத்திலே கொட்டவர். அவர் பக்கத்திலே நம் வல்லபனும், தத்தனும்!' என்றார் பரபரப்புடன்.

"இதைச் சொல்லிவிட்டு பரவசமாய்ச் சிரித்தார். இரவெல்லாம் அவருக்கு இந்தச் சிரிப்பும் சந்தோஷமும் ஓயவில்லை.

"காலையில் அதே பரவசத்துடனேயே இறந்து கிடந்தார். முகத்தில் அந்தச் சிரிப்பு மாறவே இல்லை!" என்று கூறி முடித்தாள் மஞ்சரி.

இளைஞர்கள் இருவரும் வெகுவாகத் துக்கித்தார்கள்.

வல்லபன் மூக்குறிஞ்சிக் கொண்டு, "மஞ்சரி! நல்ல செய்தி கொண்டு வந்தோம் என்று நினைத்தோம். ஆனால் இங்கே ஒரு பொல்லாச் செய்தி எங்களை எதிர் கொண்டு மூழ்கடித்து விட்டதே! சிங்கழகரின் குளிர்ந்த கண்களை நாங்கள் என்று பார்ப்போம்! அவரது மதுரமான செஞ்சொற்களை இனி என்று கேட்போம்? இப்படி அதிர்ஷ்ட ஈனர்களாகி விட்டோமே!" என்று வெகுவாகத் தவித்துப் பேசினான்.

தத்தனும் மனம் வெதும்பி, "மஞ்சரி! ஒரு நல்ல சேதி கொண்டு வந்தோம். அதைக் கேட்க வேண்டியவர்கள் கேட்டுக் கொள்ளாமல் மறைந்து விட்டாரே என்று நினைத்தேன். ஆனால் நாங்கள் அரங்கரைக் கண்டதை சிங்கழகர் தம் ஞானக் கண்ணால் கண்டுவிட்டார். அது போதும் என்று நினைக்கிறேன். ஆனால் மனம் கேட்கவில்லையே?" என்று சொல்லி துக்கித்தான்.

பிறகு அன்று முழுவதும், அவர்கள் சிங்கழகரின் குணாதிசயங்களை மாறி மாறிப் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

அங்கு ஏற்பட்ட துக்கத்தை தங்கள் இதமான வார்த்தைகளால் மிதமாக்கிக் கொண்டு ஒருவருக் கொருவர் ஊக்கமும், உற்சாகமும் அளித்துக் கொண்ட பின்னர்,

அரங்கனைத் தேடிய கதை முழுவதையும் வல்லபன் விவரமாகக் கூறி முடித்தான்.

அவ்வளவையும் கேட்டு முடித்த மஞ்சரி கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்க,

"ஐயா! தாங்கள் கூறுவது என்னைச் சிலிர்க்க வைக்கிறதே. சிங்கழகர் மட்டும் இருந்தாரானால் இப்போது *குணாலைக் கூத்து ஆடினாலும் ஆடுவாரே!" என்று கூறினாள்.

...

அடுத்த இரு நாட்களிலும் அங்கே தங்கி இளைஞர்கள் "இனி என்ன செய்வது?" என்று ஆலோசனை செய்தார்கள்.

* குணாலைக் கூத்து - பரவசத்தில் தலைகீழாக ஆடும் ஆட்டம்.

அரங்கனோடு திருமலையிலேயே இருந்து விடலாம் என்று முதலில் நினைத்தவர்கள் அவர்கள்.

அப்படி நினைத்தபோது, அரங்கன் சீக்கிரமே அந்த மலையை விட்டுப் புறப்பட்டு விடுவார்.

திருவரங்கத்திற்குச் சீக்கிரமே எழுந்தருளி விடுவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் அப்படி ஒரு நிகழ்ச்சி நடக்க வேண்டுமானால் அதற்கு ஒரு பெரும் படையெடுப்பே தேவையாகும் என்பதை அவர்கள் அறிந்தவர்களல்ல.

ஒரு அரசர் நினைத்தால் உடனே படையெடுத்து விடலாம் என்று நம்பினார்கள் அவர்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கு எப்படியும் காரியம் நடக்கச் சிறிது காலம் பிடிக்கும் என்று தெரிய வந்த போது, அந்த அவகாசத்திற்குள் தங்கள் ஊர் சத்தியமங்கலம் சென்று திரும்பி விடலாம் என்ற எண்ணம் உதயமாகியிருந்தது.

அரங்கனைப் பற்றிய செய்தியை ஊரில் தாயாரிடம் கூறிவிட்டு உடன் திரும்பிவிட வேண்டும் என்று இருவரும் தீர்மானித்திருந்தார்கள்.

இப்போது மஞ்சரி உருவில் மற்றொரு சுமையும் வேறு ஏறிவிட்டதால் அவளது பிற்காலத்தைப் பற்றி யோசிக்க வேண்டும் என்ற நிலையும் தோன்றியிருந்தது.

இவ்விதம் எல்லாவிதமான நினைவுகள் அழுந்த, மூன்றாம் நாள் காலையில் புறப்பட்டு வெளியிலே போன போது அவர்களுக்கு ஒரு அதிர்ச்சியான செய்தி காத்துக் கிடந்தது.

நகரத்தின் கோட்டைக் கதவுகள் நிரந்தரமாக மூடப் பட்டு விட்டன என்றும், உள்ளே வருகிறவர்களுக்குத் தான் அனுமதி என்றும் வெளியே போகிறவர்களுக்கு அனுமதி கிடையாதென்றும் தெரிய வந்தது.

அதை அறிந்ததும் இருவரும் திடுக்கிட்டார்கள்.

"மஞ்சரி! இதெல்லாம் என்ன? இந்த ஊரில் என்ன நடந்தது?" என்று வல்லபன் கேட்க,

"உங்களுக்குத் தெரியாதா? இந்த ஊர் ராஜாவின் குமாரனுக்கு அடுத்த மாதம் திருமணம் நடப்பதாக இருந்தது. போன நான்காம் நாள் கோவிலுக்கு அந்த ராஜகுமாரன் போன போது யாரோ அவர் மீது வாளை எறிந்துவிட்டார்கள். பலத்த காயத்தோடு அவர் படுத்து இருக்கிறார். வாளை எறிந்தவன் யார் என்று கண்டுபிடிக்க ஊரின் சேவகர்கள் மும்முரமாக இருக்கிறார்கள். யாரோ ஒரு கற்பூர வியாபாரியாம். அவன் தான் இப்படி செய்தான் என்று கூறுகிறார்கள்! அவனைத் தேடி அலைகிறார்கள்!" என்று கூறினாள்.

இப்படி விபரீதம் நேர்ந்ததே என்று எண்ணிய இரு இளைஞர்களும் மஞ்சரியின் குடிலிலேயே மேலும் ஒரு வாரம் தங்கினார்கள்.

எட்டாம் நாள் அவர்களை மேலும் சோதனை செய்யும் படியாய்ச் செய்திகள் வந்தன.

யுத்தம் வரப் போகிறது என்றும், நகரத்தில் கோட்டை இப்போதைக்குத் திறக்கப்படாது என்றும் பரவலாக மக்கள் பேச ஆரம்பித்தார்கள்.

இளைஞர்களை இந்தச் செய்தி மேலும் கலவரப்படுத்தியது. இனி இங்கிருந்தால் பல உருவங்களில் ஆபத்து வரலாம். எனவே உடனே ஊரை விட்டுப் போவதுதான் நல்லது என்று நினைத்தார்கள்.

இதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று எண்ணி தினமும் ஊருக்குள் சென்று பல இடங்களில் உளவு அறிந்து பார்த்தார்கள்.

கோவில்களிலும், மடாலயங்களிலும் சென்று விஷயம் சேகரிக்க முயன்ற போது,

ஒரு மடத்தின் வாயிலிலே ஒரு நாள் வைணவர் ஒருவர் திடீரென்று இளைஞர்களின் முன்னால் வந்து நின்று, "சுவாமிகளுக்கு எந்த ஊரோ?" என்று கேட்டார்.

உடனே வல்லபன் தன் பொய்த் தாடியை உருவிக் கொண்டு,

"அடேயோங்களுக்கு திருநாராயணபுரம்! வேதாந்த தேசிக சுவாமிகளுக்குக் கைங்கர்யங்கள் செய்து கொண்டு இருக்கிறோம்!" என்று கூறினான்.

"அப்படியா! தேசிக சுவாமிக்கு உங்களைப் போல் இளவயசு சீடர்கள் இருப்பார்கள் என்று அடியேனுக்குத் தெரியாதே! சந்தோஷம்! சுவாமிகள் இந்த ஊருக்கு வந்த காரணமோ? . . ." என்று கேட்டார் வைணவர்.

"காஞ்சிக்கு ஏன் சுவாமி வரப் போகிறோம்? வரதனை சேவிப்பதற்குத்தான் வந்தோம். திருப்பதியில் இருந்து வந்திருக்கிறோம்!" என்று கூறினான் வல்லபன்.

"இப்போது எவ்விடத்திற்குப் போக வேண்டுமோ?" என்று கேட்டார் வைணவர்.

"திரும்பி திருநாராயணபுரம் போனால் சௌகரியமாய் இருக்கும். மனைவி மக்கள் பரிதவிப்பார்கள்!" என்றான் வல்லபன்.

அப்பால் அந்த வைணவர் அந்த இளைஞர்களை மேலும் கீழும் பார்த்து, சுற்றி வரவும் ஒரு பார்வை பார்த்து,

மெலிதான குரலில், "அப்படியானால் அவ்விடத்தில் ஊரைவிட்டுப் போக வேண்டும் என்று அபிப்பிராயம் இருக்குமோ?" என்று கேட்டார்.

"ஆமாம் சுவாமி! அவசியம் போக வேண்டும். வழியில்லாது திண்டாடுகிறோம்!" என்றான் வல்லபன்.

அந்த வைணவர் அப்போது சொல்வதற்குத் தயக்கமாய் நிற்பதைப் பார்த்து,

வல்லபன், "சுவாமி! வெளியே போக ஏதாவது உபாயம் உண்டோ? அதைப் பற்றி தெரிவித்தால் தன்யர்களாக இருப்போம்!" என்று கூறினான்.

அந்த வைணவர் உடனே, "இல்லை. . . " என்று இழுத்து, "அடியோங்கள் போவதாக இருந்தால் *தேவரீர்களும் எம்மோடு வரலாம். ஆனால் எங்கள் ஆசிரியர் என்ன *திருவுள்ளம் பற்றுகிறாரோ, தெரிந்து கொள்ள வேணும்!" என்று கூறினார்.

வலுவிலே இப்படி ஒரு உபாயம் வந்து சேருகிறதே, இந்த வைணவர் உபகாரமாக இருக்கிறாரே என்று இளைஞர்கள் பலவிதமாக நினைத்து அந்த வைணவருடன் மேலும் நெருங்கி உரையாட ஆரம்பித்தார்கள்.

அவருடைய தயவில் கோட்டையை விட்டு வெளியே போய் விடலாம் என்று ஒரு தைரியம் வந்தது.

---

*தேவரீர்களும் - நீங்களும்

*திருவுள்ளம் பற்றுதல் - நினைத்தல்

அந்த வைணவரிடம் விடைபெற்று திரும்பும்போது.

இப்பொழுது உடனே போக வேண்டுமே. மஞ்சரியை என்ன செய்வது என்பதைப் ப்ற்றி யோசித்தார்கள்.

அவள் இருக்கும் குடிலுக்கு அடுத்தாற் போல் ஒரு மூதாட்டியும் ஒரு பெரியவரும் இருக்கிறார்கள். மூதாட்டி அடிக்கடி குடிலுக்கு வந்து போகிறவர்.

மூதாட்டிக்கு மஞ்சரியும், மஞ்சரிக்கு மூதாட்டியும் பரஸ்பர உதவிகளாக இருக்கிறார்கள். எனவே மஞ்சரியை அந்த மூதாட்டியுடன் இருக்க விடுவது என்று தீர்மானம் செய்தார்கள்.

குடிலுக்கு வந்ததும், மஞ்சரியிடம் தங்கள் முடிவைத் தெரிவித்து,

"நாங்கள் சீக்கிரம் திரும்பி வந்து விடுவோம். எங்கள் ஊர் சென்று எங்கள் தாயாரிடம் விஷயங்களைச் சொல்லிவிட்டு உடனே திரும்பி வருவோம்" என்றார்கள்.

மஞ்சரி சிறிது விசனப்பட்டாலும், அவர்களுக்கு இங்கிருந்தால் ஆபத்து என்பதை அறிந்து, அதே நேரம் தங்கள் தாயைப் பார்த்துவிட்டு சீக்கிரமே திரும்பி வருவதாகக் கூறுகிறார்கள் என்பதால் அவர்கள் சொல்வது நியாயமானது என்று உணர்ந்து கொண்டாள்.

"நானும் உங்களுடன் வந்து விடலாம் என்று பார்த்தேன்! ஆனால் கோட்டைக்கு வெளியே விட மாட்டார்கள். நீங்கள் சீக்கிரம் வாருங்கள்! காத்திருப்பேன்!" என்று துக்கத்தோடு கூறினாள்.

32

ஒரு பொன்னிறமான மாலை நேரம்.

காஞ்சிபுரத்துக் கோட்டையின் உட்புறத்தில் பிரம்மாண்டமான கதவுகளுக்கு முன்னால், ஆறு வைணவப் பெரியவர்கள் கைகளில் மஞ்சள் துணி கட்டிய செம்புகளோடு நின்று கொண்டு, "கோவிந்தா! கோவிந்தா!" என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

'இவர்கள் யார்? இந்த வேளையில் வந்தார்கள்?' என்று ஒரு வெறுப்பான பார்வை பார்த்து, மேலே இரண்டாம் நிலையிலிருந்த கோட்டை நாயகன், "யார் சுவாமி?" என்று கூவினான்.

"அப்பனே! திருப்பதிப் பிரார்த்தனைக்குப் போகிறோம். கதவைத் திறந்து விடுவாய். நாராயண, நாராயண!" என்று சொன்னார் ஒரு பெரியவர். ஆஜானுபாகுவாக வளர்ந்திருந்த அவர் உடலெல்லாம் பன்னிரு நாமங்களை விகசித்தன. இடுப்பைச் சுற்றி ஒரு பட்டு வஸ்திரத்தை இறுக்கிக் கட்டியிருந்தார். தேர்வடம் போலப் பருமனான பூணூலைத் தரித்திருந்தார்.

"சுவாமி! விஷயம் தெரியாதா? கோட்டைக்கு வெளியே யாரையும் அனுப்பக் கூடாது என்று உத்தரவாகியிருக்கிறது!" என்றான் கோட்டை நாயகன்.

"வைணவ *தேசாந்திரிகளுக்கு ஏதப்பா ராஜ தடை. நாங்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாமே. இது உனக்கு தெரியாதாப்பா?" என்று கேட்டார் பெரியவர்.

* தேசாந்திரிகள் - யாத்திரிகர்கள்

"தெரியும் சுவாமி! இருந்தாலும் ஒரு வாரமாய் ராஜ கட்டளை பிறந்துவிட்டது. ஊருக்குள் வரலாமே தவிர வெளியே போக முடியாது! இதைக் கடுமையாய் அனுசரிக்கிறோம்!" என்றான் சேவகன்.

"கோவிந்தா! கோவிந்தா!" என்று பெரியவர் கூற, அந்த சீடர்கள் எல்லோரும், "கோவிந்தா! கோவிந்தா!" என்று கூறினார்கள்.

"அப்பனே! எந்தக் காரணம் கொண்டும் என்னை விடமாட்டாயா?" என்று கேட்க,

"எதற்கும் விடமாட்டேன் சுவாமி! லச்சினை இருந் தால் வாங்கி வாருங்கள், விடுகிறோம்!" என்றான் நாயகன்.


"லச்சினைதானே? நீ கேட்பாய் என்றே வாங்கி வந்து விட்டோம், இப்படி வா, காட்டுகிறேன்!" என்றார் பெரியவர்.


நாயகன் கீழே இறங்கினான். பெரியவர் அவனிடம் லச்சினையை நீட்டினார். அதை வாங்கி அப்புறமும் இப்புறமுமாகப் பார்த்த நாயகன், "சரி போங்கள்!" என்று சொல்லி பிரும்மாண்டமான கதவின் திட்டி வாயிலைத் திறந்து விட்டான்.

அவ்வளவில் "கோவிந்தா! கோவிந்தா!" என்று சொல்லிக் கொண்டு ஆறு வைணவர்களும் வெளியே போனார்கள்.


சிறிது தூரமே போயிருப்பார்கள். வல்லபனுக்கு சுரீர் என்று ஒரு நினைவு உள்ளே பாய்ந்தது. விலவிலத்துப் போய்த் திரும்பிப் பார்த்தான். மனம் திடுக்கிட்டது.

மூன்றாம் பாகம் முற்றிற்று





கி.பி.1360ல் தென் இந்தியா
துங்கபத்ரா நதி
விஜய நகரம்
வட பெண்ணை
சந்திரகிரி
திருப்பதி
காவேரி
சேரர்கள்
பாண்டிய ராஜ்யம்



சேஷாசலம்
காடு
தும்பருகோனை
அரங்களோடு
கொடவர்
விழுந்த இடம்
தும்புரு தீர்த்தம்
- 2250
ராமகிருஷ்ண
தீர்த்தம் 2250
குமரதாரா தீர்த்தம்
2700
மண்டூர் காடு
சமல
காடு
பாபநாசன தீர்த்தம்
- 2000
ஆகாச கங்கை
-2700
3658
திருமலை
3622
திருப்பதி
காடு
பாஷ்யக்காரர் சந்நிதி
முழங்கால்முறிப்பான்
முக்கு பாவி
காளிகோபுரம்
சமல
காடு
ஸ்ரீபதிவாரி
மேடு
3170
கண்ட
மண்டபம்
ஆழ்வார்
தீர்த்தம் 700
திருப்பதி
கீழ்த் திருப்பதி
காடு
திருச்சானூர்
சந்திரகிரி
தண்ட
மண்டபம்
ரயில் பாதை
நடை பாதை
சாலை
3085 -3085
அடி உயரம்
எண்கள் - உயரத்தைக்
குறிக்கின்றன

திருமலை கோவிலின் அமைப்பை விளக்கும் வரைபடம்

